AR
910

தம்பிக்கு அண்ணாவின் கடிதங்கள்

௨௦



அறிஞர் அண்ணா

தம்பிக்கு
அண்ணாவின் கடிதங்கள்

இருபதாம் தொகுதி

காஞ்சிக் கடிதங்கள்-7

அறிஞர் அண்ணா

பல்லடம் மாணிக்கம்
தமிழ் நூல் காப்பகம்
திருமுதுகுன்றம்

பாரி நிலையம்
184. பிராட்வே · சென்னை · 600108

முதற் பதிப்பு : 1988

பதிப்பு உரிமையுடையது

தமிழ் நூல் காப்... ★
09220
தமிழ் நகர், விருத்தாசலம் - ...

விலை ரூ. 15-00

அச்சிட்டோர்:
சாலை அச்சகம், 11, திருவீதியான் தெரு
கோபாலபுரம், சென்னை-86 [118]

முதல் இரண்டு தொகுதிகளின்
முதற்பதிப்பின் முன்னுரை

முன்னுரை

திரு. நாவலர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ.

'அண்ணா தம்பிக்கு எழுதிய கடிதங்கள்' நூல் வடிவம் கொண்டு அழகும் கவர்ச்சியும் ஒருங்கே ஏற்று, என் கைக்கு வரப்பெற்று மிக்க பேருவகையுற்றேன். அறிஞர் அண்ணா அவர்கள் 'திராவிட நாடு இதழ் மூலம் அருமைத் தம்பிமார் களுக்கு எழுதிவந்த முடங்கல்கள் அனைத்தும் நூல் வடிவம் பெற்றால், அந்த நூல், கருத்துக் கருவூலமாகத் திகழப் பெறுமே என்ற வேணவா என் உள்ளத்தில் நீண்ட நாட் களாக எழுந்ததுண்டு. என்னைப் போன்ற பல்லாயிரக் கணக்கான தம்பிமார்களுக்கும் வேணவா கிளர்ந்தெழுந் திருக்கும் என்பது உறுதி. அந்த வேணவாவை இனிது நிறை வேற்றி வைக்கும் அரும் பெருந்தொண்டை 'பாரி நிலையத் தார்' செய்திருப்பது கண்டு பூரிப்படைகிறேன்: பாரி நிலை யத்தாரை வரவேற்றுப் பாராட்டி வாழ்த்துகிறேன்.

அறிஞர் அண்ணா அவர்களின் எழுத்து வன்மையை யும், அவரது எழுதுகோல் முனையிலிருந்து உருப்பெற் றெழுந்து நாடெங்கணும் வெற்றியுலா வரும் கதைகள்— கட்டுரைகள்— நாடகங்கள் —திரைப்பட வசனங்கள்— எழுத்தோவியச் சுவரொட்டிகள், துண்டு அறிக்கைகள் ஆகியவற்றையும், அவற்றில் தமிழ் மணம் மிகச் சிறந்த முறையில் கமழ்வதையும், இனிய ஓசை பயக்கும் சொற்கள் அருவியின் வீழ்ச்சியெனத் தங்கு தடையின்றிப் பாய்ந்து துள்ளிக் குதித்து ஓடுவதையும், கருத்துக்கள் செறிந்து காணப்படுவதையும், உவமை நயங்கள் பெருவாரியாக ஆங்காங்குப் பளிச்சிட்டு மின்னுவதையும், அறிவும் ஆற்ற லும், உண்மையும் உயர்வும், திண்மையும் திட்பமும், சொல்லழகும் பொருளாழமும் ஒன்றையொன்று போட்டி போட்டுக்கொண்டு துள்ளிக் குதிப்பதையும், தமிழ் கற்ற றிந்த நல்லறிவு படைத்தோர் அனைவரும் நன்கு உணர் வர். தமிழின்பத்தை எல்லா வகையிலும் சுவைக்க விரும்பு வோர், இந்நூலைச் சுவைத்தாலே போதும். எல்லாவகை யான இனிய சுவைகளும் இதனுள் பொதிந்து கிடக்கின்றன,

படித்து மகிழ்ந்து பயன் பெறுவதற்குரியவைகள் பலப் பல இருந்த போதிலும், ஒவ்வொருவரும் கடிதத்தைப் படிப்பதற்குப் பேராவல் காட்டுகிறோம். அஞ்சலை அன்றாடம் வழிமேல் விழிவைத்துப் பார்க்க நாம் தவறுவதில்லை. அஞ்சல் வந்தவுடன் மற்றப் பணிகளையெல்லாம் ஒதுக்கி வைத்துவிட்டுப் பிரித்துப் படிக்கிறோம்; பலதரப்பட்ட செய்திகளையும் கருத்துக்களையும் அறிந்து கொள்கிறோம். பொதுவாகக் காதலியிடமிருந்தும், நண்பர்களிடமிருந்தும் நெருங்கிய உறவினர்களிடமிருந்தும் வரும் முடங்கல்களைப் படிப்பதில் ஒருவன் எவ்வளவு ஆர்வமும் அக்கரையும் அக மகிழ்ச்சியும் காட்டுவானோ அவ்வளவு ஆர்வமும் அக்கரையும் அகமகிழ்ச்சியும் அறிஞர் அண்ணா அவர்களின் கடிதங்களைப் படிப்பதிலும் ஒவ்வொருவரும் காட்டுவர். அவ்வளவு கவர்ச்சியும் அறிவுத் தெளிவும் ஆராய்ச்சித் திறனும் அறிஞர் அண்ணா அவர்களின் கடிதங்களில் காணப்பெறும். அறிஞர் அண்ணா அவர்களின் உயர்ந்த உள்ளத்தை எழுத்துக்களின் மூலம் எளிதில் கண்டறிய இந்நூல் பெரிதும் பயன்படும்.

அறிஞர் அண்ணா அவர்கள் 'திராவிட நாடு' இதழில் 'தம்பிக்குக் கடிதம்' என்று தலைப்பிட்டு எழுதிய கடிதங்களைப் பத்துத் தொகுப்புகளாகக் கொண்டுவர முயற்சி எடுத்து, இப்பொழுது இரண்டு தொகுப்புகளை வெளியிட்டிருக்கின்றனர். இந்தப் பத்துத் தொகுப்புகளும் தமிழகத்தின் அரிய பெரிய கருத்துக் கருவூலங்களாகும். இப்பொழுது வெளிவந்துள்ள இரண்டு தொகுப்புகளைப் போலவே விரைவில் ஏனைய எட்டுத் தொகுப்புகளும் வெளிவருவனவாக!

அறிஞர் அண்ணா அவர்களின் சொல்லமுதைக் கொண்டு இலக்கிய விருந்து படைக்க முன்வந்த 'பாரி நிலைய'த்தாரைப் பாராட்டுகிறேன். தமிழ்ப் பெருங்குடி மக்கள் அனைவரும் இந்த இலக்கிய விருந்தை உண்டு மகிழ்ந்து, பயன்பெற்று, இனிதுற வாழ்வார்களாக!

4-1-63

-இரா. நெடுஞ்செழியன்

பதிப்புரை

அறிஞர் அண்ணா அவர்கள் தம்முடைய கருத்துக்களையும் சிந்தனைகளையும் தம்பிக்கு என்ற தலைப்பில் கடித வடிவில் அவர் நடத்தி வந்த 'திராவிட நாடு' இதழிலும் 'காஞ்சி' இதழிலும் அவ்வப்போது எழுதி வந்தார்கள். இவற்றில் சில கடிதங்கள் திராவிட நாடு, காஞ்சி பொங்கல் மலர்களிலும் வெளிவந்தன.

இக்கடிதங்கள் அறிஞர் அண்ணா அவர்களையும் அவர் நேசித்த இலட்சக்கணக்கான தம்பிமார்களையும் ஒருங்கிணைத்துக் கலந்து உறவாடி மகிழச் செய்தன.

திராவிட நாடு இதழ்களில் வெளிவந்த கடிதங்களை வெளியிட அண்ணா அவர்களிடமே இசைவு பெற்று, முதல் இரண்டு தொகுதிகளையும் 1963 ஆம் ஆண்டின் வெளியிட்டோம். இவை கடற்கரையில் சீரணி அரங்கில் பல ஆயிரக் கணக்கான மக்கள் முன்னிலையில் வெளியிடப் பெற்றன.

திராவிட நாடு இதழ்களில் வெளிவந்த கடிதங்கள் பன்னிரண்டு தொகுதிகளாக வெளிவந்து நிறைவடைந்தன. காஞ்சி இதழில் அண்ணா தமது சிறை அனுபவங்களைக் 'கைதி எண் 6342' என்ற தலைப்பில் கடித வடிவமாகவே எழுதி வந்தார்கள். அவைகளைத் தொகுத்து, 'கைதி எண் 6342' என்ற தலைப்பில் தனிநூலாக வெளியிட்டோம். இது அண்ணாவின் கடிதங்களின் பதின்மூன்றாம் தொகுதியாகும்.

நீண்ட இடைவெளிக்குப் பிறகு, 26-7-64 தொடங்கிக் 'காஞ்சி' இதழில் அண்ணா கடிதங்கள் எழுதத் தொடங்கினார்கள். காஞ்சி இதழில் வெளிவந்த முதல் கடிதத்தின் தலைப்பே 'நீண்ட இடைவெளிக்குப் பிறகு' என்பதாகும்,

காஞ்சி இதழில் வெளிவந்த கடிதங்களை வெளியிடத் திருமதி ராணி அண்ணாதுரை அவர்களிடம் இசைவு பெற்று வெளியிடத் தொடங்கி இருக்கிறோம். பல காரணங்களால் இவைகளை நூலாக வெளியிடுவதிலும் நீண்ட இடைவெளி ஏற்பட்டுவிட்டது. இனித் தடை யின்றி இவை விரைவில் வெளிவரும் என்பதைத் தெரி வித்துக் கொள்கிறோம்.

இப்போது வெளியிடப் பெறும் இந்தத் தொகுதி மொத்த வரிசையில் இருபதாம் தொகுதியாகும். காஞ்சி யில் வெளிவந்த கடிதங்களின் ஏழாம் தொகுதியாகும். இதில் பதினொரு கடிதங்கள் வெளிவந்துள்ளன. **'காஞ்சிக் கடிதங்கள்'—7** என்று தலைப்பிட்டுப் புதிய எண் கள் கொடுத்திருக்கிறோம்.

வழக்கம் போலப் புலவர் நா. அறிவழகன் அவர்கள் காஞ்சியில் வந்த கடிதங்களுக்கு உரிய உள் தலைப்பிட்டுக் கொடுத்தும், கிடைக்காத கடிதங்களுக்கு 'ஜெராக்ஸ்' பிரதி எடுத்துக் கொடுத்தும் பலவாறு உதவினார்கள். டாக்டர் சாலை இளந்திரையன் அவர்கள் பிரதியை நன்கு ஒப்பு நோக்கிப் பதிப்பித்து உதவினார்கள். இவ்விரு அறிஞர் களுக்கும், காஞ்சியில் வெளிவந்த கடிதங்களை நூல் வடிவில் வெளியிட எங்களுக்கு வாய்ப்பளித்த திருமதி ராணி அண்ணாதுரை அவர்களுக்கும், அழகாக அச்சிட்டு உதவிய சாலை அச்சகத்தாருக்கும் எங்கள் நன்றி உரியது.

வழக்கம் போலத் தமிழ்ப் பெருமக்கள் இந்நூல் வரிசை யினையும் ஏற்று எங்களை ஊக்குவிக்குமாறு வேண்டிக் கேட்டுக் கொள்கிறோம்.

பாரி நிலையத்தார்

பொருள் அடக்கம்

கடித எண்	பொருள்	நாள்	பக்க எண்
77.	ஆழமான குழியாம்!	4.9.66	1
78.	மலர் மணம்	11.9.66	17
79.	தீ மிதித் திருவிழா	18.9.66	27
80.	மரண அடி கொடுப்பாராம்!	25.9.66	43
81.	படமாம், படம்!	2.10.66	57
82.	போஜராஜனும் காமராஜரும்	9.10.66	75
83.	ஒளி படைத்த கண்ணினாய்!	16.10.66	94
84.	நரி பரியான கதை!	23.10.66	114
85.	எல்லாம் தருமத்துக்கு!	30.10.66	139
86.	சிங்கத்தை அடக்கினேன்!	6.11.66	155
87.	பறக்கும் குதிரை	13.11.66	170

தமிழ் நூல் காப்பகம்
தமிழ் நகர், வீரு. 608001.

ஆழமான குழியாம்!

* ஆழமான குழி! அறுபத்தேழாயிரம் அடி!
* உள்ளத்தில் பட்டதை ஒளிக்காமல் சொல்கிறது கழகம்!
* பலர் வாழச் சிலர் சாகலாம்!
* கிளர்ச்சிகள் மூட்டி விடப்படுவன அல்ல!
* குழி பறிப்போன் குழியிலேயே வீழ்வான்!

தம்பி,

ஆழமான குழி; மிகமிக ஆழமான குழி—ஆயிரம் இரண்டாயிரம் அடி ஆழமல்ல, 67000 அடி ஆழமான குழி தோண்டப்போகிறார்களாம். சொல்லிவிட்டார்கள்! எவ்வளவு கஷ்டம் பாவம், இவ்வளவு ஆழமான குழிதோண்ட என்று எண்ணும்போதே எனக்குப் பரிதாபமாக இருக்கிறது.

பரிதாபம் காட்டுவது இருக்கட்டும். எதைப்பெற இவ்வளவு ஆழமான குழி தோண்டுகிறார்கள், விஞ்ஞான வளர்ச்சிக்குத் தேவைப்படும் ஏதாவது அரியபொருள் அத்தனை அடி ஆழத்திலே புதையுண்டு கிடக்கிறது என்பதற்காகவா என்று கேட்கிறாயா! தம்பி! அதற்காக அல்ல. நமக்காக, கழகத்தைப் போட்டுப் புதைக்க!! 67000 அடி

ஆழக் குழி தோண்டிப் போட்டுப் புதைக்கப் போகிறோம், தி.மு. கழகத்தை 1967ம் ஆண்டு என்று, திருச்சியில் கூடிய காங்கிரஸ் மாநாட்டிலே பேசியிருக்கிறார்கள்.

என்ன செய்கிறார்கள் இந்த காங்கிரஸ்காரர்கள்—ஐந்தாண்டுத் திட்டம் என்கிறார்கள், சமுதாய நலத் திட்டம் என்கிறார்கள், வட்டார வளர்ச்சித் திட்டம் என்கிறார்கள், இப்படிச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்—நாட்டிலே ஏழை மக்கள் வாழ்விலே பாராட்டப் படத்தக்க விதமான முன்னேற்றம் எதையும் காணாததால் மனம் நொந்து நீ கேட்டிருக்கிறாய் பல முறை, என்னதான் செய்கிறார்கள் இந்தக் காங்கிரஸ்காரர்கள்; என்ன செய்யப் போகிறார்கள் இந்தக் காங்கிரஸ்காரர்கள் என்றெல்லாம். அவர்கள் கூறிவிட்டார்கள் திருச்சி மாநாட்டில் என்ன செய்ய விரும்புகிறார்கள் என்பதை; ஆழமான குழி தோண்டப் போவதாகச் சொல்லிவிட்டார்கள்; 67000 அடி ஆழம்.

என்ன அண்ணா! நம்மைப் போட்டுப் புதைக்கக் குழி தோண்டப் போவதாக அவர்கள் பேசுகிறார்கள் அத்தனை ஆணவத்துடன்; அதைக்கேட்டு நீ பதறாமல் துடிக்காமல், மகிழ்ச்சியுடன் பேசுகிறாயே என்று கேட்கத் தோன்றும். நான் பதறாததற்கும் துடிக்காததற்கும் காரணம் இருக்கிறது.

67000 அடி! கவனமிருக்கட்டும்! அத்தனை ஆழமான குழி! ஏன்? அவர்களுக்கு அவ்வளவு அச்சம், அத்தனை ஐயப்பாடு! சாதாரண ஆழமுள்ள குழி, ஆயிரம் இரண்டாயிரம் அடி ஆழமுள்ள குழி தோண்டினால் போதாது, அதிலே போட்டுப் புதைத்தால் பயனில்லை, மீண்டும் எழுந்து வந்துவிடக் கூடும், மிக அதிகமான ஆழம் தோண்டவேண்டும் என்று தோன்றுகிறதே தம்பி! அவர்களுக்கு; அது எனக்கு நமது கழகம் எத்தனைப் பெரியது, எதிரிகளை எந்த அளவுக்கு அச்சப்படுத்தி வைத்திருக்கிறது என்பதை அறியச் செய்கிறது. அது எனக்கு ஒருவிதமான மகிழ்ச்சி உணர்வைக்கூடத் தருகிறது. தி. மு. கழகம் சாமான்யமானதல்ல, இந்தியாவை பத்தொன்பது ஆண்டுகளாகக் கட்டி ஆண்டு வரும் காங்கிரஸ் கட்சியினர், இந்த கழகத்தைப் புதைத்துக் குழியில் போடவேண்டுமென்றால், ஆயிரம் இரண்டாயிரம் அடி ஆழமுள்ள குழி போதாது, 67,000 அடி ஆழமுள்ள குழி தேவைப்படுகிறது என்பதை

எடுத்துக் காட்டுகிறது அவர்களின் பேச்சு! கழகத்தின் வளர்ச்சியின் அளவை நாடு உணர்ந்து கொள்ளவும் அந்தப் பேச்சு துணை செய்கிறது.

கழகமா? அது எங்கே இருக்கிறது என்று பேசிய காலம் போய்,

கழகமா? அதைப் பொதுமக்கள் சீந்துவார்களா என்று கூறிய காலம் போய்,

கழகமா? பத்துப் பேர் கூச்சலிடும் இடந்தானே என்று பரிகாசம் பேசிய காலம் போய்,

கழகமா! கொஞ்சம் துள்ளுகிறது, நாலு நாளில் தன்னாலே அடங்கிவிடும் என்று பேசிய காலம்போய்,

கழகமா? அது உட் குழப்பத்தாலே உருக்குலைந்து போய்விட்டது என்று பேசிய காலம் போய்,

கழகமா? அது உடைபட்டுப் போய்விட்டதே! இப்போது அதிலே என்ன இருக்கிறது!! என்று பேசிய காலம் போய்,

கழகமா? நாங்கள் மூச்சுவிட்டால் காற்றிலே பறக்காதா என்று ஏளனம் செய்த காலம் போய்,

கழகமா? எங்கள் கோபப் பார்வையாலேயே அதனைச் சுட்டுச் சாம்பலாக்கிவிட மாட்டோமா? என்று பேசிய காலம் போய்,

கழகமா? எங்களுக்கு அது ஒரு பொருட்டாகுமா! என்று அலட்சியம் காட்டிப் பேசிய காலம் போய்,

கழகமா? அதை 67000 அடி ஆழமுள்ள குழி தோண்டி அல்லவா புதைக்கப் போகிறோம் என்று பேசும் காலம் வந்திருக்கிறதே!

இது எதைக் காட்டுகிறது? கழகத்தை அலட்சியப்படுத்தியவர்கள், அது தன்னாலே உருக்குலைந்து போகும், உடைபட்டுப் போகும் என்று எண்ணினவர்கள், கழகம் சாமான்யமல்ல, அதைப்போட்டுப் புதைப்பதானாலும், சாதாரணக் குழு போதாது, மிக மிக ஆழமான குழிவேண்டும் என்று கூறிட வேண்டிய அளவுக்குக் கழகம் வளர்ந்து, அவர்களைக் கலங்கிடச் செய்கிறதே, அது தம்பி! எனக்கு ஒருவிதமான மகிழ்ச்சியேகூடத் தருகிறது!

காலஞ் சென்ற சத்தியமூர்த்தி சொல்லிக்கொண்டிருந்தார், ஜஸ்டிஸ் கட்சியை 5000 அடி ஆழத்தில் குழி தோண்டிப் புதைக்கப் போகிறேன் என்று.

இன்றைய காங்கிரஸ்காரர்கள் அவரை மிஞ்சி விட்டார்கள்; குழி தோண்டுவதில்! வாயால்! 67000 அடி ஆழக் குழியாம்.

அவ்வளவு கடினமான வேலை செய்யவேண்டும் என்றாகிவிட்டது, கழகம் பெற்றுள்ள வளர்ச்சி.

ஒன்றை மறந்துவிடுகிறார்கள்—கோபம் கண்ணை மறைக்குமாமே, அதனால் என்று எண்ணுகிறேன்—67000 அடி ஆழக் குழிதோண்டிக் கழகத்தைப் புதைக்கத்தக்க வல்லமை உள்ளவர்களானால், இந்த வீரர்கள் கழகம் இந்த அளவு வளர்ந்ததே, என்ன செய்து கொண்டிருந்தார்கள்? ஏன் கழக வளர்ச்சியைத் தடுக்க முடியவில்லை!!

கழகம் இவர்கள் கண்முன்பாகத்தானே வளர்ந்தது? வேறு எங்காவது ஓரிடத்திலே கட்டப்பட்டு இங்கு திடீரென ஒருநாள் கொண்டுவந்து இறக்குமதி செய்யப்பட்டதா? இல்லையே! இவர்கள் இப்போது இருப்பது போலவே அறிவாற்றலுடன், வீராவேச உணர்ச்சியுடன் இங்கேதான் இருந்து கொண்டிருந்தார்கள், நாம் வளர்ந்த போது. ஏன் தடுக்க முடியவில்லை, கழக வளர்ச்சியை? வளர்ச்சியைத் தடுத்திட முடிந்திருந்தால் இன்று இத்தனை ஆழமான குழி தேவைப்பட்டிருக்குமா!! பாவம்! 67000 அடி ஆழமல்லவா தோண்டப் போவதாகச் சொல்லுகிறார்கள். ஏன் இத்தனைக் கஷ்டம்! தும்பை விட்டுவிட்டு வாலைப் பிடிப்பது என்பார்களே, அந்தப் போக்கா?

இப்போது இருப்பது போலவே அவர்களிடம் எல்லா வல்லமையும் இருந்தது! பிரசாரம், பணபலம், அதிகார பலம், எல்லாம்! இப்போது இருப்பது போலவே அப்போதும்! இவர்களே ஆளவந்தார்கள்! இருந்தும்? கழக வளர்ச்சியைத் தடுத்திட முடிந்ததா? இல்லையே! கழகம் வளர்ந்து வளர்ந்து, இவர்களுக்கு மிரட்சி அதிகமாகி, ஆழமான குழி! மிக ஆழமான குழி! என்றல்லவா அலறுகிறார்கள்.

இவர்கள் வேறு முக்கியமான வேலையாக—அமெரிக்காவைச் சீர் செய்ய—புரட்சியால் இன்னல் அடைந்த

ரஷியாவுக்கு இதம் செய்யச் சென்று பல ஆண்டுகள் அங்கே தங்கிவிட்டது போலவும், இவர்கள் இங்கே இல்லாத நேரமாகப் பார்த்து நாம் வளர்ந்தது போலவும், இவர்கள் இங்கே இருந்திருந்தால் நம்மை வளரவிடாமல் அப்பொழுதே செய்துவிட்டிருக்க முடியும் என்பதைப் போலவும் எண்ணிக் கொண்டு பேசுகிறார்கள்! இவர்கள் அவ்வளவு பேரும், இங்கே விழித்துக்கொண்டும் வீறாப்புப் பேசிக் கொண்டும் இருந்து வந்த நேரத்திலேயேதான், கழகம் வளர்ந்தது.

67000 அடி ஆழமான குழி தோண்டப் போவதாகப் பேசும் இந்த வல்லவர்கள் என்ன செய்து கொண்டிருந்தார்கள்?

வளர்ந்தால் வளரட்டும் அது நம்மை என்ன செய்யும் என்று இருந்துவிட்டார்களா என்றால் அதுவும் இல்லையே! அப்போதும், இதே விதமான பேச்சு.

ஒழித்துக் கட்டுவோம்

குழி தோண்டிப் புதைப்போம்

கூண்டோடு தொலைப்போம்

பூண்டோடு ஒழிப்போம்

என்ற முழக்கங்கள்; உருட்டல் மிரட்டல்கள்!

இன்றைய இந்தியக் காங்கிரஸ் தலைவர் காமராஜர் அன்று சொன்ன திருவாய் மொழி தெரியாதா! கழகத்தாருடைய கை கட்டை விரலை வெட்டி விடுவோம் என்பதல்லவா!!

எத்தனை விதமான எதிர்ப்புகளை,

எத்தனைக் கலவரங்களை மூட்டிவிட்டனர்!

என்னென்ன விதமான வழக்குகளைத் தொடுத்தனர்;

எத்தனை தடிஅடி! சிறைவாசம்!

சதிச் செயல்களுக்குத்தான் குறைவா?

தூத்துக்குடி சாமியிலிருந்து வண்ணை பாண்டியன் வரையில் கொலை செய்யப்படவில்லையா!

ஒடித்த கொடிமரங்கள் கொஞ்சமா! கொளுத்திய கொடிகள் கொஞ்சமா!

இட்டுக் கட்டியதும் இருட்டடிப்பு நடத்தியதும் திறமையுடன் அல்லவா!

கழகத் தலைவர்களை ஏசிப் பேசிட, வசைமொழிகள் சாதாரணமாகவா! தனித் தரமுள்ள நாராச நடையிலல்லவா!!

பிறப்பு, வளர்ப்பு, குடும்பம், கொடி வழி என்ற எதையாவது விட்டார்களா!

மண்ணாசைக்காரன், பெண்ணாசைப் பேயன், பொன்னாசை பிடித்தோன் என்றெல்லாம் கழகத்தின் முன்னணியினரை ஏசியது கொஞ்சமா!

கூத்தாடிகள்!—என்றல்லவா இகழ்ந்தனர்—இன்று 'கலைஞர்களை' நாங்களும் காட்டுகிறோம் என்று பேசிடும் இந்தக் குணாளர்கள்!

எத்தனை விதவிதமான எதிர்ப்பு மாநாடுகள், ஒழிப்பு மாநாடுகளை நடத்திக் காட்டினர்!

உள்ளூர்ச் சரக்குப் போதாது என்று வெளியூர்ச் சரக்குகளை வேண மட்டும் வரவவைத்துக் கூவிக் கூவி விற்றார்களல்லவா!

கருப்புக் கொடியா! காட்டுபவன் கரத்தை ஒடி என்ற அகிம்சைப் பேச்சு வழிந்ததே!

எதைச் செய்யாமல் விட்டார்கள்!

எல்லாம் செய்து பார்த்து, கழகம் வளருவதைத் தடுக்க முடியவில்லை.

வெட்ட வெளியில் இருந்த கழகம் சட்ட சபைக்கே வந்துவிட்டது!

சட்ட சபையிலும், கழகம் அதிகாரம் பெற்ற எதிர்க் கட்சியாகி விட்டது!

இந்த வளர்ச்சியைத் தடுத்திட முடியாத இதே வல்லமை சாலிகள்தாம், இப்போது 67000 அடி ஆழமான குழி தோண்டப் போகிறார்களாம்!

நாட்டிலே சில ஆயிரம் புதுப் பணக்காரர்களை உண்டாக்கி வைத்துக் கொண்டிருப்பதால், கேட்ட பணம் கிடைக்கிறது என்ற ஒரு தைரியம் தவிர, மக்களின் மனம் மகிழ்ச்சியால் துள்ளுகிறது எமது ஆட்சியின் திறமையால், ஆகவே மக்களின் பேராதரவு எமக்கே உண்டு என்று பேசிடும் தைரியமா இன்று அவர்களுக்கு இருக்கிறது?

மக்கள் மனம் மகிழ்ந்திடும்படியான ஆட்சி நடத்தியிருந்தால் எதிர்க் கட்சிகள் இந்த அளவு வளர்ந்திருக்க முடியுமா!

குழி தோண்டுகிறார்கள் என்றே வைத்துக் கொள்வோம் தம்பி! ஆழமான குழி! அதைப் பார்த்து மக்கள் கேட்க மாட்டார்களா?

நாடாளும் நல்லவர்களே! எதற்காக இத்தனை ஆழமான குழி தோண்டுகிறீர்கள்!

இதுவா? இது, தி. மு. கழகத்தைப் போட்டுப் புதைக்க!

இவ்வளவு ஆழமான குழி தேவைப்படுகிறது என்றால், தி. மு, கழகம் பெரிய கட்சி என்று தெரிகிறதே, அப்படியா? அப்படியானால், எப்படி அது இந்த அளவுக்கு வளர்ந்து விட்டது?

எப்படியோ வளர்ந்துவிட்டது! இப்போது இந்தக் குழியில் போட்டுப் புதைத்துவிடப் போகிறோம்.

ஏன்? தி. மு. கழகம் என்ன கெடுதல் செய்தது? குழியில் போட்டுப் புதைத்திட வேண்டிய விதமான கெடுதி யாருக்கு என்ன செய்தது?

உனக்குத் தெரியாது! இது மிக மிகக் கெட்ட கட்சி! ஆமாம் பொல்லாத கட்சி! நாட்டையே நாசமாக்கும் கட்சி!

அந்த விவரம்தான் கேட்கிறோம், என்ன செய்துவிட்டது கழகம்? ஊர் மக்கள் சொத்தைச் சுருட்டிக் கொண்டதா? ஆயிரமாயிரம் சம்பளம் வாங்கிக் கொண்டு உல்லாச வாழ்க்கை நடத்திக் கொண்டிருந்ததா? கள்ள மார்க்கட்காரனுடன் குலவிற்றா? கொள்ளை இலாபக்காரனிடம் குலவிக் கிடந்ததா? ஊழல் ஊதாரித்தனம் நடத்திற்றா?—என்ன செய்தது சொல்லுங்கள், கேட்போம்...?

இப்படி உரையாடல் இருந்திடின், குழி தோண்டக் கிளம்பிடும் குணாளர்கள் என்ன பதில் கூறுவர்?

போ! போ! உனக்கொன்றும் தெரியாது. நீ மேற்கொண்டு ஏதாவது பேசினால் உன்னையும் இந்தக் குழியில் போட்டுப் புதைத்து விடுவோம் என்றுதான் பேசுவர்.

ஆனால், பொதுமக்கள் என்ன பேசிக்கொள்வார்கள்?

திராவிட முன்னேற்றக் கழக வளர்ச்சி இந்தக் காங்கிரஸ்காரர்களுக்குக் கிலியை மூட்டிவிட்டு விட்டது.

திராவிட முன்னேற்றக் கழகம்தான் விழிப்புடன் இருந்துகொண்டு, காங்கிரசாட்சி ஆகாத சட்டம் கொண்டு வந்தால் எதிர்க்கிறது; அநியாய வரி போட்டால் கண்டிக்கிறது.

திராவிட முன்னேற்றக் கழகம் காங்கிரசாட்சியிலே நெளியும் ஊழலை, ஊதாரித்தனத்தைக் கண்டிக்கிறது.

திராவிட முன்னேற்றக் கழகம், மக்களிடம் வாங்கிடும் வரித்தொகை எவ்வளவு, மக்களுக்குச் செய்திடும் வசதி எந்த அளவு, காட்டு கணக்கு என்று துணிந்து காங்கிரசைக் கேட்கிறது.

திராவிட முன்னேற்றக் கழகம், எத்தனையோ பேர் நமக்கென்ன என்றும், நம்மால் ஆகுமா என்றும் வாய் மூடிக் கிடந்திடுவதைக் கண்ட பிறகும், நமக்கு என்ன நேரிட்டாலும் சரி, நம்முடைய உள்ளத்துக்குச் சரியென்று பட்டதைச் சொல்லியாக வேண்டும் என்ற தூய்மையுடன் பணியாற்றுகிறது.

திராவிட முன்னேற்றக் கழகம், மொழிக்காக, கலை வளத்துக்காக, தொழில் முன்னேற்றத்துக்காக, அந்த முன்னேற்றம் முதலாளிகளிடம் சிக்கிவிடாமல் சமுதாயத்துக்குப் பரவுவதற்காகப் பாடுபடுகிறது.

திராவிட முன்னேற்றக் கழகம், முதலாளிகளுக்கும் காங்கிரசாட்சிக்கும் ஏற்பட்டுவிட்டுள்ள எழுதாத ஒப்பந்தத்தை எடுத்துக் காட்டுகிறது.

குட்டுகளை உடைக்கிறது! கொடுமைகளை எதிர்க்கிறது! ஆட்சியில் உள்ள அக்கிரமங்களை அம்பலப்படுத்துகிறது.

அந்த எரிச்சல், காங்கிரசுக்கு! நமது ஆதிக்கத்துக்குக் கழகம் உலை வைக்கிறதே என்ற எரிச்சல்.

பட்டம் உண்டு, பதவி உண்டு, பர்மிட் உண்டு, லைசென்சு உண்டு; பத்திரிகைகளில் நிறைய விளம்பரம் உண்டு, வருக! பெருக! என்று அழைத்ததும் ஓடோடி வந்து நம்மோடு கூடிக்சொண்டார்கள் பலப் பலர், இந்தக் கழகத்துக்காரர்கள் மட்டும், பசப்புக் கண்டு மயங்க மாட்டோம், பாதை தவறமாட்டோம் என்று இருக்கிறார்களே, பொதுமக்களிடம் தோழமைத் தொடர்புடன் இருந்து வருகிறார்களே, இவர்களைத் தொலைத்தாலொழிய நமது ஆதிக்கம் நிலைக்காது, நீடிக்காது என்ற உணர்ச்சி.

இதன் காரணமாகத்தான், காங்கிரசாட்சியினர் கழகத்தைப் புதைக்க வேண்டும், அதற்காக ஆழக் குழி தோண்ட வேண்டும் என்று எண்ணுகிறார்கள்—என்று பேசிக்கொள்ள மாட்டார்களா!

இது அக்கிரமம்! நமக்காக, நாட்டுக்காகப் பாடுபடும் கழகத்தை நாம் காத்திட வேண்டும், துணை நிற்கவேண்டும் என்று பொதுமக்கள் எண்ணிடத்தான் செய்வார்கள்.

மக்களுக்கு வயிறாரச் சோறு கிடைக்க வழி செய்திடுக!—என்று கேட்டிடும் கழகத்தை, ஏழை மக்களே! எலி தின்று உயிர் பிழைத்துக் கொள்க என்று பேசிடும் காங்கிரஸ் ஒழித்திட முனைவதா! அதை நாம் பார்த்துக் கொண்டிருப்பதா! நமக்காக வாதாடும் கழகத்தை, நம்மை வதைத்து வரும் வன்கணாளர் குழி தோண்டிப் புதைப்போம் என்று கிளம்புவதா, நாம் வாளாயிருப்பதா—என்று பொது மக்கள் எப்படி எண்ணிடாமலிருந்திட முடியும்,

காங்கிரசாட்சியினர் இப்போதுபோல இறுமாந்து பேசிய ஒவ்வொரு கட்டத்திலும், அவர்களின் முயற்சி பலன்தராமல், கழகம் மேலும் மேலும் வளர்ச்சி அடைந்து வந்ததன் காரணமே இதுதான்—பொது மக்களின் நல்லாதரவு!!

தம்பி! அவர்கள் குழி தோண்டுகிற வேலையிலே இருக்கட்டும்—ஆழமான குழி!!

நாம், மக்களிடம் சென்று உண்மை நிலைமையை எடுத்துக் கூறிடும் பணியிலேயே நம்மை முழுக்க முழுக்க ஒப்படைத்துவிட வேண்டும்.

தங்கள் ஆதிக்கத்துக்கு உலைவைக்கிறதே கழகம் என்ற எரிச்சலில், காங்கிரசார் ஆத்திரம் கொள்ளத்தான் செய்வார்கள்; கழி சுழற்றுவார்கள், விழி பெயர்த்திடுவேன் என்பார்கள், குழி தோண்டிப் புதைப்பேன் என்பார்கள்.

பாவிப்பயல்! இன்னும் தூங்கவில்லையே என்று நள்ளிரவு கன்னம் வைத்திட வருபவன், வீட்டுக்குடையானைச் சபித்திடத்தான் செய்வான்.

சனியன் இன்னும் வெளியே போய்த் தொலைக்கவில்லையே என்று கள்ளக் காதலனுக்காக ஏங்கிடும் நாயகி கை பிசைந்து கொள்கிறாள் என்று கதையில் எழுதுகிறார்கள் அல்லவா!

அதுபோல, இவர்கள் ஓயமாட்டேன் என்கிறார்களே! விடாது எதிர்த்து வருகிறார்களே! படிப்படியாக முன்னேறுகிறார்களே! வளர்ச்சி இருந்தபடி இருக்கிறதே!—என்று எண்ணி மனம் புழுங்குகிறார்கள், அவர்களுக்குத் தோன்றத்தான் செய்யும், கழகத்தைக் குழி தோண்டிப் புதைக்க வேண்டும் என்று.

அவர்களின் ஆத்திரப் பேச்சு, நமது பணி ஆற்றலுடன் நடந்து வருகிறது என்பதற்குச் சான்றளிக்கிறது!

நாம் ஓயாமல் உழைத்து வருகிறோம் என்பதுடன், மேலும் உழைத்திட உறுதியும் உற்சாகமும் இருக்கிறது என்பதை நாம் உணருவதற்கு அவர்களின் உருட்டல் மிரட்டல் பேச்சு நமக்குப் பயன்படுகிறது.

அவர்கள் குழி தோண்டியபடி இருக்கட்டும், நாம் மக்களுக்கு நல்வழி எது என்பதனை எடுத்துக் காட்டியபடி இருப்போம்.

அவர்கள் தங்கள் ஆதிக்கம் பறிபோகக் கூடாது என்று பதறுகிறார்கள், அதனால் அவர்கள் பேச்சிலே ஆத்திரம் கொந்தளிக்கிறது.

நாம் மக்களுக்கு ஒரு நல்லாட்சி அமையவேண்டும் என்பதற்காகப் பாடுபடும் பணியினை மேற்கொண்டிருக்கிறோம். நமது பணி பயனற்றது, நமது முறை தெளிவற்றது, நமது ஆற்றல் தரமற்றது என்றால் நம்மைப் பற்றிய நினைப்பே ஆளவந்தார்களுக்கு எழாது.

இன்றோ நம்மைப் பற்றிய நினைப்பன்றி வேறு எந்த நினைப்பும் அவர்களுக்கு எழுவதில்லை.

எங்குச் சென்றாலும், எதைச் செய்து கொண்டிருந்தாலும், அவர்களின் மனத்திலே நம்மைப் பற்றியே நினைப்பு!

இதைச் செய்தால் என்ன சொல்லுவார்களோ, அதைச் செய்தால் என்ன செய்வார்களோ என்ற அச்சம் அவர்களைப் பிடித்து வாட்டுகிறது.

அதனால்தான், சுற்றிலும் சீமான்கள் வீற்றிருக்க இலட்சங்கள் காணிக்கையாகக் கிடைத்திருக்க, பத்திரிகைகள் புகழ்பாடி நின்றிருக்க, கொலுவிருக்கும் நிலையிலும் அவர்களுக்கு, 67000 அடி ஆழமுள்ள குழி தோண்ட வேண்டும் என்ற 'அபாரமான' திட்டத்தின் மீது நாட்டம் செல்லுகிறது.

நம்மை ஒழிக்க அவர்கள் மேற்கொண்ட முன்னைய திட்டங்களைப் போலவே இந்தத் திட்டமும், பயனற்றதாகிப் போகும்.

முன்பு அவர்கள் நம்மை ஒழிக்கத் திட்டம் போட்ட போது இருந்ததைவிட இன்று அவர்கள்மீது மக்கள் கொண்டுள்ள கோபம் பன்மடங்கு வளர்ந்திருக்கிறது.

ஏதோ சோற்றுக்குக் குறைவில்லை—என்ற நிலையில் மக்கள் முன்பு இருந்தார்கள்.

இன்று, சோறு! சோறு! என்று ஏன் கதறுகிறீர்கள், கிடைத்ததை வயிற்றில் போட்டு நிரப்பிக் கொள்ளுங்கள் என்று ஆளவந்தார்கள் பேசிடக் கேட்கும் நிலையில் உள்ளனர்.

மக்கள் அடைந்திருக்கிற கோபம், கசப்பு, கொந்தளிப்பு ஒவ்வொரு நாளும் தெரிந்தபடி இருக்கிறதே, தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கும் பேரணிகள், ஆர்ப்பாட்டங்கள், கடை அடைப்புகள், வேலை நிறுத்தங்கள் என்பவை மூலம்.

சமூகத்தில் எந்தத் துறையினராவது மனக்கசப்பு இன்றி, குமுறல் இன்றி இருக்கின்றனரா?

கிளர்ச்சி என்றாலே அது வெறும் ஆலைத் தொழிலாளி செய்வது, நமக்கு அது ஒத்து வராது என்று எண்ணிக் கொண்டிருந்தவர்களெல்லாம் இன்று தத்தமது அமைப்பு கள் மூலம், கிளர்ச்சி நடத்திடக் காண்கிறோமே.

சர்க்கார் அலுவலகப் பணியாளர்கள் சீறி எழுவதைக் காண்கிறோம்.

பாங்குகளில் ஊதியம் பெறுவோர் கிளர்ந்தெழுவதைப் பார்க்கிறோம்.

ஆறாத் துயரில் சிக்கியுள்ள ஆசிரியர்கள் 'ஆர்ப்பாட்ட அணிவகுப்பு' நடத்திடக் காண்கிறோம்.

யார் இந்த ஆட்சியிலே திருப்தியுடன் இருந்திட முடிகிறது!

நாடே எமது பக்கம்! என்று நாப்பறை ஒலித்துக் காட்டுகிறார்கள், ஆளவந்தார்கள்.

இல்லை! இல்லை! – என்ற முழக்கம் எழுப்புகின்றனர், ஒவ்வொரு கிளர்ச்சியின்போதும்.

துப்பாக்கி பேசுகிறது! பிணம் விழுகிறது! பீதிகொண்டு மக்கள் ஓடிடக்கூட மறுக்கிறார்கள்.

வீரன் வீழ்ந்தான்! வீரம் வீழ்ந்துபடாது! ஒருவன் மாண்டான்! மற்றவர் மாண்டிடா திருக்குமட்டும் அறப் போர் நடந்திடும்!!—என்றல்லவா முழக்கம் எழுப்பு கிறார்கள்.

போலீஸ் போதவில்லை! இராணுவம் வரவழைக்கப்படு கிறது! ஏன்? கொந்தளிப்பு அடங்க மறுக்கிறது.

சாகவேண்டி நேரிட்டுவிடுமோ என்ற பயம்கூட இன்று மக்களிடம் வெகுவாகக் குறைந்து விட்டிருக் கிறது; குறைந்து கொண்டும் வருகிறது.

பலர் வாழச் சிலர் சாகலாம் என்பது ஒப்புக் கொள்ளப்பட்டுவிட்ட தத்துவமாகிவிட்டது.

அந்தத் தத்துவம் நடைமுறைக்கே வந்து விட்டதோ என்று சொல்லத்தக்க நிலைமைகள் உருவாகிக் கொண்டு வருகின்றன.

தம்பி! ஒன்று கூறுவர் காங்கிரசார், கூறுகின்றனர்; இந்தக்கிளர்ச்சிகளை எதிர்க்கட்சிகள் வேண்டுமென்றே தூண்டி விடுகின்றன—என்று.

எதிர்க் கட்சிகள் கிளர்ச்சிகளைத் தூண்டிவிடுகின்றன என்றே வாதத்துக்காக வைத்துக்கொள்வோம்; மக்கள் என்ன ஏமாளிகளா, அவர்கள் அறியார்களா, கிளர்ச்சியை ஒடுக்கத் தடியடி நடக்கும், துப்பாக்கியால் சுடுவார்கள் என்பதனை? தெரிந்தும் கிளர்ச்சியில் ஏன் ஈடுபடுகிறார் கள்?

அவர்கள் மனத்திலே கொந்தளிப்பு இருக்கிறது, ஆகவே கிளர்ச்சி செய்திடும் துணிவு தன்னாலே பிறக்கிறது.

எந்த எதிர்க்கட்சியும். தடியடிபட வருவீர்! துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியாக வருவீர் என்று மக்களை அழைத்துவர முடியாது. ஆனால், நடைபெறும் கிளர்ச்சிகள், ஆட்சியின் அலங்கோலத்தின் விளைவு என்பதை உணராதவர்கள் எதிர்க்கட்சிகள்மீது பழிபோடு கின்றனர்.

இதனை முட்டாள்தனம் என்று கண்டித்திருக்கிறார் ஒரு பேரறிவாளர்; இன்றைய ஆட்சியாளர்களும் போற்றித் தீரவேண்டிய பேரறிவாளர்.

இலட்சியங்களுக்காகவும் பொருளாதார நிலை காரணமாகவும், புரட்சிகள் ஏற்படுகின்றன. அதிகாரத் தில் உள்ள முட்டாள்தனமானவர்கள், தங்கள் எண் ணத்தோடு ஒட்டிவராத எதனையும் காண இயலாத கருத்துக் குருடர்கள் இந்தப் புரட்சிகளெல்லாம் கிளர்ச்சிகளால் விளைகின்றன என்று எணணிக் கொள்கிறார்கள். உள்ள நிலைமையில் திருப்தி ஏற்படாமல், மாறுதலை விரும்பி அதற்கான வேலை செய்பவர்களே கிளர்ச்சிக்காரர்கள்! ஆனால், ஆயிரம் ஆயிரம் மக்கள் ஒரு கிளர்ச்சிக்காரன் கூப்பிட்ட குரலுக்கு ஓடிவந்துவிட மாட்டார்கள். பெரும்பாலான

மக்கள் பாதுகாப்பாக வாழ விரும்புபவர்கள்; இருப்பதை இழந்துவிட விரும்பமாட்டார்கள். ஆனால், பொருளாதார நிலைமை கெட்டு, அன்றாட வாழ்க்கையில் நலிவு வளர்ந்து, வாழ்வே ஒரு சுமை என்று ஆகிப்போய்விடுமானால், வலிவற்றவர்களும், நடப்பது நடக்கட்டும் என்று துணிந்து கிளர்ச்சியில் ஈடுபட்டுவிடுகிறார்கள்.

இன்று நாட்டு மக்களில் மிகப் பெரும்பாலானவர்கள் இந்த நிலைமைக்குத் துரத்தப் படுகின்றார்கள்! நடப்பது நடக்கட்டும்!—என்று துணிந்துவிடும் நிலைமைக்கு. இதை உணராமல், மக்களைச் சிலர் தூண்டிவிடுகிறார்கள் என்று பேசி வருகின்றார்கள் ஆளவந்தார்கள்.

இவர்கள் கருத்துக் குருடர்கள், அறிவற்றவர்கள் என்று கண்டித்திருக்கிறார்.

யார்? பண்டித ஜவஹர்லால் நேருவேதான். அவர் எப்போதோ உணர்ச்சி வயப்பட்டுப் பேசிவிட்டஆவேசப்பேச்சு அல்ல; நாடு அறியட்டும், உலகம் உணரட்டும், வழிவழி வந்திடுவோர் பாடம் பெறட்டும் என்ற நோக்கத்துடன் உலக வரலாறு எனும் தமது நூலிலே எழுதி இருக்கிறார்.

நேருவின் வாரிசுகள் என்று கூறிக் கொள்பவர்களுக்கு, தம்பி! நான் இதனை நினைவுபடுத்தவேண்டி வருகிறது! என்ன செய்வது!!

Ideas and economic conditions make revolutions. Foolish people in authority, blind to everything that does not fit in with their ideas, imagine that revolutions are caused by agitations. Agitators are people who are dis-contented with existing conditions and desire a change and work for it. But tens and hundreds of thousands of people do not move to action merely at the bidding of an agitator. Most people desire security above everything else, thay do not want to risk losing what they have got. But when economic

conditions are such that their day to day suffering grows and life becomes almost an intolerable burden, then even the weak are prepared to take the risk.

நேருவின் இந்த மணிமொழியை உணர இயலாமல், கிளர்ச்சிகள் மூண்டுவிடுகின்றன—மூட்டிவிடப்படுவன அல்ல—என்பதை அறியாமல், சுட்டுத் தள்ளினால் மக்கள் சுருண்டு பிணமாகக் கீழே விழுந்தால், சமுதாயம் அடங்கிப் போய்விடும் என்று கருதிக்கொண்டு, சுட்டுத் தள்ளுகிறார்கள்.

ஆமாம்! ஐம்பது பேர் சுட்டுத்தள்ளப்பட்டார்கள்!! என்று அவருடைய ஆயுட் காலத்திலேயே இதனை விடப் பெரிய சாதனை இல்லை என்று கருதுபவர்போலப் பேசினாரல்லவா பக்தவத்சலனார்—''பாறைபோல நின்றவர்''—அந்த நிலை எதைக் காட்டுகிறது?

சுட்டுத்தள்ளிக் கிளர்ச்சியை ஒடுக்குவோம் என்று இவர்கள் கொண்டுள்ள உறுதியை.

ஆகவேதான் தம்பி! 67,000 அடி ஆழமுள்ள குழி தேவைப்படுகிறது.

கழகத்தைப் போட்டுப் புதைக்க என்று பேசினார்களே தவிர, அத்தனை ஆழமான குழி தோண்டப்பட வேண்டும் என்று அவர்கள் எண்ணுவதற்குக் காரணம், அவர்கள் குழியில் போட்டுப் புதைத்துவிட விரும்புபவை, கழகம் மட்டுமல்ல, வேறுபல உள!

காந்தியம்

ஜனநாயகம்

அறநெறி

மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகள்,

கிளர்ச்சியை ஒடுக்க வீழ்த்தப்பட்டவர் பிணம்!

இவ்வளவும் இருப்பதால்தான் அவ்வளவு ஆழமான குழி தோண்டவேண்டும் என்று தோன்றுகிறது போலும்.

பிறரை வீழ்த்தக் குழிபறிப்போன், வெட்டிய
குழியில் தானே வீழ்வான்

என்று எங்கோ படித்ததாக நினைவு.

தம்பி! அவர்கள் குழி வெட்டிக்கொண்டே இருக்கட்டும், நீயும் நானும் அதிலே தள்ளப்படுவதாக இருந்தாலும், அந்தக் கடைசி நிமிடம் வரையில் மக்களிடம் சொல்ல வேண்டியதைச் சொல்லிக்கொண்டிருப்போம். உண்மைக்கு வெற்றி கிடைக்கிறதா இல்லையா என்பதைத்தான் பார்த்துவிடுவோமே.

அண்ணன்,

4—9—'66



காஞ்சிக் கடிதம் : **78**

மலர் மணம்

★ கழக ஏடுகள் பயன் தரத்தக்க படைக்கலன்கள்!

★ சுமை அதிகம்; பாடும் அதிகம்!

★ நாட்டுக்கு எழில், ஆட்சிக்கு ஏற்றம் தருவது 'காஞ்சி'!

தம்பி,

சிரித்திடும் முல்லையைப் பறித்திடும்போது, அதனைத் தன் உள்ளம் வென்ற எழிலுடையாள் ஏற்றுக் கொள்வாள், மணம் கண்டு மகிழ்வாள், எழில் எழிலுடன் சேர்ந்திடும் என்ற எண்ணம் கொள்ளாத காதலன் உண்டா?

வாளினை வடித்தெடுத்துக் கொடுத்திட உலைக் கூடத்தினில் பணி புரிவோன், இந்த வாள், வீரன் கரம் சேர்ந்து அக்கிரமத்தை வெட்டி வீழ்த்தப் பயன்படும், உரிமை காத்திடத் துணை நிற்கும் என்ற நம்பிக்கை பெற்றிடும்போது தானே, அவன் வேலைத்திறன் நேர்த்திமிக்கதாகும்?

சொல்லழகும் பொருளழகும் இழைந்துள்ள நற்கவிதை இயற்றிடுவோன் அக் கவிதையினைச் சுவைத்திட, பயன் பெற்றிட இசைந்து வந்திடுவோர் உளர் என்ற உணர் வினைப் பெற்றாலொழிய உள்ளத்திலிருந்து கவிதா சக்தி சுரந்திடுமா?

எடுத்துக்கொள்ளும் எந்தச் செயலினையும் பாராட்டி வரவேற்றிடவும், ஏற்றுப் பயன்படுத்திக் கொள்ளவும் தக்கார் உளர் என்ற எண்ணம், மேற்கொள்ளும் செய லினைச் செம்மையானதாக்கிடுமல்லவா?

தாயின் அன்பினைப் பெற்றிட வாய்ப்பற்ற குழந்தை எத்தனை அழகுடன் விளங்கியும் பயன் என்ன!

இதழ் நடாத்தப்படுகிறது, மலர் வெளியிடப்படுகிறது. ஆயினும் அவற்றினைப் பெற்றிடுவதில் மகிழ்ச்சியும், பயன் பெறுவதில் சுவையும் தேடிடுவோரின் தொகை மிகுதியாக வும், வளர்ந்தவண்ணமும் இருந்தாலொழிய, எண்ணங் களை வடித்தெடுத்து இதழிலும் மலரிலும் தந்து வருவது எற்றுக்கு என்ற ஏக்கமல்லவா மனத்தினைக் குடைந்திடும் என்பது பற்றிய எண்ணம், இவை பற்றிய நினைவினைக் கொண்டு வந்து சேர்த்தது.

ஆனால், கழகத் தோழர்களும் ஆதரவாளர்களும் அத் தகைய கவலை குடைந்திடும் நிலையினை மூட்டி விட வில்லை. 'காஞ்சி' இதழினுக்குத் தொடர்ந்து நல்லாதரவு அளித்து வருகின்றனர். மகிழ்ச்சி நன்றி.

'காஞ்சி' இதழும், கழகக் கருத்துக்களைப் பரப்பிவரும் மற்றைய இதழ்களும், முழுக்க முழுக்கத் தம்மைக் கழகத் திடம் ஒப்படைத்து விட்டவர்களால் நடத்தப்பட்டு வரு வதாகும்.

ஏழெட்டுத் துணையாசிரியர்கள், மூன்று நான்கு ஓவியர்கள், சுறுசுறுப்பு மிக்க விளம்பரத் துறைக் குழுவினர் ஆகியோர் புடைசூழ ஆசிரியர் அமர்ந்தபடி, கண்களை மூடியபடி இந்த இதழில் என்ன வண்ணம் காட்டிடலாம், எந்தச் சுவையைக் கூட்டிடலாம் என்று சிந்தித்துப் பார்த்து எழில் ஏடுகள் பலவற்றினை ஒப்பிட்டுப் பார்த்து, வனப்பு மிக்க விதமான இதழினைத் தந்திடும் வகை காண்பது என் பதெல்லாம், வேறு இதழ்களில்; கழக இதழ் நடாத்து வோர் மாலையில் மன்னார்குடி, காலையில் காட்பாடி,

மறுநாள் போடி, மற்றோர் நாள் சேலம், பிறிதோர் நாள் ஈரோடு என்றமுறையில் சுற்றிச் சுழல்பவர்கள். உடலிலே அலுப்பு ஏற்படும் என்பதனை எடுத்துக்காட்ட இதனைக் கூறிடவில்லை; ஓய்வு நாற்காலியில் சாய்ந்துகொண்டு நிம் மதியாகச் சிந்தித்து இதழினுக்குச் சுவைகூட்டிடும் நிலையில் உள்ளவர்கள் அல்லர் என்பதனை எடுத்துக் காட்டத்தான்.

பிற இதழ் நடாத்துவோர் போல, இதனையே தமது முழு நேர வேலையாகவோ, முதல் வேலையாகவோ கொண்டவர்கள் அல்லர்.

கழக இதழ் நடாத்துவோர் மேற்கொண்டுள்ள பணி, ஒரு புத்தரசு காண்பது; அதற்குத் தக்கவிதமான பாசறை யாகக் கழகத்தை வலிவுள்ளதாக்குவது.

அந்த நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதற்காக அவர்கள் தேடிக்கொள்ளும் படைக்கலன்களில் ஒன்று, இதழ்!

அந்தப் படைக்கலன் வண்ணம் மிக்கதாக விளங்கிடச் செய்திட வேண்டுமே என்பதிலே மட்டுமே தம்மை ஈடு படுத்திக்கொள்ள இயலாத நிலையினர்.

ஆனால், அதேபோது அந்தப் படைக்கலன், பயன் தரத்தக்கதாக இருந்திட வேண்டும் என்பதிலே கண்ணுங் கருத்துமாக உள்ளவர்கள்.

இந்தநிலை காரணமாகவே இதழில் எழிலினை மிகுதி யாக்கிட, கண்களைக் கவரத்தக்க வடிவம் கொடுத்திட முடிவதில்லை.

இதழ் நடத்துவது ஒன்றை மட்டுமே மேற்கொண் டிடின், எழில் ஏடு என்று எவரும் வியந்து பாராட்டிடத் தக்க முறையினில், நமது கழகத்தோழர் எவரும் இதழ் நடாத்திடலாம். இயலாத ஒன்று அல்ல! ஆனால், நாம் மேற்கொண்டுள்ள பணியின் அளவும் தன்மையும் நம்மை ஏட்டுக்கு எழிலூட்டும் வேலையிலே மட்டுமே நாம் பிணைந்துவிட இடம் தருவதில்லை.

இந்த நிலையிலும், கூடுமான வரையில், இதழிலே பொலிவு விளங்கிடச் செய்வதில், இளங்கோவன் ஈடுபட்டு, 'காஞ்சி' இதழினுக்கு ஒரு கவர்ச்சி கிடைத்திடச் செய்து

வருவதனைப் பலர் பாராட்டிடக் கேட்டு மகிழ்ச்சி கொள் கின்றேன்.

'காஞ்சி' இதழின் இந்த இரண்டாம் ஆண்டுமலர், எழில் மிகு வடிவம் பெற்றிட முனைந்து பணியாற்றி அனை வருக்கும் அகமகிழ்ச்சி அளித்திடுவதில் குறிப்பிடத்தக்க வெற்றி பெற்றிருக்கும் நிலையினைக் காண்கின்றீர்கள்.

மலரில், இடம்பெற என்னிடமிருந்து கட்டுரைகளைப் பெறுவதென்பதே ஒரு தனிக்கலை! சற்றுக் கடினமான கலையுங்கூட!

கட்டுரைகளை—அதிலும் மலருக்கு என்று தனித் தன்மை வாய்ந்த கட்டுரைகளை—எழுதிட எனக்குக் கிடைக்கும் நேரமே, நள்ளிரவுக்கும் விடிவதற்கும் உள்ள நேரம்—அதிலேயும் கழகத் தோழர்கள் தங்கள் பிரச்சினை களுடன் வாராதிருந்திடின்.

ஆனால் இந்த நிலையிலும் இதழ் மூலம் என் உடன் பிறந்தாருடன் தொடர்பு கொள்வதிலே எனக்குள்ள பேரார்வம், என்னை எப்படியோ பணிபுரியச் செய்கிறது.

ஒவ்வொன்றையும் கூறிவிட வேண்டும், கூறிடும் ஒவ் வொன்றும் முழு அளவினதாக இருக்கவேண்டும் என்ற துடிப்பு எனக்கு.

கூறித் தீர வேண்டியவைகளோ மிக அதிகம் அளவில்; அந்த அளவு வளர்ந்துகொண்டும் வருகிறது.

உலக நடவடிக்கைகளைப்பற்றி, உள்ளத்து எழும் உணர்ச்சிகளைப்பற்றி, ஊராள்வோர் போக்கு பற்றி, அதனை மாற்றியாக வேண்டிய முறை பற்றி, கூறிட ஆயிரம் உள.

பிரச்சினைகள் கூவிக் கூவி அழைக்கின்றன.

எந்தக் கருத்துக்கும் இனிமை சேர்த்திட, நான் உளேன் காண்க! என்று தமிழ் இலக்கியம் அழைக்கிறது.

ஆதிக்கத்தை எதிர்த்திடும் ஆற்றலை மக்களிடம் எழச் செய்திட வேறு எதுவும் செய்திட வேண்டாம், நான் உள் ளடக்கி வைத்துக் கொண்டுள்ள கருத்தோவியங்களைப் பார், அவைகளைப் பக்குவப்படுத்தித் தந்திடு, அது போதும் என்று வரலாற்றுச் சுவடி கூறுகிறது,

கூற வேண்டியதற்கு வண்ணம் தேவையா, நல்வடிவம் தேவையா. நாடக வடிவினில் கொடுத்திடு, படிப்போர் உள்ளத்தைத் தொடும் என்று கூறுகிறது ஒரு குரல்!

கதை வடிவம் கொடு, எந்தக் கருத்தும் எளிதாகிடும், இனிப்பளித்திடும், இதயம் சென்று தாக்கிடும் என்று கூறு கிறது ஒரு குரல்!

ஒன்றல்ல இரண்டல்ல, பலப்பல உள, எனக்கு ஆவ லூட்டுபவை,

ஆனால், நானோ கூறவேண்டியவைகளைக் கூற வேண்டிய முறையில் கூறியிருக்கிறோம் என்ற பெருமிதம் கொண்டிட முடியவில்லை; முயற்சி எடுத்துக் கொண் டிருக்கிறோம் என்று மட்டுமே கூறிட முடிகிறது. ஆனால், அந்த நிலையே ஓர் தனித்தன்மை வாய்ந்த மகிழ்ச்சி யினைத் தருகிறது. காரணம், வடிவம் வண்ணம் எந்தத் தரத்தில் உளது என்பதுபற்றி அதிகம் பொருட்படுத்தாமல், நமக்குத் தேவைப்படுவனவற்றினை, நம்முடைய தோழமை யிலே மகிழ்ச்சி தந்திடும் அண்ணன் தருகின்றான் என்ற பற்றுடன், இதழினை வரவேற்றிடும் ஆயிரமாயிரம் தோழர்கள் உளர் என்பதுதான்.

'காஞ்சி' இரண்டாம் ஆண்டு மலரும் அதேவிதமான வரவேற்பினைப் பெற்றிடும் என்பதனை உணருகின்றேன்; மகிழ்ச்சி கொள்கின்றேன்.

இந்த மலரில் நெடுங்கதைசுள் என்று சொல்லத்தக்க அமைப்புடன், இரண்டு கருத்தோவியங்களைத் தந்துள் ளேன்; இரும்பு முள்வேலி, வண்டிக்காரன் மகன். கழகத் தோழர்களின் நன்மதிப்பினைப் பெற்றுள்ள பலர் தந்துள்ள கவிதைகள், கதைகள், கட்டுரைகள் மலரில் இடம் பெற் றுள்ளன.

இவைகளிலே ஒன்றுகூட, படித்துப் பொழுது ஓட்ட அல்ல! ஒவ்வொன்றும் ஒரு பிரச்சினையை விளக்கிட! இந்தத் தனித்தன்மை இதழ்களை மட்டும் நடத்திடுவோர் கொண்டிடவோ, தந்திடவோ முடியாது; அவர்கட்கு அந்த முறை, தேவையுமில்லை.

எடுத்துக்காட்டுக்காக—எரிச்சல் மூட்டவேண்டும் என்ப தற்காக அல்ல—ஒன்று கூறுகின்றேன்: இன்று காங்கிர சாட்சியின் போக்கையும், ஒவ்வொரு நடவடிக்கையையும்,

கண்டிப்பதில், கேலி செய்வதில், இதழ்கள் பலவும் ஈடுபட்டுள்ளன; ஆர்வத்துடன்.

ஐந்தாண்டுத் திட்டத்திலிருந்து அன்றாட நிர்வாகத்திலே நெளியும் ஊழல்கள் வரையில், ஆளுங்கட்சிக்குள் நெளியும் அலங்கோலங்கள் உட்பட, கண்டிக்கப்படுகின்றன, இதழ்கள் பலவற்றாலும்.

ஆனால், தாம் வலியுறுத்தும் பிரச்சினைகள், அளித்திடும் விளக்கங்கள், தந்திடும் அறிவுரைகள், விடுத்திடும் எச்சரிக்கைகள், துளியேனும், ஆட்சியின் போக்கை மாற்றிடுவதில் வெற்றி தந்துள்ளனவா என்ற கணக்குப் பார்க்கின்றனரா, இதழ் நடாத்துவோர் என்றால் இல்லை; வேறு கணக்குத்தான் பார்த்துக் கொள்கின்றனர்.

கண்டனத்தைக் கொட்டுகின்றனர், காரணங்களை அடுக்கிக் காட்டுகின்றனர், வாதங்களைத் திறமையாகச் செய்கின்றனர். ஆனால், வழக்கிலே வெற்றி கிட்டிற்றா என்பதுபற்றி மட்டும் பார்த்திட முனைவதில்லை. ஏன்? அவர்கள் இதழ் நடாத்துகிறார்கள்; ஆட்சியின் அக்கிரமத்தை ஒழித்திடும் இயக்கம் நடத்தவில்லை. அவர்களிலே சிலர் தமது திறமையை விளக்குகிறார்கள், தீமையை ஒழித்திடும் செயலில் தம்மைத் தீவிரமாக ஈடுபடுத்திக் கொள்ளாமலேயே! அவர்கள் பிரச்சனைகளைப் பற்றி நிம்மதியாகச் சிந்திக்கவும், நேர்த்தியாக விளக்கிடவும் தகுதி பெற்றவர்கள்; நிலைமையை மாற்றிட வேண்டும் என்ற மனத்திண்மை கொள்பவர்கள் அல்லர்.

கழக ஏடுகள் அவ்விதமானவை அல்ல.

அந்த ஏடுகள், கழகம் பெற்றுள்ள படைக்கலன்கள்.

கழகமோ, ஆட்சியின் அக்கிரமத்தை ஒழித்திட அறப்போர் மேற்கொண்டுள்ள பாசறை.

ஆகவேதான் கழக ஏடுகளில் பிரச்சினைகள் விளக்கப்படுவது மட்டுமல்ல, சிக்கல்கள் போக்கிட வழி கூறப்படுகிறது; அதைத் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் எடுத்துக் காட்டப்படுகின்றன; குறிக்கோள் எடுத்துக் காட்டப்படுகிறது.

ஆக, நல்லாட்சி காணவேண்டும் என்பதற்கான ஆர்வம் கொண்டோர் எவரும், அதற்கான இயக்கம் அளித்

திடும் இதழ்களை, ஏந்தித் தீரவேண்டிய படைக்கலன் என்று கொண்டிட வேண்டும். கழக இதழ்கள் மூலம் பெற்றிடும் பலன், இதனால் தனித்தன்மை வாய்ந்ததாகிறது.

எந்தப் பிரச்சினையை எடுத்துக் கொண்டாலும், அது குறித்து சர்க்கார் மேற்கொண்ட போக்கினைக் கண்டிக்கும் அதே இதழ்கள், சூடு தணிந்ததும், வேறு திசையிலே மக்களின் கவனத்தைத் திருப்பி விட்டு விடுவதிலே முனைவதனைக் காணலாம்.

அதனை விடத் துணிவாகச் சில இதழ்கள், கண்டனம் வெளியிட்டுவிட்டு, சின்னாட்களுக்குப் பிறகு 'கனம்' கள் தந்திடும் கருத்துக்களை அவை முன்னம் தாம் வெளியிட்ட கண்டனத்துக்கு முற்றிலும் ஒத்து வராது என்று தெரிந்திருந்தும்—வெளியிட்டு பிரச்சினையை மடியச் செய்து விடுகின்றன

இந்த இதழ்கள் மட்டும், அறப்போர் மனப்போக்குடன், நல்லாட்சி கண்டாக வேண்டும் என்ற துடிப்புடன் பணிபுரிந்திடின், ஜனநாயகம் எவ்வளவோ அளவு செம்மைப்பட்டிருந்திருக்கும். ஆனால், அந்த முறையில் அவைகள் வேலை செய்யவில்லை.

அதனால் கழக இதழ்கள், வசதியும் வாய்ப்பும், வல்லமையும் அனுபவமும் கொண்ட மற்ற இதழ்கள் செய்திருக்கக்கூடிய—ஆனால் செய்யாது விட்டுவிட்டுள்ள—வேலைகளையும் சேர்த்துச் செய்திட வேண்டி இருக்கிறது. சுமை அதிகம்! ஆகவே பாடு அதிகமாகிறது.

நீண்ட பழங்காலந் தொட்டே—பணம்—பதவி—எனும் எதன் காரணமாக ஏற்படுவதாயினும்—செல்வாக்குக் கொண்டவர்களின் சீற்றத்துக்கு அஞ்சுவதும், புன்னகைக்கு விரும்புவதும், நம் நாட்டிலே இயல்பு ஆக்கப்பட்டு விட்டிருக்கிறது.

மந்தம், நிதானம் ஆக்கப்பட்டுப் பாராட்டப்படுவதும், கஞ்சத்தனத்தை சிக்கனம் என்று புகழ்வதும், துடுக்குத்தனத்தை அஞ்சாமை என்று கூறிப் பாராட்டுவதும், களியாட்டத்தில் ஈடுபாடு இருந்திடின் அதனைக் கலை ஆர்வம் என்றும், எவரையும் மதித்துக் கலந்து பேசிடாத போக்கை, சுயசிந்தனை என்றும், அகம்பாவத்

நூல் காப்பகம்

தைக் கெம்பீரம் என்றும் கூறிப் பாராட்டுவோர் இருப்பதனைக் காண்கின்றாய்.

இந்தி ஆதிக்கப் பிரச்சினை பற்றித் தமிழக ஏடுகள் காட்டிய ஆர்வமும், தொடுத்த கண்டனமும் கொஞ்சம் அல்ல.

இன்று வரையில் இந்த இதழ்கள் கேட்டுக் கொண்ட அளவிலேகூட ஆட்சி மொழிச் சட்டம் திருத்தப்படவில்லை.

என்ன செய்கின்றன இந்த இதழ்கள்?

அதனையும் எழுதுகின்றன!

எழுதிவிட்டு?

எழுதுகின்றன!

அவ்வளவுதான்!!

ஜனநாயகம் வலிவு பெறவேண்டுமானால் என்ன செய்திருக்க வேண்டும்? தட்டாமல் தயங்காமல் இந்த இதழ்கள், மக்களிடம் கூறவேண்டும், இந்தத் தேர்தலில், காங்கிரசுக்கு ஓட்டுப் போடாதீர்கள்! இந்தி ஆதிக்க நோக்கத்துடனேயே இந்த ஆட்சி இருந்து வருகிறது. எமது வேண்டுகோட்களுக்கு எள்ளளவு மதிப்பும் தரவில்லை. இது அரசியல் அகம்பாவம். இந்த அகம்பாவம், சர்வாதிகாரத்திற்குத்தான் நாட்டை இழுத்துச் செல்லும். ஆகவே, நாட்டினரே! இந்த காங்கிரசுக்கு ஓட்டுப் போடாதீர்கள் என்று எழுத வேண்டும்.

எழுதுகின்றனவா?

இல்லை! ஏன்?

அவை, அக்கிரமத்தை ஒழித்தாக வேண்டும் என்பதற்காக அமைந்துள்ள படைக்கலன்கள் அல்ல! வண்ணம், வடிவம் பாரீர்! என்று கூறிடும், ஏடுகள்!!

எனவேதான் தம்பி! நான் மிக அதிகமாகவே வலியுறுத்திக் கொண்டு வருகிறேன், நல்லாட்சி காணவேண்டும் என்பதிலே நாட்டம் உள்ளோர், அந்த நோக்கத்துக்காகவே ஆக்கப்பட்டுள்ள படைக்கலன் போன்ற கழக ஏடுகளைப் பெரிய அளவில் ஆதரிக்க வேண்டும் என்பதனை,

வானவில்லின் வண்ணத்தைக் கண்டு வியந்திடலாம்; ஆனால், ஓவியம் தீட்டிட வண்ணக் கலவை நாம் தயாரித்துக் கொண்டாக வேண்டும். வான வில்லில் காணப்படும் வண்ணத்தை வழித்தெடுத்துக் கொள்ள முடியாது.

கழக ஏடுகளின் தனித்தன்மை எவ்வளவுக் கெவ்வளவு அதிக அளவில் உணரப்படுகிறதோ அவ்வளவுக் கவ்வளவு வேகம் நமது பயணத்திற்குக் கிடைக்கும்.

இந்தப் பணி சிறப்படைய வேண்டுமெனில், பறித்தெடுத்த சிரித்திடும் முல்லையைப் பெற்றுச் சூடிக்கொள்ள எழில் மங்கை இருந்திடவேண்டும் என்பது போல், வடித்தெடுத்த வாளினைக் கரம் கொண்டு களம் சென்றிடத் தகுதி மிகு வீரன் கிடைத்திட வேண்டும் என்பதுபோல, கழக ஏடுகளைத் தக்க ஆதரவு கொடுத்து வளர்ந்திடச் செய்வதுடன், பயன்படுத்திக் கொள்ளும் பக்குவம் உணர்ந்த பல்லோர் தேவைப்படுகின்றனர்.

அந்தப் பல்லோர், 'காஞ்சி' இதழினுக்கு ஊக்கமளித்து வருகின்றனர், தொடர்ந்து; தோழமையுடன். அவர்கட்கு நன்றி கூறிக் கொள்வதிலே மகிழ்ச்சி பெறுகின்றேன்.

'காஞ்சி' இதழுடன் தம்பி! உனக்கு ஏற்பட்டுள்ள அன்புத் தொடர்பு தெம்பு ஊட்டுவது மட்டுமல்ல, இதழின் எதிர்காலத்திற்கான ஒளியும் தந்திடுகின்றது.

போர்டில்லன் எனும் ஆங்கிலக்கவிஞன் கூறியதனை நினைவிற் கொள்ளுகிறேன்:

இரவுக்கு ஆயிரம் கண்கள்,
ஆனால், பகலுக்கு ஒன்றே!
ஆயினும், சூரியன் மறைந்தால்
உலகத்தில் ஒளி இல்லையே!

அறிவுக்கு ஆயிரம் கண்கள்
ஆனால், நெஞ்சுக்கு ஒன்றே!
ஆயினும், அன்பு மறைந்தால்
வாழ்வில் ஒளி இல்லையே!

முத்தமிழும் முத்தும் முழங்கிடும் திருநாடு நம் நாடு. கத்தும் கடல் அடக்கிக் களம் செலுத்திக் கடாரம் சென்றோர் நம் இனத்தார். நாமணக்கப் பாப்பாடி நற்றமிழை நல்லவையைப் பாமணக்கச் செய்ய வந்த பாவலர்கள் தேனொத்த தீந்தமிழைத் தந்திடும் திருநாடு, நம் நாடு. எனினும்......?

ஓர் ஏக்கம்—ஓர் பெருமூச்சு—ஓர் குமுறல் அன்றோ, அந்த 'எனினும்' என்பதுடன் பிறந்திடக் காண்கிறோம். அந்த ஏக்கம் போக்கிட, பெரு மூச்சு நின்று ஓர் புன்னகை மலர்ந்திடக் குமுறல் அகன்று மனத்திலே ஓர் நிம்மதி எழுந்திட, எடுத்துக்கொள்ளப்படும் இணையற்ற முயற்சியில், தனது பங்கினைச் செலுத்துவதில் மகிழ்ச்சி கொள்கிறது 'காஞ்சி'.

தம்பியாம் நீ திரட்டித் தந்திடும் பேராதரவே, 'காஞ்சி' இதழின் பணி செம்மையுடையதாகிடச் செய்திடும்.

'காஞ்சி' நடாத்திடும் இளங்கோவனும், உடனிருந்து பணியாற்றும் முத்துராமனும், சுந்தரேசனும் அவ்வப்போது கதை, கவிதை, கட்டுரை வழங்கிடும் நண்பர்களும், ஓவியம் தீட்டித் தந்திடுவோரும், இதழின் எழிலும் பயனும் மிகுந்திட வேண்டுமென விழைகின்றனர்.

எந்த எழிலும் தம்பி! உன் கரம் தந்திடும் எழிலுக்கு நிகராகாதன்றோ! இதோ என்னிடம்! என்னிட முந்தான்!!— என்று கழகத் தோழர்களும் ஆதரவாளர்களும் 'காஞ்சி' யைக் கரத்தில் கொண்டு கூறிடுவதைக் காட்டிலும் இனிய இசை வேறு எது இருக்க முடியும்—என் செவிக்கு!

அந்த மகிழ்ச்சியினை அளித்துவரும் மாண்புக்கு நன்றி கூறி, 'மலர்' கண்டிடுவாய், மணம் நுகர்ந்திடுவாய் என்று அழைத்துத் தருகின்றேன், நாட்டுக்கு எழிலும் ஆட்சிக்கு ஏற்றமும் தேடித் தந்திடும் முயற்சியினை மேற்கொண்டுள்ள 'காஞ்சி' இதழின், இரண்டாம் ஆண்டு மலரினை.

அண்ணன்,

11—9—'66



காஞ்சிக் கடிதம் : 79

தீமிதித் திருவிழா!

- ★ பிரிவினை கேட்போர்க்குத் தேர்தலில் நிற்க இடமில்லையாம்!
- ★ கோலோச்சிகளின் குறுக்கு வழிச் சட்டம்!
- ★ உதய சூரியன் நுழைவதைத் தடுத்திடச் சூழ்ச்சி!
- ★ குட்டு உடைந்தது! திட்டம் அழிந்தது! ஜனநாயகம் பிழைத்தது!

தம்பி,

அறிவூர் அறிவானந்தர் சொன்ன கதை இது.

இதிலே, மெய்யம்மை கருத்தப்பன், பவுனாம்பாள் வலைவிரித்தான், கோட்டையூரான் கோலெடுத்தான், வாக்களிப்பார் தெளிவப்பன், நோட்டுரான், இருட்டூரான் என்போர் உளர்.

உதய சூரியன் கோட்டையூர் நுழைவதைத் தடுத்திடச் சூழ்ச்சி நடத்தப்படுவதும், அது முறியடிக்கப்படுவதும் கதையில் விளக்கப்பட்டிருக்கிறது.

மெய்யம்மையிடம் பவுனாம்பாள் தூபம் போட—வருகிற கட்டத்துடன் கதை துவங்குகிறது.

மெய்யம்மை இல்லம்

போகத்தான் போறேன், போகத்தான் போறேன்னு சொல்லிக்கொண்டே இருந்தாயே பொழுதுக்கும்; தலையே போறதானாலும் போகாம இருக்கப் போறதில்லே தீமிதிக் கற திருவிழாவுக்குன்னு; போகல்லியா, அமர்க்களமா நடக்குதாமே ஆட்சியூர் தடியெடுத்தான் கோயிலிலே; தீமிதிக்கிற திருவிழா.

போகணும்னு கொள்ளை ஆசைதான். தீமிதிக்கிற திரு விழாவோட வேடிக்கை பார்க்கமட்டுமில்ல, தீ மிதிக்கறதுக் கே ஆசைதான்...

தீ மிதிக்கிறதுக்கா? அடீ ஆத்தே! கால் புண்ணாயிடுமே கண்டவங்க தீ மிதிச்சா...!

மிதிக்கிறவங்க காலெல்லாம் என்ன தீஞ்சா போகுது...

அவங்க வேண்டுதலைச் செய்து கொண்டவங்க—விரதம் இருக்கிறவங்க—அவங்களைத் தீ ஒண்ணும் செய்யு டாதாம்.

எனக்கு மட்டும் என்னவாம்? நானுந்தான், தீ மிதிக் கறதுன்னு தீர்மானிச்சி வைச்சிருக்கறேன்.

பயம் இல்லையா, உனக்கு?......நெஜமாச் சொல்லு, தீயிலே இறங்கத் துணிவு இருக்குதா?

இருக்கறதாலேதான், சொல்றேன் தீ மிதிச்சே காட்டப் போறேன்னு......

தீர்மானம் செய்து கொண்டிருந்தாச் செய்யத்தான் வேணும்; செய்வதாச் சொல்லி விட்டுச் செய்யாமேப் போனாத்தான், ஏகப்பட்ட பாபமாம், எல்லம்மன் கோயில் பூசாரி ஏழெட்டு நாளைக்கு முன்னாலே சொன்னாரு......

காலையிலே சொன்னாரா, மாலையிலே சொன்னாரா அந்தப் பேச்சு?

அதென்ன என்னமோ ஒரு தினுசாக் கேட்கறே, காலை வேளையிலா, மாலையிலான்னு......?

காரணத்தோடுதான் கேட்கறேன். அவரோட பேச்சு பொழுதுவிடிஞ்சாப் போச்சி! புரியல்லையா! அட அவன்

மொடாக் குடியன்—போதையிலே பேசினானா, நிதானத் தோட இருந்து பேசினானான்னுதான் கேட்கறேன்.

நீ ஒரு குறும்பு! பூஜாரி, நல்ல கட்டுகட்டா விபூதி பூசிக் கிட்டு, குங்குமம் அப்பிக்கிட்டு, சுத்தமா இருக்கறப்போ தான் பேசினாரு. நீ சொல்ற மாதிரியிலே இல்லே. அது கிடக்குது; பொறப்படுறதுன்னா பொழுதோட கிளம்பு.

அதைப் பத்தித் தான் யோசிக்கறேன்......

அஞ்சாறு கல் தொலைவு நடக்க வேணுமே, கால் வலிக்குமேன்னு கவலை இருக்கும்......

அந்தக் கவலை கிடையாது—நான் என்ன, மேனா மினுக்கி வாழ்வு நடத்திக்கிட்டா இருக்கறேன், நடந்தா கால் கடுக்க? காடுமேடு சுத்தி உரம் ஏறினதுதான் காலு...... ஆனால்......

போறதுக்குள்ளே இருட்டாயிடுமே, அதை எண்ணிப் பயப்படறயா......

அட, அந்தப் பயம் எல்லாம் இல்லை போ! நான் என்ன, கழுத்திலே தொங்கத் தொங்கப் போட்டுக் கிட்டா இருக்கறேன், தங்கச் செயினு. உள்ளது, மூக்குத்தி-அதுவும் பாட்டி போட்டுக் கிட்டு இருந்தது—பழசு—முழுசா பத்து ரூபா கூடப் போவாது.

வேறே என்ன காரணம், தயக்கத்துக்கு...?

அதென்னடி அப்படிக் கேட்டு விட்டே...நான் என்ன ஒண்டிக்கட்டையா, நினைச்ச உடனே பொறப்பட. வீடுன்னு ஒண்ணு இல்லையா, அதிலே தட்டு முட்டுச் சாமானு ஏதோ கொஞ்சம் இல்லையா? கொழந்தை இருக் குது, தத்தித் தத்தி நடக்கற வயசு. அதை என்னா செய் யறது...

கொழந்தைக்கு என்னா...வீட்டிலே இருக்குது; வயத் துக்குப் போதுமானது போட்டுவிட்டா...பங்காளி வீட்டிலே பார்த்துக் கொள்ள மாட்டாங்களா...?

நல்லாச் சொன்னயே ஒரு பேச்சு; நண்டு சுட்டு நரியைக் காவல் வைக்கற மாதிரி, என் கொழந்தைக்குக் காவலு, என்னோட பங்காளிகளா? அது போதுமே தலைக்குத் தீம்பு.

உன்னோட கொழந்தையை, நீ, தீ மிதிக்கிற திருவிழாவுக்குப் போய்த் திரும்பற வரைக்கும், பார்த்துக் கொள்ளவா மாட்டாங்க உனனோட பங்காளிங்க...?

விவரம் தெரியாமப் பேசறே. அந்தப் பங்காளிங்க—என் கொழந்தை பொறந்ததிலே இருந்து, சபிச்சுக் கொட்டிகிட்டு இருப்பவங்களாச்சே-உனக்குத் தெரியாதா? விளக்கேத்திக் கும்பிட்டாங்க, கொழந்தை மாந்தத்திலே போயிடாதா, மாரிக்குப் பலியாயிடாதான்னு எல்லாம்...

செச்சே! கொழந்தைன்னா கொடியவங்களெல்லாம் கூடக் கொண்டாடுவாங்கன்னு பெரியவங்க சொல்லுவாங்களே...

இது, எல்லாக் கொழந்தையும் போல இல்லா, அதைத் தெரிஞ்சுக்கோ முதலிலே. இது அரசாளப் பிறந்தது, ஆமாம். பூவாகிக் காயாகிக் கனியாக வேணும். அதைப் பாதுகாத்து, வளரச் செய்தா, நாங்க இழந்து விட்ட செல்வத்தை மீட்டுக் கொண்டுவந்து எங்களோட, குலம் விளங்க வழி செய்து வைக்கும், அப்பேற்பட்ட கொழந்தை இது.

இருக்கட்டும். அதனாலே என்ன? பங்காளிங்க என்ன அதைக் கடிச்சித் தின்னுப் போடுவாங்களா? கையைக் காலை ஒடிச்சீப் போடுவாங்களா...

கால் அரைக்கு வித்துப் போடுவாங்க, வெளியூரானுக்கு காணமப் போயிட்டுது, தேடாத இடமில்லே, சுத்தாத தெருவு இல்லே; கொழந்தையைக் காணோம்னு நீலிக் கண்ணீர் வடிச்சி, கதையை முடிச்சிடுவாங்க.

பைத்தியம் உனக்கு; கொழந்தையைக் கொடுமை செய்ய யாருக்கும் மனசு வராது...

அப்படியா சொல்றே?......நெஜமா, நம்பிக்கையோட வா சொல்றே...

சத்யப் பிரமாணமாச் சொல்றேன், கொழந்தைக்கு ஒரு கெடுதியும் வராது. நான் பார்த்துக் கொள்றேன்; நீ பயமில்லாமல் போய் வா.

உன்னோட தைரியத்திலேதான், போக முடிவு செய்யறேன். கொழந்தைக்கு ஒரு கெடுதலும் வராதபடி பார்த்துக் கொள்ளு. தீ மிதிக்கிற திருவிழா முடிஞ்சி, நான்

வீடு திரும்ப, முடிய மணி நாலு ஆகுதோ அஞ்சு ஆகுதோ, தெரியாது...

அப்ப, உன்னோட வீட்டுக்காரரும் அண்ணாவும் வந்ததும் கிளம்பப் போறயா...

ஆமாம்; அவரும் வருவாரேல்லோ...

ஆமாம், குடும்பத்தோட போனாத்தானே, பூஜை பலன் கொடுக்கும்...

நீ மட்டும் என்ன, நாங்களும்தான் வரப் போறோம்னு அவங்களும் சொல்லிக்கிட்டுத்தான் இருக்கறாங்க. நான் மட்டும் பொறப்பட்டா, போய்விட்டுவான்னா சொல்வாங்க—

எல்லோருந்தான் கிளம்புவாங்க......நான், நீ பொறப்படறப்போ, வந்து பார்க்கறேன்; வழி அனுப்பி வைக்கறேன். உனக்குத்தான் தெரியுமே, நான் தீ மிதிக்கிற திருவிழாவுக்குப் போற பழக்கத்தை நிறுத்திப் போட்டது.

பவுனாம்பாள் மெய்யம்மையுடன் பேசிவிட்டுச் சென்றான பிறகு, மெய்யம்மையின் கணவன் கருத்தப்பன் வீடு வர, நடந்த உரையாடலை மனைவி கூறுகிறாள்.

கருத்தப்பன் எதனையும் ஆராய்ந்து பார்த்திடும் இயல்பினன்.

தீ மிதிக்கும் திருவிழாவுக்குப் போகவேண்டும் என்று ஏன் பவுனாம்பாள் தூண்டிவிட முனைந்தாள் என்பது குறித்துச் சிந்திக்கலானான். மெய்யம்மையுடன் அது பற்றிப் பேசிடலானான்.

பவுனாம்பாளா சொன்னாங்களே, தீ மிதிக்கிற திருவிழாவுக்குப் போய்வரச் சொல்லி......

ஆமா, அவதான், சொன்னா, திமிக்கிற திருவிழா வரட்டும், போகத்தான் போறேன், போகத்தான் போறேன்னு பேசிக்கிட்டே இருக்கிறாயே, ஆட்சியூர் தடி எடுத்தான் கோயில் திருவிழாவுக்குப் போகலியாண்ணு

அட, இது அதிசயமா இருக்குது, புள்ளே! பவுனாம்பா வாயாலே, தீமிதிக்கிற திருவிழா பத்திப் பெருமையாச் சொல்றது;...பவுனாம்பாவும் வருதா உன் கூட....

இல்லே, இல்லே, அதெப்படி வருவா, அவதான், தீ மிதிக்கிற வழக்கத்தை விட்டுவிட்டதாச் சொல்லியாச்சே...

அதைத்தான் சொல்றேன்; தீமிதிக்கிறது பைத்தியக் காரத்தனம், அதாலே ஒரு பலனும் இல்லேன்னு ஊர் மூச் சூடும் பேசிக்கிட்டு இருக்கிற பவுனாம்பா, உன்னை ஏன் தூண்டவேணும், தீ மிதிக்கிற திருவிழாவுக்குப் போகச் சொல்லி—

அவபேர்லே குத்தம் கண்டு பிடிக்கறதா, நம்ம வேலை, நாம சொல்லிக்கொண்டு இருந்தமேல்லோ, தீ மிதிக்கிற திருவிழா வந்தா, போகப்போறோம்னு...

நாம சொன்னது நெஜந்தான் மெய்யப்பமே! அதை நான் மறுக்கல்லே. நம்மை, தீ மிதிக்கிற திருவிழாவுக்குப் போகச் சொல்றதிலே என்ன அக்கறை,ஏன் அந்த அக்கறை தீமிதிக்கிறதை வெறுக்கிற பவுனாம்பாவுக்கு? அதுதானே புதிரா இருக்குது. நாம, வீட்டைவிட்டு, வெளியே போக ணும் என்கிறதிலே அல்லவா பவுனாம்பாவுக்கு அக்கறை ஏற்பட்டிருக்குதுன்னு தோணுது.

உங்களுக்குத் தோணும், எதற்கும் ஒன்பதனாயிரம் சந்தேகம்.

●

மகிழ்ச்சியுடன் வீடு திரும்பிய பவுனாம்பாளை அவள் கணவன், வலை விரிப்பான் கண்டு மகிழ்கிறான்.

மெய்யம்மையிடம் பக்குவமாகப் பேசிக் காரியத்தைக் கச்சிதமாக முடிக்கிறாளோ இல்லையோ என்ற கவலை யுடன் இருந்து வந்த வலைவிரிப்பான் பவுனாம்பாள் வெற்றிக்களை முகத்தில் ஆட வந்ததுகண்டு நடந்ததைக் கூறிடக்கேட்டு, பேசுகிறான்.

சந்தேகப்படவே இல்லையா, மெய்யம்மா, உன் பேச்சைக்கேட்டு.

சந்தேகப்படுகிறது போலவா நான் பேசுவேன்? எனக்கு என்ன பக்குவம் தெரியாதா, பழக்கம் கிடையாதா?

பவுனாம்பா! நீயோ இதுவரைக்கும், தீ மிதிக்கிற திருவிழாவுக்குப் போறது தப்புன்னு பேசி வந்திருக்கே..,

ஆமாம். இப்பக்கூடத்தான், என்னோட எண்ணம் அது. நான் போகப் போறது இல்லே, தீ மிதிக்க...

தீமிதிக்கப் போகாதவ, எங்களை மட்டும் போகச் சொல்றயே, ஏன்னு, மெய்யம்மை கேட்கலியா?

கேட்கவிடுவேனா? தீ மிதிக்கிற திருவிழாவுக்குப் போகப் பயமான்னு? கேட்டு ரோஷத்தை மூட்டிவிட்டேன். பாரேன், பிறகு மெய்யம்மை பட்ட பாட்டை! போகத் தான் போறேன், ஆனா கொழந்தை ஒண்ணு இருக்கேன்னு இழுத்தா...

மெய்யம்மைக்கு எப்பவும் அந்தக் கொழந்தை கவனம் இருக்குமே :தெரியுமே—

ரொம்பக் கவலைப்பட்டா கொழந்தைக்கு, பங்காளிங் களாலே, எதாச்சும் கெடுதல் வந்துவிட்டா என்ன செய்யற துன்னு பொலம்பினா.

பொலம்பி? போகப் போறதில்லே தீமிதிக்கன்னு சொல்லிவிட்டாளா...

சொல்லவிடுவேனா? கொழந்தையைப்பத்திப் பயப் பட வேணாம்; பார்த்துக்கொள்ள நான் இல்லையான்னு சொன்னேன். ஒப்புக்கொண்டா போக...

சாமர்த்தியக்காரி பவுனாம்பா நீ, மெய்யம்மை குடும் பத்தோடத்தானே கிளம்புவா...

ஆமாம்; இவமட்டும் போனா, மத்ததுக சும்மா இருக் குமா...கொழந்தை மட்டும்தான் வீட்டிலே...கொண்டாட் டந்தான் உங்க பாடு...

நம்ம பாடுன்னு சொல்லு — பிரித்து வைத்துப் பேசாதே...

எனக்கும் எதாச்சும் தராமலா போவிங்க கிடைக்கற திலே...கொழந்தையோட பேச்சை எடுத்தா, எவ்வளவு உருகிப்போறா தெரியுமா மெய்யம்மெ! அடே அப்பா! அது அரசாளப் பிறந்ததாம்!!

அரசு ஆளும், ஆளும்டி பவுனாம்பா, ஆளும். இவ கிளம்பட்டும் தீ மிதிக்க; அந்தக் கோட்டான் என்ன கதி

ஆகுதுபார்! அரசு ஆளப்போகுதாமா அவ கொழந்தை... கிடக்கட்டும். கைக்கொழந்தைக்கு யாருதான் காவலு?

குடும்பத்தோடு கிளம்புறா மெய்யம்மெ. கொழந்தைக்கு காவல் இருக்க, பொதுஊரான்தான் கிடைப்பான்.

பொதுஊரானா? அவனுக்குத் தூபம் போட்டு விடலாமே, நாம ஒண்ணு சேர்ந்தா...

வழி இருக்குது அதுக்கு. நான் முன்னமேயே யோசனை செய்து வைத்திருக்கறேன்...

பலே பலே! என்ன யோசனை? சொல்லு, சொல்லு...

பச்சைக் கொழந்தை, பாவம்! அதைத் தனியா விட்டு விட்டு, இவங்களோட போக்கைப்பாரு, தீமிதிக்கக் கிளம்பி விட்டாங்க; இது முறையா சொல்லு, இது நியாயமா சொல்லு! அப்படி இப்படின்னு பேசினாப் போதும் பொதுரான் உருகிப் போய்விடுவான். தீமிதிக்கப் போனவங்களை வெறுத்துவிடுவான்...

கொழந்தைக்குக் காவல் இருக்கமாட்டானா...

நாம சொல்கிறபடி அவனைக் கேட்கச் செய்யலாம். பாவம், கொழந்தையை உன்னாலே பாதுகாக்க முடியாது. கொடு இப்படி, நான் பார்த்துக் கொள்றேன்னு சொன்னா, கொழந்தையைக் கொடுத்துவிடுவான்......

கழுத்திலே இருக்கிறது எனக்கு, இப்பவே சொல்லி விட்டேன்.

காலிலே உள்ளதும் கையிலே உள்ளதும் எனக்கு சரி தானே...

மெதுவாப் பேசு, யார் காதிலேயாவது விழுந்து விடப் போகுது. மெய்யம்மை குடும்பத்தோட கிளம்பற மட்டும் வெளியே மூச்சுவிடாதே, விவரத்தை; காரியம் கெட்டு விடப் போகுது.

★

மெய்யம்மையிடம் பேசிவிட்டு, வெளியே வேறு வேலையாகச் சென்ற கருத்தப்பன் சாவடிப் பக்கத்திலே கோட்டையூரானும் கோலெடுத்தானும் பேசிக் கொண்டிருக்கக் காண்கின்றான்.

ஒரு புறம் ஒதுங்கி நின்று அவர்கள் பேசுவதைக் கேட்கிறான்.

தீ மிதிக்கிறதுக்குத் துணிவு இல்லாத பயன்னு இனிப் பேச முடியாது அண்ணே! கருத்தப்பன் குடும்பத்தோட கிளம்பப் போறான் தீ என்னாதான் செய்துவிடும் பார்க்கலாம்னு கூறிக்கிட்டு...

பலே! பலே! அதைத்தானே நான் எதிர்பார்த்தபடி இருந்தேன்! இந்தப்பய தீமிதிக்க வேண்டியதுதான், தீய்ந்து போகும் இவனோட திட்டம்...தெரியுமா......?

கோட்டையூர் அண்ணே! விவரமாச் சொல்லுங்க.

கோலெடுத்தான்! உனக்குத் தெரியுமேல்லோ, கருத்தப்பனோட திட்டம்......நம்ம கோட்டையூர்லே அவனுடைய கொழந்தை இருக்கே, உதயசூரியன், அதுக்கு இடம்பிடிக்கற எண்ணம்.

ஆமாம்! உதயசூரியனுக்குக் கோட்டையூர்லே இடம் கிடைக்கும்னுதான் சொல்றான்......

சொல்றானேல்லோ! இப்ப, இவன் தீமிதிக்கக் கிளம்பப் போறானேல்லோ, அதோட தீர்ந்துபோய் விடும் கோட்டையூர்லே இடம் பிடிக்கற திட்டம்......

ஏன்! தீ மிதிக்கறதிலே ஆசாமி தொலைஞ்சு போயிடுவான். அப்படி நினைக்கறியா?

அது அல்ல அப்பா! உனக்கு ஒரு இரகசியம் தெரியாது. நம்ம பெரியவரு இல்லே, தொலைதூரத்தான்,அவருடைய பேச்சை மீறிக் கோட்டையூராகட்டும் வேட்டையூராகட்டும், நடக்க முடியுமா?

முடியாது! ராட்டையூர் ராஜா இல்லையா அவரு. அதனாலே!

அந்த தொலைதூரத்தான் என்ன உத்தரவு போட்டிருக்கிறாரு தெரியுமா, தீ மிதித்தவன், கோட்டையூர்ப் பாதையிலே நடக்கக்கூடாதுன்னு உத்திரவு.

தீ மிதிக்கப்போனா, கோட்டையூர் போகக் கூடாதா...

கோட்டையூர் பாதையிலேகூட நடக்கக்கூடாது. அது தான் புது உத்தரவு.

அப்படியானா, தீமிதிச்சிவிட்டு, கருத்தப்பன் வீடு திரும்பியதும், கோட்டையூரை அடியோடு மறந்து விடணும்...

ஆமாம், ஆமாம்! உதயசூரியன் கோட்டையூர் போய் அரசாளப் போகிறான்னு பேசிக் கொள்வானேல்லோ கருத்தப்பன், அந்த எண்ணத்திலே மண் விழுந்துது...

ஊரார். பாவம், உதயசூரியனோட இவன் கோட்டையூர் போகப்போறான்னு பேசிக்கொள்கிறாங்க...

ஆமாம்......தீமிதித்தா கோட்டையூர் பாதையிலேயே நடக்கக் கூடாதே. புது உத்தரவு!

பாதையிலேயே நடக்கக்கூடாதுன்னா, கோட்டையூர் போய்க் கொலுவிருக்கிறது எப்படி......?

நடக்காதுங்கறேன். பவுனாம்பாளும் அவளொட புருஷன் வலைவிரித்தானும் திட்டமிட்டு, மெய்யம்மையைத் தூண்டிவிட்டாச்சி.

தீமிதிக்கக் கிளம்பறதுக்கா! ஒத்துக்கிட்டாங்களா......

ஒத்துக்கொள்ளாம இருப்பாங்களா! பவுனாம்பாதான் பச்சைச் சிரிப்பிலே கெட்டிக்காரியாச்சே! அடி ஆத்தே! நெருப்புன்னா பயமா உனக்கும் உங்க வீட்டுக்காரருக்கும்னு பேசி, மெய்யம்மைக்கு ரோஷமூட்டிவிட்டிருக்கறா......

சரியான ஆசாமிதான்! ஏன் தூண்டுறான்னு யோசிக்க ரோஷம் இடம் கொடுக்காது......

ஆமாம்...பவுனாம்பாளுக்கு இருக்கிற எண்ணம், தீமிதிக்க மெய்யம்மையோட குடும்பம் போய்விட்டா, குழந்தை இருக்குமேல்லோ வீட்டிலே, அதோட கழுத்திலே கையிலே உள்ளதைப் பார்த்துக்கொள்ளலாம் என்பது தான்.

அடடே! அவளோட திட்டம் அதுவா! ஆக, தீமிதிக்கப் போனா, குழந்தை கோட்டையூர் போக முடியாது......

ஆமாம்...ஆமாம்...எல்லாம் இவரோட ஏற்பாடு...... தெரியுதா......என்னமோ பெரிய திட்டம் போட்டானே கருத்தப்பன், இப்ப பார்த்தயா, அவனோட எண்ணத்திலே மண்விழுது......

தீமிதிச்ச தீரன் கருத்தப்பன், அதனாலே அவனோட மகன் உதயசூரியனுக்கு, கோட்டையூர்லே இடம் கொடுக்கணும், அதுதான் மரியாதை என்று நினைக்க மாட்டாங்களா...

அவனேகூட அப்படித்தான் நினைப்பான்; தீ மிதிச்சது பற்றிப் பேசினா, கேட்கிறவங்க மனசு பாகா உருகும்னு எண்ணிக்கிட்டுத்தான் இருப்பான். அவன் கண்டானா, தீயை மிதிச்சா, கோட்டையூர்ப் பாதையிலே கூட அடி எடுத்து வைக்க முடியாது என்கிற விஷயத்தை...?

எக்கச் சக்கமா மாட்டிக்கிட்டான் பய...

கிளம்பட்டும் தீ மிதிக்க...பிழைச்சி வந்தாக்கூட, பய இந்தப் பேச்சூரோடு இருந்துவிட வேண்டியதுதான். ஒரு அடி கூட கோட்டையூர்ப் பக்கம் போக முடியாது... பாரேன், திண்டாடப் போறதை...

★

தீ மிதிக்கும் திருவிழாவில் கலந்து கொள்ளும்படி, ஏன் தூண்டிவிடுகிறார்கள் என்பது கருத்தப்பனுக்குப் புரிந்துவிட்டது.

தீ மிதிப்பதோ, திட்டில் இருப்பதோ, எல்லாம், உதயசூரியன் கோட்டையூர் போய்ச் சேர உதவும் என்பது தான் அவன் எண்ணம்.

கோட்டையூரில் உதயசூரியன் இடம் பெற்றால் தான், பாலூர் தேனூர் போலாகும் என்று கூறி ஆட்சியைப் பிடித்துக்கொண்ட கோட்டையூரான், கோலெடுத்தானைத் துணைக்கு வைத்துக்கொண்டு மக்களைக் கொடுமைப்படுத்தும் அக்கிரமத்தை ஒழிக்க முடியும்.

அதற்கு வாய்ப்புக் கிடைக்கவிடாமல் தடுத்துவிட வேண்டும், கோட்டையூர்ப் பாதையிலேகூட நடந்திடக் கூடாது என்று உத்தரவு போடுவது, சூதான ஏற்பாடு.

இவ்விதமான சூது சூழ்ச்சிகளைக் கூட முறியடிக்கும் வல்லமை கோட்டையூர் போனால்தான் முடியும்,

ஆகவே, கோட்டையூருக்கு உதயசூரியன் சென்று நாட்டைப் பெருவளநல்லூர் ஆக்கவேண்டுமானால், தீ மிதிக்கச் செல்லக்கூடாது என்ற முடிவுக்கு வந்தான் கருத்தப்பன், சூழ்ச்சிக்காரரின் திட்டம் அறிந்ததால்.

வீடு சென்று மெய்யம்மையிடம் கூறினான், உதய சூரியனைக் கோட்டையூர் நுழைய முடியாமல் தடுத்திடத் தீட்டப்பட்டுள்ள சூழ்ச்சி பற்றி.

மெய்யம்மைக்கு அப்போதுதான் பவுனாம்பாள் பசப்பிப் பேசியதன் காரணம் புரிந்தது.

தீ மிதிக்க முடியுமா என்று கேட்டு, ரோஷமூட்டப் பார்ப்பது, நம்மைக் கோட்டையூர் வரவிடாது தடுப்பதற் காகத்தான் என்பது புரிந்ததும், மெய்யம்மை, தீ மிதிக்கச் செல்லத் தேவையில்லை என்று தீர்மானித்தாள்.

தீமிதிக்கப் போவதில்லை, தங்கள் சூழ்ச்சி வெற்றி பெறப் போவதில்லை என்று தெரிந்ததும் பவுனாம்பாளும், வலைவிரிப்பானும், கோட்டையூரானும் கோலெடுத் தானும் முகத்தைத் தொங்கப்போட்டுக் கொண்டனர்.

மெய்யம்மை தன் குழந்தை உதயசூரியனை உச்சி மோந்து முத்தமிட்டு, அரசாளப் பிறந்தவனே! உன்னை அழிக்க அல்லவா அவர்கள் சூழ்ச்சி செய்தார்கள்,எங்களைத் தீமிதிக்கச் செல்லும்படி தூண்டிவிட்டு. உண்மை புரிந்தது. உன்னைக் காத்திட முடிந்தது. தீயோர் எண்ணத்தில் தீ விழட்டும் என்று கூறி மகிழ்ந்தாள்.

தீ மிதிக்கமாட்டானாம் ... துணிவு இல்லை ... என்று தூற்றிப் பார்த்தான் வலைவிரிப்பான்.

அவனோட துணிவு பற்றிப் பேசுவது இருக்கட்டும் நீ ஏன் உநயசூரியனைக் கோட்டையூர் பாதையிலேயே நடக்கக்கூடாது தீ மிதிக்க அவர்கள் சென்றால் என்று ஒரு புது உத்திரவு போட்டாய்? தைரியம் என்றா அதற்குப் பெயர்! சூது! சூழ்ச்சி! அதைக் கருத்தப்பன் புரிந்து கொண் டதால்தான், நீங்கள் மூட்டிய தீயிலேவிழ மறுத்துவிட்டார் கள்! இது புரியவில்லையா எங்களுக்கு என்று நாட் டாண்மைக்காரர் தெளிவப்பன் கூறினார்.

நல்ல காரியம் செய்தாயப்பா! பயந்து கொண்டிருந் தோம், அரசாளப் பிறந்தவனை விட்டுவிட்டு நீங்கள் எங்கே தீ மிதிக்கப் போய்விடுவீர்களோ என்று, நல்ல

வேளை, உங்களுக்கு அவர்கள் சூழ்ச்சி புரிந்து விட்டது— என்று வாக்களிப்பர் பாராட்டினார்.

தீயிலே தள்ளி, என்றென்றும் உதயசூரியன் கோட்டை யூர் நுழையாதபடி செய்துவிடலாமென்று சூழ்ச்சி செய் தோம், முடியவில்லை; இனி கோட்டையூர் பாதையிலே காவலிருக்க வேண்டும், உதயசூரியனை அழைத்துக் கொண்டு, கருத்தப்பனும் மெய்யம்மையும் வராதபடித் தடுத்திடவேண்டும் என்று கோட்டையூரானும் கோலெடுத் தானும் முனைந்தனர்.

அவர்சுளுக்குத் துணையாக நோட்டூரான், இருட்டூ ரான் போன்றார் நின்றனர்.

பயப்படாதே தம்பி! நாங்கள் துணை இருக்கிறோம் என்று கூறி வாக்களிப்பாரும், தெளிவப்பனும் முன் வந்தனர்; உதயசூரியன் புன்னகை புரிந்தான்.

★

அன்பானந்தரே! புதுமையாக இருக்கிறதே உமது கதை! எதற்காக இப்படி ஒரு கதையைக் கூறினீர்கள் என்று கேட்டேன். அவர் சிரித்துக்கொண்டே "ஏனப்பா! கதை யைக் கேட்டதும் உனக்கு கருத்துப் புரியவில்லையா?" என்று கேட்டுவிட்டு, "இப்போது நீயும் உன்னுடைய உடன்பிறப்புகளும் என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்? எந்த முயற்சியிலே மும்முரமாக ஈடுபட்டிருக்கிறீர்கள்? தேர்தல் வேலையிலேதானே" என்று ஒரு கேள்வியை எழுப்பினார்.

ஆமாம். தேர்தல் வேலையிலேதான்! அது என்ன பாதகச் செயலா?கேவலமானதா"என்று நான் கேட்டேன்.

"ஜனநாயக முறையை ஏற்றுக்கொண்டுவிட்டு, தேர்தல் காரியத்தைக் கேவலமானது என்று கூற முடியுமா? திருமணம் செய்துகொண்டு, குடும்பத்தை நடத்திச் செல்வது கேவலம் என்று சொல்வார் உண்டா? தேர்தல் என்பது ஜனநாயகத்தில் ஏற்பட்டுவிடும் மிக முக்கியமான கடமை. நான் அதைக் குறை கூறவில்லை. இந்தத் தேர் தலில் ஈடுபட்டுப் படிப்படியாக நீங்கள் முன்னேறி வரு கிறீர்கள். இல்லையா?" என்றார்.

''ஆமாம்! பொது மக்களுடைய நல்லாதரவு காரண மாக...'' என்று நான் விளக்கம் தந்தேன்.

''உங்களைப் பொதுமக்கள் துளியும் ஆதரிக்கவில்லை என்று கூறிக்கொண்டு வந்த காங்கிரஸ் கட்சிக்கு, இதனால் ஏமாற்றமும் எரிச்சலும் ஏற்பட்டுத்தானே இருக்கும்?''

''ஆமாம்! கொஞ்சநஞ்சமான எரிச்சல் அல்ல'' என்று நான் கூறினேன்.

''அந்த எரிச்சல் காரணமாகத்தான், காங்கிரஸ் கட்சி உங்களைத் தூற்றுகிறது இல்லையா?'' என்று கேட்டார்.

''சாதாரணமான தூற்றலா! பண்புள்ள யாரும் பேசக் கூசிடும் பேச்செல்லாம் பேசுகிறார்கள்; பெரிய இடத்தில் அமர்ந்திருப்பவர்கள்கூட!'' என்று நான் கூறினேன்.

வருத்தப்படுகிறாயா! பைத்யமே! பைத்யமே! அவர்கள் தூற்றத் தூற்றத்தான், அதனை நீங்கள் தாங்கிக்கொள்ள தாங்கிக் கொள்ளத்தான், பொது மக்களுக்கு உங்களிடம் ஒரு பரிவு பற்று ஏற்பட்டிருக்கிறது. அதனையும் அவர்கள் உணர்ந்து கொண்டனர். ஆகவேதான் உங்களை எப்படி யாவது தேர்தலிலே நிற்க ஒட்டாதபடி தடுத்துவிட முயன் றனர். சாதாரண முறைகள் போதவில்லை. ஜனநாய கத்தை நடத்துவதாக உலகத்துக்குச் சொல்லி விட்டு, ஒரு கட்சியைத் தேர்தலுக்கு நிற்கவிடாதபடி, தடை உத்திரவு போடமுடியவில்லை. ஆகவே, நேர்வழி கூடாது என்று குறுக்கு வழி சென்று ஒரு சட்டம் உண்டாக்கிக் கொண் டனர். பிரிவினை கேட்பவர்கள் தேர்தலிலே ஈடுபடக் கூடாது என்ற சட்டம். ஆஹா! சட்டம் போட்டா எங்களை மட்டந்தட்டப் பார்க்கிறீர்கள் என்று நீங்கள் கூவிக் கொந்தளித்து, சட்டத்தை மீறுவீர்கள், உடனே தேர்தலில் நிற்கும் உரிமையை அழித்து விடலாம், போட்டி இருக்காது, போகபோக்கியம் தரும் பதவி என்றென்றும் இருக்கும் என்ற சூழ்ச்சி. அதை நீங்கள் உணர்ந்துகொண் டீர்கள், அதனால் ஜனநாயகம் பிழைத்தது. அதைத்தான் நான் கதையாகக் கூறினேன்! தீமிதிக்கிற திருவிழாவுக்கு, பவுனம்மாளின் பேச்சைக் கேட்டுக்கொண்டு, மெய்யம்மை போயிருந்தால், அவள் குழந்தைக்கு என்ன கதி நேரிட் டிருக்கும்!'' என்று விளக்கினார்.

''பெரியவரே! உம்மைப் போன்றவர்கள் உண்மையை உணர்ந்து ஊராருக்கு உரைப்பீர்கள் என்பதிலே எங்க

ளுக்கு உள்ள நம்பிக்கை காரணமாகவே, நாங்கள், காங் கிரஸ் அரசு தீட்டிய சூழ்ச்சிக்குப் பலியாகக் கூடாது என்று முடிவெடுத்தோம்'' என்றேன் நான்.

''நல்ல முடிவு! உதயசூரியன் நாடாளும் வாய்ப்புப் பெற வழி கிடைத்திருக்கிறது.'' என்றார் அறிவானந்தர்.

''உங்கள் பேராதரவும் நல்வாழ்த்துக்களும் வேண்டும் ஐயா!'' என்றேன்.

''தாராளமாக! ஏராளமாக!'' என்று அறிவானந்தர் கூறினார் மலர்ந்த முகத்துடன்.

★

யார் அந்த அறிவானந்தர்! ஆறேழு ஆண்டுகள் அரித் துவாரத்தில் ஆசிரமம் நடத்திய மகானா? அல்லது கேட் டதும் ஆயிரக்கணக்கான ரூபாய்களை நன்கொடையாக அள்ளிக் கொடுத்திடும் சீமானா? என்று கேட்கிறாயா, தம்பி!

அறிவானந்தர், உழைத்து உருக்குலைந்த நிலையில் உள்ள ஒரு எளியவர்! கவலைக்கோடுகள் படிந்துள்ள முகம்! கள்ளங் கபடமற்ற மனம்!! தான் படுகிற அல்லலையும் தொல்லையையும், தன் பிள்ளைகளாவது படாமல், நிம்மதியான வாழ்வு பெற வேண்டுமே என்ற ஏக்கம். தன்னைப் போன்றவர்கள் கொண்டுள்ள ஏக்கத்தைப் போக்கிடத்தக்க ஒரு நல்லாட்சி அமையவேண்டுமே என்ற எண்ணம் கொண்டவர். அமையும் என்ற நம்பிக்கை கொண்டவர்!

மிட்டாமிராசு காப்பாற்றப்பட வேண்டும் என்பதற் காக அலையும் திருக்கூட்டத்தினர் அல்ல! உழைப்பின் பலனைப் பெறவேண்டும் என்று எண்ணிடும் தூயவர்.

அவர் பர்மிட்டும் லைசென்சும் கேட்கவில்லை; பாலும் தேனும் ஓடிட வேண்டும், அள்ளி அள்ளிப் பருகிட வேண்டும் என்ற பேராசை கொண்டவர் அல்ல!

செய்திட ஒரு வேலை! அதிலே ஒரு நீதி, ஒரு நிம்மதி! குடியிருக்க ஒரு இடம்! வயிறாரச் சோறு! மானங்காத்திட ஆடை! நோயற்ற வாழ்வு! ஓய்வு நேரம், உள்ளத்துக்குக் குளிர்ச்சி தர!—இவைகளைத்தான் எதிர் பார்க்கிறார்,

எங்கே இருக்கிறார் அந்த அறிவானந்தர்? என்றா தம்பி! கேட்கிறாய்? எங்கும் இருக்கிறார்! இந்நாட்டு உழைப்பாளியைத்தான் சொல்கிறேன்.

அவரிடம் பேசிப் பாரேன்! ஆதரவும் புரியும்! நல் வாழ்த்தும் கிடைத்திடும்.

அதனைப் பெற்றிடுவதிலே மட்டும், தம்பி! நீ வெற்றி பெற்றுவிட்டால், பிறகு உன் ஆட்சி அமைவதைத் தடுத் திடும் வல்லமை எவருக்கும் இருக்கப் போவதில்லை.

அவர், ஏழை; உழைப்பாளி; கவலை நிரம்பியவர்! ஆனால் தம்பி! மறந்துவிடாதே! அவர் இந்நாட்டு மன்னர்!

அவர் 'கோலம்' பளபளப்பு அற்றது! குரல் வலி வற்றது! ஆனால், அரசுகளை ஆக்கவும் அழிக்கவும் தேவைப்படும் ஆயுதம் அவரிடம் இருக்கிறது! ஓட்டுச் சீட்டு!!

அண்ணன்,

18-9-66



காஞ்சிக் கடிதம் : 80

மரண அடி கொடுப்பாராம்!

★ காமராசரின் கோபத்துக்குக் காரணம் எரிச்சல்!

★ காமராசரின் புகழொளி காங்கிரசுக்குப் புதிய வலி வாம்!

★ நேருவின் புகழொளிக்கே மாய்ந்திடாத கழகம் காமராசரின் புகழொளி கண்டா மிரண்டிடும்?

★ ஏமாற்ற மடைந்த மக்களின் படைப்புகள் எதிர்க் கட்சிகள்!

★ காமராசரின் மரண அடிப் பேச்சு கனதனவான்களுக்குத் தெம்பூட்டுவதற்காகவே!

தம்பி!

மரண அடி கொடுக்கப் போகிறேன் என்று பிரகடனம் செய்து விட்டுள்ளார் காமராஜர். எதிர்க் கட்சிகளுக்குத் தான்!

இவர் பாசம் பொழிவார், ஆதரவு அளிப்பார், என்றா எதிர்க்கட்சிகள் எண்ணிக் கொண்டிருக்க முடியும்? தாக்கு வதற்குத்தான் துடித்துக் கொண்டிருப்பார், அதற்கே திட்டமிடுவார் என்பது எல்லோருக்கும் புரியும்! இதை இவர் சொல்லித்தானா எதிர்க் கட்சிகள் தெரிந்து கொள்ள வேண்டும்? நன்றாகத் தெரியும், மிக நன்றாகத் தெரியும்,

எதிர்க் கட்சிகளை ஒழித்துக் கட்டினாலொழிய, தனது கட்சிக்கு எதிர்காலம் இல்லை என்ற அச்சம் பிடித்தாட்டும் நிலையில், 'அகில இந்தியா' இருக்கிறார் என்பது. ஆகவே, அவரிடமிருந்து எதிர்க்கட்சிகள் தாக்குதலைத்தான் எதிர் பார்த்துக் கொண்டிருக்கும்; தட்டிக் கொடுப்பார் என்ற நினைப்புடனா இருக்க முடியும்? அந்நிலையில் காமராஜர் மரண அடி கொடுப்பேன் என்று பேசியிருப்பது, எதிர்க் கட்சிகளை நோக்கி அல்ல!

சஞ்சலமும் சந்தேகமும் கொண்டு, ஆரூடம் பார்த்த படி இருக்கும் அவருடைய கட்சிக்காரர்களுக்கு, 'தைரியம் ஊட்டுகிறார்; அஞ்சாதீர்கள்! நான் இருக்கிறேன்-மரண அடி கொடுக்கிறேன் எதிர்க்கட்சிகளுக்கு' என்று பேசுகிறார்.

''பயலின் கையைக்காலை வெட்டிப் போட்டுவிடு கிறேன், பயப்படவேண்டாம்'' என்று நிலப்பிரபுக்குத் தைரியம் ஊட்டி விட்டு, 'செலவுக்கு' வாங்கிக் கொண்டு, உல்லாசத்தைத் தேடிச் செல்லும் உருட்டு விழியினர் உள்ளனர்; அறிவோம் அல்லவா?

வரப்புச் சண்டை, வாய்க்கால் சண்டை, கற்பழிக்க முனைந்ததால் மூண்ட பகை போன்றவைகளிலே சிக்கிக் கொள்ளும் சீமான், என்ன ஆகுமோ ஏது ஆகுமோ என்று அச்சம் கொண்டு நடுங்கிடும்போது, குத்திக் குடலெடுப் போன், குறிபார்த்து வேல் வீசுவோன், மடக்கி அடிப்போன், மறைந்திருந்து வெட்டுவோன் போன்ற பேர்வழிகள், ''ஐயா மட்டும் கொஞ்சம் தாராளமாகச் செலவுக்குப் பணத்தைக் கொடுத்தால், ஒரு நொடியிலே தீர்த்துக் கட்டி விடுகிறேன்—தலை வேறு, முண்டம் வேறு ஆக்கி விடுகிறேன். ஐயா எதற்கும் கவலைப்படத் தேவையில்லை நான் காரியத்தைக் கச்சிதமாக முடித்துக் கொடுக்கிறேன், ஐயா மட்டும் செலவுக்குப் போதுமானதைத் தந்து பார்க் கட்டும்.........ஐயாவோட வம்புக்கு நின்றவனை உருத் தெரியாமல் செய்துவிடுகிறேன்'' என்று பேசுவர்; பலர் சொன்னபடி படுகொலையும் செய்வர்; பிடிபட்டால், தப்ப வைக்க 'ஐயா' வருவார் ஏதாவது வழி கண்டு பிடிப்பார் என்று துணிச்சலாகப் பாய்வர். இது கீழ் மட்டத்து நிலைமை.

மேல் மட்டத்தில்—அதிலும் மக்களை நடத்திச் செல்லும் தகுதி பெற்றவர்கள் என்ற விருதுகொண்ட அர

சியல் கட்சி மட்டத்தில்—பொதுமக்களின் வெறுப்புக்கு ஆளாகியுள்ள தன்னலக்காரர்கள்—தருக்கர்கள்—தங்கள் மீது மக்களின் சீற்றம் பாய்ந்திடும், தங்கள் ஆதிக்கம் சாய்ந் துபடும் என்ற நிலை ஏற்படும்போது, காமராஜர்போல, செல்வாக்கினைப் பெற்றுக்கொண்டுள்ளவர்களை நாடுவர். அப்போது காமராஜர்கள், ''பயப்படாதீர்கள் எதிரிகளை ஒழித்துக் கட்டுகிறோம்; உமக்கு ஒரு ஆபத்தும் வராதபடி பார்த்துக் கொள்கிறோம்'' என்று பேசி தைரியம் அளிப் பார்கள்.

செய்வதற்கான இடத்தில் இத்தனை ஆண்டுகளாக இருந்துகொண்டு, செய்து முடித்திட அந்த வலிவு பயன்படக் காணோம்; வீறாப்புப் பேசுகிறார்—மரண அடி கொடுப் பேன் என்பதாக. என்னமோ இவர் இத்தனைக் காலமாகப் போனால் போகட்டும் என்ற போக்கிலே இருந்தவர் போல வும், தி.மு.கழகம் வளர்ந்து போகட்டுமே என்று கருதி வாளா இருந்தவர் போலவும், இப்பொழுதுதான், கழகத் தை ஒழித்தாக வேண்டும் என்ற நினைப்பே வந்ததுபோல வும் எண்ணிக் கொள்ளச் சொல்லுகிறாரா?

முன்பாகிலும், கழகத்தை ஒழிக்க வேண்டும் என் பதற்கு ஒரு காரணம் காட்டிக் கொண்டிருந்தார்கள். 'ஓட்டு' கேட்கிறது, நாட்டை ஆள விரும்புகிறது என் பது பற்றி எமக்குக் கோபம் இல்லை. ஆனால், இந்தக் கழகம் நாட்டை அல்லவா பிளக்க விரும்புகிறது; பிரி வினை அல்லவா கேட்கிறது! இது பெரியதோர் ஆபத் தல்லவா? இதனை அனுமதிக்கப்போமா! அதனால் தான் இந்தக் கழகத்தை ஒழித்தாக வேண்டும் என் கிறோம். அறிக! அறிக!—என்று ஆர்ப்பரித்தனர்; கழகமோ, நாட்டைத் துண்டாடும் திட்டத்தை விட்டு விட்டது. மரண அடி கொடுக்க வேண்டும் என்று இப் போது ஏன் கூறவேண்டும்?

முன்பு, நாடு பிளவுபடாதிருக்கக் கழகத்தை ஒழித் திட வேண்டும் என்று பேசினர்.

இப்போது? கோபத்துக்குக் காரணம்?

பதவியைப் பறித்துக் கொள்ளத் திட்டமிடுகிறார் களே என்பதுதானே!

அதற்கான வலிவும் வளர்ச்சியும் பொது மக்கள் ஆதரவினால் கழகத்துக்குக் கிடைத்துக் கொண்டு வரு

கிறது என்பதாலே ஏற்பட்டிருக்கும் எரிச்சல்தானே, கோபத்துக்குக் காரணம்?

சரி! கோபம் கொண்டதற்கான காரணம்கூட கிடக்கட்டும்; மரண அடி கொடுக்கிறேன் என்கிறாரே அதற்குத் தேவையான 'வலிவு' உள்ளபடி இருக்கிறதா? இருந்திருந்தால் கழகம் இந்த வளர்ச்சி பெற்றபோது, என்ன செய்து கொண்டிருந்தார்கள்?

கழகமா! அதற்குச் செல்வாக்கா! எதைக்கொண்டு சொல்லுகிறீர்கள். கூட்டத்திற்கு ஆள் சேருகிறதே அதைப்பார்த்தா? பைத்தியக்காரன் பின்னாலே கூடத்தான் பத்து பேர் செல்கிறார்கள்; வேடிக்கை பார்க்க! அந்தக் கும்பலைக் கண்டு, அவனுக்குப் பெரிய செல்வாக்கு என்று பேசிப் பார்த்தார் பேட்டைப் பெரியவர் கோட்டையிலே கொலுவிருக்கிறோம் என்ற துணிச்சலால்.

தெருக்கோடியிலே பிச்சைக்காரன் இனிமையாகப் பாடினால், அவனைச் சுற்றி ஒரு கூட்டம் சேரும்; காசுகள்கூடப் போடுவார்கள்! அதனால் அந்தப் பிச்சைக்காரன் பெரிய மனிதனாகிவிடுவானா என்று கேட்டார் விருதுநகர் வல்லவர்.

ஆனால், பொதுமக்கள் இத்தகைய பொறுப்பற்ற முறையிலே நினைக்கவில்லை; கழகத்தை ஆதரிக்கலாயினர்.

கை தட்டுவார்கள், ஆனால், ஓட்டுப் போடுவார்களா?

என்று கேட்டுக் கெக்கலி செய்தார் காமராஜர். கழகம் 'ஓட்டு' கேட்டது. பொதுமக்கள் முதல் முறை 1,628,598 ஓட்டுகளை வழங்கினர்.

வெட்ட வெளியோடு சரி, இவர்களை எவனாவது சட்டசபைக்கு அனுப்பி வைப்பானா? என்று பேசியவர்கள், பொதுமக்கள் கழகத்துக்குத் தந்த ஆதரவின் கணக்குத் தெரிந்த பிறகாகிலும், ஜனநாயகப்பண்பின்படி, கழகத்துக்கு உரிய மதிப்பு அளித்திட முன்வந்தனரா? இல்லை!

கண்டபடி எழுதுகிறார்கள் கழகத்துக்காரர்கள்.

இவர்கள் கை கட்டை விரலை வெட்டி விடுவேன்!!

என்று பேசினார், கண்ணியம் மிக்க காமராஜர்.

அவர் அளவுக்கு ஆத்திரப்படாதவர்கள், 'ஐயோ பாவம்' என்று பச்சாதாபப்பட்டு, சிலர் ஓட்டுப்போட்டு விட்டார்கள். அடுத்து கழகம் என்ன கதியாகிறது என்பதை, மழைக் காலத்துக் காளான் சூரிய வெப்பம் பட்டதும் கருகிப் போவதுபோல, இருக்குமிடம் தெரியாமல் ஒழிந்து போய்விடும் என்று ஆரூடம் கணித்தார்கள்.

ஆனால், பொதுமக்கள் இரண்டாவது முறை கழகத்தை மேலும் அதிக அளவு ஆதரித்து 34 இலட்சம் வாக்குகளை வழங்கினர்.

இவ்விதம் இருமுறை மக்கள் கழகத்தை ஆதரித்தும் பெற வேண்டிய தெளிவைப் பெறாமல், இந்த முறை பாருங்கள்! மரண அடி கொடுக்கிறேன்!!—என்று பேசுகிறார் காமராஜர்.

''பெரியவர்'' என்ற புதிய பட்டம் சூட்டி இருக்கிறார்கள், அவருக்கு. 'பெரியவர்' ஆனது இதற்குத்தானா?

கூட இருந்து கும்மி கொட்டுபவர்களின் 'கோவிந்தா' கோஷம் இப்படியுமா அவரைப் பாழ்படுத்தி விடுவது?

பாரினில் இவர்போல் யாம் கண்டதில்லை—என்று அவர்கள் பாடிடும் பஜனை கேட்டா இவ்வளவு மயக்கம் இவருக்கு ஏற்பட்டு விடுவது!

ஆத்தி சூடி தெரியுமா ஐயா! என்று இவரைக் கேட்டவர்கள்தான் இன்று அகில உலகில் இவர்போல் ஒரு தலைவர் இல்லை! என்று அர்ச்சிக்கிறார்கள் என்பதை இவர் அறியாரா?

எதனையும் சகித்துக் கொள்வேன், ஆனால், என் தலைவன்மீது ஒரு துளி எச்சில் துப்பினாலும், விடமாட்டேன் ஒழித்திடுவேன் என்று இன்று பேசிடும் 'பக்தர்' கள், என்னைத் தமது தலைவன் என்று கொண்டிருந்தபோது, எவனாவது எங்கள் அண்ணன்மீது வசை உமிழ்ந்தால் ''பாதக் குறடெடுத்து பன்னூறு அடி அடிப்பேன்'' என்று பாடினவர்கள் என்பதை அறியாரா?

சிறுவர்களுக்கான பாடப் புத்தகத்தில், 'ராஜபக்தி'க்கான பாடம் ஒன்று உண்டு;

இதோ நமது ராஜா. இவர் மிக நல்லவர்!

இதுதான் பாடம்! ஒரு ராஜாபோய், வேறோர் ராஜா பட்டத்துக்கு வந்திடின், பழைய படம் எடுக்கப்பட்டு, புதிய ராஜாவின் படம் போடப்படும், படம்தான் மாறும்! பாடம் அப்படியேதான் இருக்கும்.

இதோ நமது ராஜா, இவர் மிக நல்லவர்!

இதற்கு ஒப்பான அரசியல் நடத்துபவர்கள் மொழிந்திடும் புகழுரை கேட்டு மயங்கியா, இந்தப் பூலோகமே தன் காலடியில் பந்தாகிக் கிடக்கிறது என்று மயக்கம் கொணடு விடுவது! நல்லது செய்யாதே அந்த மயக்கம்!

மரண அடி கொடுப்பேன் என்று பேசுகிறோமே; கேட்டிடும் குட்டிக் குபேரர்கள் கைதட்டி மகிழ்ச்சி காட்டு கிறார்களே; பிறகு அவர்கள் சிந்திக்க மாட்டார்களா, எந்தவிதமான வசதியுமில்லாமல், எல்லா முனைகளின் எதிர்ப்பையும் தாங்கிக்கொண்டு இந்தக் கழகம் இவ்வளவு வளர்ந்திருக்கிறதே; இப்போது மரண அடி கொடுப்பேன் என்று பேசிடும் பெரியவர், முன்பு பலமுறை கழகத்தை ஒழித்துக் கட்டுவதாகச் சொன்னவர்தானே; செய்தாரில் லையே; இப்போது மட்டும் எப்படிச் செய்வார் என்று யோசிக்க மாட்டார்களா; யோசித்திடும்போது நமது பேச்சு வெறும் உருட்டல் மிரட்டல்தான் என்பது புரிந்து விடாதா—என்றெல்லாம் காமராஜர் எண்ணிப் பார்க்க மாட்டாரா? நேரம் இல்லை பாவம், அவர் என்ன செய் வார்! சூழ்ந்து கொண்டுள்ள 'சூடமேந்திகள்' அவருடைய சிந்திக்கும் சக்தியை பொசுக்கிவிடுகின்றனர்.

தம்பி! 1962ம் ஆண்டுக்கும் 1967 பிறக்கப் போகிற கட்டமான இப்போதைக்கும் இடையில் காங்கிரசுக் கட்சிக்குத்தானாகட்டும், காமராஜப் பெரியவருக்குத் தானாகட்டும், கழகத்துக்கு மரண அடி கொடுக்கத்தக்க விதமான புதிய வலிவு என்ன கிடைத்துவிட்டது என்பது எப்போதாவது, எங்கேயாவது, எவராலாவது விளக்கப் பட்டுக் கேட்டதுண்டா?

1962-ம் ஆண்டு காங்கிரஸ் சில இடங்களிலே தோற்ற தற்கும், எதிர்க்கட்சிகள் தேர்தல் களத்திலே வெற்றி பெற்றதற்கும் காரணம்,

வரி அதிகமானது

விலைவாசி ஏறியது

உணவு நெருக்கடி

ஏழை எளியோர் துயரம்

போன்ற நிலைமைகள். இதனால் மக்களுக்குக் காங்கிர சிடம் ஒரு கசப்புணர்ச்சி; கோபம்; பாடம் கற்பிக்க வேண்டும் என்ற துடிப்பு; அதன் காரணமாகக் காங்கிரசைத் தோற்கடித்தார்கள். ஆனால் 1967-ம் ஆண்டு வேகமாக வந்துகொண்டிருக்கும் இப்போது அந்த மோசமான நிலைமைகள் மாறிவிட்டன; மக்கள் கசப்புணர்ச்சி கொள் வதற்குப் பதிலாகக் களிப்புணர்ச்சி கொண்டுள்ளனர்: அதற் சான முறையில்,

உழுபவனுக்கே நிலம் என்று ஆகிவிட்டது.

தொழிலாளருக்கு நீதியும் நிம்மதியும் கிடைத் திருக்கிறது.

உணவு நெருக்கடி போக்கப்பட்டுவிட்டது.

விலைகள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

வரிகளையும் குறைத்தாகிவிட்டது.

ஏழை எளியோர் புன்னகை புரிகிறார்கள்.

ஆகவே, இந்த முறை மக்கள் காங்கிரசிடம் பாசம் காட்டு வர், எதிர்க்கட்சிகளுக்கு ஆதரவு காட்டமாட்டார்கள்—என்று கூறமுடியுமா—கூசாது பொய் பேசிப் பழக்கப்பட்ட வர்களால்கூட? முடியாது.

1962-ம் ஆண்டு இருந்த நிலைமையைவிட மிக மோச மான நிலைமை அல்லவா இப்போது; எல்லாத் துறை களிலும். அப்போது இருந்துவந்த அல்லல் வளர்ந்தல்லவா இருக்கிறது. எலி தின்று பசி போக்கிக் கொள்ளுங்கள் என்று 'உபதேசம்' செய்கிற நிலைமையல்லவா காண் கின்றோம்.

இது மக்களின் கசப்புணர்ச்சியை, கொதிப் புணர்ச்சியை அதிகமாக்கித்தானே இருக்கும்?

இருந்தும், இம்முறை எதிர்க் கட்சிக்கு மரண அடி கொடுப்பேன் என்று பேசும் அளவுக்குத் துணிவு எப்படி வந்தது துரைத்தனம் நடத்தும் கட்சியினருக்கு?

தம்பி! நாம் மட்டும் அல்ல, உண்மையான ஜனநாயக வாதிகள் ஒவ்வொருவரும் தம்மைத் தாமே கேட்டுக் கொள்ள வேண்டிய கேள்வி. ஒரு கட்சியை மக்கள் வெறுத்து ஒதுக்குவதற்கு என்னென்ன கொடுமைகளை அந்தக் கட்சி நடத்திடும் ஆட்சி செய்திட வேண்டுமோ அவ்வளவும் செய்தான பிறகு, அந்தக் கட்சித் தலைவர், எதிர்க்கட்சிக்கு மரண அடி கொடுப்பேன் என்று பேசும் துணிவு, எதைக் கொண்டு பெற முடிகிறது?

பணம், தம்பி! பணம்! மூட்டை மூட்டையாகச் சேர்த்து வைத்துள்ள பணம்!

பணம் பாதாளம்வரை பாயும் என்பதிலே உள்ள நம்பிக்கை.

வாய்க் கசப்பைப் போக்க, நாக்கிலே தேன் தடவுவதுபோல, கசப்புணர்ச்சி கொண்டுள்ள மக்களுக்கு, பணத்தாசை காட்டி, மயக்கிடலாம் என்ற நம்பிக்கை.

ஏழ்மையும் அறியாமையும் கப்பிக் கொண்டிருக்கும் நிலைமையைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு, மக்களை மீண்டும் வலைவீசிப் பிடித்துவிட லாம் என்ற நைப்பாசை.

இதனை மறுத்திட நினைத்திடும் மகானுபாவர்கள், 1962-ம் ஆண்டிலே இருந்த கசப்புணர்ச்சி போய்விட, இந்த ஐந்து ஆண்டுகளிலே காங்கிரசாட்சி எடுத்துக் கொண்ட முயற்சிகளிலே எந்த அளவு வெற்றி பெற்றிருக்கிறது என்பதை விளக்கிடக் கேட்டதுண்டா?

விளக்கமாவது அவர்களாவது தருவதாவது! ஒரே வீராவேசம் அல்லவா பொங்கி வழிகிறது! பெரியவரே

மரண அடி கொடுப்பேன் என்ற தரமான பேச்சுப் பேசும் போது 'பொடியர்கள்' பேசுவது எந்தத் தரம் இருக்கும் என்பதைக் கூறவா வேண்டும்?

ஏடா! மூடா! எமக்கு இதுபோது வந்திருக்கும் புதிய வலிவுக்கான காரணம் புரியாது கிடக்கின்றனையே! கூறுதும் கேண்மின்! இது காமராஜர் சகாப்தம்! அறிந்திடுமின்! அவர் புகழ் அவனியெலாம் பரவியுள்ள காலம்! பொருள் புரிந்துகொள்ள முனைமின்!—என்ற முறையில் நாநடமிடுவது தெரியும், தம்பி! நன்றாகத் தெரியும்.

காமராஜப் பெரியவரின் புகழ் இந்தக் காசினி எங்கும் பரவியுள்ள கதை சுவையுள்ளது.

ஆனால் அந்தப் புகழ் காங்கிரசுக்குப் புது வலிவும் பொலிவும் தேடிக்கொடுத்து, மக்களின் கசப்புணர்ச்சியை மாற்றிவிடும் அளவினது, அல்லது வகையினது என்றால்,

தம்பி! 1962-ம் ஆண்டுத் தேர்தலின் போது 'முடிசூடா மன்னராக'—'ஆசியாவின் ஜோதியாக'—மகாத்மாவின் வாரிசாக—இருந்து வந்தாரே பண்டித ஜவஹர்லால் நேரு, அவருக்குப் புகழ் ஏதும் இல்லையோ!!

அந்தப் புகழ் இருந்தும்தானே, எதிர்க்கட்சிகள் வளர்வதைக் காங்கிரசினால் தடுத்திட முடியாமற் போய்விட்டது?

இன்று இருப்பதைக் காட்டிலும் சிறிதளவு குறைவாகவே அல்லலும் அவதியும் மக்களை வாட்டிக் கொண்டிருந்த போதே 'நேருவின் புகழொளியில் மயங்கி' மக்கள் எதிர்க் கட்சிகளை ஆதரிக்க முடியாது என்று கூறிவிடவில்லை.

நேருவின் 'புகழொளி'க்கு இருந்ததைக் காட்டிலும் வசீகரமும் வல்லமையும் காமராஜர் புகழொளிக்கு உண்டு என்று கூறுவார் உண்டா?

நேருவினால் அவர் நாட்களில் சாதிக்க முடியாது போனவைகளைக் காமராஜர் இன்று சாதிக்கப் போகிறார் என்று கூறுவார் உண்டா?

நேருவைக் காட்டிலும் காமராஜர் உலகமறிந்தவர்; நேருவிடம் உலகம் காட்டிய மதிப்பைவிட அதிக அளவு மதிப்பினைக் காமராஜரிடம் காட்டுகிறது; நேருவின் அறிவாற்றலைக் காட்டிலும் பன்மடங்கு அதிக அறிவு கொண்டவர் காமராஜர்; பிரச்சினைகளை விளக்குவதில், வாதத் திறமையில், சிக்கல்களை நீக்குவதில், நேருவுக்கும் இல்லாத திறமை இவருக்கு உண்டு என்பார் உண்டா?

மக்களைத் தன்வயப்படுத்திடும் ஓர் புன்னகை, கோபத்தையும் கொதிப்பையும் கூட ஓரளவு மறந்திடச் செய்திடும் நடை அழகு, உலகப் பிரச்சினைகளைப் படம்பிடித்துக் காட்டும் தனித்தன்மை, உலகின் பல்வேறு நாட்டுத் தலைவர்களுடன் மட்டுமல்லாமல், கவிஞர்கள், தத்துவ மேதைகள், காவிய கர்த்தாக்கள், விஞ்ஞான வித்தகர்கள், பொருளாதார நிபுணர்கள், புரட்சி பூத்திடச் செய்த மாவீரர்கள் ஆகியோருடன் நேசத் தொடர்பு கொண்டிருந்ததால் ஏற்பட்டிருந்த விசாலமான நோக்கம், தாராளத் தன்மையுடைய சிந்தனை, இதயங்களை ஈர்த்திடத்தக்க இலட்சிய ஆர்வம் இவ்வளவும் கொண்டல்லவா விளங்கி வந்தார் பண்டிதர்.

அவர் புகழ் பாடாத ஏடுண்டா? பரவாத நாடுண்டா? படம் இல்லாத வீடு உண்டா?

எத்தனை எத்தனை கோலத்தில் அவர் படம்; நித்தநித்தம்; இதழ்கள் மூலம்!

சிந்திக்கும் நேரு, சிரித்திடும் நேரு, சீறிடும் நேரு, குழந்தைகளுடன் கொஞ்சிடும் நேரு, விளக்கிடும் நேரு, வினவிடும் நேரு, மாபெருங் கூட்டம் கண்டு நெஞ்சு நெகிழ்ந்திடும் நேரு, ஊர்வலத்தில் முகம் மலர்ந்திடும் நேரு, விமான நிலையத்தில் நேரு விஞ்ஞானக் கூடத்தில் நேரு, குதிரை மீது நேரு, குதூகல நடனமிடும் நேரு, ஜொலிக்கும் நட்சத்திரங்களுடன் நேரு, உழைக்கும் பாட்டாளிகள் மத்தியில் நேரு, பத்திரிகை நிருபர்களிடம் நேரு, வணிகர் விழாவில் நேரு, பக்ரா பக்கத்தில் நேரு, குலு பள்ளத்தாக்கில் நேரு, நாகநாடு உடையில் நேரு, பர்மியக் கோலத்தில் நேரு, ஆங்கில உடையில் நேரு, கேக் வெட்டும் நேரு, பாங் அதிப

ருடன் நேரு, சோ-இன்-லாயுடன் நேரு, கெனியாட்டாவுடன் நேரு, நைல் நதி தீரத்தில் நேரு, வோல்கா கரையில் நேரு, ஐ.நா.சபையில் நேரு, ஆல்ப்ஸ் குன்றில் நேரு, வெசுவயஸ் எரிமலை காணும் நேரு, லால் பகதூர் தோளைத் தடவிக் கொடுத்திடும் நேரு தம்பி! ஒன்றா இரண்டா, ஓராயிரம் மட்டுமா? ஓராண்டா ஈராண்டா? முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக அல்லவா, அவர் திருஉருவம் கண்டு, நாட்டு மக்கள் சொக்கினர்!

இருந்தும்? அவர் நடாத்திய ஆட்சி, மக்களுக்கு நல்வாழ்வு தரவில்லை என்று மனதார நம்பிய எதிர்க்கட்சிகள் அந்தப் புகழொளி கண்டு மயங்கி, முடங்கிக் கிடந்தனவா இல்லையே!

அந்தப் புகழொளி எதிர்க்கட்சிகளை இருக்கும் இடம் தெரியாமலா செய்து விட்டது இல்லையே!

அவருடைய புகழ் ஒளி போதும் தனி மராட்டிய மாநிலம் வேண்டாம் என்றா கூறிவிட்டனர் இல்லையே!

அந்தப் புகழொளி இருக்கும்போது நாம் எதற்கும் கவலைப்படத் தேவையில்லை-இந்தி வந்தால் வரட்டும் என்றா இருந்து விட்டனர்? இல்லையே!

குறைகளைக் கூறிட, கருத்து வேற்றுமைகளை எடுத்துரைத்திட, கிளர்ச்சி நடத்திட, கருப்புக்கொடி காட்டிட முடிந்தது எதிர்க்கட்சிகளால்—புகழொளி இருந்தும்.

நேருவின் புகழொளிக்கு இல்லாத வசீகரமும் வல்லமையும், காமராஜரின் புகழொளிக்கு இருக்கிறது என்று கூறிடக் கூசுவர் எவரும்; கூறிடத் துணிவோர், நேருவின் நினைவுக்கே கறை பூசிடும் காதகராவர்.

நேருவின் புகழொளியையே இவ்வளவு விரைவிலே மறந்து, வேறோர் புகழொளி அவருடையதைவிட வலிவுள்ளது என்று பேசிடத் துணிவோர், இந்தப் புதிய புகழொளியை எத்தனை சடுதியில் மறந்திடத் துணிவர் என்பதை எண்ணும்போது, தம்பி! எவருக்கும் நடுக்கம் எடுக்கும்.

என்றாலும், கூசாமல் கூறுகின்றனர், காமராஜரின் புகழொளி காங்கிரசுக்குப் புதிய வலிவைக்கொடுத்து விட்டது; எதிர்க்கட்சிகளுக்கு இனி எதிர்காலம் இல்லை, கசப்புணர்ச்சி கொண்டிருந்த மக்கள் இப்போது களிநடமிடுகின்றனர் என்றெல்லாம்.

அதுபோலக் கூறுபவர்களின், 'போற்றி! போற்றியை'ப் பொருள் உள்ளது என்று எண்ணிக் கொண்டு காமராஜப் பெரியவர் 'மரண அடி கொடுப்பேன்'—என்று முழக்கமிடுகிறார்.

தி.மு.கழகம் 34 இலட்சம் வாக்குகளைப் பெற்றபோது 'ஆசியஜோதி' ஒளிவீசிக்கொண்டிருந்திடக் கண்டோம்.

அந்தப் புகழொளி கண்டு மயங்கிடாத கழகம், மாய்ந்திடாத கழகம், காமராஜரின் 'புகழொளி'யைக் கண்டா, மிரண்டிடும்!

'புகழொளி'—தனி மனிதர்களின் அறிவாற்றலைக் கொண்டு அமைகிறது!

ஏழையின் இதயத்துக்கு நிம்மதியும் இல்லத்துக்கு நல்வாழ்வும், இதழுக்குப் புன்னகையும் தரத்தக்க ஆட்சிக்காக போரிடுபவர்கள், 'புகழொளி' போதும் என்று இருந்துவிட மாட்டார்கள்.

அத்தனை புகழொளியும் எமது பசியைப் போக்கிடவில்லையே, குமுறிக் கிடக்கின்றோம் வாழ்வு நிமிர்ந்திட வழி காணோமே என்ற ஏக்கக் குரலே எழுப்புவர்.

எதிர்க்கட்சிகள், ஏமாற்றமடைந்த, எரிச்சல் கொண்ட ஏக்கப் பெருமூச்சு எழுப்பும் மக்களின் படைப்புகள். எங்கிருந்தோ வந்து குதித்திடுபவைகள் அல்ல!

புகழொளிகளைப் புதிது புதிதாக உண்டாக்கிக் காட்டுவதால், எதிர்க்கட்சிகள் மடிந்திடா; மக்களின் முகத்தில் படிந்துள்ள கவலைக் கோடுகள் துடைக்கப்பட்டு, வறுமை தாக்கியதால் ஏற்பட்ட புண் ஆற்றப்பட்டு கண்ணீர் துடைக்கப்பட்டாலொழிய, எத்தனை பெரிய எக்காளம் கிளப்பி, மரண அடி கொடுப்பேன் என்று உரத்த குரல்

எழுப்பினாலும் விம்மும் மக்கள் கட்டிக் காத்துவரும் எதிர்க்கட்சியினை ஒழித்திடுவது முடியாத காரியம்.

இதனைக் காமராஜர் அறியாமல் இருக்கமுடியுமா? அறிவார்!! ஆனால், அவரை நம்பிக்கொண்டு, ஆனால், கழக வளர்ச்சி கண்டு நடுங்கிக் கொண்டுள்ள 'கனதனவான்களு'க்குத் தெம்பு தர, தைரியம் ஊட்ட மரண அடி கொடுக்கிறேன்!—என்று பேசுகிறார், பேசட்டும்.

அண்ணன்,

25—9—'66



காஞ்சிக் கடிதம் : 81

படமாம் படம்!

★ காங்கிரசு எடுக்கப்போகும் படம்
கழகத்துக்கும் சேர்த்துத்தான்!

★ புகழ்ந்தவர்களே புதைக்கவும் செய்வர்!

★ ஏழையர் இதயத்தில் என் சொல் பதிகிறது!

★ உணவு உண்டு வாழ்ந்திடலாம்!
புகழ் புசித்து வாழ்ந்திட முடியுமா?

தம்பி,

படம் எடுக்கப் போகிறார்களாம்—ஒன்று அல்ல' மூன்று! "உண்டானபோது கோடான கோடி" என்று பழமொழி சொல்லுவார்களல்லவா, அது போலச் செல்வமும் செல்வவான்களின் ஆதரவும் இருக்கும்போது மூன்றா, முப்பது படம்கூட எடுக்கலாம். காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்! படமுதலாளிகளின் பார்வை குளிர்ச்சியாக இருக்கும்போதே, படங்களை 'மளமள'வென்று எடுத்துவிட வேண்டியதுதானே!! செய்யப் போகிறார்கள்! அறிவித்து விட்டார்கள். சென்னையில் உள்ள மூன்று படப்பிடிப்புத் துறை முதலாளிகள், காங்கிரஸ் கட்சிக்காகத் தேர்தல் பிரசாரப் படம் தயாரித்துத்தர முன் வந்துள்ளார்கள்!

சினிமாக் கட்சி, சினிமாக் கட்சி என்று நமக்குப் பெயர் தம்பி! — பெயரா? — ஏளனப் பேச்சு வீச்சு—ஆனால், நாமல்ல, காங்கிரசுதான் சினிமாப் படங்களைத் துணை

யாகப் பெறப்போகிறது—நடிக நடிகையர்—படப்பிடிப்புத் துறைத் தொழில் நிபுணர்கள் தயாரிக்கப் போகும் படங்கள் அல்ல—மூன்று வளமான படப்பிடிப்பு அமைப்புகள் தயாரிக்கப்போகும் படங்கள்!

முதலாளிகள் தயாரிக்கும் படங்களா? என்று முகத்தைச் சுளித்துக்கொள்ளாதே! தம்பி! சோஷியலிசத்துக்கு ஆதரவான படமாகத்தான் எடுக்கப் போகிறார்கள்!

முதலாளிகளை ஒழிப்போம்! தொழிலாளிகளை வாழ வைப்போம்!—என்ற ஊர்வலக் காட்சியைக்கூடக் காணக் கூடும். படம், தம்பி! படம்!

பணம்! அண்ணா! பணம்!!—என்று நீ கூறுவது என் காதிலே விழத்தான் செய்கிறது. ஆனால், எனக்கு இதிலே உள்ள மகிழ்ச்சிக்குக் காரணம் தெரியுமா? சினிமாவைக் கேவலமாகவும், சினிமாத் துறையினருடன் தோழமைத் தொடர்பு கொள்வதை இழிவானதாகவும், தரக்குறைவான அரசியல் கட்சிகளே அப்படிப்பட்ட தொடர்பு கொள்ளும் எனக் கூறிக்கொண்டு வந்த காங்கிரஸ் கட்சி, இப்போது கலை உலகின் தயவைப்பெற முனைவது இருக்கிறதே, அது கலை உலகின் வெற்றி! கலைஞர்களின் வெற்றி! என் பாராட்டுதல் அந்தக் கலைஞர்களுக்கு. என்னையும் கழகத்தையும் எதிர்க்கும் கலைஞர்களுக்குக் கூட! 'இருமல் தும்மல்' எல்லாம் என்னை ஏசும்போது, கலை உலகினர் நாலு வார்த்தை என்னையும் கழகத்தையும் ஏசிப் பேசுவதாலா எனக்கு எரிச்சல் வரப் போகிறது? இராகம்—தாளம்—பாவம் குறையாத பேச்சாகவாவது இருக்குமல்லவா!

சினிமாக் கட்சி, சினிமாக் கட்சி என்று நமது கழகத்தை, ஏ! அப்பா! அங்கு இடம் கிடைக்காத எரிச்சல் கொண்டதுகளெல்லாம் முன்பு பேசுவார்களே! அவர்களுடைய முழக்கத்தில் சரிபாதி இதுபற்றித்தானே! இப்போது? எப்படிப் பேச முடியும்? ஆகவே, தம்பி! நன்றாக ஆராய்ந்து பார்த்திடின், காங்கிரஸ் கட்சியிலே சேர்ந்துள்ள கலைஞர்கள் நம்மீது அந்தக் கட்சி பூசிவைத்த கறையைத் துடைத்திடும் தொண்டாற்றி, கழகத்துக்குத்தான் நல்லது செய்கிறார்கள்! அதனால்தான், நான் எங்கிருந்தாலும் வாழ்க!—என்று உளமாரக் கூறி வருவது,

சினிமாப் படங்களைக் காங்கிரசின் தேர்தல் பிரசாரத்துக்குப் பயன்படுத்த முனைவது, ஒருவகையில், கலை உலகின் வெற்றி, கலைஞரின் வெற்றி. நமக்கு அந்த வாய்ப்புக் கிடைத்திடவில்லையே என்பதால், அதனைக் குறைத்து மதிப்பிட, நாம் யாரும் ஏமாளிகள் அல்ல.

கலைஞர்களின் தோழமையையும் தொடர்பையும், குறைத்து மதிப்பிட்டவர்கள், கேவலமாகப் பேசியவர்கள் அவர்கள், நாம் அல்ல; இன்று அந்த தொடர்பு தக்க பலன் தரும் என்ற பூரிப்புடன் உள்ளவர்கள் அவர்கள்!! கலைஞர்களின் தொடர்புபற்றி மிகக் கேவலமாகக்காங்கிரஸ் தலைவர்கள்—பேச்சாளர்கள் மட்டுமல்ல—பெருந் தலைவர்கள் தாக்கியபோது தம்பி! நாம் நினைவுபடுத்தினோம், காங்கிரஸ் தூய்மையான விடுதலை இயக்கமாக இருந்தபோது நாடகத்துறை வித்தகர் விசுவநாததாசும், கொடுமுடி சுந்தராம்பாள் அவர்களும், வேறு பல கலைஞர்களும் காங்கிரசுக்காகப் பாடுபட்ட பான்மையை! அப்போதும் காங்கிரசின் பெருந்தலைவர்கள் கலைஞர்களை மதிக்க மறுத்தனர்; 'கூத்தாடிகள்' என்று கேவலமாகப் பேசினர்! இன்று? கலையின் வலிவை உணருகிறார்கள்! கலைஞர்களின் தொடர்பைப் போற்றுகிறார்கள்! வரவேற்கத்தக்க வெற்றி—கலை உலகுக்கு. படம் காட்டப் போகும் பாடம் இதுவே.

காங்கிரசின் சாதனைகளை இந்தப் படங்கள் எடுத்துக் காட்டுமாம். காட்டட்டும்; ஆனால், சர்க்காரைக் காங்கிரஸ் கட்சி நடத்திக்கொண்டு வருவதால், சர்க்கார் செய்திடும் சாதனைகள்பற்றி அணைக்கட்டுகளிலிருந்து ஆரம்பப் பள்ளிகள் வரையில் செய்தித்துறை தொடர்ந்து படங்களை வெளியிட்டு வருகின்றதுவே—அவை போதாமலா, புதிதாகத் தேவைப்படுகிறது? விந்தைதான்! தரமாகவே அமைந்திருக்கிறது செய்தித்துறைப் படம்!

உருக்கமான குரலொலி கேட்கிறது, வறண்ட பூமி! வெடித்துக் கிடக்கும் வயல்கள்! துடித்திடும் மக்கள்! வானத்தை அண்ணாந்து பார்க்கிறார்கள்! கண்ணீர் வடிக்கிறார்கள்!!

உடனே ஒரு அணைக்கட்டுக் காட்சி! தண்ணீர் குபுகுபுவெனப் பாய்ந்தோடி வருகிறது!! பூமி குளிர்கிறது! பயிர் வளர்கிறது! இப்படி ஒரு இன்பக்காட்சி!

இவைகளைப் பார்க்கவில்லையா மக்கள்? நிரம்ப! பார்த்து? படத்திலே உள்ள பசுமை வாழ்க்கையிலே இல்லையே என்று ஏக்கம் கொள்கின்றனர்.

புதிதாக இதுபோன்ற படங்களை வெளியிட்டு, மக்களின் ஏக்கத்தைத் துடைத்திடவா முடியும்?

தம்பி! நகைச்சுவை மன்னர் என். எஸ். கிருஷ்ணன் அவர்கள் '50—60' என்று ஒரு காட்சியைத் தமது படம் ஒன்றில் இணைத்துக் காட்டினார். பலர் பார்த்திருக்கக் கூடும்!

சுதந்திரம் வந்ததென்று சொல்லாதிங்க,

சும்மா சும்மா வெறும் வாயை மெல்லாதிங்க

என்று திருமதி டி. ஏ. மதுரம் பாட, நகைச்சுவை மன்னர் பத்தே வருடங்களில் சுதந்திரத்தின் பலனாக நாடு எத்தகைய பூந்தோட்டமாக மாறப் போகிறது பார் என்று பெருமிதத்துடன் கூறி, எதிர்கால வளம் பற்றிய எழில் மிக்க காட்சிகளைக் காட்டுவார். பார்த்தவர்கள் மறந்திருக்க மாட்டார்கள். ஆனால், நல்லவர்கள் கொண்டிருந்த நம்பிக்கைகள் நாசமாகிவிட்ட நிலையில், காங்கிரசின் சாதனைகளை விளக்கிட மூன்று புதிய படங்களை எடுத்துப் போட்டுக் காட்டி விடுவதால், மக்கள் குதூகலமடைந்து காங்கிரசுக்கே எமது ஓட்டு என்றா கூறிவிடுவர்?

படம் பார்த்துவிட்டு வந்ததும், படி அரிசி எட்டணா என்ற அளவுக்காவது விலை கட்டுப்படுத்தப்பட்டிருக்கும் நிலையும் கண்டால், மகிழ்ச்சி அடைவார்கள்!

புதிய புதிய அணைக்கட்டுகளைக் காண்க! அமோகமான விளைச்சல் காண்க! என்ற பேச்சும் காட்சியுமா, காய்ந்த வயிறுக்குத் திருப்தி தந்துவிடும். பார்த்தால் பசி தீருமா?

இது காங்கிரஸ் தலைவர்களுக்கும் தெரியும். பட முதலாளிகளுக்கும் தெரியும். ஆகவே, அந்தப் படங்கள், காங்கிரசின் சாதனைகளை எடுத்துக் காட்டுவதாக மட்டும் இருந்திடப் போவதில்லை; எதிர்க் கட்சிளை—குறிப்பாகக் கழகத்தை—வெகு சிறப்பாக என்னைக் கேவலப்படுத்திடும் கேலி செய்திடும் காட்சிகள் கொண்டதாக இருக்கும்,

சென்ற பொதுத் தேர்தலின்போதும் இது போன்ற 'படம்' காட்டினார்கள்! முறை, பழையதுதான்! பலனும் முன்பு போலத்தான் இருக்கும். ஆனால், இம்முறை, நம்மைத் தாக்குவதில் சற்று வேகம்—காரம்—சூடு—அதிகம் இருக்கும். அதாவது நம்மைத் தாக்குவதற்காக அவர்கள் தமது படைக்கலன்களை மேலும் கூர்மையுள்ளதாக்கிக் கொள்ளவேண்டி வருகிறது!! இந்நிலை, படைக்கலன் களுக்கு அல்ல, நமக்குக் கிடைத்துள்ள 'தாங்கும் சக்தி'க்குத் தான் பெருமை தருவதாகும்.

அண்ணா! அவர்கள் படம் எடுக்கப் போகிறார்களாமே, நாம்?—என்று ஆவலோடு கேட்டார் ஒரு தம்பி!

நமக்கும் சேர்த்துத்தானே அந்தப் படங்கள்? என்றேன் நான்.

என்ன அண்ணா! புதிர் போடுகிறீர்கள்—என்று கவலை ததும்பக் கேட்டார், தம்பி.

தம்பி! படம் பார்த்தவர்கள், பகலில், கடைவீதி போவார்கள் அல்லவா? விலை ஏற்றம் கொட்டுமல்லவா? அப்போது அவர்கள் என்ன எண்ணிக் கொள்வார்கள்? படம் காட்டினார்கள் படம்! பாலும் தேனும் ஓடுகிறது! நாங்கள் சாதிக்க வேண்டியவைகளைச் சாதித்துவிட்டோம் என்று பாடிக் காட்டினார்கள். இங்கேயோ...!—என்று பேசி பெருமூச்சு விடுவார்கள் அல்லவா?—என்றேன். ஆமாம் என்றார் தம்பி. அந்தப் பெருமூச்சு, காங்கிரசுக்கு ஓட்டா வாங்கித் தரும்? என்று கேட்டேன். தம்பி புன்னகை புரிந்தார். அதனால்தான் தம்பி! நான் கூறினேன், படம் நமக்கும் சேர்த்துத்தான் என்று—சரிதானே?

தம்பி! ஒரு கட்சி, ஆட்சியை நடத்திய நிலையில், தன் சாதனைகளை எடுத்துச் சொல்ல முனைவது ஒன்றே மக்கள் அந்தச் சாதனைகளைச் சாதனைகள் என்று ஒப்புக் கொள்ளவில்லை அல்லது உணரவில்லை என்பதற்குச் சான்றுதானே?

போகட்டும்; தம்பி! காங்கிரசின் சாதனைகளைப் படம் பிடித்துக் காட்டுவதுபோல, காங்கிரசாட்சியிலே நாட்டு மக்களுக்கு ஏற்பட்டுள்ள வேதனைகளைப் படம் பிடித்துக் காட்டினால், 'கத்தரிக்கோல்' சும்மா இருக்குமா?

மூன்று படம் எடுக்கப் போகிறார்களே முதலாளிகள், அவர்களுக்கே தெரியும்! மிக நன்றாகத் தெரியும்!!

ஒருபுறம் நான்! எதிர்ப்புறம், கனம். சுப்பிரமணியம்! அவர் ஆத்திரத்துடன்! நான் அச்சத்துடன்! அவர் கேட் கிறார், 'ஏ! அண்ணாத்துரை, என்னைக்கசாப்புக் கடையா வைக்கச் சொல்லுகிறாய் என்று'-உடனே ஒரு காங்கிரஸ் படை, இடி இடியெனச் சிரிக்கிறது—கையொலி எழுப்பு கிறது. ஒரு காட்சி! அதை அடுத்து ''இதோ பாரீர்!'' என்று ஒரு குரல்! மலர்ந்த முகத்துடன் ஒரு காங்கிரஸ் தலைவர்-ஆவல் ததும்பும் கண்களுடன் மக்கள்—என்ன? என்ன? என்ற கேள்வி ஒலி! ''எமது சாதனை! நாலாவது திட்டத்தில்!!'' என்று பெருந்தலைவரின் பெருமிதப் பேச்சு! எதிரே பார்த்தால், குட்டிகள் பலவற்றுடன் பன்றிகள்!! என்ன இது? என்று ஒருவரின் கேள்வி—தயக்கத்துடன்! பன்றிப் பண்ணை! பன்றி இறைச்சிக்கு நிரம்பக் கிராக்கி. ஆகவே பன்றிப் பண்ணை! இரு துறையிலும்! தனியார் துறையிலும்—பொதுத் துறையிலும்!!—என்ற விளக்கம். காட்சி, படமாக்குவது எளிது! பொய் அல்ல; புனைசுருட்டு அல்ல! நாலாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் பல இடங்களில் பன்றிப் பண்ணைகள் வைக்கப் போவதாக, பல திங்களுக்கு முன்பே இதழ்களில் செய்தி வெளிவந்தது. உண்மையைத்தான் படமாக்குகிறோம். ஆனால் கத்தரிக் கோல்? சும்மா இருக்குமா? கலை உலகினர் அனைவரும் அறிவர்!

ஆகவே அவர்கள் படங்கள் மூலம் எதிர்க் கட்சிகளைக் கேவலப்படுத்த முயலுவது, கட்டுடல் படைத்த காளையை இருப்புத் தூணிலே இறுகக் கட்டி வைத்து விட்டு, வலிவும் துணிவுமற்ற பேர்வழி, 'அடி அடி' யென்று அடிப்பதற்கு ஒப்பானது. கலைஞர்கள் அறிவார்கள்!!

பாலோ பால்! என்று அழும் தாயைக் காட்டலாம்; பால் கிடைக்காது அலைந்து அலுத்துப்போன தகப்பனைக் காட்டலாம்! ஒரு காங்கிரஸ் தலைவர் படத்தைக் காட்ட லாம். பாலும் தேனும் கலந்து ஓடும்!—என்று அவர் முன்பு முழக்கமிட்டது அந்த ஏழையின் காதில் விழுவது போன்ற நிலையைக் காட்டலாம். எங்கிருந்தோ ஒரு கழுதைக் குரல் கிளம்புவதைக் காட்டலாம். அன்றைய இதழில், கொட்டை எழுத்தில் கழுதைப் பாலைச் சாப்பிடலாம்—ருசியானது—வலிவு தரவல்லது என்று அமைச்சர் ஒருவர்

பேசியிருப்பது வெளிவந்திருப்பதைக் காட்டலாம். ஏழை, தன் வேதனையையும் மறந்து, கழுதைப் பால்! கழுதைப் பால்! காங்கிரஸ் நமக்குத் தருவது கழுதைப் பால்!!—என்று கூவிச் சிரிப்பதைக் காட்டலாம். எளிதான காரியம்! எடுக்க விடுவார்களா? கத்தரிக்கோல் சும்மாவா இருக்கும்.

அதிகமாகக்கூட நாம் கஷ்டப்பட்டு கற்பனை செய்து கொண்டிருக்கத் தேவையில்லையே, தம்பி! கொடி பிடித்த வீரர்கள், நாலாவது ஐந்தாண்டுத் திட்டம்! நாட்டுக்கு சுபிட்சம் தரும் திட்டம்! என்று முழக்கமிட்டபடி ஊர்வலம் செல்லுவதைக் காட்டி விட்டு, ஒரே ஒரு எலி, பயத்துடன் வளைக்குள்ளே நுழைவதையும், அதை ஆவலோடு ஒரு காங் கிரஸ்காரரும், ஒரு பூனையும் பார்த்திடும் காட்சியையும் காட்டி, அன்றைய இதழில், காங்கிரஸ் அமைச்சர் கெண்டா சிங் என்பவர், 'எலி சத்துள்ள உணவு', சாப்பிடலாம்! என்று உபதேசம் செய்தாரே அந்தச்செய்தி வெளி வந்திருப் பதையும் காட்டினால் போதுமே! கொட்டகை அதிருமே!! ஆனால், எடுத்திட விடுவார்களா?

ஆக, நமது கரங்களைக் கட்டிப் போட்டு விட்டு, அவர் கள் தமது சாதனைகளை விளக்கிடும் படம் காட்டப் போகிறார்கள். காட்டட்டும்! பாவம்! அந்த ஆசையும் தீர்ந்து போகட்டும்!!

நாம் படம் எடுத்துக் காட்டாமலேயே, நாட்டிலே உள்ள வேதனைக் காட்சிளைக் கண்டு கண்டு வெதும்பிப் போயுள்ள மக்கள் இதயத்தில் அந்தக் காட்சிகள், துளியும் கலையாமல் இருக்கத்தான் செய்கின்றன!!

ஏதோ ஒரு பத்திரிகையில்—தமிழ்நாட்டு இதழிலே தான்—பார்த்தேன்—என்னையும் ராஜாஜி, காயிதே மில்லத் ஆகியோரையும் ஒரு கழுதைமீது உட்காரவைத்திருப்பது போல, ஒரு கேலிச்சித்திரம். என்னோடு தோழமைத் தொடர்பு கொண்டதற்காக, மதிப்புக்குரிய அந்த இரு பெரியவர்களுக்கும் ஒரு இதழ் இத்தகைய கேவலத்தை ஏற்படுத்திக் காட்டி இருக்கிறதே என்று எண்ணி மெத்த வருத்தப்பட்டேன்.

இதழிலே இது என்றால், படத்திலே இதனைவிடக் கேவலமான காட்சிகளையெல்லாம்கூட இணைத்துக் காட்டலாம்—காட்டட்டும்! எடுத்துக்கொண்டுள்ளகாரியத் துக்குத் தரவேண்டிய 'விலை' இவை என்று தான் கருதிக்

கொள்வோம். ஆனால், மக்கள்? காங்கிரசின் காவலர் களாகத் தம்மைக் கருதிக்கொண்டுள்ளவர்கள் மேற் கொள்ளும் இத்தகைய செயலை, கண்ணியமானது என்றா கருதுவார்கள்? மக்கள் அவ்வளவு இழிதன்மை கொண்டவர் கள் அல்ல!

தம்பி! நான், மக்களுடைய அந்தப் பண்பிலேதான் நம்பிக்கை வைத்திருக்கிறேன்; மிகுந்த நம்பிக்கை; அவர் களிடந்தான் முறையிடுகிறேன். மக்களிடம், அவர்கள் உணரும்படியான அளவிலும் முறையிலும் இந்த முறையீடு போய்ச் சேருமானால், அவர்கள் நீதியின் பக்கம் திரண் டெழுந்து வந்து நிற்பார்கள் என்று திடமாக நம்புகிறன். வரலாற்று ஏடுகள் எனக்குள்ள அந்த நம்பிக்கையை மேலும் வலுவுள்ளதாக்குகின்றன. ஆகவேதான் இந்தத் தொண்டு வெற்றிபெற, தம்பி! நீ உன்னை முழுக்க ஒப்படைத்துவிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சாதனைகள்! தம்பி! சாதனைகளை மதிப்பிடவேண்டு மானால், ஒரு கட்சி நடத்திக்காட்டிய சாதனைகளுடன் வேறோர் கட்சி நடத்திக்காட்டிய சாதனைகளை ஒப்பிட் டுப் பார்க்கவேண்டும்; அந்த இருகட்சிகளும் ஆட்சி நடத்தியநிலை இருந்திடவேண்டும்.

திறமை—வலிவு—செல்வாக்கு—அறிவு—பண்பு—எனும் எவைபற்றிய மதிப்பீடு போடுவதென்றாலும் குறைந்தது இருவர்களின் நிலையையாவது கணக்கில் எடுத்துக் கொண்டு, ஒப்பிட்டுப்பார்த்து, இவரைவிட அவர் திறமை சாலி, ஆனால், வலிவு இவருக்குத்தான் அதிகம் என்ற இந்த முறையில்தான் மதிப்பிட்டு தரமுடியும்; அதுதான் பொருள் உள்ளதாகவும்—பொருத்தமானதாகவும் இருக்கும்.

எடுத்துக்காட்டு வேண்டுமெனின் இதனைக் கூறலாம். இங்கிலாந்து நாட்டில் இன்று அரசாளும் தொழிற்கட்சியின் சாதனைகளை, முன்பு அரசாண்ட கன்சர்வெடிவ் கட்சியின் சாதனைகளுடன் ஒப்பிட்டுப்பார்த்து எந்தக் கட்சியின் சாதனைகள் சிலாக்கியமானவை என்று கண்டறிந்து கூறுவது.

இந்த வாய்ப்பு, பிறநாடுகளிலே உள்ளது போல் இங்கு இல்லை.

இங்கு தொடர்ந்து காங்கிரஸ் கட்சியே ஆட்சியில் இருந்து வருகிறது. ஆகவே மக்களுக்கு நலன்தரத் தக்க சாதனைகள் செய்தளிப்பதில் எந்தக் கட்சி தரமானது, எந்தக்கட்சி அவ்வளவு தரம் இல்லாதது என்று கூறிட இய லாது; ஒப்பிட்டுப் பார்த்திடும் வாய்ப்பு இல்லாததால்.

ஆகவே காங்கிரசாரும் அவர்தம் ஆதரவாளரும், சாதனைகள்—சாதனைகள்—என்று பேசும்போது, ஓட்டப் பந்தயத்தில் கலந்துகொண்டவர்கள் ஒன்பது பேர், அதிலே முதலாவதாக வந்தவன் முத்துச்சாமி, இரண்டாவதாக வந்தவன் இருதயசாமி என்று கண்டறிந்து கூறுவதுபோலக் கூறவில்லை; கூறிடும் வாய்ப்பு இல்லை.

ஆலையில்லா ஊருக்கு இலுப்பைப்பூ சர்க்கரை—என் பார்கள்! அதுபோல, வேறு எந்தக்கட்சியும் ஆட்சிப் பொறுப்பினைப் பெற்றிடாத நிலையில், ஆட்சி நடத்திடும் ஒரே கட்சியான காங்கிரஸ், சாதனை! சாதனை! என்று கூறிவருகிறது.

உண்மையான மதிப்பீடு தெரியவேண்டுமானால், இன்று காங்கிரஸ் நடத்திடும் ஆட்சி, வேறோர் கட்சியிடம் கிடைத்து, அந்தக் கட்சி என்னென்ன சாதனைகளைப் பெற்றுத் தருகிறது என்று பார்த்து, இரண்டையும் ஒப் பிட்டு, எது தரமுள்ளது என்று தீர்மானிக்கவேண்டும். அதற்கு இந்த இருபதாண்டுகளாக வழி இல்லை. இன்னும் இருபது ஆண்டுகளுக்கும் வழி இல்லை என்கிறார் காம ராஜப் பெரியவர்.

> அதாவது வேறோர் கட்சியின் திறமையுடன் ஒப் பிட்டுப் பார்க்கும் வாய்ப்பு மக்களுக்குக் கிடைக்கக் கூடாது என்று விரும்புகிறார். அந்த விருப்பத்தின் அடிப்படையிலேயே திட்டமிட்டு வேலை செய்து வருகிறார்.

மக்கள் அளித்திடும் தீர்ப்பைப் பொறுத்து இருக்கிறது அவர் திட்டம். ஆனால், போட்டி' கூடாது!!—என்கிறார்.

குழந்தை இல்லாத வீட்டில் கிழவன் துள்ளி விளை யாடுகிறான் என்பார்கள்; வேறு எந்தக் கட்சியும் ஆட்சி நடத்த விடக் கூடாது என்று திட்டமிடுவது, அத்தகைய விளையாட்டிலே உள்ள விருப்பம் காரணமாகப் போலும்!

அது எப்படியோ போகட்டும்; ஆனால், வேறு ஒரு கட்சியின் ஆட்சி ஏற்பட்டு, அப்போது கிடைத்திடும் சாதனைகளுடன் ஒப்பிட்டுப் பார்த்தாலொழிய காங்கிர சின் சாதனைகளைப் பற்றிப் பெருமிதத்துடன் பேசுவதிலே பொருள் இல்லை! ஆனால் பேசுகிறார்கள்!

''பயலே! என்னைப் போல மீசையை முறுக்கிவிட உன்னால் முடியுமா?'' என்று கேட்டான் பக்கிரி; வயது நாற்பது; பனிரெண்டு வயது சிறுவனைப் பார்த்து.

''சித்தப்பா! எனக்கு இப்போதுதான் மீசை கருக்குவிடு கிறது! இதற்குள்ளே வம்பு பேசுகிறாயே! காலம் வரட்டும்! மீசை கொத்து கொத்தாக வளரும். அப்போது நான் முறுக்கிக் காட்டுகிறேன். அப்போது தெரியும், மீசையை முறுக்கிவிடுவதில், நம் இருவரில் யார் வல்லவர்கள் என்பது. இப்போது பேசி என்ன பயன்! ஆனால் சித்தப்பா! இதை யும் தெரிந்து கொள். எனக்கு, முறுக்கிவிடும் அளவு மீசை வளரும் காலத்தில், உனக்கு உள்ளது உதிர்ந்து போய் விடும்'' என்றான் சிறுவன் கதையில்!

நம்மைப் பார்த்துக் கேட்கிறார்கள், நாட்டு மக்களை விவரம் அறியாதவர்கள் என்ற நினைப்பில்—'இதோ பார், காங்கிரசின் சாதனைகளை! காட்டு உன் சாதனைகளை!!' —என்று!

ஆட்சி என் கரம் வரட்டும், அப்போது நான் செய் தளிக்கும் சாதனைகளைக் காணலாம்; உன் சாதனை களுடன் ஒப்பிட்டுப் பார்க்கலாம் என்று கழகம் கூறுகிறது. உடனே காமராஜர் கடுங்கோபம் கொண்டு, ''மூஞ்சியைப் பார்! முகரக் கட்டையைப் பார்!' என்று பேசுகிறார். உலகிலே பாதி சுற்றிவிட்டாரல்லவா! அதற்கு அடையாளம் போல விளங்கும் உயர்தரமான பேச்சு!!

இவர்கள் இந்த நினைப்புடன் இருப்பது மட்டுமன்றி, மக்களிடம் சென்று, நாடாள காங்கிரஸ் தவிர வேறு எந்தக் கட்சிக்கும் யோக்யதை கிடையாது என்று பன்னிப் பன்னிப் பேசி வருவதைக் கேட்ட பிறகுதான் நான் சென்னை சூளையில் நடைபெற்ற கூட்டத்தில் கேட்டேன், வேறு எந்தக் கட்சிக்கும் நாடாளும் யோக்யதை இல்லை யென்றால், எதற்காக 8 கோடி ரூபாய் செலவிட்டு, பொதுத் தேர்தல் நடத்துகிறீர்கள் என்று. உடனே 'பத்து ஆண்டு

களுக்கு முன்பே சஷ்டியப்த பூர்த்தி'யைக் கண்ட பேட்டையார் சே! சே! இது கூடவா தெரியவில்லை! மக்களுடைய கருத்தை அறியத்தான் பொதுத் தேர்தல் நடத்துகிறோம் என்று பேசுகிறார். திண்ணைப் பள்ளிக்கூடம் நடத்துகிறார்.

> நாடாளும் யோக்யதை எந்தக் கட்சிக்கும் இல்லை என்ற பேச்சு, ஜனநாயகத்துக்கு உகந்தது அல்ல என்பது என் வாதம்.

அதனைப் புரிந்துகொள்ள விடவில்லை, பதவி! எதை எதையோ பேசவைக்கிறது. எது பேசினாலும் 'ஜீரணமாகும்'—பதவி காரணமாக!!

சாதனைகளைக் கணக்கிட, மதிப்பிட, தேவையான சூழ்நிலை இல்லாதபோது, காங்கிரஸ் தன் சாதனைகளை படமாக்கினாலும் சரி, பாட்டு ஆக்கினாலும் சரி, அது பாதிக் கதையே தவிர, 'முழுவதும்' ஆகாது.

ஒப்பிட்டுப் பார்க்கும் வாய்ப்பைப் பெற மக்கள் இம்முறை முனைந்திருக்கிறார்கள் என்பது என் கருத்து.

மற்றோர் கட்சியுடன் ஒப்பிட்டுப் பார்க்க முடியாத நிலையிலும், இந்தச் சாதனைகளை மதிப்பிட, ஒரு வழி இருக்கிறது, என்ன அவ்வழி எனில், இவர்கள் அரசாண்டு வரும் இதே காலத்தில், பிற நாடுகளிலே அரசாள்பவர்கள் பெற்றுள்ள சாதனைகளுடன் ஒப்பிட்டுப் பார்த்து மதிப்பிடலாம்.

அதற்கு அழைத்தாலோ, அவர்கள் அதெப்படி ஒப்பிடலாம்! வேறு நாடு! வேறு சூழ்நிலை! அந்த மக்களே வேறு! அவர்களுக்கு இருந்த சூழ்நிலையே வேறு! என்று பேசுகிறார்கள்; சிலர்; சில வேளைகளில்.

இவர்கள் குறிப்பிடுவனவற்றையெல்லாம் கணக்கில் வைத்துக்கொண்டு ஒப்பிட்டுப் பார்த்து, இந்த நாட்டிலே இவர்கள் மூலமாகக் கிடைத்த சாதனைகளை மதிப்பிட்டவர்கள் என்ன கூறி இருக்கிறார்கள்? அவர்கள், ஆட்சியைப் பிடித்திட அலைபவர்கள் அல்ல! நாற்காலிப் பைத்தியம் பிடித்தவர்கள் அல்ல!!

> மேற்கத்திய நாடுகளைக்கூட கணக்கில் எடுக்காமல் புதிதாக விடுதலைபெற்ற கிழக்கத்திய நாடுகளை மட்டும் கணக்கில் எடுத்துக் கொண்டு மதிப்புப் போட்டதில், இந்தோனீஷியா தவிர பிற எல்லா நாடுகளையும்விட, நம்நாடு எல்லாத் துறைகளிலும் ஒரு சேர, பிற்போக்காக இருக்கிறது என்றும், இதே வேகத்தில் முன்னேற்றம் இருந்திடுமானால், ஜப்பான் அளவுக்கு இந்தியா வளம்பெற 130 ஆண்டுகளுக்கு மேல் ஆகுமென்றும், புது டில்லியில் சில திங்களுக்கு முன்பு கூடிய, பல்வேறு நாட்டுப் பொருளாதார நிபுணர்கள் கூறியுள்ளனர்.

இதெற்கென்ன சொல்லுகிறார்கள்? சாதித்தோம், சாதித்தோம் என்று சொன்னால் போதுமா? சாதித்திடும் திறமை இருந்தால் இவர்களைப் போலவே, ஏகாதிபத்தியப் பிடிப்பில் இருந்து விடுதலை பெற்று, சுதந்திர வாழ்வுபெற்று, ஆட்சி நடத்திய பல கிழக்கத்திய நாடுகள் பெற்ற வளர்ச்சியை ஏன் இங்கு பெற முடியவில்லை? திறமைக் குறைவு தானே காரணம்? பொருத்தமான திட்டம் இல்லாதது தானே காரணம்?

> அந்த ஆய்வாளர்கள் கணக்கில் எடுத்துக் கொண்ட எந்த நாட்டிலாகிலும் போட்ட திட்டங்கள் ஏழைகளுக்குப் பலன் அளிக்கவில்லை; பணக்காரர்களுக்கே அந்தப் பலன் போய்ச் சேர்ந்தது என்று கூறிக் கைபிசைந்து கொள்கின்றனரா?

> இங்குதானே, காமராஜரே கூறுகிறார், ''ஆமாம்! திட்டத்தின் பலன் ஏழைக்குக் கிடைக்கவில்லை'' என்று; வேறு யாரோ, திட்டத்தை நடத்தியது போலவும் இவர் வேறு மண்டலங்களிலே சஞ்சரித்துவிட்டு இப்போதுதான் இங்குவந்திருப்பது போலவும்!!

சமைக்கவே தெரியாதவள்; அவள் தயாரித்த சாப்பாட்டைச் சாப்பிட்டுச் சாப்பிட்டு, கணவன் சலித்துப் போனான்; முகத்தைச் சுளித்துக் கொண்டான். அப்போது அவள் சொன்னாளாம். ''நான் சமைப்பது நன்றாகத்தான் இல்லை! எனக்கேகூடத்தான் பிடிக்கவில்லை. அதற்காக நான் உங்களைப் போலவா முகத்தைச் சுளித்துக் கொள்கிறேன்'' என்று.

அது, கணவன்-மனைவி கதை! இவருமா அதுபோலப் பேசுவது?

ஆமாம்! திட்டத்தின் பலன், ஏழைக்குக் கிடைக்க வில்லை. எனக்கே கூடத்தான் தெரிகிறது. ஆனால் அதற்காகக் குறை கூறுவதா! நான் குறை கூறு கிறேனா?

என்று. ஆனால் பேசுகிறாரே! அதைச் சாதனை என்றும் காட்டுகிறாரே! ஆய்வாளர்களோ, வேறு எந்த நாட்டிலும் இல்லை, இந்த அளவுக்குத் திறமைக் குறைவு என் கிறார்கள்.

இத்தகைய ஆய்வுரைகளை உரைகல்லாகக் கொள்ளலாம்; இவர்களின் சாதனைகளை மதிப்பிட!

இந்த முறையிலே மதிப்பிடத் தேவைப்படும் அரசியல் தெளிவு அதிக அளவில் இங்கு இல்லை என்ற ஒரே தைரியத்திலா, இத்தனை பதட்டமாகப் பேசிக்கொண் டிருப்பது!

நான், தம்பி! நமது நாட்டு மக்களுக்கு அரசியல் தெளிவு வளரவில்லை என்ற எண்ணம் கொண்டவன் அல்ல. தெளிவு இருக்கிறது, அது வளர்ந்துகொண்டும் வருகிறது என்று நம்புகிறேன்.

அந்த நம்பிக்கையுடனேயே மக்களை அணுகி, கழகக் கருத்தைக் கூறி வருகிறேன்.

சாதனைகளைக் கணக்கில் எடுங்கள்—மற்ற இடங் களின் சாதனைகளுடன் ஒப்பிட்டுப் பாருங்கள்—அப் போதுதான் உண்மையான மதிப்பீடு தெரியும் என்று கூறிவருகிறேன்.

என் சொல் அவர்களின் செவி புகாமலில்லை.

அவர்கள் இதயத்திலே உண்மை பதியாமலில்லை.

பிறநாடுகளுடன் ஒப்பிடவும் மனம் இல்லையென்றால், தம்பி! இவர்களின் சாதனைகளை மதிப்பிட மற்றும் ஓர் வழி இருக்கிறது. இதற்காவது இவர்கள் இணங்குகிறார்களா என்று பார்த்தால், காணோம்.

இவர்கள் காட்டும் சாதனைகளை, இவர்கள் செய்தளிப்பதாகச் சொன்ன சாதனைகளுடன் ஒப்பிட்டுக் காட்டி, எந்த அளவு வெற்றி கிட்டிற்று என்பதையாவது கணக்கிடக் கூடாதா? அது ஒரு வித

மான மதிப்பீடாக இருக்குமே! செய்வார்களா? செய் தார்களா? இல்லையே!

உணவுப் பிரச்சினை பற்றிய, ஒவ்வொரு ஐந்தாண்டுத் திட்டத்தின் போதும், என்னென்ன சாதிப்பதாகச் சொன் னார்கள்? இன்று அந்த முறையிலே இவர்கள் பெற்றுள்ள சாதனை எப்படிப்பட்டது? எலியைக் காட்டி, எமது வேலை முடிந்தது என்று சொல்லும் அளவுக்கு அல்லவா ஆகிவிட்டது!

இதுவரையில், ரூபாய்க் கணக்கிலே உணவுப் பொருள் விலைக்குக் (கடனுக்கு) கொடுத்துக் கொண்டு வந்த அமெரிக்கா, இனி டாலர்தான் தர வேண்டும் என்று சொல்லி நிர்ப்பந்தப்படுத்தும் நிலை வந்திருக்கிறதே. இது சாதனைக்குச் சான்றா?

கடன் கொடுக்கத் தயக்கமாக இருக்கிறது; ஏனெனில் கடனைத் திருப்பித் தந்திடும் சக்தி இந்தியா வுக்கு இருக்கிறதா என்பதிலே எங்களுக்குச் சந்தேகம் ஏற்பட்டிருக்கிறது என்று ஜப்பானியப் பொருளாதார நிபுணர்கள் கூறிவிட்டிருக்கிறார்களே, இது சாத னைக்குச் சான்றா?

ரூபாயின் மதிப்பைக் குறைத்தாலொழிய நெருக்கடி யைச் சமாளிக்க முடியாது என்று இவர்களே கூறி விட்டார்களே? சாதனைக்குச் சான்றா?

செல்வம்—வருவாய்—ஒரு சிலரிடம் சிக்கிக் கொண்டது என்று ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனரே —இது சாதனைக்குச் சான்றா?

இல்லை! இல்லை! இல்லை!—என்று ஏழையின் இதயம் கூறுகிறது. இதை மாற்ற, அவர்களை மயக்கத்தில் ஆழ்த்த, வளைவுகள், வண்ணங்கள், உலாக்கள், உற்சவங் கள், பேரணிகள், முழக்கங்கள்! இவை போதாவென்று படங்கள்!!

புனுகு பூசுகிறார்கள், புண் மறையும் என்று!!

அதிலே மிகவும் மணமுள்ளது என்ற நினைப்புடன் காமராஜர் புகழ் பாடுகிறார்கள். அது போதும், மக்களை மயக்க என்று!

இரண்டு நாட்களுக்கு முன்பு, ஜெர்மன் நாட்டவர் ஒருவர் வந்து பேசிக்கொண்டிருந்தார். இந்தப் பிரச்சினை எழுந்தது. நான் சொன்னேன்,

எங்கள் நாட்டில் இப்படி ஒருவரைப் புகழ் பாடி பூஜிக்கும் பழக்கம் நெடுங்காலமாக இருந்துவருகிறது. ஆனால், அதே மக்கள் தங்கள் இன்னல் போகவில்லை என்று தெரியும்போது 'பூஜா விக்ரஹங்களை'த் தூக்கிப் போட்டுவிடுவார்கள். இதுவும் நெடுங்காலமாக இங்கு இருந்து வருவதுதான் என்று கூறினேன்.

தம்பி! நேருவைப் போலக் காமராஜரை வடிவம் கொள்ளச் செய்திடுவோம்; அந்த வடிவத்தைக் கண்டு, மக்கள் மயங்கிடும் சமயத்தைப் பயன்படுத்திக் கொண்டு, ஓட்டுகளைப் பறித்துக் கொள்வோம் என்று கருதுகின்றனர்.

நெடுங்காலமாக யாராவது ஒரு வடநாட்டுக்காரரே பெருந் தலைவராக—உற்சவ மூர்த்தியாக—இருந்து வருகிறார் என்பதிலே தென்னாட்டவருக்கு இயல்பாகவே இருந்துவரும் மனக்குறையை காமராஜரை அகில இந்தியப் பெருந்தலைவர் ஆக்குவதன் மூலம் போக்கிக் கொள்ளலாம் என்ற ஆசைகூட உலவிக் கொண்டிருக்கிறது.

ஆனால், ஒரு தலைவரின் புகழ் பாடி, ஒரு கட்சியோ, அதனால் நடத்தப்படும் ஆட்சியோ, மக்களுக்கு என்றென்றும் மயக்கத்தை ஊட்டிட முடியாது

சுகர்ணோவின் புகழ் பாடப்பட்டதை விடவா!

கனா நாட்டு அதிபர் நிக்ருமாவின் புகழ் பாடப்பட்டதை விடவா!

இவர்கள், அந்த நாட்டு மக்களால் மட்டும் அல்ல, வெளிநாட்டு மக்களாலும் பாராட்டப்பட்ட நிலையில் இருந்தனர். முன்பு! இப்போது? இவர்கள், அடிக்கடி நிலைமை மாறக்கூடிய ஜனநாயகச் சூழ்நிலையில்கூட அல்ல, 'ஒரே கட்சி' என்ற கவசம் அணிந்துகொண்ட நிலையில் இருந்து வந்தனர்! அவர்களே, மக்கள் தெளிவு பெற்று சீறி எழுந்த போது, நிலைகுலைந்து போயினர்.

ஒரு நாட்டு ஆட்சியிலே என்றாலும் சரி. ஒரு கட்சியிலே என்றாலும் சரி, புகழ் மிக்க இடம் கிடைத்து

விட்டால் மட்டும் போதும், அது என்றென்றும் அவர்களை 'வல்லவர்களாக' வைத்திருக்கும் என்று கூறிவிடவும் முடியாது.

சந்தனம், பூசிக்கொள்ளப் பயன்படும், தாக விடாய் தீர்க்க அல்ல.

கடுகு, தாளிக்கப் பயன்படும், அதனையே தின்று கொண்டிருக்க முடியாது.

பெருங்காயம், குழம்புக்கு மணமளிக்கும்; அதனையே கரைத்துக் குடித்துக் கொண்டிருக்க முடியாது.

ஆனால், காங்கிரசார், காமராஜரின் புகழ் பாடினால் போதும், மக்கள் தமது மனக்குறை எல்லாம் தீர்ந்து போய் விட்டதாகக் கருதிக்கொள்வார்கள் என்று நம்புகிறார்கள்.

அவருக்கே அந்த நம்பிக்கை வந்து விட்டதாகவும் சொல்லுகிறார்கள்!

புகழ் பொழியப் பொழிய, ஒருவிதமான மனமயக்கம், புகழ் பெறுபவர்களுக்கு ஏற்பட்டுவிடும். ஏற்பட்டு விடும் போது அவர்கள் தம்மைப் பற்றிப் போடும் கணக்கு, நாளாவட்டத்தில்—உடனே அல்ல—பொய்த்துப் போகும். அதிலும், பலனை எதிர்பார்த்து, செய்யப்படும் அர்ச்சனைக்கு மயங்கிவிடுவது மிகவும் ஆபத்தை மூட்டிவிடக் கூடும்.

அதனால்தான் ஆன்றோர் ஒருவர், கழுகு பிணத்தைத்தான் கொத்தித் தின்னும், 'முகஸ்துதி' செய்பவர்கள் உயிருடன் இருக்கும்போதே கொத்தித் தின்பார்கள் என்று கூறி, எச்சரித்தார்.

நெடுங்காலத்திற்குப் பிறகு, தமக்குக் கிடைத்துள்ள 'புகழ்' 'நிலை' செல்வாக்கு காமராஜருக்கு, ஒரு மயக்கத்தைத் தந்திருக்கிறது என்பது, அவருடைய பேச்சிலேயே தெரிகிறது; எதிர்க்கட்சிகளை ஏசுவதிலும், மக்கள் படும் இன்னலைப்பற்றி அக்கறையற்றுப் பேசுவதிலும், புரிகிறது. இந்த நிலையை அவருடைய கட்சியே எத்தனை நாளைக்குத் தாங்கிக்கொள்ளப் போகிறது என்பது, அலட்சியப்படுத்த முடியாத ஒரு கேள்வியாகும், இவர்மீது பொழியப்படுவதைக் காட்டிலும் மிக அதிகமான அளவு புகழ் பொழி

யப்படும் நிலையில் இருந்த தலைவர்கள், திடீரென்று, தமது கட்சியினராலேயே, 'கைகழுவி' விடப்பட்ட காதைகள், நிரம்ப உள்ளன; கருத்துள்ளவர்கள் பாடம் பெற்றிடலாம்.

> எல்லோராலும் விரும்பத்தக்க ஒரு திறமையான தலைவர். அவரைச் சந்திக்கும் வாய்ப்புப் பெற்ற அமெரிக்கர்கள் அவர் ஒரு சிறந்த மனிதர் என்பதை ஒப்புக்கொள்வார்கள். இதை யாரும் மறுப்பதற்கில்லை.

இவ்விதம் புகழ்ந்தார், அமெரிக்க குடி அரசுத் தலைவர் அயிசனவர்; செப்டம்பர் 39; 1959-ல்.

> அவருடைய குரல் உண்மையிலேயே சமாதானத்தின் குரலாகும்.

என்று நெஞ்சு நெக்குருகப் பேசினார் கனா நாட்டு அதிபர், 1961. ஜூலை 24-ம் நாள்.

> அவர் சாதாரண மனிதரல்ல! அவர் மிகவும் ஆற்றலும், அஞ்சா நெஞ்சமும், ராஜாதந்திர அனுபவமும், உறுதியும் படைத்தவர்.

இவ்விதம் புகழ் பாடினார், பின்லந்து ஜனாதிபதி 1963, டிசம்பர் நாலாம் நாள்.

> அறிவுக் கூர்மையும், விஷய ஞானமும், திட சித்தமுமுள்ள மனிதராகக் கருதுகிறேன். மேலும் அவரது நாட்டைத் தலைமை தாங்கி நடத்திச் செல்லக்கூடிய ஆற்றல் படைத்த ஒரே மனிதர் அவர்தான்!

என்று அமெரிக்கத் தொழிலதிபர் ஒருவர் புகழ்ந்து பேசினார் 1964 ஜனவரி 8.

> மேதாவிலாசமும், நிதானமும், விடாமுயற்சியும் மிக்கவர். அதோடு விழிப்புணர்வும் அசைக்க முடியாத உறுதியும் படைத்தவர்

என்று புகழ்ந்தார் அமெரிக்க இதழ் அதிபர் ஒருவர்—1959 பிப்ரவரி 22ல்.

> அவர் மக்கள் மத்தியில் இருந்து வந்தவராதலால், ஜனரஞ்சகமான ஞானத்தை அறிவார்

என்று ஜப்பானியப் பத்திரிகையாளர் ஒருவர் புகழ்ந்து எழுதினார்—1963 டிசம்பர் 27ல்.

> அவரது விவேகத்தையும் பெருந்தன்மையையும் புகழ்வதற்கு உண்மையில் எனக்கு வார்த்தைகளே கிடைக்கவில்லை.

தத்துவப் பேராசிரியர், பெர்ட்ராண்டு ரசல், 1962 அக்டோபர் 28ல் இதுபோலப் புகழ்ந்துரைத்தார்,

இவ்வளவும், யாரைப்பற்றித் தெரியுமா, தம்பி! இன்று எல்லாம் இழந்து எவருடைய பார்வையிலும் படாமல் இருந்துவரும் குருஷேவ் பற்றி!

அதிபராக இருந்தபோது இத்தனை புகழ் மாலைகள்! இவ்வளவு புகழ் கிடைக்கும்போது நமக்கென்ன குறை, என்றென்றும் நாம்தான் அதிபர், நாம்தான் தலைவர் என்றுதானே குருஷேவ் எண்ணிக் கொண்டிருந்திருப்பார்!

அத்தனை புகழும், அவரைக் காப்பாற்றிற்றா? இல்லையே!

அத்தனை புகழ்மாரி பொழிந்தவர்களும், அவருக்கா இந்தக் கதி என்று ஒரு வார்த்தை கேட்டிட முன்வந்தனரா? இல்லையே!!

ஆகவே புகழ் பொழியப்பட்டால் போதும் நமக்கு. அசைக்க முடியாத நிலை என்றென்றைக்கும் உண்டு என்று யாரும் இருந்துவிட முடியாது; கூடாது.

பெறுபவர் நிலை எப்படியாயினும், ஒரு தலைவர் பெற்றுவிடும் புகழ், மக்களுக்கு, செவிக்கு உணவு; அதுவும் சிறிது காலத்துக்கு!

மக்கள், வாழ்வு கேட்கிறார்கள்; உழைத்து விட்டு!

கேட்பது ரொட்டி! கிடைப்பது கல்!—என்றார்கள் கவிக்குயில் சரோஜினி அம்மையார்.

புசித்திட மக்கள் உணவு கேட்கிறார்கள்; புகழ் புசித்து அவர்கள் வாழ்ந்திட இயலாதே!

அவர்கள் வாழ்வு கேட்கிறார்கள்; வண்ணப் படங்கள் அல்ல;!

படம் காட்டி, மக்களை, மயக்கிட முனைகிறார்கள்! நாமும் படம் எடுக்க முடியும் தம்பி! மக்கள் கண்டு

உண்மையை உறுதியாக உணர்ந்திட மட்டுமல்ல, ஊராளும் காங்கிரசாரே, பார்த்துவிட்டு, உண்மைதானே! உண்மை தானே! என்று கூறிக் குமுறிடும் நிலை பெற்றிடக் கூட!

ஐயோ! உன் மகனை...

என் மகனை...

அநியாயக்காரப் பாவிகள்'

பாவிகள்!...

சுட்டுக் கொன்றுவிட்டார்களடி அம்மா!

அய்யய்யோ! என் மகனையா...

எங்கே! எங்கே!...

தம்பி! மொழிக் கிளர்ச்சியின்போது மூண்டுவிட்ட விரும்பத் தகாத நிலைமையின் போது சுட்டுக் கொல்லப்பட்ட இளைஞனைப் பெற்றெடுத்த தாய், சேதி கேட்டு, துடியாய்த் துடித்து, எங்கே! எங்கே! என்று அலறி ஓடிடும் காட்சி போதாதா!! அனுமதி கிடைக்குமா? ஒரு ஐம்பது அடி; இந்தக் காட்சி!!

தமிழ் வாழ்க! தமிழ் வாழ்க!

இந்தி ஆதிக்கம் ஒழிக!

இந்தியை எதிர்த்துச் செந்தீயில் சாகிறேன்!

இந்த முழக்கம்! ஒரு தீக்குளிப்புக் காட்சி! கண்ணீரைத் துடைத்துக் கொள்ளவும் இயலாமல் மக்கள் திகைத்து நிற்பது! எடுத்துக் காட்டவிடுவார்களா!

படம் எடுக்கிறார்களாம், படம்! சாதனைகளை விளக்கிட!

சாதனைகள்தான், ஏழையின் முகத்தில் கவலைக் கோடுகளாகப் பதிந்து கிடக்கின்றனவே! படம் வேறு வேண்டுமா!!

அண்ணன்,

2-10-66



காஞ்சிக் கடிதம் : 82

போஜராஜனும் காமராஜரும்

★ சிட்டுகள் வல்லூற்றை எதிர்க்கும் காலம்!

★ காமராசர் நுனியில் இருந்து கொண்டு அடிமரத்தை வெட்ட முனைகிறார்!

★ ஜனநாயக சோஷியலிசம் பேசும் காமராசர் தங்குவது மாளிகையில்! குலவுவது சீமான்களுடன்!

★ தர்மகர்த்தா தத்துவம் இந்தக் காலத்துக்கு ஒத்து வராது!

★ இன்றைய சீமான்கள் நேற்றைய தர்மகர்த்தாக்களே!

★ மகாத்மாவால் முடியாததையா காமராசர் தந்திடப் போகிறார்?

★ திருடர்களை 'நள்ளிரவு உழைப்பாளர்' எனலாமா?

★ இரும்புப் பெட்டிக்கும் இதயத்துக்கும் இறைவன் தொடர்பு வைக்கவில்லையே!

தம்பி!

"நானோ என் மனைவியோ ஒரு குற்றமும் செய்யாத போது என் தாயாருக்குக் கோபம் வருகிறது.

நானோ என் தாயாரோ ஒரு தவறும் செய்யாத போது என் மனைவிக்குக் கோபம் வருகிறது.

என் தாயாரோ மனைவியோ ஒரு பிழையும் செய்யாதபோதும் எனக்குக் கோபம் வருகிறது.

இது யாருடைய குற்றம் அரசே!''

இப்படி ஒரு கேள்வியைப் புவவர் கேட்டபோது, மன்னன் திகைத்துப்போயிருப்பான் என்றுதானே எண்ணிக் கொள்வாய்.

ஐயம் அகற்றுக! என்று புவியாளும் மன்னன் புலவரிடம் கேட்பது இயல்பு. இஃதோ அஃதன்று, புலவர் கேட்கிறார் விடை தரும்படி, மன்னனை நோக்கி.

நிதி மட்டும் படைத்தவனாக இல்லை அம்மன்னன்; நிரம்ப மதி படைத்தவன். கேள்விக் கான விடை புரிந்து விட்டது. பணியாளை அழைத்து, புலவருக்குத் தேவைப் படும் பணம் கொடுத்தனுப்பக் கட்டளையிட்டான்.

மன்னனுடைய மதிநுட்பத்தைக் கண்ட புலவர் பெரிதும் பாராட்டினார்.

காரணமற்ற கோபம் ஒவ்வொருவருக்கும்! ஒருவர்மீது ஒருவருக்கு—புலவர் அந்த நிலையைத்தான் எடுத்துரைத் தார்.

வறுமை நோய் வாட்டும்போது மட்டுமே இந்த நிலைமை இருக்க முடியும். கோபம்-ஒருவர்மீது ஒருவருக்கு-தன் குடும்பத்தை வறுமை வாட்டி வதைக்கிறது என்பதைத் தான் புலவர் எடுத்துரைத்தார் என்பதனை உணர்ந்து கொண்ட மன்னன், பரிசுப் பணம் கொடுத்துப் புலவரின் வறுமையை நீக்குவதன் மூலம் அவர் குடும்பத்தில் குதூ கலம் மலர்ந்திடச் செய்தான்.

போஜராஜனுடைய அறிவுத் தெளிவையும், அவர் புலவர்களை ஆதரித்த பண்பினையும் விளக்கிட இந்தக் கதையினைக் கூறுவர். ஆனால் தம்பி! நான் இதனை எடுத்துக்காட்டுவது அதற்காக அல்ல; வறுமை என்னென்ன செய்துவிடும், எவரெவருக்குக் கோபம் எழ வைத்துவிடும் என்பதை விளக்க.

புலவர், கற்றறிவாளர்; காரணமற்றுக் கோபம் கொள்ளக் கூடாது என்பதனை நன்கு அறிவார். ஆயினும் புலவரே சொல்லுகிறார், ஒரு குற்றமும் செய்யாத என் மீது என் தாயாருக்கும் மனைவிக்கும் கோபம் வருகிறது,

என் தாயாரும் மனைவியும் ஒரு பிழையும் செய்யாதிருக்கும் போதே எனக்கு அவர்கள் மீது கோபம் வருகிறது— என்பதனை.

உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்திக் கொள்ளத்தக்க அறிவாற்றல் பெற்ற புலவருக்கே வறுமை, இந்த நிலை மையை உண்டாக்கிவிட்டது என்றால், பாட்டாளிகளை யும் ஏழை எளியோரையும் நடுத்தர வகுப்பினரையும் வறுமை என்னனென்ன எண்ணிட வைத்திடும், என்னென்ன செய்திட வைத்திடும் என்பதனை விரிவாகவா விளக்கிட வேண்டும்?

அதிலும் தம்பி! கடினமாக உழைத்திடும் உத்தமன், வாழ முடியாமல் தவித்திடும்போது, அவன் மனம் என்ன பாடுபடும்!

தன்னை உருக்குலையச் செய்திடும் விதமான உழைப்பு, தனக்கு வாழ்வு அளிக்காமல், வேறு எவரெவரோ பள பளப்புப் பெற்றிடவே பயன்படுகிறது என்பதை உணரும் போது அவன் உள்ளம் எரிமலை யாகாமலிருக்க முடியுமா?

அந்த எரிமலை வெடித்து ஆத்திரக் குழம்பு குபுகுபு வெனக் கிளம்பி வரும்போது, அதனைத் தடுத்திட தணியச் செய்திட எத்தனை நல்லுரைகள் தந்திடினும் என்ன பயன்?

பொறுத்துக்கொள்! பொழுது புலரும்!!—என்று கூறி எத்தனைக் காலத்துக்கு நம்பிக்கையை ஊட்டிக் கொண்டிருக்க முடியும்?

போதுமென்ற மனமே பொன்செய்யும் மருந்து என்ற போதனை செய்து எத்தனை காலத்துக்கு அவனை இல்லாமை கொட்டு மிடத்தில் அடைத்து வைக்க முடியும்?

அவனைச் சுற்றிலும் சுகபோகிகள், களியாட்டம்! அவன் உள்ளத்தில் மட்டும் குமுறல்! எத்தனைக்காலம் அவன் சகித்துக்கொள்வான்?

அன்றலர்ந்த மலரின் கவர்ச்சி, அந்தி வானத்தின் அழகு, ஓவியத்தின் நேர்த்தி, மணிமாடத்தின் எழில் ஆகியவைபற்றி மகிழ்ச்சியுடன், கண்டவர் பேசிக் கொண்டிருப்பதை, எப்படி விழி இழந்த ஒருவன் கேட்டுக் கொண்டிருக்க முடியும்! ஏழையின் நிலையும் அது போன்றதே.

அவன் கொதிப்படைகிறான், குமுறுகிறான்; வெறுப் புணர்ச்சி கொள்கிறான்; தன்னை இந்த நிலையில் தள்ளி வைத்துவிட்டு, உல்லாச புரியினர் உண்டு களித்துக் கிடந் திடும் கொடுமையினை அழித்தொழித்தாகவேண்டும் என்று ஆவேசம் கொள்கிறான்.

அவனுடைய கண்கள் பல காலம் புனலைக் கொட்டிக் கொட்டி இறுதியில் வறண்டு போகின்றன; அவைகள் பிறகு கனல் கக்கத் தொடங்குகின்றன! அப்போது அவனைப் பார்த்து ஆத்திரம் ஆகாது! வெறுப்புணர்ச்சி பெருந்தீது! இத்னை ஆண்டவன் பொறுத்துக்கொள்ளமாட்டார் என்றெல்லாம் எவரேனும் பேசிட முற்படின், அவன் ஓர் ஏளனச் சிரிப்பொலி கிளப்பிடுவான்; அந்த ஓசை எந்த பீரங்கிச் சத்தத்தையும் அடக்கிவிடத்தக்கதாகி விடும்.

ஏர் பிடிப்பவன்தானே! ஏனோ தானோதானே! இடுப்பொடிந்தவன்தானே! என்று அவனைப் பற்றி எண்ணிக் கொண்டிருந்தவர்களின் கண்களில் அச்சம் கப்பிக் கொள்ளும் வடிவம் கொண்டிடும் நிலை பெறுவான். சாவுக்கு அஞ்சாத நிலையினனாகிவிடுவான்! எதனையும் அழித்திடும் வல்லமை பெறுவான். விம்மிக் கிடந்த ஏழை, விழித்துக்கொண்டான் என்பது அதன் பொருள். சிட்டுகள் வல்லூறை எதிர்த்திடும் காலம் என்று கவிஞர் இக்பால் இதனைத்தான் குறிப்பிடுகிறார்.

விம்மிக் கிடந்திடும் ஏழை விழித்துக்கொள்ளும் நிலை பெறும்போது, அவனிடம் இதமாகப் பேசியும், அவனுக் காகப் பரிவு காட்டியும், அவனைக் காத்திடும் உறுதி தெரிவித்தும், அவனை அந்தக் கதிக்கு ஆளாக்கிய செல்வ வான்கள்மீது சீற்றத்தைக் கொட்டுவது போலக் காட்டியும் நிலைமை மோசமாகிவிடாமல் தடுத்திட முனைபவர் சிலர் உண்டு.

காமராஜர், தம்மை அந்தப் பணிக்கு ஒப்படைத்து விட்டார்!

ஏழைபங்காளர் என்றும், எளியோருக்காக வாதாடுபவர் என்றும், அவருக்கு விருதுகள் வழங்கப்படுகின்றன. பணக்காரர்களின் ஆதிக்கத்தை அவர் அடக்கிடுவார், ஒடுக்கிடுவார் என்று பேசப்படுகிறது.

அவரேகூட, ஏழையைக் காத்திடவேண்டும் என்ற ஆர்வமும், உறுதியும் கொண்டவராக இருக்கக்கூடும்.

போலி நாடகம் ஆடுகிறார் என்றுகூடக் கூறத் தேவையில்லை.

உள்ளபடி ஏழைகளை ஈடேற்ற வேண்டும் என்ற எண்ணம் கொண்டவராகவே இருக்கிறார் என்றே வைத்துக் கொள்வோம்.

ஆனால் அவரால் அதனைச் சாதிக்க முடியாது.

ஆற்றலற்றவர் என்று கூறவில்லை, கொள்கை நாணயமற்றவர் என்றும் கூறவில்லை; அவர் உள்ள இடம், தனக்கென ஏற்படுத்திக்கொண்ட சூழ்நிலை, அவருடைய வல்லமையைச் சொல்லளவு ஆக்கிவிடு கிறது.

அவர் எவ்வளவு ஆர்வத்தை வரவழைத்துக்கொண்டு பேசினாலும், சீமான்கள் அதுபற்றித் துளியும் அஞ்சா மலும், கவலைப்படாமலும் இருப்பதற்குக் காரணம், பணக்காரர் ஆதிக்கத்தை ஒழித்துக் கட்ட அவரால் முடியாது என்ற உணர்வுதான்; நம்பிக்கைதான்.

பணக்காரர்களை நடுக்கூடத்தில்உட்காரவைத்துக் கொண்டு அவர் சோஷியலிசம் பேசுவது, நுனிமரத்தில் இருந்துகொண்டு அடிமரத்தை வெட்ட முனைவது போன்றதாகும்.

இதனை இங்குள்ள செல்வவான்கள் மட்டுமின்றி, வெளி நாட்டுச் சீமான்கள் குறிப்பாக அமெரிக்க நாட்டு கோடீஸ் வரர்கள் மிக நன்றாகப் புரிந்துகொண்டிருக்கிறார்கள். ஆகவேதான் அவர் பேசிடும் ஜனநாயக சோஷியலிசம் பற்றி அவர்கள் துளியும் பொருட்படுத்தவில்லை.

ஏழைகளை மயக்க மட்டுமே அவருடைய ஜன நாயக சோஷியலிசப் பிரசாரம் பயன்படும் என்பதை சீமான்கள் மிக நன்றாக உணர்ந்து கொண்டுள்ளனர்.

அதனால்தான் கோடீஸ்வரரான பிர்லா, மறுபடியும் காங் கிரஸ் கட்சிதான் நாடாளவேண்டும் என்ற தமது விருப்பத் தை ஒளிவு மறைவு இல்லாமல் சில திங்களுக்கு முன்பு வெளியிட்டார்.

ஏழையின் மனம் எரிமலை ஆகி, புரட்சித் தீ கிளம் பிடாது தடுத்திட வேண்டுமானால், அந்த ஏழை, தனக்காக வாதாடவும் போராடவும், தன் நிலையைச் செம்மைப்

படுத்தவும் பணியாற்றிட ஒருவர் இருக்கிறார், அவர் ஆற்றல் மிக்கவர், அஞ்சா நெஞ்சினர் என்ற நம்பிக்கையைப் பெறவேண்டும்.

இன்று காமராஜர் மூலம் அந்த நம்பிக்கை ஊட்டப்படும் முயற்சி நடைபெற்று வருகிறது.

சமூக அமைப்பும் பொருளாதார முறையும் புரட்சிகரமாக மாறாதிருக்கச் செய்திட, இப்படி ஒருவர் தேவைப்படுகிறார்.

ஆகவே, செல்வவான்களே இன்றையதினம், காமராஜரின் செல்வாக்கை வலிவுள்ளதாக்கும் காரியத்தில் ஈடுபட்டுள்ளனர்.

உண்மையிலேயே காமராஜரால் தங்கள் ஆதிக்கத்துக்கு ஆபத்து ஏற்படும் நிலை இருந்திடின், சீமான்கள் காமராஜரை கவிழ்த்திட முனைவர், உச்சி மோந்து முத்தமிடமாட்டார்கள்.

ஜனநாயக சோஷியலிசம் பேசும் காமராஜர், தங்குவது மாளிகையில் குலவுவது சீமான்களுடன்!

அவர்களுடன் குலவிக் கொண்டே அவர்களின் கொட்டத்தை அடக்க முடியாதா என்று கேட்பரேல். தம்பி! முடியாது என்று கூறிட, 'மாமேதை' தேவையில்லை.

அதுமட்டுமல்லாமல், ஒரு சில பணக்காரர்கள் பீதி கொண்டுவிடப்போகிறார்கள் என்ற கவலையுடன் அவர் வெளிப்படையாகவே, தாம் பேசும் சோஷியலிசத்தில் பணக்காரர்கள் இருக்கலாம், பணம் திரட்டலாம், ஆனால், அவர்கள் ஏழைகளின் தர்மகர்த்தாக்களாக இருக்கவேண்டும் என்று அறிவித்துவிட்டார்.

இந்த 'தர்மகர்த்தா' தத்துவம் இன்று நேற்று ஏற்பட்டது அல்ல! பலப்பல நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்தே உலவிக் கொண்டிருக்கிறது.

சீமான் ஆடம்பரமாக உடுத்திக் கொண்டிருக்கிறானே என்று எண்ணி அருவருப்பு அடையாதே! நேர்த்தி மிக்க நெசவாளர்களின் வாழ்க்கை உயருவதற்காகவே அவர் விலையுயர்ந்த வேலைப்பாடுமிக்க ஆடைகளை உடுத்திக் கொள்கிறார்.

கோட்டைபோன்ற மாளிகையில் கொலுவிருக்கிறாரே என்றெண்ணிக் கொதிப்படையாதே! கட்டடக் கலைஞர்கள் புகழ்பெற்றிடட்டும் என்ற நோக்கத்தால்தான் மாடமாளிகை கட்டினார்: தன் சுகபோகத்துக்கு அல்ல!—என்று தத்துவம் பேசப்பட்டது.

இவைகளுக்கெல்லாம் ஒரு காலததில் மதிப்பு இருந்தது! இன்று? இவைகளை ஏற்பார் இல்லை.

காலமும் கருத்தும் மாறிவிட்டிருப்பதை அறியாததால் காமராஜர், இந்தத் தர்மகர்த்தா தத்துவம் பேசிக்கொண்டிருக்கிறார்.

தர்மகர்த்தா வேலை பார்ப்பதே ஒரு புண்ணிய காரியம் என்றும்,

தர்மகர்த்தாவைத் தட்டிக் கேட்பதே பாபகாரியம் என்றும்,

தர்மகர்த்தாவின் பொறுப்பிலேயே சொத்து இருக்க வேண்டும், அதுதான் முறை என்றும் நம்பப் பட்டு வந்த காலம் அல்ல இது.

அத்தகைய நம்பிக்கை இருந்து வந்த நாட்களிலேயே கூட தர்மகர்த்தாக்களாக இருந்துவந்தவர்கள், நெறி தவறி நடந்துகொண்டனர், சுயநலக்காரராயினர் என்ற குற்றச்சாட்டுகள் பலமாக உலவின. அந்த நிலை இன்று மேலும் எந்த அளவுக்கு ஆகிவிட்டிருக்கும் என்று கூறத் தேவையில்லை.

செல்வவானாக ஒருவன் இருப்பது அவன் செய்த புண்ணியத்தால் என்றும், ஏழையாக ஒருவன் நெளிவது அவன் செய்த பாபத்தால் என்றும் நம்பப்பட்டு வந்தது, முன்பு. இன்று அந்த விதமான பேச்சு ஏளனம் செய்யப்படும் கட்டம் பிறந்துவிட்டிருக்கிறது.

ஆனால் காமராஜர் மூலம் அந்தப் பத்தாம்பசலி நம்பிக்கையை மீண்டும் புகுத்திடலாம் என்று அரசியலில் இடம்பெற்றுக் கொண்டுள்ள செல்வவான்கள் எண்ணுகின்றனர்.

நெறி தவறாதவராக ஒரு தர்மகர்த்தா இருக்கிறார் என்றே வைத்துக்கொள்வோம்: அத்தகையவர் என்ன செய்திடுவார் என்று நாம் எதிர்பார்க்கலாம்?

உள்ள சொத்து தன் சுகபோகத்துக்கு என்று கருதி விடாமல், பொது நன்மைக்கு, அதிலும் குறிப்பாக ஏழை எளியோர்களின் நன்மைக்காகச் செலவிடப்பட வேண்டும், அதற்காகவே அந்தச் செல்வம் தன்னிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது என்று கருதவேண்டும்.

அந்தக் கருத்தின் அடிப்படையில், ஏழைக்கு இதம் செய்யத்தக்க ஏற்பாடுகளை மேற்கொள்ளவேண்டும்.

அன்னதானம், சத்திரம் சாவடி கட்டுதல், பண உதவி தருவது போன்றவைகளை மேற்கொள்ள வேண்டும்.

வானமே கூரையாய், விண்மீன்களே விளக்காய், தரையே பஞ்சணையாகக் கொண்டு தத்தளிக்கும் தரித்திரவானுக்கு வீடுகட்டித் தரவேண்டும்.

அவன் பிழைக்க வழியின்றி வேதனைப்படும் போது, காப்பாற்றுவதற்காகப் பண உதவி செய்திட வேண்டும்.

ஐயோ பாவம்! அவனும் மனிதன்! அவன் வதைபடப் பார்த்திடப் போமா! என்று எண்ணி, ஏழையின் வேதனையைத் துடைத்திடத் தன்னிடம் உள்ள செல்வத்தைத் தந்துதவவேண்டும்.

இருளும் அழுக்கும் நிரம்பிய இடத்திலே ஏழையை இடர்ப்பட விடாமல், அவன் வாழ்வுக்கு ஒளியும் நறுமணமும் கிடைத்திடச் செய்திட வேண்டும்.

தன்னிடம் உள்ள பணத்தைக்கொண்டு, தன் மூன்றடுக்கு மாடியை நான்கு அடுக்கு உள்ளதாக மாற்றிக் கொள்ளாமல், இருட்குகை போலுள்ள இடத்திலிருந்து ஏழையை விடுவித்து அவனுக்கு இல்லம் அமைத்துத் தரச் செலவிட வேண்டும்.

தன்னிடம் உள்ள செல்வத்தைக் கொண்டு, செயற்கைக் குளம் அமைத்து அதிலே பன்னீரைத் தேக்கி வைத்து, அதிலே நீந்தி விளையாடி மகிழ்ந்திட முனையாமல், அந்தப் பணத்தைக் கொண்டு, ஏழைக்குப் போதுமான குடிதண்ணீர் கிடைத்திட ஊருணி அமைத்தளிக்க வேண்டும்.

உள்ள பணத்தைக் கொண்டு தனக்கொரு மணிமுடி தயாரித்துக்கொள்ள முனையாமல், ஏழையின் பிணி போக்க அப்பணத்தைச் செலவிட வேண்டும்.

தம்பி! யோசித்துப் பார்த்தால் இப்படிப் பல செய்திடலாம் என்பது புரியும்.

செல்வவான்கள் இவ்விதமாகவா தமது செல்வத்தைப் பயன்படுத்துகிறார்கள் என்று ஆராய்ந்து பார்த்திடின், நம்மைக் கவலை கப்பிக்கொள்ளும். ஆனால் நான் உன்னை அது பற்றிக்கூட ஆராய்ந்திடச் சொல்லவில்லை. நான் கூறுவது வேறு; ஒரு அடிப்படைப் பிரச்சினை.

தர்மகர்த்தா, நெறி தவறாது நடந்திடினும் சமூக அமைப்பு மாறாது!

ஒருவர் தர்மகர்த்தாவாக இருக்கும் நிலை எதைக் காட்டும் என்றால், அவர் போன்ற ஒருவருடைய தரும சிந்தனையை எதிர்பார்த்துப் பலர் ஏழைகளாக இருந்தாக வேண்டும் என்பதனை.

ஏழ்மை இருந்து தீரவேண்டும்; அப்போதுதான் ஏழை பங்காளர் என்று ஒருவர் திகழ்ந்திட முடியும்; ஆக, தர்மகர்த்தா முறை என்பது, ஏழை என்றும் பணக்காரர் என்றும் சமூகம் இரு பிரிவாக இருப்பதையும் அதனால் விளைந்திடும் வேதனையையும் மாற்றி விடாது! சொல்லப் போனால் அந்த முறை இருந்து தீரும்.

இதனைப் பல நூற்றாண்டுகள் பார்த்தான பிறகுதான் சிந்தனையாளர்கள், தானம்—தருமம்—என்பவைகள் ஏழை பணக்காரன் என்ற பேதத்தை அடியோடு போக்கிடா என்பதை அறிந்தனர்; அவனிக்கு எடுத்துரைத்தனர்!

ஏழை என்று ஒரு பிரிவும் பணக்காரர் என்றோர் பிரிவும் ஏன் ஏற்படுகிறது என்பதைக் கண்டறிந்து, அந்த நிலை ஒழிந்திட வழி செய்தாக வேண்டும் என்று தெரிவித்தனர்.

அதன் விளைவாக மனித குலத்துக்குக் கிடைத்த கருத்துக் கருவூலமே சோஷியலிசம் என்ற தத்துவம்.

தருமகர்த்தா முறை பரீட்சிக்கப்பட்டு அது போது மானதாக இல்லை என்பது மெய்ப்பிக்கப்பட்ட காரண மாகவே, புதிய முறை வகுக்கப்பட்டது.

அந்தப் புதியமுறையே சமதர்மம்—சோஷியலிசம்.

இந்தப் புதியமுறையை எப்படி நடத்திச் செல்வது என்பதைச் சிந்தித்துச் செயலாற்ற வேண்டிய காலம் இது. ஆனால், இந்தக் காலத்தில், மக்களைப் பின்னோக்கித் துரத்தும் விதமாக, 'தர்மகர்த்தா' முறை பற்றிப் பேச முற்படுகிறார், காமராஜர்.

இன்று பிரபுக்கள் பலரிடம் சேர்ந்துள்ள சொத்திலே பெரும் பகுதி, ஒரு காலத்தில் தரும காரியத்துக்காக அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டு, மெள்ள மெள்ள அந்தச் சொத்தினை அவர்கள் தங்கள் சுகபோகக் கருவியாக்கிக் கொண்டனர் என்பதனைப் பொதுமக்கள் நன்கு புரிந்து கொண்டுள்ளனர்.

கோயிலுக்காக, வேத பாடசாலைக்காக, அன்ன தானத்துக்காக, அனாதைகளின் பராமரிப்புக்காக என்று குறிப்பிடப்பட்டு ஒப்படைக்கப்பட்ட பெரு நிதி, பிறகு சீமான்களின் சொந்தச் சொத்து ஆகிவிட்ட கதை பலப்பல.

இன்றைய சீமான்களிலே பலர், நேற்றைய தரும கர்த்தாக்கள்!

இப்படித் தோற்றுப் போய்விட்ட ஒரு தத்துவத்தை, புதை குழியிலிருந்து வெளியே எடுத்து வைத்துக் கொண்டு, தமது புதிய கண்டு பிடிப்பு இது என்று பேசிப் பார்க்கிறார் காங்கிரஸ் தலைவர்.

சிலர் செல்வத்தைக் குவித்துக் கொள்வதற்கான ஏற்பாட்டினை வைத்துக் கொண்டு, பலர் பஞ்சைகளாகித் தவித்திடும் நிலையையும் வைத்துக் கொண்டு, இல்லாதாரின் இன்னலை உடையவர் துடைத்திடுவார் என்று உபதேசம் பேசி வருவது, கண்ணைப் பறித்துவிட்டு, கைக்கோல் தருவதற்கு ஒப்பானதாகும்; பாம்புப் புற்றுக்குப் பக்கத்தில் பச்சிலைச் செடி நட்டு வைத்துக் காட்டுவது

போன்றதாகும்; கூரையைக் கொளுத்திவிட்டு, குடம் குடமாகத் தண்ணீர் தர முனைவது போன்றதாகும்.

இது பிரச்சினையைத் தீர்த்திடும் முறை அல்ல; மூடி மறைக்கும் முயற்சி.

ஆகவேதான் தம்பி! நாம் இந்தத் தர்மகர்த்தா முறை பற்றிய பேச்சினை ஏற்க மறுக்கிறோம்.

மேலும், தம்பி! இந்தப் போதனையை இவருக்கு முன்னாலே எப்படிப்பட்டவர்களெல்லாம் செய்து பார்த்துப் பலன் காணாது வாடிப் போயினர் என்பதை எண்ணிப் பார்த்திடும்போது, கவலை அதிகமாகித்தான் தீரும்.

மகாத்மா காந்தியார் தமது ஆயுட்காலம் முழுவதும் இந்த போதனையைத்தான் செய்து வந்தார்!

ரஷிய நாட்டு தத்துவ மேதை டால்ஸ்டாய்-வேதாந்த வித்தகர் இந்தப் போதனை நடத்தியவர்—அறிவோமே.

அவர்களின் உபதேசங்கள் 'பூஜ மாட' ஏடுகளாக்கப்பட்டு விட்டனவேயன்றி, புதிய முறையையா, சமூகத்திலே புகுத்தின? இல்லையே!

மகாத்மாவின் உபதேசம் சாதித்துக் கொடுக்காத தர்மகர்த்தா முறையையா, புதிய பெரியவரின் பேச்சு தந்திடப் போகிறது? அப்படிச் சொல்லிட ஒன்று நெஞ்சழுத்தம் நிரம்ப வேண்டும் அல்லது ஏய்க்கும் திறமை மிகுந்திருக்க வேண்டும்.

தருமகர்த்தா முறை செயல்பட்ட காலத்திலே கட்டப்பட்ட சத்திரங்களும் சாவடிகளும் ஏராளம். ஆனால் வளர்ந்து விட்ட ஏழையின் தொகையோ அதனினும் ஏராளம்.

தருமகர்த்தாக்களாகச் சிலர் விளங்கிட வேண்டுமென்றால், அவர்களிடம் பெருநிதி சேர்ந்திட வேண்டுமென்றால், நாட்டிலே உற்பத்தியாகிற செல்வத்திலே பெரும்பகுதி அவர்களிடம் போய்ச் சேர்ந்தாக வேண்டும்; பெரும்பகுதிச் செல்வம் செல்வர் சிலரிடம் சேர்ந்திடுமானால், சமூகத்தில் பெரும்பகுதி வறண்டு தானே கிடந்தாக வேண்டும்,

இதனால்தான், தம்பி! ஏழை பணக்காரன் பேதம் நீடித்து கொண்டு வருகிறது. இதனால்தான் தம்பி! வறுமையால் தாக்குண்டோர் தொகை வளர்ந்தபடி இருக்கிறது. இதனால்தான் தம்பி! வறுமையின் தாக்குதல், குடும்பங்களிலே குமுறலை, காரணமற்ற கோபம் கொண்டிடும் நிலையினை மூட்டி வைக்கிறது. இதனை உணர்ந்தோர், உயர் பதவியினர் தர்மகர்த்தா தத்துவம் பற்றிப் பேசுவதைக் கேட்கும்போதே, எள்ளி நகையாடத்தான் செய்வர்.

தருமகர்த்தா தத்துவத்தைப் பற்றிக் காமராஜர் பேசி அதுகேட்டு செல்வவான்கள் மனம் உருகி, ஐயகோ! நாம் சுகபோகத்தில் இருக்கிறோம், நமது உடன் பிறந்தோர் வறுமையிலே உழல்கிறார்களே! நாம் கனிச்சாறு பருகுகிறோம், அவர்கள் கால்வயிற்றுக் கூழும் கிடைக்காமல் தவிக்கிறார்களே! நமக்குப் பஞ்சணை, அவர்களுக்குக் கட்டாந்தரை! நாம் மாளிகையில், அவர்கள் மரத்தடியில்! நாம் புதுப்புது இன்பம் தேடிப் பெறுகிறோம், அவர்கள் புழுப் போலத் துடிக்கிறார்களே! இது சரியா,முறையா?மக்களிலே பெரும் பகுதியினர் வேதனையில் உழலும்போது, நாம் வாழ்க்கையையே விழாவாக்கி மகிழ்ச்சியில் மூழ்கிக் கிடப்பதா! மனிதாபிமானமாகுமா இது! சேச்சே! என்ன கொடுமை! என்ன கொடுமை! இரும்புப் பெட்டியிலே பணம்; ஏழை, குடிசையில் பிணமாகிறான், பசிநோயினால்! எதற்கு இந்தப் பணம்? என்னிடம் உள்ள பணம்? என்னிடம் உள்ள பணம் என் பணமா? ஏழையின் வியர்வை அல்லவா பணமாகமாறி என்னிடம் வந்தது? அந்த ஏழைகளைக் காத்திட இந்தப்பணம் பயன்படட்டும் என்றல்லவா இத்தனை பணம் என்னிடம் ஒப்படைக்கப்பட்டது? குளத்திலே நீரைத் தேக்கி வைப்பது எதற்கு? ஊரார் பருகிட உதவவேண்டும்என்பதற்கல்லவா?முதலைகள்புரண்டிடவா தடாகம்!! நான் தனவான்! கனவான்! சீமான்! பொருள் என்ன? தனவான் என்பது தருமவான் என்பதன் மறுபெயரல்லவா? கனவான் என்றால் மக்களைக் கவனிப்பான் என்றல்லவா பொருள்? சீமான் என்றால் சீர்செய்வோன் என்றல்லவா பொருள்! இதுதானே தருமகர்த்தா முறை! இதனை இதுநாள்வரை மறந்து கிடந்தேனே! மக்கள் துரோகியாகிக் கிடந்தேனே! இப்போதல்லவா உண்மையை உணர்ந்தேன்! கண்திறந்தது! இதயம் மலர்ந்தது! எல்

லாம் பெரியவர் காமராஜர் தந்த தருமகர்த்தா உபதேசம் கேட்டதனால். இதோ, இனி என் செல்வம், ஏழைக்கு இதம் அளிக்க! என் கடன் பணி செய்து கிடப்பதே! யான் பெற்ற செல்வம் யாவர்க்கும் சொந்தம்! தந்தேன்! தந்தேன்! நான் தருமகர்த்தா! தருமகர்த்தா—என்றெல்லாம் நெஞ்சு நெக்குருகக் கூறி, தம்மிடம் உள்ள செல்வத்தை அள்ளித் தந்து ஏழையின் அல்லலைப் போக்கிடவா கிளம்புகின்றனர்?இல்லையே! ஒரு புன்னகையை உதிர்க்கின்றனர்; புதுத் தெம்பு கொள்கின்றனர்!

மதியற்றோரே! கேட்டீரா காமராஜர் பேச்சை! பணக்காரர்கள் என்றாலே பாதகர்கள் என்று பேசிவந்தீரே! சீமான் என்றால் ஏழைக்கு வைரி என்று ஏசி வந்தீரே! முதலாளி என்றால் பாட்டாளிக்குப் பகையாளி என்று பழி சுமத்தி வந்தீர்களே! காமராஜர் பேச்சைக் கேட்டீர்களா? நாங்கள் தர்மகர்த்தாக்கள்! ஆமாம்! தர்மகர்த்தாக்கள்! எம்மிடம், எமது தகுதி, திறமை, பண்பு பார்த்துச்செல்வம் வந்து குவிந்திருக்கிறது. இந்தப் பணம் எமக்கேவா சொந்தம்? இந்தப் பணத்தைக் கொண்டு நாங்களா சுகபோகத்தில் மூழ்கிடப் போகிறோம். நீரைத் தன்னிடத்தில் நிரப்பி வைத்துக் கொண்டிருக்கும் குளம் எப்படி ஊராருக்குப் பயன் தருகிறதோ அப்படி ஏழைகளுக்கு இதம் செய்திட இந்தச் செல்வம். எம்மிடம் பணம் இருக்கிறதே என்பதற்காக, பகைத்துக் கொள்ளலாமா? உங்கள் நலனுக்காக அல்லவா இந்தப் பணம் எம்மிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது! நாங்கள் தந்திட! நீங்கள் பெற்றிட! நாங்கள் தந்திட வேண்டுமானால், எம்மிடம் பணம் சேர்ந்திட வேண்டுமல்லவா? அப்படிச் சேர்ந்திடும்போது, அடிக்கிறான் கொள்ளை, குவிக்கிறான் கோடி என்று கொக்கரிக்கிறீர்களே, நியாயமா? நாங்கள் குவித்திடாவிட்டால், உங்களுக்கு உதவி யார் செய்திடுவர்? எப்படிச் செய்திட முடியும்!! தருமகர்த்தா இல்லாவிட்டால் தருமம் எப்படி நடக்கும்? தருமம் நடக்காவிட்டால், தரித்திரத்தால் தவித்திடும் உங்கள் வேதனை எப்படிப் போகும்? ஆகவே இனியாகிலும், அருவருப்பு, பொறாமை, பகை கொள்ளாதீர்கள்! மாளிகையில் மந்தகாசமாக வாழ்கிறான் என்று கோபம் கொள்ளாதீர்! மாளிகை வாசியினால்தானே மண் குடிசைக்காரரின் இன்னலைத் துடைக்க முடியும். உங்கள் இன்னலைத் துடைக்கத்தானே எம்மிடம் இலட்சங்கள்

உள்ளன! நாங்கள் தர்மகர்த்தாக்கள்! எங்களை வாழ விடுங்கள், வளர விடுங்கள்!! வாழ்த்துங்கள்! வணங்குங்கள்! உமக்கு வாழ்வளிக்கும் வல்லமையாளர் நாங்கள்!! என்று ஏழையைப் பார்த்துக் கூறிடும் துணிவு பெறுகின்றனர்.

சுயநலக்காரன்
சுரண்டல்காரன்
சுகபோகி
பணம் பெருத்தான்
இரும்புப் பெட்டிக்காரன்

என்றெல்லாம் பணக்காரர்கள் கண்டிக்கப்பட்டால், ஒரு கொதிப்பு எழும்; குமுறிக் கிடந்தவர்கள் சீறி எழுவர்; கூப்பிய கரங்கள் தாக்கிட எழும்; புனல் சொரிந்த கண்கள் கக்கும், புரட்சி மூளும், நமது நிலை அழியும். ஆனால் நாம் தர்மகர்த்தாக்கள் என்று காமராஜரே கூறிவிட்டார். ஆகவே ஏழை எளியோர் நம்மை வாழ்த்துவர், வணங்குவர்! நமக்கு எதிர்ப்பு எழாது, பகை மூண்டிடாது, நமது ஆதிபத்தியம் அழிந்துபடாது!!—என்று எண்ணுகின்றனர். அந்த எண்ணம் ஒரு துணிவைத் தருகின்றது.

காமராஜரின் தர்மகர்த்தாப் பேச்சு எதிர்காலத்தைப் பற்றி எண்ணி எண்ணி அஞ்சிக் கிடந்த பணக்காரர்களுக்குப் புதுத் தெம்பும், துணிவும் தந்துவிட்டது.

முதலாளித்துவ முறைக்கு இருந்து வரும் எதிர்ப்பு முறிந்திட வழி செய்கிறது.

ஏழையைச் சீமானிடம் பணிந்திடச் செய்கிறது.

தம்பி, இவைகளை அறிந்து திட்டமிட்டுக் காமராஜர் இந்தத் தர்மகர்த்தா முறைபற்றிப் பேசுகிறார் என்று நான் கூறவில்லை. தமது பேச்சு எதற்குப் பயன்படுத்தப்பட்டுவிடும் என்பதை உணர்ந்தறியாமல்,—தித்திப்புப் பேச்சுப் பேசிவைப்போம், ஏழையின் உள்ளக்குமுறல் குறையட்டும் என்ற எண்ணத்தில் பேசுகிறார். தம்மீது வீசப்பட்டு வந்த பகைச் சொற்களும், எறியப்பட்ட எதிர்ப்புகளும் மாறி, மதிப்புமிக்க ஒரு பட்டப் பெயர்—தர்மகர்த்தா—என்ற பெயரல்லவா கிடைக்கிறது, இந்தப் பெருமையை நமக்கு அளித்தவர் காமராஜர் அல்லவா? அவரல்லவா நமக்கு உண்மை நண்பர்! அவர் வாழ்க! அவர்

கூறிடும் தர்மகர்த்தா தத்துவம் வாழ்க!—என்று வாழ்த்துகின்றனர். 'சோடசோபசாரம் செய்யவும் சொர்ணாபிஷேகம் செய்யவும் முனைகின்றனர்! திருடர்களுக்கு நடுநிசி உழைப்பாளர் என்று சிறப்புப் பெயர் கொடுத்திடுவார் உண்டா? இல்லையல்லவா? அப்படி யாரேனும் துணிந்து கூறிடின், கூறுபவர் பெருந்தலைவர் வரிசையினராகவுமிருப்பின், 'நடுநிசி உழைப்பாளிகள்' திருவிழா அல்லவா கொண்டாடுவர்!

காமராஜர் நடத்தும் ஜனநாயக சோஷியலிச விழாவில், சீமான்கள் மகிழ்ச்சியுடன் கலந்துகொள்வதன் காரணம், தமக்கு மதிப்புமிக்க ஒரு பட்டத்தை-தருமகர்த்தா என்ற பட்டத்தைச்சூட்டினாரே, நம்மை எதிர்த்திடுவோரை அழைத்து, ஏமாளிகளே! இவர்களை யாரென்று எண்ணிக்கொண்டு எரிச்சல் கொள்ளுகிறீர்கள்? இவர்கள் தர்மகர்த்தாக்கள்! என்று கூறுவதன் மூலம், நமக்கு ஒரு எதிர்காலத்தை உறுதிப்படுத்தியிருக்கிறாரே! இவருக்கல்லவா விழா எடுக்க வேண்டும் என்று கருதுகின்றனர்.

ஆனால், அவர்களும் உண்மையைக் கண்டறிய முனையவில்லை. இந்த 'தர்மகர்த்தா' தத்துவம் சாஸ்திரமாக, காப்பியமாக, கதையாக, கவிதையாக, எப்படிப்பட்ட மாமேதைகளால் முன்பு தரப்பட்டது! எவ்வளவு சடுதியில், எளிதாக ஏழை மக்கள் அதனை மறந்துவிட்டார்கள்! முன்பு தத்துவம் பேசியவர்கள், இன்றைய காமராஜரைக் காட்டிலும், பெரியவர்களல்லவா? அவர்களில் அருளாளர்கள் இருந்தனர்; கவிவாணர்கள் இருந்தனர்; புலமைமிக்கோர் இருந்தனர்; புவி எங்கும் உள்ள நிலைமைகளைத் தெரிந்த அறிவாளர்கள் இருந்தனரே! அவர்கள் அன்று பேசினர் தருமகர்த்தா முறை பற்றி· பேசி? கேட்டனர், தலை அசைத்தனர்! ஆனால், மீண்டும் மீண்டுமல்லவா அறம் அழிந்துபட்டது, செல்வச் செருக்கு கொக்கரித்துக் கூத்தாடிற்று.

அகவலாகவும் வெண்பாவாகவும் அறுசீராகவும் பிறவகையினதாகவும், உரைநடையாகவும் உரையாடலாகவும், பேரறிவாளர்கள் எடுத்துக் கூறிவந்த தர்மகர்த்தா முறையினை—மிக எளிதான முறையில்,

அறம் செய விரும்பு

என்று நம் ஆன்றோர் சொல்லிவைக்கவில்லையா! அதனைத் திரும்பத் திரும்பக் கூறிக் கொண்டிருப்பதால் விளையப் போகும் பலன் என்ன?

செல்வவான்கள் தர்மகர்த்தாக்கள் என்ற பேச்சு, சமூகப் புரட்சி ஏற்படுத்தத் துணிவற்றவர்கள் நடத்திக் காட்டும் கண்ணாமூச்சி விளையாட்டு!

செல்வவான்களை தர்மகர்த்தாக்கள் என்று நாடாளும் பெரியவர்கள் கூறுவதைப் பயன்படுத்திக் கொண்டு முதலாளிகள் தங்கள் ஆதிக்கத்தைக் கெட்டிப்படுத்திக் கொள்வர்.

இன்று காங்கிரசின் துணைகொண்டு முதலாளிகள் அந்தக் காரியத்தைத்தான் நடத்திக் கொண்டுள்ளனர்.

பணம் சிலரிடம் குவிந்திருக்கும்போது அதனை தரும கர்த்தா முறை என்று பேசி, பூசி மெழுகுகிறார்கள். ஏராள மான நிலபுலன்களைத் தமதாக்கிக் கொண்டிருந்த ஜெமீன் தாரர்களை ஒழித்தபோது இந்தத் தர்மகர்த்தர் தத்துவம் எங்கே போய்விட்டிருந்தது?

ஐநூற்றுச் சொச்சம் சமஸ்தானாதிபதிகளின் பட்டத் தைத் தட்டிவிட்டபோது, இந்தத் தர்மகர்த்தா தத்துவம் ஏன் பதுங்கிக் கொண்டது?

செல்வவான்கள், தர்மவான்கள் என்றால் ராஜாக் களும் ஜெமீன்தாரர்களும், கடவுளின் பிரதிபிம்பங்கள் அல்லவா!! ஒப்புக் கொள்வார்களா?

பணக்காரர்கள் ஏழைகளுக்காகவே சொத்தைப் பயன் படுத்தும் தர்மகர்த்தாக்களாக உள்ளனர் என்ற தத்துவம், அரசன் ஆண்டவனின் பிரதிநிதி, மகாவிஷ்ணுவின் அவ தாரம் என்ற தத்துவத்தோடு சேர்ந்து பிறந்ததாயிற்றே; அரசன் ஆண்டவனின் பிரதிநிதி என்ற தத்துவம் தகர்க்கப் பட்டுப் போனது போலவே, சீமான்கள் தர்மகர்த்தாக்கள் என்ற தத்துவமும் தூளாகிப் போகாமல் தப்பித்துக் கொள்ள முடியுமா?

ஆனால் பலிக்கிறவரையில் பார்க்கலாம் என்ற முறையில் காமராஜர் இந்தத் தருமகர்த்தா முறை பற்றிப் பேசிவரலாம் என்று இருக்கிறார். இந்தத் தத்துவத்தில் முன்பு மக்களுக்கு இருந்துவந்த மயக்கம்

இன்று பெருமளவு போய்விட்டிருக்கிறது. ஆகவே அவர்கள், காமராஜர், தருமகர்த்தா தத்துவம் பற்றிப் பேசிடக் கேட்டுக் கேலிப்புன்னகை செய்கின்றனர்.

பணக்கார ஆதிக்கத்தை ஏன் இன்னமும் விட்டுவைக் கிறீர்கள் என்று மக்கள் சீற்றத்துடன் கேட்கும்போது, அவர்களைச் சாந்தப்படுத்த காமராஜர்கள் இந்தத் தரும கர்த்தா தத்துவத்தைப் பேசிடலாம்.

பணக்காரர்களிடம் ஏழைகள் பகை உணர்ச்சி காட்டும் போது, அதிலிருந்து தப்பித்துக்கொள்ளப் பணக்காரர், இந்தத் தருமகர்த்தா தத்துவத்தைப் பயன்படுத்திட முனையலாம்.

ஆனால், இதே தருமகர்த்தா தத்துவத்தை எடுத்துக் காட்டி ஏழை, பணக்காரனை அவனிடம் உள்ள செல்வத்தை ஏழைக்கு இதம் செய்திடச் செலவிடும்படிக் கேட்க முடியுமா? கேட்டிடின், பணக்காரர்கள் தரும கர்த்தா தத்துவத்தின்படி நடந்துகொள்ள முன் வருவார் களா? வரமாட்டார்கள்! சீறுவர்! கொதித்தெழுவர்.

தருமகர்த்தா என்ற பட்டத்தை, தனவான், கனவான், சீமான்! என்ற பழைய பட்டங்களுடன் சேர்த்து இணைத்துக் கொள்ள மட்டுமே பணக்காரர் கள் இசைவார்கள். அந்தத் தத்துவத்தின்படி, தன் சொத்து தனது சுகபோகத்துக்கு அல்ல, ஏழையின் நன்மைக்கு என்று கருதிச் செலவிட்டுக் கொண்டிருக்க மாட்டார்கள்.

காமராஜர் பேசிடும் தருமகர்த்தா தத்துவத்தை நம்பிக் கொண்டு ஏழையர், செல்வர்களை அணுகி, ஐயன்மீர்! உலவிடும் மாளிகையும் அதிலுள்ள பெருநிதியும், வயலும் வளமும் அணிவனவும் பெறுவனவும், உம்முடையதன்று; எமக்காக உம்மிடம் ஒப்படைத்த செல்வமேயாகும்; நீவிர் எமக்காக இறைவனால் தருமகர்த்தா ஆக்கப்பட்டவர். எனவே, எடும் செல்வத்தை, கொடும் ஏழையர் துயர் போக்க என்று கேட்டிடின், என்ன கிடைத்திடும்?

தடியடி

சிறை

துப்பாக்கிச் சூடு!

'கேட்பதும் கிடைப்பதும்' என்ற தலைப்புடன், சிங்கைத் தோழர் உலகநாதன் என்பார் தந்துள்ள கவிதையின் பகுதி, செல்வவானின் போக்கை நன்கு எடுத்துக் காட்டுகிறது என்பதனால் அதனைத் தருகிறேன்.

''வாழ்வில்லை வளமில்லை
வலிவில்லை செழிப்பில்லை
சூழ்தொல்லை சிறிதில்லை
சுகமில்லை நலமில்லை'' என்றால்
மரமுண்டு கயிறுண்டு
மரணத்தில் சுகமுண்டு
பிறகென்ன துயருண்டு?
பேசாதே போவென்று சொல்வார்—இவர்
கூசாமல் சாவென்று சொல்வார்—இங்கே
வாழ்வுக்கு வழிகேட்டால்
சாவுக்கு வழி காட்டிச் செல்வார்!

அவர்கள் கிடக்கட்டும் தம்பி! இரும்புப் பெட்டிக்கும் இதயத்துக்கும் ஈஸ்வரன் சம்பந்தம் வைக்கவில்லையே அம்மா என்று உழவன் கூறுவதாக நான் 'ஓரிரவு' என்ற கதையில் எடுத்துக் காட்டினேன், ஆண்டு பலவற்றுக்கு முன்பு. அவர்கள் அப்படித்தான் இருப்பார்கள். ஆனால் காமராஜருமா அப்படி இருக்கவேண்டும்.

வாழ்வுக்கு வழி கேட்டால், வகையற்ற பேச்சைத் தத்துவமாக்கியா தருவது!

இதென்ன புதிதா? மிக மிகப் பழையது! பலன் தருவதா? இல்லை! உபதேசக் குவியலுடன் சேர்த்துவைக்கத்தக்கது! அதைத்தான் தரமுடிகிறது அவரால்! அதற்கு மட்டுமே அவருக்கு அனுமதி கிடைத்திருக்கிறது.

தம்பி! துவக்கத்தில் காட்டினேனே புலவர் கேள்வி, அதனை மறுபடியும் படித்துப் பார்!

ஒருவர்மீது ஒருவருக்குக் காரணமற்றுக் கோபம் வருகிறது அரசே! அதற்கு என்ன காரணம்? என்றல்லவா புலவர் கேட்டார். அதற்கு இதயம் படைத்த மன்னன்

என்ன பதில் அளித்தான்? நிலைமையை உணர்ந்து, பரிசுப் பணம் கொடுத்துப் புலவரின் வறுமையைப் போக்கினான்.

போஜராஜன் காலத்தில் காமராஜர் இருந்திருந்து, போஜராஜனிடம் போய் நிற்காமல் அந்தப் புலவர் காமராஜரிடம் போய்க் கேட்டிருந்தால், பதில் என்ன கிடைத்திருக்கும்? கோபமா! உமக்கும் வருகிறது, உம் மனைவிக்கும் வருகிறது, உமது தாயாருக்கும் வருகிறதா! காரணமற்றுக் கோபம் வருகிறதா! சரி! சரி! அதற்கு என்ன சொல்லுகிறீர்கள் என்றா என்னைக் கேட்கிறீர்கள். சரி! சரி! கூறுகிறேன் கேள் ஐயா புலவரே! ஆறுவது சினம்!!—என்ற இந்தப் பதிலைத்தானே தந்திருப்பார்!!

அண்ணன்,

9-10-66

அண்ணாதுரை

காஞ்சிக் கடிதம் : 83

ஒளி படைத்த கண்ணினாய்!

- ★ உயர இருப்பதெல்லாம் உயர்ந்ததாகி விடுமா!
- ★ ஆற்றல் உணர்ந்தோ போற்றுகின்றனர்?
- ★ புகழ்பவர் புரிந்தவர்! புகழாதவர் புத்தி கெட்டவராம்!
- ★ ஆதாயச் சுவை புகழ் பாடச் செய்கிறது!
- ★ கொடுப்பவர் எதையும் இழப்பதில்லை! ஏதாகிலும் பெறுவார்!
- ★ பெறுபவன் இழக்கிறான்!
- ★ செயல்—முதல்! உழைப்பு—முறை! புகழ் - விளைவு!
- ★ அன்பு காட்டுதல் வேறு! துதி பாடுதல் வேறு!
- ★ சேற்றிலே செந்தாமரை இருந்திடினும் சேறு சந்தனமாகி விடுமா?
- ★ பேச்சிலும் எழுத்திலும் ஒளி மிகத் தேவை!

தம்பி,

ஐயாவோட குழந்தை!
எஜமானரோட மகன்!
சின்ன எஜமானரு,

சின்ன ஐயா!
எஜமானரு!

புரிகிறதல்லவா, ஒவ்வொரு கால கட்டத்திற்கு ஏற்ற பேச்சு என்பது-

சீமான் இருக்கும்போது அவருடைய மகனை, ''ஐயாவோட குழந்தை'' என்று அன்புடன் கூறுவர். அந்தக் கட்டத்தில் அன்பு காட்டினால் போதும் என்று தோன்றுகிறது.

சீமானுடைய பிள்ளை, வாலிபப் பருவமடைந்ததும் அடங்கிக் கிடப்போருக்கு,முன்புபோல அன்புடன் குழந்தை என்று கூறிடக் கூச்சமாக இருக்கிறது; எஜமானரோட மகன்! என்று கூறுகின்றனர். அன்பு போதுமானது அல்ல என்று ஓர் உணர்வு; மதிப்புக் காட்டவேண்டும் என்ற ஒரு நினைப்பு. குழந்தை அல்ல, வாலிபன்; அதாவது சீமானுடைய பணப்பெட்டிக்கு அருகே சென்று கொண்டிருக்கும் நிலை! ஆகவே மதிப்பளிக்க வேண்டி இருக்கிறது.

ஆண்டுகள் சில செல்கின்றன! சீமான் பழைய முடுக்கை இப்போது கஷ்டப்பட்டுத்தான் மேற்கொள்ள முடிகிறது. கர்ஜனையில் கடுமை கலந்திட முடியவில்லை. மகனோ? விழியை உருட்டிக் காட்டுகிறான். விரைவில் 'பட்டம்' சூட்டிக்கொள்ள இருக்கிறான் என்றே தோன்றுகிறது. அப்போது, அன்பு - மதிப்பு - என்னும் உணர்ச்சி போதுமானது அல்ல என்று தோன்றுகிறது. அடக்க ஒடுக்கமாகப் பேச வேண்டும் என்று தோன்றுகிறது; சின்ன எஜமானர் என்று பயம் கலந்த குரலில் பேசத் தலைப்படுகின்றனர்.

பத்து நாளாக அவர் வெளியே உலாவச் செல்லவில்லை. பழரசத்தில் மருந்து கலந்து தருகிறார்களாம் களைப்பும் இளைப்பும் போக என்ற முறையில் சீமானைப் பற்றி ஊரார் பேசிக் கொள்ளும் நிலையின்போது, அவர் மகனைச் 'சின்ன ஐயா' என்று அழைக்கின்றனர் - ஐயா என்பதை அழுத்தி! 'சின்ன' என்ற அடைமொழி அதிக நாட்களுக்குத் தேவைப்படாது என்ற நினைப்புடன்.

சீமான் 'சிவலோகப் பிராப்தி' அடைந்துவிடுகிறார்; ஐயா! என்று மரியாதையும் அச்சமும் கலந்த முறையில் அழைக்கிறார்கள்.

'ஐயாவோட குழந்தை' என்ற நிலையிலிருந்து 'ஐயா' ஆகிவிட்ட நிலை, சீமானுடைய மகன் வளர்ந்துவிட்டான் என்பதைத் தெளிவாகக் காட்டும் அளவுக்கு அவன் ஐயா வேலை பார்ப்பதற்குத் தேவையான தகுதியையும் திறமையையும் பெற்றுவிட்டான் என்பதைக் காட்டுவதில்லை. தகுதியும் திறமையும் பெற்றிருக்கக்கூடும், அல்லது மாளிகையும் மாநிதியும் போதும், வேறு தகுதியும் திறமையும் தேடிப் பெற்றிட வேண்டுமோ என்று இருந்துவிட்டிருக்கக் கூடும்.

மாளிகையும் மாநிதியும் பெற்றிருப்பதே ஒருவிதமான தகுதிதானே - உலகம் அப்படித்தானே எண்ணுகிறது.

எஜமானர்! ஐயா! பெரியவர்! — என்ற இத்தகைய பட்டம் பல சூட்டப்பட்டவர் - சீமான் மகன் - இருபது வயது நிரம்பியவனாகவும், 'எஜமானர்' என்று பணிவுடன் அழைபபவர் அறுபது வயதான முதியவராகவும் இருக்கக் கூடும்!

வயது இருபது என்றால் என்ன! இரும்புப்பெட்டி இருக்கிறதல்லவா? முதியவர் அந்த வாலிபனையா எஜமானரே! என்று அழைக்கிறார்; இரும்புப் பெட்டியையும் அதில் உள்ள எண்பது இலட்சத்தையும், கரும்புத் தோட்டத்தையும் அது காட்டும் கணக்கினையும்!!

தம்பி! இது ஏழ்மையின் விளைவு.

ஆனால், அரசியல் உலகிலே, ஒருவர் திடீரென 'எஜமானர்' ஆகிவிடும்போதும், இதுபோல 'வளையும் நெளியும்' கூட்டமொன்று கிளம்பிவிடக் காண்கின்றோம்.

உண்மையான அன்பு காரணமாக, எதையும் இழந்திட, எத்தகைய இன்னலையும் ஏற்றிடத் தயாராக உள்ள தூயவர்களைத் தொண்டர்களாகப் பெற்றிடும் வாய்ப்பினைப் பெற்றிடும் தலைவர்கள் உளர்.

அந்தத் தலைவர்களை விடத் தூய்மை மிக்க அந்தத் தொண்டர்களே, பொதுவாழ்க்கைத் துறைக்கு உயிரூட்டம் தருபவர்.

நான், தம்பி! அப்படிப்பட்ட அப்பழுக்கற்ற நற்குணம் கொண்ட தூயவர்களைப்பற்றி அல்ல கூறுவது.

சீமானான உடன் அவனை 'எஜமானர்' என்று கொண்டாடிடுவோர்போல, ஒருவர் அரசியலில் பெரிய பதவியில் இடம்பெற்றவுடன் அவர் முன்நின்று அவர் நாமாவளி பாடுகிறார்களே, அவர்களைக் குறிப்பிடுகிறேன்; துதி பாடகர்களை,

துதிபாடகர்கள் வரம்வேண்டிப் புதிய தேவதை முன் வேண்டி நிற்பது மட்டுமின்றி மற்றவர்களிடம் மல்லுக்கு நிற்பதும் மற்ற எவரையும் மட்டமாகக் கருதி ஏசுவதும், தமது புதிய எஜமானருக்குத் திருப்தி தரும் என்ற நினைப்பில் இருப்பர்.

தன்னைப் பாராட்டிப் பேசுவதுடன், தனக்கு 'ஆகாதவர்களை'க் கடுமையாக ஏசுகிறான் என்பதறிந்து அகமகிழ்ந்து, தட்டிக் கொடுக்கும் போக்கினர் உளர்.

'தலைவர்' மகிழ்ச்சி அடைகிறார், தட்டிக் கொடுக்கிறார் என்று தெரிநதால், தூற்றும் பேர்வழிகளுக்குத் தெம்பும் துணிவும் பன்மடங்கு அதிகமாகிடத்தானே செய்யும். வசை பாடுவதிலே மும்முரமாக ஈடுபட்டுவிடுகின்றனர்! அதிலேயே ஈடுபட்டு ஈடுபட்டு, பிறகு வேறு எதற்குமே தகுதியற்றவர்களாகி விடுகின்றனர்.

தம்முடன் உள்ளவர்கள் பிரச்சினைகளை விளக்க வேண்டும், வாதங்களைக் காட்டவேண்டும், புள்ளி விவரத்தைத் தரவேண்டும், பேச்சிலே பொருளும் பொறுப்பும் இருக்கவேண்டும், கண்ணியம் இருக்கவேண்டும் என்று விரும்பிடுவது, ஒரு தலைவரின் தரத்தை மட்டுமல்ல, பொதுத் தொண்டின் தரத்தையே உயர்த்தும்.

அதற்கு மாறாகத் தரம்கெட்ட பேச்சுக்குத் தலையாட்டுவதும் தட்டிக் கொடுப்பதும், தூபமிடுவதுமாக அந்தத் தலைவர் இருந்திடின், என்ன நேரிடும்? சாக்கடைச் சரக்கினை நாக்கிடைகொண்டு, உமிழ்வோரின் தொகை பெருகும், துணிவு வளரும். இன்று அதனைத்தான் காண்கிறோம்.

தேர்தல் நெருங்க நெருங்க, இழிமொழிகள் உமிழ்வோர் கும்பல் கும்பலாகக் கிளம்புவர். ஆந்தை அலுத்துவிட்டது கோட்டான் தோற்றுவிட்டது என்று கூறத்தக்க

விதமான ஒலி கிளம்பிடும்; காது குடைச்சல் எடுத்திடும் விதமாக. கவலையோ, கோபமோ துளியும் ஏற்படவிடக் கூடாது.

தரமற்றவர்கள், கீழ் நிலையில் உள்ளவர்கள் எதையோ பேசட்டும், எப்படியோ ஏசட்டும் அண்ணா! மேல் நிலையில் உள்ளவர்கள், உயர்ந்த பதவியில் இருப்ப வர்கள், தலைவர்கள் பீடத்தில் அமர்பவர்கள் இவர் களெல்லாமோ, இழித்தும் பழித்தும் பேசுவது, இட்டுக் கட்டிப் பேசுவது என்று கேட்கிறாய். கேள்வி, நியாய மானதுதான் தம்பி! ஆனால் சற்று அவசரப்பட்டுக் கேட்டு விட்டாய்.

உயர இருப்பதெல்லாம் உயர்ந்தது என்று யார் உனக்குச் சொன்னார்கள்.

தாழ இருப்பதெல்லாம் தாழ்ந்தது என்று ஏன் கருதிக்கொள்கிறாய்.

பூமியின் கீழே, மிக மிகக் கீழே கிடைத்திடுகிறது வைரம்! உயரத்தில் அல்ல! ! எனினும் வைரம் உயர்ந்த பொருள்!! கட்டுவீரியன் குட்டி! மரத்தின் உச்சாணிக் கிளையிலே போய் இருந்து கொண்டால், மிக உயர்ந்த தாகிவிடுமோ? ஆகாதனறோ!

உயரம்—தாழ்ந்த இடம்—மலை—மடு—சரிவு,—பள்ளத் தாக்கு—சம நிலம்—இவை, இடங்களின் அமைப்பைக் குறிக்கின்றன; தரத்தை அல்ல. ஆகவே உயர்ந்த இடம்— மேலான பதவி—இங்கு உள்ளவர்களெல்லாமோ, இழி மொழி பேசுவது என்று கேட்டுக் கவலைப்பட்டுக் கொள் ளாதே.

இடமும் இயல்பும் பொருந்தி இருந்துவிடுவது, இலட்சத் தில் ஒன்று இருக்கலாம்.

இடத்திற்குத் தக்க இயல்பு பெற்றிட முனைபவர், பதினாயிரத்தில ஒருவராக இருக்கலாம்.

ஆனால், உயர இருப்பதனைத்தும் உயர்ந்தது என்று பொது இலக்கணமாக்கிடக் கூடாது.

உயர்ந்த இடத்திலுமா இப்படிப்பட்ட இயல்பினர் உள்ளனர் என்று கூறினால், பொருளுண்டு.

உயர்ந்த இடம் அடைந்தபிறகாவது, தமது இயல் பினைச் சிறந்ததாக்கிக் கொள்ளக்கூடாது, உயர்ந்த இயல் பினைப் பயின்று கொள்ளக்கூடாதா என்று கேட்கத் தோன்றும். அது நல்ல கேள்வி. ஆனால் நடைமுறை வேறுவிதமாக இருக்கிறதே, என்ன செய்ய!

வேறோர் விந்தை இதிலே என்ன என்றால், தம்பி! உயர்ந்த இடம் சென்ற காரணத்தாலேயே, ஒரு 'துணிவு' பிறந்துவிடுகிறது, எதையும் பேசலாம், எப்படியும் பேச லாம் என்று. நாமிருக்கும் இடமோ, மிக உயர்ந்த இடம், நம்மை யார் என்ன செய்யமுடியும், இந்த உயர்ந்த இடத் தில் இருந்துகொண்டு எவரை என்ன கூறினாலும் அவர்கள் இடத்தின் உயர்வு கண்டு, அச்சம்கொண்டு, அடங்கிக் கிடப்பர்!—என்று எண்ணிக் கொள்ளும் போக்கு தடித்து விடுகிறது.

பெரும்பாலான மக்கள், உயர் இடம் சென்றுள்ளவர் களைக் கண்டதும், அச்சம் கொள்வதும், அவர்களைப் போற்றிடத் துடிப்பதும், அவர்களின் பேச்சிலே புதுப்புதுப் பொருளும் பொலிவும் அருமையும் பெருமையும் இருப்ப தாக எண்ணி மயக்கம் கொள்வதுமான நிலையில் உள்ளனர்.

உயர்ந்த இடம் செல்வதற்கு முன்பு அவரிடம் காண முடியாதிருந்த 'அறிவாற்றலை' உயர்ந்த இடம் சென்ற தும், காண முற்படுகின்றனர்! இருப்பதாகவே கூறுகின்ற னர்! நம்புகின்றனர்!

காமராஜர், தமிழ்நாடு காங்கிரசின் தலைவராக இருந்தபோது அவரைப் போற்றிப் புகழ்ந்திட, தமிழ் நாட்டிலேயே கற்றோரும் மற்றோரும், கனதனவான் களும் புலவர் பெருமக்களும், அதிகாரிகளும் வழக்கறிஞர் களும், நீதிபதிகளும் வணிகப் பிரமுகர்களும் கல்லூரிப் பேராசிரியர்களும் ஆய்வாளர்களும், துடிதுடித்துக் கொண்டா திரண்டு வந்தனர்.

ஒரு பரிதாபம் கலந்த பரிவுகாட்டினர்.
போற்றிப் புகழ்ந்திட முன்வந்தார் இல்லை.

ஆனால், அந்த நிலையா இன்று? கற்றோரும் மற்றோரும் இன்று என்னென்னவோ அறிவாற்றலைக் காண்கின்றனர், காமராஜரிடம்! போற்றிடத் துடிக்கின்றனர்! படிக்காத

மேதை என்றும் பாமரரின் பிரதிநிதி என்றும், மக்களை அறிந்தவர் என்றும், மனப்பாங்கு உணர்ந்தவர் என்றும். பிரச்சினைகளை விளக்குபவர் என்றும், சிக்கல்களைத் தீர்ப்பவர் என்றும், எழுச்சி ஊட்டுபவர் என்றும் செயலில் தீரர் என்றும், பாராட்டுகின்றனர்.

தமிழ்நாடு காங்கிரஸ் தலைவராக அவர் இருந்த போது அவர்மீது பொழியப்படாத இந்தப் புகழ்மாரி, அவர் முதலமைச்சராகி அகில இந்தியத் தலைவராகி, அமைச்சர்களை உண்டாக்கித் தரும் 'சிற்பி' என்ற நிலைபெற்றவரானதும், வேகமாகப் பொழியப்படு கிறது காண்கிறோம்.

போற்றுவாரற்று அவர் இருந்த நாட்களுக்கும், போற்றாதார் இல்லை என்று கூறத்தக்க இந்த நாட் களுக்கும் இடையில், அவர் தமது அறிவாற்றலை மிகப் பெரும் அளவு வளர்த்துக் கொள்ள நேரமோ, வாய்ப்போ, முறையோ இருந்ததாக அவருடைய துதி பாடகர்கள் கூடக் கூறமாட்டார்கள்!

ஆனால் அவர் உயர் இடம் சென்றார், போற்றிடு வோரின் குரல் உயர்ந்தது!

இடத்தின் உயர்வுகண்டு அதிலே உள்ளவர்களைப் போற்றிப் புகழ்ந்திட முற்படும்போக்கு, இன்று நேற்றல்ல, நெடுங் காலத்துப் பழக்கம்.

புகழுரை கேட்டுக்கேட்டு, உயர் இடம் சென்றடைந்த வர்கள் முதலில் மகிழ்கின்றனர், பிறகு மயங்குகின்றனர், பிறகு மமதை அடைகின்றனர், இறுதியில், புகழுரையில் தெரிவிக்கப்பட்டிருக்கும் அருங்குணங்கள் அனைத்தும் தமக்கு உண்மையிலேயே இருப்பதாக நம்பிக்கை கொண்டு விடுகின்றனர். அந்த நம்பிக்கை தடித்துவிட்டால், எவரேனும் தன்னிடம் ஒரு சிறு குறை இருப்பதனை மிகப் பணிவுடன் சுட்டிக் காட்டிடினும் பொறுத்துக்கொள்ள முடிவதில்லை; பொங்கி எழுவர்! யார் அவன்! அவனுக்கு என்ன தெரியும்? என்ன தகுதி அவனுக்கு இருக்கிறது!— என்று முழக்கமெழுப்புவர்.

அந்த நிலைக்குச் சென்றுவிட்டவர்கள், பிறகு எதையும் யோசித்துப் பார்க்கவேண்டும் என்று கூட ஒப்புக்கொள்வ தில்லை. எல்லாம் எளிதாக அவர்களுக்குத் தென்படும்.

எதையும் முடித்துவிட முடியும் என்ற துணிவு பிறந்திடும். அது இறுதியில் அவர்களை எங்குத் துரத்திடும் என்பதனை வரலாற்று ஏடுகளில் பல நிகழ்ச்சிகள் விளக்குகின்றன.

அழாதே! ஏதோ ஆத்திரத்திலே அடித்து விட் டேன். பொறுத்துக்கொள்; புத்திகெட்டு அடித்து விட்டேன்.

அடிக்காமல் விட்டுவிட முடியுமா? நீ செய்த வேலைக்கு இந்த அடி போதாது, நானாக இருக்கவே இந்த அளவோடு விட்டுவிட்டேன். வேறு ஒருவனாக இருப்பின் முதுகுத்தோலை உரித்து உப்புத் தடவி வெயிலிலே உருட்டிவிடுவார்கள் உன்னை, பயல்! தப்பித்துக்கொண்டாய், போ! போ!!

காரணம் தெரிவிக்கவேண்டுமோ, பயலுக்கு! அடித்தேன்! ஏன் என்றா கேட்கிறாய்? ஏன் என்று கேட்டதற்கே மற்றோர் தடவை உன்னைக் கட்டி வைத்து அடிக்கவேண்டும்......

தம்பி! செல்வச் செருக்கின் வளர்ச்சியிலே, ஒவ்வொரு கட்டத்தில் இவ்விதம் ஒவ்வொரு விதமாகச் 'சீமான், பேசுகிறார் அல்லவா! உயர்ந்த பதவி பெறப் பெற, சிலருக்கு இந்தச் 'சீமான்' போக்கு தடித்துப் போய்விடு கிறது.

அந்தப் போக்குக்கு முதற் காரணமாக அமைவது, உயர்ந்த இடம் சென்றுவிட்டவர்களை, பொருத்தமும் பொருளும்கூடப் பாராமல், போற்றிப் புகழ்ந்திட ஒரு கூட்டம் கூடிவிடுகிறதே, அதுவேதான்!!

உயர்ந்த இடம் சென்று விட்டவர்கள், இனியாகிலும் உயர்ந்த குணம் பெற்றுக் கொள்ளுவோம் என்று முயற்சி எடுத்துக்கொள்ளக் கூடும்; அந்த முயற்சியே தேவை யில்லை என்று இந்தத் துதிபாடகர்கள் முட்டுக்கட்டை போட்டுவிடுகின்றனர்.

தன்னை, பல்வேறு துறைகளிலே உள்ளவர்கள்,
எல்லாம் இவர் அறிவார்!
என்று போற்றிப் புகழ்ந்திடக் கேட்டால்,

எதையும் இனி நாம் தெரிந்துகொள்ளத் தேவை இல்லை

விருத்தாசலம் - 606001

என்ற எண்ணம் எப்படி வளராமல் போய்விடும்! அந்த எண்ணம் வரத்தான் செய்யும்.

அடுத்த கட்டமாக அமைவது மேலும் வேடிக்கை யானது.

புகழ்பவர்கள்
புரிந்தவர்கள்;
புகழாதவர்கள்
புத்திக்கெட்டவர்கள்

என்ற புது இலக்கணத்தையே உயர் இடம் சென்று 'துதி பாடகர்'களைப் பெற்றுக் கொண்டவர் ஆக்கிக் கொள் கிறார்.

மருத்துவர்கள் கூறிடும் முறைகளை அவர் மறுப்பார்; மருத்துவர்கள் வாய் பொத்திக்கொள்வர்; அவர் அறியாரா? அறிந்துதான் கூறுகிறார்! ஏடுகளிலே உள்ளவற்றை நாம் கூறுகிறோம்; அவரோ, அவருடைய அறிவினால் ஆராய்ந்து பார்த்துக் கூறுகிறார்; அவருடைய சொல்லை மறுத்துப் பேசிட நாம் யார்! அவருடைய நிலை என்ன, ஆற்றலென்ன அறிவென்ன! அவருக்குள்ள தகுதி என்ன! திறமை என்ன! அவருக்கு முன் நாம் எம்மாத்திரம்! அவர் நட்சத்திரம், நாம் மின்மினி!—என்று கூறுவர்; ஒப்புக்கு அல்ல; உண்மை யாகவே அவ்விதம் நம்பிக் கொண்டே பேசுகின்றனர்.

அவ்விதம் பேசுபவர் ஆதாயமும் அடைகின்றனர். ஆதாயம் சுவை அளிக்கிறது. அந்தச் சுவை அவர்களை மேலும் புகழ் பாடச் செய்கிறது. அஃது ஒரு கலையா கவே வடிவம் கொள்கிறது.

ஆதாயம் பெறவே பலரும் தன்னைப் புகழ்கிறார்கள் என் பது முதலிலே புரிகிறது, பிறகு அதுகூட மறந்து போய்விடு கிறது, போற்றுதலைப் பெற்றுப் பழக்கப்பட்டுப் போய் விட்டவருக்கு.

இவ்வளவு பேர் புகழ்கிறார்கள்; போற்றுகிறார் கள்; பின்பற்றுகிறார்கள்; பணிந்து கிடக்கிறார்கள்; ஆனால்! இந்தச் சிறு கூட்டம் மட்டும் நம்மிடம் குறை காண்கிறதே, எதிர்க்கிறதே! என்ன துணிவு! என்ன ஆணவம்! இதுகளை விட்டு வைக்கலாமா; கூடாது! கூடாது! ஒழித்துக்கட்டியாக வேண்டும்!—

என்ற எண்ணம் முளைத்து விடுகிறது; அதன்படி திட்டமிட முனைகிறார்.

இதற்கான திட்டத்திலே முதற்கட்டம் தன்னிடம் பணி யாது இருப்பவர்களிலிருந்து ஒரு சிலரையாவது அச்சமூட்டி யோ ஆசை காட்டியோ தன் பக்கம் இழுத்துக் கொள்வது.

மரத்தை வெட்டப் பயன்படும் கோடாரிக்குக் காம்பு வேண்டுமல்லவா! அந்தக் காம்பினை, மரத்தி லிருந்து தானே தயாரிக்கிறார்கள்; அது போலத்தான்.

திட்டத்தின் இந்தக் கட்டத்தின்போது, புதுத் துதி பாடகர் கள் தயாரிக்கப்படுகின்றனர்.

தம்பி! துதிபாடகர்களைத் தயாரித்துக் கொள்ளும் கட்டம் இருக்கிறதே, அப்போது உயர் இடம், மெத்தப் பயன் அளிக்கிறது. சுவையுள்ள பண்டங்களைத் தர முடிகிற தல்லவா, துதி பாடகர்களுக்கு!!

ஐயோ! அந்த ஆசாமியா! அந்த ஆளிடம் பேசினா லே ஆபத்து! போலீஸ் சந்தேகப்படும். நமக்கு ஏன் வீண் வம்பு

என்று இதே காமராஜர் குறித்துப் பேசிய சீமான்கள்தானே சுயராஜ்யம் அமைந்த பிறகு, காமராஜர் பெரும் பதவி வகித்திடத் தொடங்கிய பிறகு—

ஐயாவா! வரணும், வரணும்! தங்கள் சித்தம் என் பாக்கியம். என்னால் என்ன காரியம் ஆகவேண்டும் சொல்லுங்கள்; செய்யச் சித்தமாகக் காத்துக் கொண் டிருக்கிறேன்

என்று பேசத் தொடங்கினர். காரணம்? காமராஜர், ஒரு மாபெருந் தலைவருக்குத் தேவைப்படும் அறிவாற்றல் பெற் றவர் என்பதனை இப்போதுதான் உணர்ந்து கொண்டன ரா, உல்லாச புரியினர்...? இல்லை! இப்போதுதான், உல்லாசபுரியினருக்கு உதவி செய்திடும் இடத்திற்குக் காம ராஜர் வந்திருக்கிறார் என்ற காரணத்தால்.

துவக்கத்தில் துதி பாடகர்களைத் தடுத்திடவும், இத் தனை ஆராதனையும் அர்ச்சனையும் தமக்குத் தேவை இல்லை என்ற உணர்வும், மிக அதிகமாகத் தம்மைப் பாராட்டுகிறார்கள் அது கூடாது, அதனை ஏற்றுக் கொள் ளக்கூடாது என்ற அடக்க உணர்ச்சியும் தோன்றுகிறது.

துதிபாடகர்கள் பற்றிச்சந்தேகமே கூட எழுகிறது.

துதிகேட்டு, மனத்தைக் கெடுத்துக் கொள்ளக்
கூடாது என்று தோன்றுகிறது. தடுக்க முயலுவர்.

வேண்டாமப்பா இந்த வீண் புகழ்மாலை என்றும், நான்
ஏமாளி அல்ல உன் பாராட்டுதலை உண்மை என்று ஏற்றுக்
கொள்ள என்றும் சொல்லும்போது கூட, பாராட்டுதலைப்
பெற்றதிலே கிடைத்த தனி மகிழ்ச்சி இருக்கிறதே, அது
குறைவதில்லை. சொல்லப் போனால், மகிழ்ச்சி வளரு
கிறது.

கொடுப்பவன் எதையும் இழப்பதில்லை என்ற பேச்சு
வேதாந்தத்தில் என்ன பொருள் தருகிறதோ தெரியாது.
ஆனால், ஒருவரை மற்றொருவர் பாராட்டுவது இருக்
கிறதே அதைப் பொறுத்தவரையில், கொடுப்பவன் எதை
யும் இழப்பதில்லை என்பது பெருமளவு உண்மை.

அவர் குணத்திலே தங்கம், அறிவுத் தெளிவிலே வள்ளு
வன், பற்றற்ற தன்மையிலே புத்தன் என்று பாராட்டுவ
தாலே பாராட்டுபவனுக்கு என்ன நட்டம்! சொல்லப்
போனால் ஒரு விதமான ஆதாயம் கிடைக்கிறது என்றும்
கூறலாம். எவர் இவருடைய பாராட்டுதலைப் பெற்றா
ரோ அவர் நாலு பேரிடம் இவர், வள்ளுவனையும் புத்த
னையும் நன்றாகக் கற்றறிந்தவர், எதையும் எடைபோட்டு
பார்த்துத்தான் பேசுவார் என்று சொல்லி வைப்பார் அல்
லவா!

ஆகவே கொடுப்பவர் எதையும் இழப்பதில்லை என்பது
மட்டுமல்ல, கொடுப்பவர் ஏதாகிலும் பெறுவார் என்றே
கூடக் கூறலாம். அது சிற்றுண்டியாக இருக்கலாம், சிறு
கடன் தொகையாக இருக்கலாம், அரிய பொருளாக இருக்
கலாம், வசதியான வேலையாக இருக்கலாம். பெறுவது
எத்தனையோ வடிவத்தில், வகையில் இருந்திடக் கூடும்,
இடத்திற்கும் நேரத்திற்கும் தக்கபடி.

கொடுப்பவர் இழப்பதில்லை என்பதை ஒப்புக் கொள்
வோம்: ஆனால் பெறுபவர்? அதிலேதான் வேடிக்கை இருப்
பதாக எனக்குப் படுகிறது; பலரும் இந்தக் கருத்துக் கொண்
டுள்ளனர்.

புகழ் மொழியைப் பிறர் கூறக் கேட்டு மகிழ்ச்சி
கொண்டிடும் பழக்கம் வளர வளர, ஏதேனும் சிலவற்றில்,

எவரேனும் சில பேர்கள், எப்போதோ சில வேளைகளில்,
புகழ்மொழி வழங்காது போயிடின் புகழ்மொழி கேட்டுக்
கேட்டுப் பழக்கப்பட்டுள்ளவர், என்று மில்லாத மனப்
புழுக்கம் கொண்டுவிடுகிறார். ஏதேதோ ஐயப்பாடுகள்!
அச்சம்! அருவருப்பு! பகை உணர்ச்சியேகூட!

சே! இந்த மாந்தரின் இயல்புதான் என்ன! எத்தனை
'வர்ணஜாலம்' காட்டி என் தோகையை விரித்து ஆடு
கிறேன்! கண்டு சொக்கி நிற்பார்கள் என்று!! பார்த்து
விட்டு ஒருகணம் புன்சிரிப்பு உதிர்த்து விட்டு அவனவன்
அவனவனுக்கு உள்ள வேலையைக் கவனிக்கச் சென்று விடு
கிறானே! என் நடனம் நயனங்களுக்கு விருந்து என்று கவி
கள் பாடியுள்ளனர்; ஓவியம் தீட்டியுள்ளனர். எனினும்
பாரேன் கலைரசம் அற்றவனை; என்னைக் கண்டான் ஒரு
கணம். பிறகோ காளையை ஓட்டிக் கொண்டு கழனி
சென்று விட்டான், சேற்றிலே சந்தனம் காண!—என்று
மயில் கருதிக் கொள்கிறதோ என்னவோ, 'முகஸ்துதி'
கேட்டுக் கேட்டு மகிழ்ச்சி மது உண்டு விட்டவன், ஒரு
வேளை அது கிடைக்கா விட்டாலும் சலிப்பும் மனக்களைப்
பும் கொண்டு விடுகிறான்; அதனால், தனக்குத் தேவைப்
பட்டே தீரும் மகிழ்ச்சியை, இன்பத்தை எப்போதும் பெற்
றிட வேண்டும் என்பதற்காக, புகழ் பேசுபவர்களைத் தயா
ராக வைத்துக் கொண்டிருக்க வேண்டி நேரிடுகிறது; எப்
போதும் புகழ்பாடியபடி அவர்கள் இருக்கவேண்டுமானால்
அவர்களைக் 'கவனித்துக் கொள்ள' வேண்டி வருகிறது!
அந்தக் கட்டம் மேலும் வளராமலிருப்பதில்லை. புகழ்
பாடுபவர்களைக் கவனித்துக் கொள்ளவும் தயாராக வைத்
துக் கொண்டிருக்கவுமான கட்டத்திலிருந்து, புகழ் பாடி
களைத் தயாரிக்கவே வேண்டிவருகிறது. ஓட்டலில் பாடப்
படும் கிராமபோன் இசையைக் கேட்டுக் கேட்டுப் பழகி
விடுபவன், தன் இல்லத்திலேயே அந்த இசையைப் பெற
வழி தேடிக் கொள்ள முயற்சிப்பது போல, புகழ் பேசு
வோர் பேசிடுவது கேட்டு மகிழ்ச்சி பெற்று, அதிலே
மயங்குபவன் பிறகு புகழ் பேசுவோரையே தயாரிக்க வேண்
டிய கட்டம் சென்று விடுகிறான். அதிலே இயல்பாக உள்ள
உயர்வு இல்லை என்றாலும், எப்போதும் கிடைக்கிறது.
தட்டாமல் தயங்காமல் கிடைக்கிறது, தெவிட்டும் அளவு
கிடைக்கிறது என்பதிலே ஒரு திருப்தி கிடைத்திடத்தான்
செய்யும். ஆனால், அதற்காக ஆகிடும் செலவு! அதற்காக
எடுத்துக்கொள்ளப்படவேண்டிய சிரமம்! அதனைக் கணக்

குப் பார்க்கும்போது, பெறுபவன் இழக்கிறான் என்று கூறி விடலாம்; கணக்கு அதைத் தெளிவாகக் காட்டுகிறது.

கணக்கு அந்த அளவோடு நிற்பதில்லை. மது குடித்துப் பழக்கப்பட்டுப் போய்விட்டவனுக்கு வேறு எதிலேயும் அந்த இனிப்பும், விறுவிறுப்பும் கிடைப்பதில்லை என் பதால் வேறு எந்தவிதமான பானத்தையும் விரும்ப மாட்டான் என்கிறார்கள். அந்த 'விறுவிறுப்பு' கிடைக் காதபோது எல்லாவற்றையுமே இழந்துவிட்டது போன்ற ஓர் ஏக்க நிலை பிறந்துவிடுகிறது. இந்தத் துறையிலே எல்லாம் தெரிந்தவர்கள் கூறுகிறார்கள். மது பருகிப் பருகிப் பழக்கத்தை அழுத்தமாக்கிக் கொண்டவர்களுக்கு, சில காலம் கழிந்த பிறகு வழக்கமாகப் பருகிடுவது போது மானதாகப் படுவதில்லையாம்; அதைவிட அதிக 'விறு விறுப்பு' உள்ளது வேண்டும் என்று தவியாய்த் தவிக்கிறார் களாம். உண்மையோ அல்லாவா தெரியவில்லை, எல்லா விதமான மது வகையையும் பருகியான பிறகு 'தவிப்பு' மேலிட்ட நிலை சென்றவர்கள், ஏதோ ஓர் வகையான பாம்பின் விஷத்திலிருந்து தயாரிக்கப்பட்டதை நாவில் தெளித்துக்கொண்டு போதுமான போதை பெறுகிறார் களாம். இது மிகைபடக் கூறப்பட்டதாக இருக்கலாம்; என்றாலும் 'தவிப்பு' அத்தனை கொடுமையான நிலைமைக்கும் துரத்திவிடும் என்பதை விளக்கத் தரப்பட்ட தாகக் கொள்வதிலே தவறு இல்லை.

ஆகவே பெறுபவன் இழக்கிறான் என்பது, பொருளை யும் நேரத்தையும் மட்டுமல்ல; மன அமைதியையும் இழந்து விடுகிறான் என்ற பொருளும் தருகிறது.

ஆனால், ஏன் இந்த 'முகஸ்துதி' கேட்பதிலே இன்பம் பிறக்கிறது? இன்று நேற்று ஏற்பட்டதல்ல! தரத்தில் குறைந்தவர்களுக்கு மட்டும் ஏற்படும் இயல்பும் அல்ல- மாந்தருக்கு மட்டுமல்ல, மகேசனுக்கே அந்த இயல்பு இருக்கும் என்று எண்ணிடச் செய்கிறார்கள்; 'பக்திப் பாமாலை' புனைந்தளித்தோர்! ஆயிரம் நாமத்தால் அர்ச் சிப்பது, இதிலே சாதாரணமானதாகி விட்டது; கட்டணம் கூட அதிகமில்லை. ஆனால், மகேசனின் 'திருக்கோலத்தை யும் திருக்கலியாண குணத்தையும் திருவிளையாடலையும் புகழ்ந்து தொடுக்கப்பட்டுள்ள பாமாலைகளைப் பார்த் திடும்போது, போட்டி போட்டுக்கொண்டு புகழ் பாடிப்

'புனிதனின்' புன்னகையைப் பெற்றிட முனைந்திருக்கிறார் கள் என்பது புரிகிறது,

ஆண்டவனுக்கு விருப்பு வெறுப்பற்றவன், நீதி நியா யத்தை வகுத்தவன் என்றெல்லாம் 'இலக்கணம்' இருப் பதனால், இத்தனை புகழ் கேட்டும், அவர் மயங்கிடா திருப்பார் என்று முடிவு செய்து கொள்ளலாமே தவிர, அந்தப் பாமாலைகளை மட்டும், 'எல்லாம் அளிக்க வல்லவ ருக்கு, 'எதையாவது பெற விழைபவர்' அளித்திடும் புகழாரம் என்ற அளவிலே பார்ப்போமானால் அந்தக் கலையை எத்தனை நேர்த்தியாக வளர்த்து விட்டிருக்கி றார்கள் என்பது நன்றாக விளங்கும்.

பெறுபவர் இழக்கிறார் என்ற கருத்து 'பெம்மானை'ப் பொருத்தவரையில் பொருந்தாது. ஏன் என்றால் 'உள்ளது அனைத்தும் அவன் தந்தது' எனப்படுவதால். ஆனால், இன்று உலகு உள்ள நிலையைப்பார்க்கும்போது, பாமாலை பெற்ற அவரும் நிரம்ப இழந்து விட்டிருக்கிறார் என்றே கூறத் தோன்றுகிறது. எத்தனை எத்தனை நலிவுகள்; நாசங்கள்! பேதங்கள்! பீடைகள்! வஞ்சகம்! அவன் படைப்புகளில் சில, பலவற்றை அழித்திடும் கொடுமை! இவை யாவும் அவர் வகுத்த முறையுமாகாது, அவர் விரும் பும் முறையாகவும் இருக்க முடியாது. எனினும், உலகம் எந்த நிலைமைக்கு உருக்குலைக்கப்பட்டிருக்கிறது. இதனைக் கண்டும் 'அவர்' ஏன் குவலயத்தை இன்னமும் வீட்டு வைத்திருக்கிறார் என்று எண்ணும்போது, ஒரு வேளை அவரும் புகழ் பாடக் கேட்டுக் கேட்டுப் பழகிப் போனதால், பெற்றவர் இழப்பர் என்ற கருத்துக் கேற்ப ஆகிவிட்டாரோ என்று எண்ணிடத் தோன்றுகிறது.

மகேசன் 'எல்லாம் வல்லவர்' என்பதால் அவருக்கு இதுபற்றிய வரவு-செலவு பற்றிய நினைப்பு எழத் தேவை யில்லை. ஆனால் மாந்தரோ, ஒவ்வொரு கட்டத்திலும் இந்த வரவுசெலவுக் கணக்கைப் பார்த்தாக வேண்டும்.

தமிழ் மரபு புகழ் பெறுவது, முகஸ்துதி அல்ல என் பதனை நினைவிற் கொண்டிட வேண்டும்.

புகழ் பெற்றிட வேண்டும் என்ற நினைப்புக் கொள்வது மட்டுமல்ல, ஒருநாள் இல்லாவிட்டால் மற்றோர் நாள் புகழ் தன்னைத் தேடி வந்திடும் என்பதிலே தளராத நம்பிக்கையுடன் பணியாற்றிட வேண்டும்.

செயல், முதல்! உழைப்பு, முறை! புகழ், விளைவு!

சில மலர் விரைவினில் பூத்திடும், உதிர்ந்திடும். சில
மலர் பூத்திடுவதும் உதிர்ந்திடுவதும் விரைவிலே இருந்
திடாது.

எனவே புகழ் தேடிச் செல்லத் தேவையில்லை. செய
லின் நேர்த்தி புகழைப் பிடித்திழுத்துக் கொண்டு வந்து நம்
முன் நிறுத்தும் என்ற உணர்வுடன் தமிழர் பணியாற்றினர்;
புகழ் ஈட்டினர்.

இந்தப் புகழ் நமக்கு நமது நாட்களிலே கிடைத்திடாது
போகக்கூடும்; எனினும் பிறகோர் நாள் பலர் புகழ்ந்
துரைக்கத் தக்க நிலை பிறந்தே தீரும் என்று உறுதி
கொண்டு பணி புரிந்தவர்களே நிலையான புகழைப் பெற்
றனர்; இறவாப் புகழ் பெற்றனர்.

மன்னன் ஆணையையும் உதவியையும் பெற்றுக் கடற்
பயணம் நடத்தி, எவரும் காணாதிருந்த அமெரிக்காவைக்
கண்டுபிடித்த கொலம்பஸ் பிறகோர் நாள் அந்த அரச
அவையிலே இழிமொழியைக் கேட்டு இன்னலால் தாக்
குண்டபோது, மெல்லிய குரலில் கூறினானாம்.

> ''இந்த மன்னனையும் இவன் அரசையும் மறந்து
> போன பிறகும் நெடுங்காலம் வரையில் மக்கள் என்
> னையும் என் வெற்றியையும் மறவாது பாராட்டுவர்''
> என்றானாம்.

கட்சிக்கோ, அதன் மூலம் நாட்டுக்கோ தலைவரானவர்
கள், இது போன்ற இறவாப் புகழ் தேடிட முற்பட
வேண்டும் — இரைச்சலிடுவோரின் புகழுரையை அல்ல!
இச்சகம் பேசுவோரின் புகழ்ச்சியை அல்ல!

அந்த நோக்கம் கொண்டிடின் தம்மைச் சுற்றிலும்
உள்ளவர்கள், பிறரைத் தூற்றிடுவோராக இருந்திடின்
அவர்தம் தொடர்பு அறுத்துக் கொண்டிடும் உறுதி காட்டிட
வேண்டும்; துதி பாடகராக இருந்திடின், போதும் இந்த
'முகஸ்துதி'—நான் இதுகேட்டு மயங்கிட மாட்டேன்
என்று திட்டவட்டமாகத் தெரிவித்துவிட வேண்டும்.

அது போன்றே! தம்பி; ஜனநாயக முறை செம்மை
அடையவேண்டுமென்றால், துதி பாடும் முறை அறவே
போயாக வேண்டும்.

அன்பு காட்டுதல் வேறு, துதி பாடுதல் முற்றிலும்
வேறு!

பின் பற்றுதல் வேறு, தொத்திக் கொள்ளுதல் என்பது
வேறு. பாராட்டுதல் என்பது வேறு பல்லிளித்தல் என்பது
முற்றிலும் வேறு; நோக்கம், விளைவு. தரம் எனும் எந்த
முனையிலிருந்து பார்த்திடினும்.

ஒருவர் உயர் இடம் சென்றிடினும், அவர் கூறுவனவற்
றினில் உள்ள உயர்வான கருத்துக்களைத்தான் எடுத்துக்
கொள்ள வேண்டும், போற்றிடவேண்டும்; பின்பற்றிட
வேண்டும்; எல்லாவற்றையும் அல்ல.

> சேற்றிலே இருந்திடினும் செந்தாமரை, செந்
> தாமரைதான்!

> ஆனால், செந்தாமரை இருந்ததாலேயே, அந்தச்
> சேறுமா சந்தனமாகிவிடும்?

> பேதையும் அதுபோலக் கூறிடானே!

தலைவராகி, நாட்டை நடத்திச் செல்பவராகிவிட்டார்
காமராஜர் என்கிறார்கள். மெத்த மகிழ்ச்சி. ஆனால்,
அதனால், அவரிடம் இருந்து நாம் எதைப் பெற நினைத்
திடவேண்டும்? மக்களுக்குத் தேவையான நல்லாட்சியை!
அவருக்கு நாம் என்ன தரவேண்டும்? முகஸ்துதியையா?
அவர் எட்டுடன் எட்டு பதினெட்டு என்று கூறிடின், ஆகா!
இஃதன்றோ புதுமுறைக் கணக்கு! இதுநாள் வரை எவரும்
கூறிடாத கணக்கு!—என்று வியந்து பாராட்டிடுவதுடன்,
மற்றவர்களும் மதிமயக்கம் கொண்டிடவேண்டும் என்று
கூறி நிற்பதா?

துதி பாடகர்கள், புகழ் பாடிப்பாடி மகிழ்கிறார்கள்;
அவரை மகிழ்விக்கிறார்கள். பிறகோர் நாள், ஏமாற்றம்
தாக்கிடும்போது என்ன கூறுவர்? என்னென்ன புகழ்மாரி
பொழிந்தேன்! எப்படி எப்படித் தூக்கி வைத்தேன்!
என்னாலன்றோ எட்டாததெல்லாம் அவர் கரம் எட்
டிற்று! பட்டுப்போக இருந்த மரம் துளிர்விட்டது! படர்ந்து
போக இருந்த விளக்கு ஒளி பெற்றது! என்னென்ன புக
ழுரைகள்—பொழிந்தேன்! அர்ச்சனை விதவிதமாக!
ஆராதனை பலப்பல! இதற்கு முன்பு வேறு ஒருவரும்
செய்திடாத முறையில்! கண்டோர் வியந்திடும் வகையில்!
ஆனால்·····...என்றல்லவா பேசிடுவர்.

பாடல் தெரியுமல்லவா தம்பி!

"கல்லாத ஒருவனை நான் கற்றாய் என்றேன்."

துதிபாடகர்கள், தமது குரலொலியை அதிகமாக்கிக் கொள்வதன் மூலமாகவே, தமது இயல்பு யாது என்பதையும், நோக்கம் என்ன என்பதையும் மக்கள் தெரிந்து கொள்ளச் செய்துவிடுவதன்மூலம், நாளா வட்டத்தில் தமது தரம் தன்னாலே தாழ்ந்துபோவது காண்பர். அரசு பெரிது என்னும் கட்டியங் கூறுவோனின் நிலை, மட்டமானதுதானே!

எந்தக் கொலுமண்டபத்திலும் கைகட்டி வாய்பொத்தி நின்றுமட்டுமே பிழைக்கும் வழியைப் பெறமுடியும் என்ற நிலையில் இல்லாத அறிவாளர்கள்—பல்வேறு துறைகளிலே வித்தகர்களாக உள்ளவர்கள்—துதிபெற்று நிலை உயர்ந்து ஒருவர் நெறித்த புருவத்தினராகிறார் என்ற உடன், நமக்கென்ன என்று இருந்துவிடாமல், நாலுபேர் செல்கிற வழியில் நாமும் செல்வோம் என்று தாழ்ந்துவிடாமல், உண்மையை எடுத்துரைத்திட முனவந்திடவேண்டும். பெரிய நிலையில் உள்ளவர்கள், தவறான கருத்துக் கொண்டிடின், தவறான போக்கினை மேற்கொண்டிடின், அறிவு கொளுத்திட, இடித்துரைத்திட, தடுத்து நிறுத்திடத் தயங்கிடலாகாது. தயக்கம் காட்டிடின, மக்களாட்சி முறையின் மாண்பே மாய்ந்து போகும்.

நிலை உயர்ந்திடின் என்ன? நீதி எதனையும் விட உயர்ந்தது! உண்மையே அனைத்தினும் உயர்ந்தது! அந்த உறுதியுடன் ஒரு சிலர் நடந்து கொண்டிடினும் போதும், மெள்ள மெள்ள ஆனால் உறுதியாக, மக்களாட்சியின் மாண்பு வளர்ந்திடும்.

அமெரிக்கக் குடி அரசுத் தலைவர் ஜான்சன் அறிவாளர்களை, கலைஞர்களை, விஞ்ஞானிகளை போற்றுபவர்; ஆதரவு காட்டுபவர்; எனினும் வியட்நாம் பிரச்சினையில் மேற்கொண்டிடும் போக்கு தவறானது, ஆபத்தைத் தரத்தக்கது, அநீதி நிரம்பியது என்பதனை எடுத்துரைக்க, கண்டித்திடப் பேரறிவாளர் துளியும் தயங்கினார்களில்லை.

அஃது அவர்களின் நெஞ்சுரத்தையும் நேர்மைத் திறத்தையும் காட்டுகின்றது.

அஃது முதலில் ஜான்சனுக்குக் கோபத்தைக் கூடக் கிளறிவிட்டிருக்கக்கூடும்! பிறகு அவரேகூட அவர்களின் நேர்மையை வியந்து பாராட்டிடத்தான் செய்வார்.

அரசாளும் முறை, சட்டமியற்றும் முறை, பொருளாதார முறைகள் என்ற பலவற்றிலே, குறை உள; அறிந்தோர், அதனை மற்றையோர்க்கு அறிவித்திட அஞ்சலாமோ? அரசாளும் நிலைபெற்றோர்க்கு எச்சரிக்கை தந்திடாது இருந்திடப்போமோ?

துதிபாடகரின் புகழ் கேட்டுக் கேட்டு மயக்கம் மேலிட்ட நிலையில் உள்ளவர்கள், எவரேனும் தமது முறையில் குறைகண்டு கூறிடின் கொதித்தெழுவர். ஆம்! ஆனால்? கூறாது இருந்திடின்? மக்களுக்கு அல்லவா பெருந்தீங்கு செய்தவராவர்!

இந்தத் தயக்கத்திலிருந்து தம்மை விடுவித்துக் கொண்டு, ஆட்சி முறையிலே காணப்படும் கேடுகளைக் கண்டித்திட, நல்லறிவு தந்திட, பலர் இன்று முன்வருகின்றனர். மகிழ்ச்சி!

ஐந்தாண்டுத் திட்டம்-நாணய மதிப்புக்குறைப்பு—போன்றவைகளிலே நெளியும் குறைபாடுகளை, அமெரிக்காவின் பிடி வலுவாகிக்கொண்டு வருவது, உணவுப் பிரச்சினையிலே நெருக்கடி நீடிப்பது போன்ற பிரச்சினைகளிலே, பல்கலைக் கழகப் பேராசிரியர் பலர் தெளிவான கருத்தையும், துணிவான கண்டனங்களையும் வெளியிட்டுள்ளனர்.

காங்கிரஸ் கட்சியினராக இருந்தும் முன்னாள் அமைச்சர், க. சந்தானம் அவர்கள் இந்தத் துறையிலே பாராட்டத்தக்க பணியாற்றி வருகின்றார்கள்.

துதிபாடகர்கள் கிளப்பிடும் ஒலியில், இவர்களின் குரல் வெளியே தெரியவிடாமல் செய்யப்பட்டு விடுகின்றது; என்றாலும் இவை மூலம் மக்கள் தெளிவு பெற்றுக்கொண்டு வருகின்றனர்.

நிலை கண்டு நடுங்கி உண்மையைக் கூறிடத் தயங்குவது பெரும்பாலோருக்கு இயல்பு; சிலரேனும் அந்த இயல்பினை நீக்கிக்கொண்டுள்ளனர் என்பது மகிழ்ச்சிக்குரியது.

இன்னும் சிலர், உண்மையைக் கூறியாக வேண்டும் என்ற துடிப்பும் கொள்கின்றனர்; கூறிடின் கேடடைவோமோ என்ற அச்சமும் கொள்கின்றனர். அதன் காரணமாக, உள்ள குறைகளை, 'இலை மறை காய்' என்ற முறையிலே எடுத்துக் காட்டியுள்ளனர்.

தம்பி! பிரிட்டனை ஆண்டுவந்த இரண்டாவது சார்லஸ் என்ற மன்னன், தன்னைப் பெரிய கவிஞன் என்று எண்ணிக்கொண்டான்! ஏதேதோ கிறுக்கித் தள்ளியபடி இருந்தான்—கவிதைகள் என்ற நினைப்பில். கருத்தில்லை, கற்பனைத் திறம் இல்லை, இலக்கணம் இல்லை, எழில் இல்லை—ஆயினும் குபபை வார்த்தைக் கோவை எனறு கூறிடலாமா? மனனன் எழுதியது!!

மன்னன் அத்துடன் இல்லை. அரச அவையின் மதிப்பு மிக்க கவிஞனை அழைத்து எமது கவிதையினைப் பறறிய உமது கருத்தைக் கூறுடுவீர் என்றான். என்றானா? கட்டளை பிறப்பித்தான்!

கவிஞன் பார்க்கின்றான், கடுங்கோபம் கொள்கின்றான், வெறும் குப்பையைக் கவி என்று கூறியது பற்றி. என் செய்வான்? கவி உள்ளம் சொல்கிறது, இஃது கவிதை அல்ல என்று சொல்லிவிடு என்று. மன்னன் எழுதிய தாயிற்றே என்ற நினைவு குதித்தெழுந்து கூறுகிறது, நாடாளும் மன்னன் எழுதியது! ஏடு தூக்கிடுவோனே! இஃது நற்கவிதையே என்று கூறுடு! இல்லையேல், மன்னன் சீற்றம் உன்னைத் தாக்கிடும் என்று. கூறுவாயோ அங்ஙனம்! கூறிடின் குவலயம் உன்னை என்னசொல்லும்? நற்கவிதை எது என்று அறியாத நீயோ கவிஞன்? உனக்கோ நீள் புகழ்? என்று கேலி பேசும். இப்போது மட்டுமா இழுக்கு? வழிவழி வருவோர் உன் கல்லறைமீது காறித்துப்புவர் என்று அவனுடைய கவிதை உள்ளம் கூறுகிறது. என் செய்வான்! திகைத்தான், திணறினான், திடுக்கிட்டுப் போனான்! நெடு நேரத்திற்குப் பிறகு ஒரு யோசனை பிறந்தது.

''அரசே!'' என்றான்; ''அரசே! தாங்கள் சகலவல்லமையும் பொருந்தியவர்! தங்களால் ஆகாததும் ஒன்று உண்டா! எதனையும் செய்து முடித்திடும் ஆற்றல படைத்தவர் தாங்கள்! என்ன காரணத்தாலோ, மிகமிக மட்டமான முறையிலே கவிதை எழுதிக்காட்ட வேண்டும் என்று எண்ணிக்கொண்டீர்கள். தங்களின் பேராற்றலையும்,

கவிதா சக்தியையும் வேண்டுமென்றே எங்கோ ஒளிந்திருக்கச் செய்துவிட்டு, குப்பை என்று சொல்லத் தக்க இந்தக் கவிதையை இயற்றினீர்கள்! நல்ல கவிதையை மட்டும் அல்ல இப்படிப் பட்டதையும் எழுத முடியும் என்பதை எடுத்துக் காட்டுவதில், மன்னா! தாங்கள் மகத்தான வெற்றி பெற்று விட்டீர்கள். வாழ்க நற்கவிதை! ...என்றுகூறித் தப்பித்துக்கொண்டானாம் அந்தக்கவிஞன்!

இன்றைய ஆட்சியின் விளைவுகள் பற்றி எழுதிடும் பலர், இதுபோல, உண்மையை அப்பட்டமாகக் கூறிடின் ஆபத்து ஏற்படுமோ என்று அஞ்சி, பஞ்சத்தைப் பற்றாக் குறை என்றும், வேதனையைச் சோதனை என்றும், கடன் சுமையை உதவித்தொகை என்றும் பட்டாடை உடுத்திக் காட்டுகின்றனர்.

துதிபாடகர்களின் துந்துபி ஒரு புறம், அறிந்தோர் அச்சம் காரணமாகக் காட்டிடும் தயக்கம் மற்றோர்புறம், எடுத்துரைப்போரும் இலைமறை காய் என்ற முறையில் உண்மையைக் காட்டிடும் தன்மை பிறிதோர் புறம் என்றுள்ள இந்தச் சூழ்நிலையை நமது சுறுசுறுப்பான பிரசாரம் மட்டுமே மாற்றிட முடியும்; மக்கள் தெளிவு பெற்றிடச் செய்யமுடியும்.

அதற்குத் தம்பி! நமது பேச்சிலும் எழுத்திலும் சூடு அல்ல, ஒளிதான் அதிகம் இருக்கவேண்டும்.

அந்த ஒளியினைத் தந்திடும் வல்லமை உனக்கு உண்டு என்பதால்தானே தம்பி! நான் அன்புடன் அழைத்த வண்ணம் இருக்கிறேன், ஒளிபடைத்த கண்ணினாய்! வா! வா! வா! என்று.

அண்ணன்,

16—10—'66

காஞ்சிக் கடிதம் : 84

நரி பரியான கதை!

★ அமெரிக்க ஆதிக்கத்தை ஆதி நாளிலேயே கண்டித்தவன் நான்!

★ ஆலும் வேலும் பிளக்கப் பயன்படும் கோடரி வாழைக்குப் பயன்படுவதில்லை!

★ கிளிப் பொந்துக்குள் கருநாகம் குடிபுகுந்து விட்டது!

★ 'கேட்டால் கேள்! விட்டால் விடு!' என்பதல்ல நமது முறை!

★ 'துக்க தினம்' என்ற பெரியார் காங்கிரசுக்கு வேண்டியவர்!

★ 'விழா நாள்' என்ற நான் காங்கிரசால் கண்டிக்கப் படுபவன்!

★ வேடத்தைக் கண்டு ஏமாறலாகாது!

★ மரக் கட்டைகளாக இருத்தலல்ல மாந்தர்க்கழகு!

★ ஜனநாயக சோஷியலிசம் பாறை மீது தூவிய விதை

★ காமராஜர் முதலாளி நரிகளைச் சோஷியலிசப் பரிகளாக்கிக் காட்ட முனைகிறார்!

தம்பி,

காங்கிரஸ் நண்பரொருவர் சில நாட்களுக்கு முன்பு என்னிடம் பேசிக் கொண்டிருந்தார். 'ஆமாம் அண்ணாத் துரை! என்ன நீங்கள் கூட அமெரிக்காவைத் தாக்க ஆரம்பித்து விட்டீர்களே?' என்று கேட்டார். நான் சிறிதளவு விவரம் புரியாமலிருக்கக்கண்டு அவரே விளக்கமும் தந்தார்; ''அதாவது அமெரிக்காவிடமிருந்து இந்தியா உதவி பெறுவதைக் கண்டிக்கிறீர்களே—கடன் சுமை ஏறுகிறது என்றும் இந்தியாவின் மீது அமெரிக்காவின் ஆதிக்கம் வளர்ந்து விட்டது என்றும் பேசுகிறீர்களே? இது என்ன புதிய போக்காக இருக்கிறதே'' என்று கேட்டார்.

நீண்ட நேரம் பேசவேண்டுமே என்பதனால், அவருடைய கேள்வி பற்றிக் கவலை காட்ட வேண்டாம் என்று எண்ணிக் கொண்டு, நான் சுருக்கமாக, ''ஆமாம்! அமெரிக்காவின் ஆதிக்கம் வளர்ந்து விட்டிருப்பதாகத்தான் நான் கருதுகிறேன்; அது தீதானது என்றும் எண்ணுகிறேன்; அதனால்தான் கண்டிக்கிறேன். ஆனால், இது புதிய போக்கு அல்லவே!'' என்று கூறினேன், விவாதம் வளராது என்ற நினைப்புடன்.

நண்பர் விடவில்லை; ''இல்லை! இல்லை! இப்போது தான் இந்தப் போக்கு ஏற்பட்டிருக்கிறது; அதற்குக் காரணமும் எனக்குத் தெரியும்; எல்லாம் ''சகவாசதோஷம்'' என்றார்.

''அதென்னய்யா சகவாசதோஷம்! பெண்களுக்கு என்னவோ செவ்வாய்தோஷம் என்று ஜோதிடர்கள் கூறுவார்களே, அதுபோல இருக்கிறதே உமது பேச்சு!'' என்று நான் கூற, நண்பர், ''பெண்களிலே சிலருக்கு இருக்கும் செவ்வாய் தோஷத்தைக்கூடப் போக்கிவிடலாம், ஆனால் இந்த சகவாசதோஷம் இருக்கிறதே அது இலேசிலே போகாது'' என்று சற்று சூடாகவே கூறிவிட்டு, ''சுற்றி வளைத்துப் பேசுவானேன், உங்கள் கழகம் கம்யூனிஸ்டு கட்சியுடன் 'சரசமாட' ஆரம்பித்ததால் ஏற்பட்டதுதான் இந்த 'அமெரிக்க எதிர்ப்பு'—சகவாசதோஷம் தான் காரணம்'' என்று கூறிவிட்டுக் கடுமையான பார்வையை என்மீது செலுத்தினார்.

''ஓஹோ! இப்படி ஒரு கருத்து உலவுகிறதா! நண்பரே! இதை எடுத்துக்காட்டியதற்கு நன்றி. நாங்கள் அமெரிக்கா

விடம் இந்தியா அதிக அளவிலே கடனும் - உதவியும்— பெற்றுக் கொள்வது எதிர்கால ஆபத்தாகி விடக்கூடும் என்ற எண்ணத்தை, இன்று நேற்றல்ல, கம்யூனிஸ்டு கட்சி யின் தோழமைத் தொடர்பு ஏற்பட்ட பிறகு அல்ல, துவக்க முதலே கூறி வந்திருக்கிறோம். அமெரிக்காவின் தொடர் பை, கம்யூனிஸ்டு கட்சி எதிர்க்கிறது, நாங்கள் கம்யூனிஸ்டு கட்சியுடன் தோழமை கொண்டிருக்கிறோம், ஆகவேதான் அமெரிக்கத் தொடர்பைக் கண்டிக்கிறோம் என்று வாதாடு வது தவறு''—என்று நான் விளக்கமளித்துவிட்டு அமெரிக்காவின் ஆதிக்கத்தைத் துவக்க நாளிலேயே நான் கண்டித்து இதழிலே எழுதிய ஒரு கட்டுரையை - கதை வடிவம் - தந்து படிக்கச் சொன்னேன். தம்பி! அதனை உன்னிடமும் தருகிறேன்—நமது போக்கு புதிது அல்ல என் பதனை எடுத்துக்காட்ட.

காட்சி-1

இடம் : கொஞ்சம் கலனான ஓர் மாளிகை வெளிப்புறம்

காலம் ; காலை

உறுப்பினர் : வாயில் காப்போன், ஒரு சீமான்

மாளிகை கலனாகி இருக்கிறது! சுற்றுச் சுவர், இரு புறமும் பிளக்கப்பட்டுக் கிடக்கிறது. நெடு நாட்களாக, கண்ணாம்பு அடிக்காததாலும், பழுது பார்க்காததாலும், மாளிகையின் வெளித்தோற்றம், கவர்ச்சி அளிப்பதாக இல்லை; வாயிற்படி, தெருத்திண்ணை இவைகளின் மீதெல்லாம், புழுதியும் கற்களும் நிரம்பியுள்ளன. ஆனால் மாளிகை, பெரிய அளவுடையது. பழுதுபார்த்து, வர்ண வேலைகள் செய்து முடித்தால், அழகாக விளங்கக்கூடியது என்று தெரியும் நிலை இருக்கிறது.

மாளிகையின் முன் வாயிற்படியில், ஒரு காவலாளி களிப்புடன் நிற்கிறான், கையில் சந்தனக் கிண்ணமும் பன்னீர் செம்பும் வைத்துக்கொண்டு. மாவிலைத் தோரணங்கள், வாழைமரம் ஆகியவை கட்டப்பட்டுள்ளன. ஒருபுறம் முட்செடிகள் உள்ளன.

வீதி வழியாக, ஒரு சீமான் செல்கிறார். பருத்த உடல்! மலர்த்த முகம்! எதையும் ஊடுருவிக் காணக்கூடிய

கண்கள்! கெம்பீர நடை! மாளிகையை அலட்சியமாகப் பார்க்கிறார். ஏதோ கீதம் கேட்கிறது உள்ளேயிருந்து.

ஜெய! ஜெய! வந்தேமாதரம்
ஜெய ஜெய வந்தேமாதரம்!

என்ற கீதம் கேட்டதும், சீமான், மறுபடி, சற்று உன்னிப் பாக மாளிகையைப் பார்க்கிறார். பெரிய அளவினதாக வும், விழாக் கோலத்துடனும் மாளிகை இருக்கக்கண்டு, மேலும் உன்னிப்பாகப் பார்த்தபடி நிற்கிறார். சீமானின் பார்வை மாளிகைமீது வீழ்வது கண்ட காவலாளி, முக மலர்ச்சியுடன், வரவேற்கிறான்.

காவ : நமஸ்தே!

சீமான் : நமஸ்த்தே......

காவ : வாருங்கள்!

(வரவேற்றுக்கொண்டே சந்தனம், தருகிறான். அதைத் தொட்டதும் தொடாததுமாக)

சீ : சந்தனக்கட்டை இங்கு ஏராளமாகக் கிடைக் குமோ?

கா : நிறையக் கிடைக்கும்.

சீ : இதை இப்படி அறைப்பது தவிர வேறு, என்ன செய்கிறீர்கள்!

கா : அறைக்கிறோம்—யாராவது பெரியவர்கள் இறந்துவிட்டால், அவர்களை எரிக்க இதை உபயோகிக் கிறோம் - கொஞ்சம் தைலம் - சோப்...

சீ : (பயந்து) தைலம், சோப் செய்கிறீர்களா!

கா : ஆமாம், கொஞ்சம் - அதிகமல்ல.

சீ : அதிகமில்லையா! சரி, இந்த மாளிகையை ஏன் ரிப்பேர் செய்யக்கூடாது?

கா : செய்யவேண்டும். செய்யப் போகிறார்கள். உள்ளே போய்ப் பாருங்கள், அங்கே அதைப்பற்றித் தான் பேசுகிறார்கள்.

சீ : பேசுகிறார்களா? யார்?

கா : மாளிகைக்குச் சொந்தக்காரர்கள்!

(சீமான் வேகமாக உள்ளே போகிறார்)

காட்சி-2

இடம் : மாளிகை உட்புற மண்டபம்.

உறுப்பினர் : மாளிகைவாசிகளின் சிறுகூட்டம்.

ஒருவர் பேசுகிறார்: எவ்வளவோ கஷ்டப்பட்டு, மாளிகையை நம் வசப்படுத்தி விட்டோம். நமது மாளிகையோ, மிகப் பெரியது...... (ஒரு குரல், முழுவதும் கிடைக்காது போய்விட்டதே என்று கூவுகிறது).

பேசுபவர் : பரவாயில்லை ஒரு சிறு கொல்லை! போகட்டும். இந்த மாளிகையை நாம் பெற்ற பெருமையும் சந்தோஷமும்—எவ்வளவு தெரியுமா! இந்தச் சுபதினத்தைப் பாராட்டாதவர்கள் இல்லை.

(உள்ளே நுழைந்த சீமான்)

சீ : உலகமே பாராட்டுகிறது.

பேசு : நமஸ்தே! உட்காருங்கள்! இவர் போன்ற உத்தமர்களெல்லாம் நமக்குஉற்ற துணையாக இருப்பார்கள்.

(ஒரு குரல்: யார் இவர்? ஓடிப்போனவனின் ஒன்றுவிட்ட சகோதரன் போல இருக்கிறான்)

பேசு : இனி இம்மாதிரி பேசக்கூடாது. நமது மாளிகையை இனிச் சண்டை சச்சரவுக்குள்ளாக்கக்கூடாது. இவர்,...

சீ : மனிதன்; சர்வ தேசத்தான் - மாளிகையின் மகிழ்ச்சியைக் கண்டு மனமாரப் பாராட்ட வந்தவன். மாசற்ற மனமுடையவன்; காசூர் என்பது எமது தேசத்தின் பெயர்.

பேசு : காசூர்க் கண்ணியருக்கு எமது வணக்கம்.

சீ : மாளிகையில் மகிழ்ந்துள்ள உமக்கு எனது மகிழ்ச்சியுரை. எம்மாலான உதவியைச் செய்வேன். காசூரின் நோக்கம், மாசு துடைத்து, எங்கும் மகிழ்ச்சி வளரச் செய்வதுதான். உங்கள் மாளிகை, பிரம்மாண்டமானது - ஆனால் கவர்ச்சி யில்லை - கவர்ச்சிகரமான

தாக்க முடியும் - பழுது பார்க்க வேண்டும் - பலவர்ணம் தீட்டவேண்டும் - சுற்றுச் சுவரைக் கட்டவேண்டும்...

பே : ஆமாம், பூந்தோட்டம் அமைக்க வேண்டும்—

சீ : பழத்தோட்டம் நல்லது.

பே : பூவிலிருந்துதானே பழம்?...?

சீ : பழம் தராத பூ உண்டு.

பே : ஆமாம், ஆமாம் - நல்லவிதமாகத் தோட்டம் அமைக்க...

சீ : தக்க திட்டம் வேண்டும்.

(ஒருகுரல்: பணம் வேண்டுமே, இவ்வளவு பெரிய மாளிகையைத் திருத்த ஏராளமாக வேண்டும்)

பே : (ஆர்வத்துடன்) பயம் வேண்டாம்! நமது மாளிகையிலே, ஏராளமான பணம் புதைத்து வைக்கப்பட்டிருக்கிறது. இடத்தைக் கண்டுபிடித்து, செல்வத்தை எடுத்து, மாளிகையைச் சீரும் சிறப்புமுள்ளதாக்குவோம்!

(பலர், சபாஷ், பலே! என்று களிப்புடன் கூவுகின்றனர்.)

சீ : (கனைத்துக் கொண்டு) முடியும். செய்யலாம். ஆனால்...

பே : செய்ய முடியாது என்ற பதமே எம்மிடம் கிடையாது. இந்த மாளிகையைக் கைப்பற்ற முனைந்தபோது காட்டிய மாவீரம் மங்கிவிடவில்லை...

சீ : அந்த ஆர்வத்தையும் நம்பிக்கையையும் நான் பாராட்டுகிறேன். ஆனால், புதைந்துள்ள பொருளைக் கண்டுபிடித்து, பிறகு மாளிகையைத் திருத்துவது என்றால் காலம் அதிகமாகும். அதற்குள் கலனான பகுதி மேலும் கலனாகக்கூடும். காசூர் உதவியைப் பெற்றால், இப்போதே மாளிகையைப் பழுது பார்க்கலாம்.

(ஒருகுரல்: காசூர் உதவி, வெள்ளையூர் வேலையாக முடிந்தால் என்ன செய்வது?)

சீ : பழைய பயத்தை மறந்து, இந்தக் காரியத்தைத் துவக்கவேண்டும்.

(ஒருகுரல்: அது எ களுக்குத் தெரியும்)

சீ : தெரியாமலென்ன! நீங்கள் மாவீரர்கள்! உங்கள் மூதாதையர் ஞானிகள்! இதோ பேசுகிறாரே உங்கள் தலைவர், அவர் அஞ்சா நெஞ்சு படைத்தவர். உங்கள் மாளிகையோ, பிரம்மாண்டமானது, ஆஹா. இதை மட்டும், திட்டமிட்டுக் கட்டி முடித்தால் காண்போர் களிப்புக் கடலில் மூழ்குவர். காசூர், இப்படிப்பட்டவர்களுக்கு உதவி செய்வதை,ஓர் கைங்கர்யமாகக் கருதுகிறது. காசூருக்கு, வெள்ளையூரார்போல, பிறர் மாளிகையில் புகுந்துகொண்டு, ஆதிக்கம் செலுத்தும் எண்ணமே கிடையாது...

பே : அதுதான் சிலாக்கியமான கொள்கை. எந்த ஆட்சியும் சொந்த ஆட்சிக்கு ஈடாகாது...

சீ : இதையே எங்கள் தலைவர் எழுபத்தெட்டு தடவை சொல்லியிருக்கிறார். உங்களுடைய மாளிகையை உங்கள் மாளிகையிலேயே எங்கெங்கோ புதைத்து வைக்கப்பட்டுள்ள பொருளைக்கொண்டு, புதிதாக்குவது சிரமம், காலக்கேடு; நீங்கள் விரும்பினால், காசூர் பணம் தரும். பழுதுபார்த்து, அழகிய வேலைப்பாடுகள் செய்து முடித்து, அதிலே நீங்கள் குதூகலமாக இருப்பதைக் கண்குளிரக் கண்டுகளிக்கும் நோக்கந்தான் காசூருக்கு...

பே : நேர்மையான நோக்கம். நெஞ்சிலே வஞ்சமின்றி.

சீ : வஞ்சகமா! அது பஞ்சையர்களின் குணம். காசூர், நேசர்களின் கொஞ்சுதலைப்பெற, தன்னையே அர்ப்பணிக்குமளவு நல்ல நோக்கம் கொண்டது.

பே : ஆஹா! மகிழ்ந்தேன்! பூரித்தேன்! இப்படிப்பட்ட உதவி கிடைத்ததற்காக இறைவனை வணங்குகிறேன்.

சீ: நன்று! நான் சென்று வருகிறேன். காசூர் சென்று, மாசுமறுவற்ற உமது மனத்தை எடுத்துக் கூறி, இந்த மாளிகை பழுதுபார்க்கும் மகத்தான கைங்கரியத்தை, தெய்வ காரியமாக மேற்கொள்ளும்படி வற்புறுத்திக் கூறுவேன்.

பே : மெத்த சந்தோஷம். ஜெயவிஜயீபவ!

சீ : சந்தேகம் வேண்டாம். எதற்கும், காசூருக்கு உதவி கோரி, இங்கிருந்து யாரையாவது அனுப்பிவைத்தால்...

பே : ஆகா! செய்வோம்! பாபாஜீ!

பாபா : இதோ, கிளம்புகிறேன்.

(சீமான் விடைபெற்றுக் கொள்கிறார்)

காட்சி 3

இடம் : காசூர்

உறுப்பினர் : கோடீஸ்வரர்

ஒரு கோடீஸ்வரர், கடிதமொன்றைப் பிரித்துப் படித்துவிட்டுப் புன்சிரிப்புடன், அதை மற்றவரிடம் தருகிறார். சுமார் அறுபதுபேர் கூடியிருக்கிறார்கள் அங்கு. ஒவ்வொருவராகக் கடிதத்தைப் படித்து மகிழ்கிறார்கள்.

ஒரு கோடி : தூதர்...

இன். கோ. : சாமர்த்தியசாலி!

வேறு. கோ : அனுபவசாலி!

ஒரு கோ: பக்குவமாகக் காரியத்தை முடித்திருக்கிறார்.

வேறு கோ : பழைய மாளிகையைப் புதிதாக்கும் உதவி செய்வதென்றால், அவர்களுக்கு உச்சி குளிர்ந்து தானே போகும்.

ஒரு கோ : நன்றாகக் குளிரட்டும்! பழைய மாளிகையைப் புதிதாக்கப் பண உதவி செய்யும்போது மாளிகையை அடமானமாக வைத்தாக வேண்டுமே! பிறகு கடனைப் பைசல் செய்து, மீட்டுக்கொள்வதைப் பார்த்துக் கொள்வோம்.

வேறு கோ : தவறு, உமது திட்டம். பண உதவி செய்யும்போதே அடமானப் பத்திரம் எழுதச் சொல்லக் கூடாது, விழிப்பும், பயமும் பிறந்துவிடும். பணம், ஏறின பிறகு, பத்திரம் தயாரிக்க வேண்டும்.

மற். கோ : அதுதான் சரியான யோசனை, வரட்டுமே போன ஆசாமி,

காட்சி 4

இடம் : மாளிகை வாசல்

உறுப்பினர் : பேசினோர், பிணியாள்.

பிணியாள்: ஆமாம், என்னவோ, மாளிகையின் ரிப்பேருக்குக் கடன் வாங்கப் போவதாக—

பே : எவன் கலகமூட்டினான்?

பி : கலகமா! சேதி சொன்னான்.

பே : சேதி முழு உண்மையல்ல. பணம் வாங்கப் போகிறோம், ரிப்பேர் செலவுக்கு. ஆனால் அது கடன் அல்ல, உதவித் தொகை.

பி: உதவித் தொகையா?

பே: உனக்குச் சூட்சுமம் புரியாது, போ!

பி: புரியத்தான் இல்லை. அன்னியர்கள் ஏதேனும் சாக்குக் கூறிக்கொண்டு உள்ளே நுழைவார்கள்—பிறகு தங்கள் ஆதிக்கத்தைப் புகுத்துவார்கள் என்றெல்லாம், முன்பு...

பே: சொன்னேன். ஆமாம், அது பழைய கதை. மறந்துவிடு.

பி: மறக்க முடியவில்லையே! உதவித் தொகை தருவதாகக் காசூரான் சொல்கிறான், இப்போது; பிறகு, மாளிகை அவன் வசம் போய்விடுமோ என்று பயமாக இருக்கிறதே.

பே: சுத்த பயந்தாங்கொள்ளி! போமய்யா, எனக்கு நேரமில்லை, உன்னிடம் வம்பளக்க.

மாளிகை—இந்தியா, பேசுபவர்—காங்கிரஸ் கட்சி,
சீமான்—கிரேடி, காசூர்—அமெரிக்கா
பிணியாள்—ஏழை

நாடகத்தின் பொருள் இப்போது விளக்கமாகும் என்று நம்புகிறோம்.

இப்படி மனம்போன போக்கிலே, ஒரு நாடகம் தீட்டுவதா, என்று கோபிக்கத் தோன்றும், அன்பர்களுக்கு.

இந்திய விடுதலை விழாவிலிருந்து, அமெரிக்க நாட்டுத் தூதுவர், ஹென்றி கிரேடி இந்தியாவிடம் காட்டிவரும் 'அக்கறை' அனைவரும் அறிந்த விஷயம்; அதை ஆதார மாக வைத்து இந்நாடகம் தீட்டப்பட்டது. போதாது என்கிறீர்களா? சரி! இதோ, மேலும் இரண்டு ஆதாரங்கள்.

கிரேடி பேசியிருக்கிறார், சின்னாட்களுக்கு முன்பு, "வெளிநாடுகளிலிருந்து, மூலதனம் உதவி பெறாமலே கூட நீங்கள் நாட்டை அபிவிருத்தி செய்துகொள்ள முடியும்—ஆனால் மூலதனம் ஏராளமாக ஏற்கனவே உள்ள நாடுகளின் உதவியைப் பெறாவிட்டால், உங்கள் நாட்டு அபிவிருத்தி, தாமதப்படும். தக்க நிபந்தனைகளுடனும், சரியான நிலைமையிலும், பலர் பணம் கடன் கொடுக்கத் தயாராக உள்ளனர் என்பதை, என் நாட்டு முதலாளிமார்கள் சார்பாக நான் கூறமுடியும். ஆனால், இந்த நாட்டிலேயோ வேறு நாட்டிலேயோ சென்று, எங்களிடம் கடன் வாங்கிக்கொள்ளுங்கள் என்று கெஞ்சமாட்டோம்.

அதற்கு ஒத்து ஊதும் முறையில் சாகல் சந்ஷா எனும் வடநாட்டு வணிகத் தலைவர்—

"வெளிநாட்டுத் தொழிலரசர்கள், இங்கு பெரிய தொழிற்சாலைகளை எல்லாம் சில வருஷங்களுக்குள் சர்க்கார் ஏற்றுக்கொள்ளும் என்று பயப்படுகிறார்கள், சந்தேகிக்கிறார்கள்—இந்திய சர்க்கார், உடனடியாக இந்த பயத்தையும் சந்தேகத்தையும் போக்கவேண்டும்" என்று பேசினார். நாடகம், தவறா!

●

படித்து முடித்த நண்பர், "அதுசரி! சுவையைக் கூட்டித் தந்திருக்கிறாய்; புரிகிறது; எதிர்பார்க்காததுமல்ல" என்றார்.

"கோபம் குறையாமலே இருக்கிறது, அதனால்தான் விளக்கம் தரும் கட்டுரையைப் படித்த பிறகும் சுமத்திய குற்றச்சாட்டை விடாமல் வைத்துக்கொண்டிருக்கிறீர். போகட்டும், கட்டுரையின் சுவை, கிடக்கட்டும், அந்தச் சுவை இருக்கும் என்று எதிர்பார்த்த தன்மை இருக்கட்டும்;

கட்டுரை எப்போது எழுதப்பட்டது என்பதைக் கவனியும்'' என்றேன். நண்பர் கவனித்துப் பார்த்துவிட்டு, ''அப்போதே எழுதியதா இது?'' என்று கே டார். ''ஆமாம் கட்டுரை, இப்போது கம்யூனிஸ்டு கட்சியின் தொடர்பு காரணமாக எழுதப்பட்டது அல்ல; தேர்தலுக்காக எழுதப்பட்டதும் அல்ல; மனதிலே பட்டது; அதனால் எழுதப்பட்டது. அமெரிக்காவின் பிடி இந்த அளவு அழுத்திக்கொண்டிருப்பதனால் ஏற்பட்ட வேதனையால் எழுதப்பட்டது அல்ல; அமெரிக்காவின் 'பிடி' விழ ஆரம்பித்த போதே எதிர்காலம் இடர்மிக்கதாகிவிடுமே என்று தோன்றிற்று, அதனால் அவ்விதம் எழுதினேன். கட்டுரை வெளிவந்தது 21—12—47ல்! இப்போதாவது புரிகிறதா, இது புதிய போக்குமல்ல, கம்யூனிஸ்டு கட்சியின் தோழமையால் ஏற்பட்டதும் அல்ல என்பது?'' என்று கேட்டேன். நண்பரின் கோபம் குறைந்தது; இலேசாகக் கவலை அவரைக் கப்பிக் கொண்டது.

தம்பி! அந்த நண்பரை நான் குறிப்பிட்டபோது 'காங்கிரஸ் நண்பர்' என்று கூறியிருக்கிறேன்; கவனித்தனையா? காரணத்தோடுதான் கூறினேன்; அவர் காங்கிரஸ் கட்சிக்காரர் அல்ல; காங்கிரசிலே இடம்பிடித்துக் கொண்டவருமல்ல; விடுதலைப் போர் நடத்திய காங்கிரசிடம் அவருக்கு ஒரு பக்தி—பற்று—பாசம்; அதனால் அவர் காங்கிரஸ்காரராக இருக்கிறார்.

காங்கிரஸ் கட்சியினர் என்பதற்கும் காங்கிரஸ்காரர் என்பதற்கும் வித்தியாசம் இருக்கிறது; ஆறாம் நம்பர் வீட்டிலே குடி இருக்கிறேன் என்பதற்கும், என்னுடைய வீட்டு நம்பர் ஆறு என்பதற்கும் வித்தியாசம் இல்லையா? அதுபோல! இவர் காங்கிரஸ் என்ற அமைப்புக்குத்தான் பற்றுக் காட்டுபவர்; காங்கிரஸ் கட்சி என்ற தேர்தல் சூதாட்ட இயந்திரத்துக்கு அல்ல. அதனால்தான் நான் விளக்கம் அளித்ததைக் கேட்டுக் கொள்ள அவருக்கு முடிந்தது. காங்கிரசில் இடம் பிடித்துக்கொண்டவராக இருந்தால், இப்படி என்னிடம் பேசவே சம்மதிக்க மாட்டாரே! என்ன தெரியும் அந்தப் பயலுக்கு என்றல்லவா கொக்கரிக்கத் துடித்திடுவார். இவர், காங்கிரசிலே இடம் பிடித்தவர் அல்ல; இவருடைய மனத்திலே காங்கிரஸ் ஒரு இடம் பிடித்துக் கொண்டிருந்தது!

காங்கிரசுக்கும் காங்கிரஸ் கட்சிக்கும், காங்கிரசிடம் பற்றுக் கொள்வதற்கும் காங்கிரஸ் கட்சிக்காக ஓட்டு

வேட்டை ஆடுவதற்கும் இடையே உள்ள வித்தியாசத்தை உணராததன் விளைவாகவே, இந்த என் நண்பர் போன்றார், இன்றும் காங்கிரசிடம் 'பக்தி' காட்டி வருகின்றனர். இந்த 'பக்தியை' காங்கிரசில் இடம் பிடித்துக் கொண்டவர்கள் தமக்குச் சாதகமாக்கிக் கொள்கின்றனர்.

ஆளைப் பார்க்காதே! அகிம்சா மூர்த்தியின் படத்தைப் பார்! ''ஓட்டு'' அவருக்கு! அதைத் தெரிந்து கொள்

என்ன செய்வார்? என்ன சாதிப்பதற்காக இவர் போகிறார்? இவருடைய திட்டம் என்ன? திறமை எப்படிப் பட்டது? என்றெல்லாம் கேட்காதே! இவர், காங்கிரஸ் கட்சி—அவ்வளவுதான் நீ தெரிந்து கொள்ள வேண்டியது—மற்றவை பற்றி எண்ணி மனதைக் குழப்பிக் கொள்ளாதே!

இவருக்குப் போடும் ''ஓட்டு'' இவருக்காக அல்ல—காங்கிரசுக்காக!—இவர், முன்பு ''ஒருமாதிரி'' ஆளாக இருந்தாரே—வட்டித்தொழிலால் கொழுத்தவராச்சே—அதிகாரிகளிடம் குயிலாகி, ஏழைகளிடம் குக்கலாகி விடும் குணவானாயிற்றே!—என்றெல்லாம் யோசிக்காதே! இவர் இப்போது காங்கிரஸ் கட்சி—சாக்கடைத் தண்ணீரானாலும், கங்கையில் கலந்துவிட்டால், 'பரிசுத்தமான புண்ணிய தீர்த்தம்'—மறவாதே!

நெடுங்காலமாகக் காங்கிரசில் ஈடுபட்டு, நாட்டுக்கு உழைத்த பலருடைய கோரிக்கைகளைக் குப்பைத் தொட்டிக்குள் போட்டுவிட்டு, இவருடைய பணபலத்தின் மீது ஏற்பட்ட பாசத்துக்குக் கட்டுப்பட்டு, காங்கிரஸ் கமிட்டி இவரைத் தேர்தலில் அபேட்சகராக நிறுத்தி வைக்கிறதே, இது அனியாயமல்லவா என்று பேசாதே! காங்கிரஸ் முத்திரையை இவர் 'தேசசேவை டைரியைக் காட்டி அல்ல, தமது 'செக்புத்தகத்தை'க் காட்டிப் பெற்றாராமே' என்று பேசாதே!

எப்படிப்பட்டவரானால் உனக்கென்ன! என்னென்ன செய்து காங்கிரஸ் முத்திரையைப் பெற்றிருந்தால்தான் உனக்கென்ன! ஏன் அவைகளைப் பற்றி யோசிக்கிறாய்! அவருக்கு எப்போது காங்கிரஸ் முத்திரை விழுந்து விட்டதோ, அப்போதே அவர், 'உங்கள் ஓட்டுக்களை'ப்

பெறும் யோக்யதையைப் பெற்றுவிட்டார், என்பது பொருள்! இதிலே வாதத்துக்கு இடமில்லை!

தேர்தல் காலத்திலே, இதுபோலப் பேசித்தான், 'வெற்றி' பெற்றனர். தேர்தலில் வெற்றி பெறுவதன் மூலம், அந்தத் திருவாளர் என்ன நன்மையைச் செய்யப் போகிறார், அவருக்குள்ள ஆசாபாசங்கள் யாவை, திறமை அனுபவம் என்ன, என்பது பற்றிய நினைப்பே மக்கள் மனத்திலே இருக்க முடியாதபடியான, பிரசாரம் நடைபெற்றது: இது ஒரு கட்சியின் மகத்தான வெற்றிக்கு உதவிற்று—ஆனால் அதே வெற்றி, பொதுமக்களின் நலனைக்கோரி அமைக்கப்பட்ட மக்களாட்சி முறைக்கு ஊறுசெய்தது. காங்கிரஸ் கட்சி வெற்றி மாலை அணிந்து—மக்களாட்சி முறைக்கு அதுவே மரண ஓலையாகவுமாகி விட்டது!

★

சில 'தொகுதிகளில்', காங்கிரஸ் சார்பில் நிறுத்தப்பட்ட அபேட்சகர்களின் அறிவுச் சூன்யத்தைப் பற்றி, மக்கள் வேடிக்கையாகப் பேசிக்கொண்டே, ''ஓட்டு'' அளித்தனர்—காரணம், அவர்கள், தாங்கள் தரும் 'ஓட்டு' அந்த ஆசாமிக்கு அல்ல, காங்கிரஸ் கட்சிக்கு—என்று நம்பினர்—நம்பும்படி செய்யப்பட்டனர்.

''இது வெறும் 'கைகாட்டி' தானேப்பா!''

''கல்லுப்பிள்ளையார் போல இருக்கும்—வாயைத் திறக்காது''

''திறவாமலிருந்தால் தானய்யா நல்லது! திறந்தால் தெரிந்துவிடும், இது வெறும் பாண்டம் என்பது''

''ஆமாம், ஆமாம்! புகையிலை விரித்தால் போச்சு! புண்ணியவான் பேசினால் போச்சு!''

''உப்புச் சத்தியாக்கிரகத்தின்போது இந்த ஆசாமி காங்கிரசைக் கண்டபடி திட்டிக்கொண்டு இருந்தாரே...''

''இப்போது எப்படிக் காங்கிரசில் சேர்ந்தார் என்று கேட்கிறாயா? இது தெரியவில்லையா உனக்கு! காங்கிரசில் சேர்ந்தால்தான், சட்ட சபைக்குப் போக முடியும் என்பதனால்தான்.''

''அதுசரி—இப்படிப்பட்ட ஆளை, ஏன் காங்கிரஸ் கட்சி சேர்த்துக் கொண்டது?''

''ஊரிலே பெரிய ஆள்—பணக்காரன் என்பதனாலே தான்''

''பாவம்! பண்டரி, படாதபாடு பட்டுவந்தான் காங்கிரசுக்கு—அவனை நிற்க வைத்திருக்கலாம்''

''ஆமாம்! அவன்கூடக் கேட்டானாம்—கெஞ்சினானாம்!''

''கடைசியில், 'எதற்கும் உதவாததை'ப் பிடித்து நிற்கவைத்து விட்டார்கள்.''

''இது போய் அங்கே என்ன செய்யும்?''

''செய்வதாவது, மண்ணாவது! தூக்கு கையை என்றால் தூக்கும்! மற்ற நேரத்தில் தூங்கி விழும்!

பல தொகுதிகளில், பொதுமக்கள் இதுபோலப் பேசிக்கொண்டனர்—அபேட்சகர்களின் 'யோக்யதாம்சங்களை'ப் பற்றி; 'ஓட்' மட்டும் போட்டனர்—ஆளுக்காக அல்ல, கட்சிக்காக. இது கட்சிக்குள்ள சக்தியை, பிரசாரத்துக்குள்ள பலத்தை விளக்கிற்று—ஆனால் அதேபோது மக்களாட்சி முறையின் மாண்பையும் மாய்த்துவிட்டது. குன்றின்மீது மூலிகையும் உண்டு, முள்ளும் உண்டு! ஆனால் குறைமதியாளர் தவிர மற்றையோர், குன்றின்மீது உள்ளதெல்லாம் மூலிகை என்று கொள்ளார்—மூலிகை இது, முள் அது என்று பிரித்து எடுத்துப் பயன்படுத்துவர்! ஆனால் 'குன்றுக்கு' ஒரு 'மகிமை' கற்பித்து, அதன்மீது இருக்கும் 'எதை' எடுத்து உபயோகித்தாலும் 'புண்யம்' என்று கூறிவிட்டால், பெரும்பாலான மக்கள், மூலிகையா முள்ளா என்று ஆராயமாட்டார்கள், கிடைத்ததைக்கொண்டு களிப்படைவர். அதுபோல ஆயிற்று, தேர்தல்! யாரும் 'வர முடிந்தது' முலாம் பூசிக்கொண்டதும்!

மக்கள் அளித்த 'ஓட்டு' தமக்கு அல்ல, தம்மைத் தழுவி உள்ள கட்சிக்கு-என்பது, அபேட்சகர்களுக்கும், ஒரு அசட்டுத் தைரியத்தைக் கொடுத்தது—யாரும் தம்மை ஏதும் கேட்க முடியாது, என்ற தைரியத்தை! அவர்களில் பலர், வெளிப்படையாகவே ''எனக்கா 'ஓட்டு' தந்தனர்—

என்ன செய்தாய், ஏது செய்தாய், என்று என்னைக் கேட்க! காங்கிரஸ் கட்சிக்குத் தந்தனர்!!'' என்று பேசிக் கொண்டனர்.

தேர்தல் முடியும் வரையில் இந்தக் கருத்தை அடக்கத்துக்குப் பயன் படுத்தினர். பிறகு, ஆர்ப்பரிப்புக்குப் பயன் படுத்தினர். ''நான் சாமான்யன் - எனக்காக ஓட்டுக் கேட்கவில்லை - மகத்தான காங்கிரஸ் கட்சிக்காக கேட்கிறேன்'' என்று அடக்கமாகப் பேசி 'ஓட்டு' பெற்றனர் - பிறகு, ''என்னய்யா இது, ஓயாமல் வந்து, என் பிராணனை வாங்குகிறாய், ஓட்டு போட்டேன் ஓட்டு போட்டேன் என்று சொல்லிச் சொல்லி, பாத்யதை கொண்டாடுகிறாய்! இதோ பார்! நீ, ஒன்றும் எனக்குப் போடவில்லை ஓட்டு! தெரிகிறதா? காங்கிரஸ் கட்சிக்குப் போட்டாய். ஆமாம். போய், உன் குறைகளைக் கட்சியிலே சொல்லிக்கொள் - போக்கும்படி சொல்லு—இங்கே வந்து என் உயிரை வாங்காதே, போ'' என்று கடுகடுப்புடனும் பேசலாயினர். மக்களாட்சி கேலிக்கூத்தாக்கப்பட்டது. பெரும்பாலான தொகுதிகளில், பொதுமக்களுக்கு, 'ஓட்டு' பெற்றுக் கொண்டு போய், வெல்வெட்டு மெத்தைமீது உட்கார்ந்து கொண்டிருக்கும் 'உயர்ந்தவர்களின்' உருவம் கூடச் சரியாகத் தெரியாது! இப்படிப் பெட்டிக்குள் புகுந்து கொண்டு சட்டசபை சென்ற 'பெருமான்களின்' ஆட்சியிலேதான் நாடு இருக்கிறது.

கழைக்கூத்தாடி, நாம் நமது கழுத்து வலியெடுக்கும் விதமாகப் பார்க்கவேண்டிய அளவு உயரமுள்ள கம்பின்மீது ஏறிக்கொண்டு, ஆடிக்காட்டுகிறான் - கத்தி கொண்டு வயிற்றில் குத்திக்காட்டுகிறான். அதைக் காணும் நாம், கைகொட்டுகிறோம் - சபாஷ் கூறுகிறோம் - ஆச்சரிய மடைகிறோம் - அவன் திறமையை மெச்சுகிறோம்! அதுகேட்டு அவன், 'என் திறமையைக் கண்டீர்களல்லவா! இப்படிப்பட்ட என்னை ஏன் நீங்கள் உங்கள் ஊர்த்தலைவனாகக் கொள்ளக்கூடாது!' என்று கேட்கமாட்டான்—கேட்கத் துணிந்தால் கம்பின்மீது ஏறி வித்தைபல செய்தவன், தரையின்மீது நிற்கவும் முடியாதபடி, புத்தி கற்பிக்கும் வித்தையில் மக்கள் ஈடுபடுவர்! வைத்தியத்தில் நிபுணர் ஒருவர் - ஆனால் அதற்காக அவரிடம் நோயாளியைக் கொண்டு போய்க் காட்டுவார்களேயொழிய, இடிந்த பாலத்தைக்காட்டி, இதை எப்படிப் புதுப்பிப்பது என்று

கேட்கமாட்டார்கள்! நூலிலுள்ள சிக்குகளைச் சுலபத்திலே நீக்கும் நிபுணர் இவர், இப்படிப்பட்டவருக்கு, எதுதான் சாத்யமாகாது, எல்லாம் செய்ய வல்லவர், என்று எண்ணமாட்டார்கள். போருக்குப் பயன்படும் 'வீரன்' சோறு செய்யப் பயன்பட்டே தீருவான், ஏனெனில் அவன் அவ்வளவு தீரமாகப் போராடியவன் என்று கருதமாட்டார்கள் - ஏமாளிகள் தவிர. ஒரு துறைக்குத் தேவையான பண்பும் பயிற்சியும் பெற்று நிபுணராகி விடுபவரைக் கொண்டு, எல்லாத் துறைகளிலும் பணி புரியவைத்துப் பயன் காணலாம் என்று எண்ணுவது பேதைமை, ஆலும் வேலும் பிளக்க உபயோகமாகும் கோடரி வாழைக்குப் பயன்படுவதில்லை! பாறையைப் பிளக்கும் உளிகொண்டு, பச்சைக் காய்கறியை நறுக்க மாட்டார்கள்! ஒவ்வோர் துறைக்கும். ஒவ்வோர் செயலுக்கும் ஏற்ற, தேவையான கருவியும் வேறுவேறு! ஒன்று, மற்றெல்லாவற்றுக்கும் பயன்படும் என்று எண்ணுவது ஏமாளித்தனம். ஏகாதிபத்யத்தை எதிர்த்துப் போர்புரியும் பயிற்சியும் பக்குவமும் பெற்ற ஒருகட்சி, நாட்டை ஆளவும் பயன்பட்டே தீரும்—போரில் பெற்ற வெற்றிபோலவே, ஊராள்வதிலும் வெற்றி கிடைக்கும் என்று எண்ணுவது, 'தேசியமாக' கருதப்பட்டது! அதனாலேதான், யாரும் வரமுடிந்தது - ஏதும் செய்யாதிருக்கும் போக்கு வளர்ந்தது - மக்களாட்சி முறை கேலிக்கூத்தாயிற்று.

★

பெரும்போர் முடிந்ததும் படை கலைக்கப்படுகிறது. —சமையல் காரியம் முடிந்ததும், நம் வீட்டு அடுப்பு நெருப்பைக் கூடத்தானே அணைத்து விடுகிறோம்! அது போலவே ஏகாதிபத்ய எதிர்ப்புக்காகவெனத் திரட்டப்பட்ட 'படை'யை அந்தக் காரியத்துக்கு மட்டும் பயன்படுத்திக்கொண்டு, பிறகு கலைத்து விட்டிருக்க வேண்டும் —ஆனால், நடந்தது வேறு - விபரீதமானது - அந்தப் படை கலைக்கப்படவில்லை என்பது மட்டுமல்ல, மக்களின் வாழ்வு அந்தப் படையிடம் ஒப்படைக்கப்பட்டது என்பது மட்டுமல்ல, அந்தப் படைக்கு என ஏற்பட்ட சின்னத்தைப் பொறித்துக் கொண்டு கிளம்பிய கழுகுகளை எல்லாம்

கிளிகளெனக் கருதிக் கொண்டனர் மக்கள் - நயவஞ்சகர்கள் பலர், அந்தச் சின்னத்தைப் பொறித்துக்கொண்டு, நாடாளும் வாய்ப்பைப் பெற்றனர்! கிளிக்கென இருந்த பொந்துக்குள் கருநாகம் குடிபுகுந்த கதை போலாயிற்று! நல்லாட்சி முறை பற்றிய அக்கறை அடியோடு அழிய லாயிற்று. காற்றுள்ளபோதே தூற்றிக்கொள், கதர் உள்ள போதே தேடிக்கொள் என்று இலாப வேட்டை ஆடக் கிளம்பிவிட்டனர்.

வாய்ப்பைப் பெற்ற இதிலே, யானையிடம் மாலை யைக்கொடுத்து, அது யார் கழுத்தில் மாலையைப் போடு கிறதோ அவரை அரசனாகக்கொண்டு அந்த அரசனை ஆண்டவனுக்கு அடுத்தபடி என்று நம்பி அடக்க ஒடுக்கமாக நடந்துகொள்ளவேண்டும் என்ற விதமான அரசியல் தத்துவத்தில் நம்பிக்கை கொண்டவர்களும் உள்ளனர், அமெரிக்க நாட்டு அரசியல் முறையைத் திருத்தி ஆஸ்திரேலிய நாட்டு ஆட்சி முறையில் ஒரு பகுதியைப் புகுத்தி, சோவியத் முறையைச் சிறிதளவு கலந்து, பிரிட்டிஷ் பிடிவாதத்தையும் பிரன்ச்சுப் பசப்பையும் சம எடையாகக் கலந்து புகுத்தி, அதே போது "இந்தியப் பண்பாட்டை" இழந்துவிடாதபடியும் பார்த்துக் கொள்ளும் விதமான அரசியல் தத்துவத்தை நாடுபவர் களும் இருக்கிறார்கள். ஊராட்சி அமைப்புகள் ஒழிய வேண்டும் என்று கூறுபவர்களும் இருக்கிறார்கள். ஒழியக் கூடாது மேலும் அதிகமான அதிகாரம் அளித்து அமைக்க வேண்டும் என்பவர்களும் இருக்கிறார்கள். அரிசியைத் தீட்டிச் சாப்பிட வேண்டும் என்பார் உண்டு! தீட்டுவது தீது என்பாரும் உண்டு, ஆலைகள் வேண்டாம் என்பார் உளர்! விவாகவிடுதலை என்ற பேச்சே நாசகாலத்தால் ஏற்படும் விபரீதபுத்தியின் விளைவு என்றுபேசுபவர் உண்டு! தசரதனைக் காட்டி, 'ஏகதாரம்' என்ற கட்டுப்பாடு கூடாது என்று வாதிடும் பேர்வழிகள் உண்டு, அவர் மகன் ராமன் மீது ஆணையிட்டு 'ஏகதாரம்' எனும் முறைதான் சட்டமாக வேண்டும் என்று கூறுவோர் உண்டு! ஜான்சி ராணியை சாட்சிக்கு அழைக்கும் வீரர்களும், சாவித்திரி யைச் சாட்சிக்கு அழைக்கும் பக்தர்களும் புதுமை விரும்பி களும் பழமைக்கொள்கையினரும், சகல வகையினரும் கொண்டதாகிவிட்டது, காங்கிரசுக் கட்சி. ஆகவே, அதன் ஆட்சிக்கு உட்பட்ட நாடு, என்ன உருவம் பெறும், என்று எவ்வளவு பெரிய நிபுணராலும் கணிக்கமுடியாத நிலை

ஏற்பட்டது. அவர்கள் எல்லோருமே, கதருடையினர், காங்கிரஸ்கட்சியினர். எனவே ஒவ்வொருவரும் தமது நினைப்பே சரி என்று கருதுகிறார் - அந்த நினைப்பின்படி நாடு ஆளப்பட்டால்தான் நன்மை கிடைக்கும் என்று எண்ணுகிறார். அந்தமுறைதான் காங்கிரசின் உண்மையான திட்டம் என்று கருதுகிறார். இது, மக்களை மருளச்செய்யும் முறை—வாழவைக்கும் முறையல்ல! என்பதுபோல, எல்லோரும் ஒரே கட்சியின் பெயரைக் கூறிக்கொண்டு சென்றவர்களே தவிர, அவர்களில், பலவகையினர் உண்டு —அவரவர்களின் திறமைக்கு ஏற்றபடி பலனையும் தேடிக் கொள்கிறார்கள்.

கலெக்டரையும் கன்ட்ரோல் ஆபீசரையும் மிரட்ட, கதர் பயன்படுகிறது, போதாதா இது என்று எண்ணிப் பூரிக்கும் 'புண்ணியவான்கள்' மிகுந்துவிட்டனர், மந்திரி களை மடியில் வைத்திருக்கிறேன்—கவர்னரைக் கைக்குள் வைத்திருக்கிறேன்—பக்தவத்சலம், என்னைப் பார்க்கா விட்டால் தூங்கமாட்டார் அவ்வளவு பிரியம் என்னிடம் என்று அதுபோன்ற பலவகைப் பேச்சுப் பேசி, மிரட்ட, மயக்க, பயிற்சி பெறும் அளவுக்கு, பிரச்சினைகளை விவா திக்க, திட்டங்களைத் தீட்ட, மசோதாக்கள் தயாரிக்க, பயிற்சி பெற்றனரா என்று யோசித்தால் நேர்மையுள்ள எந்தக் காங்கிரஸ்காரரும் வெட்கமும் துக்கமுமடைய வேண்டியதுதான்; பண்பற்றவர், பயிற்சியற்றவர், பொறுப்பை மறந்தோர், பொதுமக்களைக் காணாதார், அக்கறையற்றவர், ஆள் விழுங்கிகள், இச்சகம் பேசுவோர், உருமாறிகள் என்று இவ்விதமாக ஒரு பட்டியலே தயாரிக் கலாம், ஆளவந்தோம் என்று கூறிக்கொண்டவர்களை. இது மக்களாட்சி முறையல்ல—கட்சிப்பற்று காரணமாக இந்த நிலையை வளரவிடுகிறார்கள்.

காங்கிரஸ் கட்சி எவ்விதமான முறையிலே மாறி விட்டது என்பதையும், எத்தகைய போக்கினர்களெல்லாம் அதிலே இருந்து வருகின்றனர் என்பதையும், எப்படிப்பட்ட சுயநலக்காரரெல்லாம் இடம் பிடித்துக்கொண்டு, இலாப வேட்டை ஆடுகின்றனர் என்பதையும் உணர்ந்து, மனம் வெதும்பி, காங்கிரசை விட்டு வெளியேறிவிட்டவர் பலர்! என் நண்பரும் அதுபோல ஆகவேண்டியவர்; அவர் மட்டுமா! வேறு பலரும் உளர்.

ஆகவேதான் தம்பி! அவர்கள் நம்மிடம் கோபம் கொண்டாலும் வெறுப்பைக் காட்டினாலும், நாம் பெருமையை இழந்திடாமல், நமது பொறுப்பு பெரிது என்பதனை உணர்ந்து அவர்களின் மனத்திலேயும் நமது கருத்துக்கள் பதிந்திட வேண்டும் என்ற நோக்கத்துடனும் அதற்குத் தேவைப்படும் பக்குவத்துடனும் நடந்துகொள்ள வேண்டும் என்பதனை நான் வலியுறுத்தியபடி இருக்கிறேன்

கேட்டால் கேள்; விட்டால் விடு!

என்ற போக்கிலே நம்முடைய பேச்சு இருந்திடவே கூடாது. நாம் கூறுவதை அவர்கள் ஏற்றுக்கொள்ளாமலிருப்பதை காணும்போது,

நமது பிரசாரமுறை மேலும் நேர்த்தியானதாக வேண்டும்,

என்ற எண்ணம் தோன்ற வேண்டுமே தவிர, எரிச்சல் எழக்கூடாது.

எடுபிடி ஆகியாகிலும் இனிப்புப் பெற்றிடவேண்டும் என்ற நோக்குடன் ஒட்டிக்கொண்டவைகளை அல்ல நான் குறிப்பிடுவது; ஒரு காலத்தில் காங்கிரஸ் நாட்டுவிடுதலைக்காகப் போராடிய அமைப்பாயிற்றே என்பதனை எண்ணி எண்ணி நெஞ்சு நெகிழ்ந்திடும் நல்லோர் பற்றிக் குறிப்பிடுகிறேன்.

'வேடிக்கை என்பதா வேதனை தருவது என்பதா பாரேன், தம்பி! 1947ல் சுயராஜ்யம் கிடைத்ததே அதனை 'துக்க தினம்' என்று அறிவித்த பெரியார் இன்று காங்கிரஸ் கட்சிக்கு மிகவும் வேண்டியவர்! ஆகஸ்ட்டு 15, துக்க தினம் அல்ல; விடுதலை நாள்! விழாநாள்! என்று, (எதிலும் பெரியாரிடமிருந்து மாறுபடாமலிருந்து வந்த) தெரிவித்து அவருடைய கோபத்துக்கு ஆளான நான் காங்கிரசாரால் கடுமையாகக் கண்டிக்கப்படும் நிலையிலே இருந்து வருகிறேன்.

விடுதலைப்போர் நடாத்திய காங்கிரசிடம் எனக்கும் உனக்கும் தம்பி! மதிப்பு இருக்கிறது; இருப்பதுதான் முறை! ஆனால் விடுதலைப்போர் நடாத்திய காங்கிரசிலே—போர் முடிந்து அறுவடை ஆரம்பமான பிறகு இடம் பிடித்துக் கொண்டுள்ளவர்கள் செய்திடும் செயலை எப்படி நாம் போற்றமுடியும், பாராட்ட முடியும்?

காங்கிரஸ் விடுதலைப்போர் நடாத்தி நாட்டுக்கு சுயராஜ்யம் வாங்கிக் கொடுத்ததற்காக மதித்திட போற்றிட மனமற்றவர்கள் காங்கிரஸ் ஆட்சியை நடத்த ஆரம்பித்த பிறகு மதித்திட, போற்றிட முன் வந்திடின், என்ன பொருள்? உள்ளன்பு என்றா அதனைக் கூறமுடியும், ஆசையோ அச்சமோ அதற்கு காரணமாக இருக்கமுடியுமே தவிர பாசம்—பற்று—என்றா கூற முடியும்? பேதையும் கூறிடானே!

காங்கிரசில் இடம் பிடித்து கொண்டவர்களின் இயல்புக்குத் தக்கபடி, அந்தக் கட்சியும் அதனால் நடத்தப்படும் ஆட்சியும் இன்று இயல்புகளைப் பெற்றுக் கொண்டுவிட்டது.

அந்த இயல்புகளைத்தான் நாம் வெறுக்கிறோம், கண்டிக்கிறோம்.

தம்பி! சர்க்கரைப் பொங்கலிலே முந்திரிப்பருப்பு போடுவது முறை, தேவை; ஆனால் சர்க்கரைப் பொங்கலிலே இலுப்பைக் கொட்டைகளைப் போட்டிடின், எவர் விரும்புவர்? என்ன ஆகும் அந்த இனிப்புப் பண்டம்! முக்கனிச் சாற்றினிலே ஒருபிடி தெருப் புழுதியைக் கலந்திடின், பருகிட எவர் இசைவர்?

இன்றையக் காங்கிரசின் இந்த நிலையினை உணர்ந்ததால்தான், பலர், அந்தக் கட்சியைவிட்டு வெளியே சென்று விட்டனர்; பலர் இருக்கின்றனர் ஒப்புக்கு; கட்சியில் இடம் பிடித்துக்கொண்டவர்கள் செய்திடும் பாதகங்களுக்கு உடந்தையாக இருந்து தீரவேண்டி நேரிட்டு விட்டதே என்ற வேதனையைச் சுமந்து கொண்டு.

இன்றையக் காங்கிரஸ், எவருக்குப் பயன்பட்டு வருகிறது என்பதைக் கண்டதாலேதான், பொதுமக்கள் இன்று கழகத்தை ஆதரிக்கின்றனர்.

இன்றையக் காங்கிரசிடம் சுவைமிக்க பலன் எதிர்பார்த்து இளித்துக் கிடப்போரே அதிகம் உளர், பற்றுவைத்துள்ளவர் அதிகம் இல்லை என்பதை உணர்ந்ததால்தான், மக்களுக்கு மனமயக்கம் தரத்தக்கது எதையாகிலும் சொல்லித் தீரவேண்டிய நிலைமைக்குக் காங்கிரஸ் 'சூத்திரதாரிகள்' வந்துள்ளனர்.

அத்தகைய மனமயக்கத்தை ஊட்டவே, 'சோஷியலிசம்' பேசுகின்றனர்.

நெற்றியிலே திருநீறு! கழுத்திலே உருத்திராட்சமாலை! கட்கத்தில், எதையோ பட்டுத் துணியால் போர்த்து வைத்திருக்கிறார்! சிவக்கோலத்துடன் விளங்கும் அவரை மன்னர் அன்புடனும், பக்தியுடனும் வரவேற்கிறார்; கட்கத்தில், ஏதோ சிவாகம ஏடு இருக்கிறது; அடியார், நமக்கு அதனைக் காட்டி, நாதனின் நற்பாதத்துக்கு வழிகாட்டப் போகிறார். நமக்கு இது ஓர் நன்னாள்! நல்லாசான், நம்மைத் தேடி வந்துள்ளார் என்று எண்ணிய மன்னன், வருக! வருக! சிவக்கோல பெரியீரே வருக! என்னை வாழ்விக்க வந்துள்ள பெம்மானே வருக என்று கூறி வரவேற்கிறார் - வந்தவர் குறுநகை புரிகிறார் - வணங்கியவர், அது அவருடைய அருள் நெறியின் விளக்கம் என்று எண்ணுகிறார்; வ ந் த வ ர், கட்கத்திலிருந்த மூட்டையை அவிழ்க்கிறார் - கூரிய வாள், மின்னுகிறது-மன்னனின் மார்பில் பாய்கிறது - அவர் சாய்கிறார்-சதிகாரன் களிக்கிறான்-வேடம் பலித்தது-வெற்றி கிடைத்தது! வீரவேந்தனைக் களத்திலே வீழ்த்துவது முடியாத காரியமாக இருந்தது - இதோ முடித்துவிட்டேன் காரியத்தை, மன்னனின் கருத்தை மயக்க ஒரு சிறு கபட நாடகமாடிக் காரியத்தைச் சாதித்துவிட்டேன் என்று களிக்கிறான்.

இரு மன்னர்கள் போரிட்டனர். அதிலொருவன் போரில் புலி - மற்றவன் குணத்தால் நரி. புலி எனப் போரிடும் மன்னன், சிவனடியார்களைக் கண்டால் போதும், அவர்கள் பாதத்தைச் சிரமீது கொள்ளவும் தயங்காக் குணமுடையவன். இது தெரிந்த முத்தநாதன் என்ற நரிக்குணத்தான், நன்றாகக் குழைத்து நீறுபூசிக்கொண்டான். உருத்திராட்சத் தாவடங்கள் அணிந்து கொண்டான், கூரிய கட்கத்தைப் பட்டுத் துண்டுகொண்டு மறைத்தெடுத்துக் கொண்டான், வீரவேந்தனைத் தனியாகக் கண்டு சிலபேச அனுமதி கோரினான்; வேடத்தைக் கண்ட வேந்தன் ஏமாந்தான். மெய்ப்பொருள் உணர்த்த வந்தேன் என்றான் வேடதாரி - தன்யனானேன் என்றான் சூதறியா மன்னன், உயிரை இழந்தான்.

மெய்ப்பொருள் நாயனார் கதை என்று கூறுவர். இதனைப் பெரிய புராணத்தில்-வேடத்தைக் கண்டு ஏமாறலாகாது என்ற அறிவுரைக்குப் பயன்படுத்துவதுமில்லை. இதனைச் சிவபக்தியின் மேன்மைக்கு ஒரு எடுத்துக்காட்டாகவே, பயன்படுத்துகின்றனர்; கதைகளைப் பக்தர்கள்,

எங்ஙனம் பயன்படுத்துகிறார்கள் என்பதைக் கூற அல்ல, இதனை நாம் இங்குத் தீட்டுவது, சைவத்தின் மீது அளவு கடந்த பற்றுக் கொண்டவரை 'சிவவேடம்' பூண்டு ஏய்த்து மாய்த்த, அந்தப் பெரிய புராணத்தின் மறு பதிப்பென, இப்போது நமது நாட்களிலே, அரசியல் துறையிலே நடைபெறும், உரிமைப் படுகொலைகளைப் பற்றிக் குறிப்பிடவே இதனைக் கூறினோம்.

நெற்றியிலே நீறு, எனவே நேர்மையிலே நாட்டமிருக்க வேண்டும். கழுத்திலே சிவச்சின்னம், ஆகவே அதை அணிந்திருப்பவரின் உள்ளம் தூய்மையானதாக இருந்தே தீர வேண்டும். கட்கத்திலே ஏதோ இருக்கிறது, சிவகோலத்தவரிடம், சிவாகம ஏடுதான் இருக்கும்-என்ற முடிவுக்கு, பக்தியின்காரணமாக வந்து உயிரைஇழந்த மன்னன்போல, வேடத்தைக்கண்டு ஏமாந்து, உரிமையை இழந்துவிடும் பரிதாபத்துக்குரிய மக்கள் அரசியல் துறையிலே அநேகர் உள்ளனர்.

மெய்ப்பொருள் உரைக்க வந்துள்ளார் என்று எண்ணி வேந்தன் உயிரிழந்ததுபோலவே அரசியலில், வேடத்தைக் கண்டு மயங்கி, அந்த வேடதாரிகள், நற்பொருள்தர வந்திருக்கிறார்கள் என்று நம்பிக்கைக் கொண்டு, பிறகு தமது உரிமையை நாசம் செய்து கொள்ளும் மக்கள், இதுபோது உள்ளனர்.

யாருக்கும், ஏதேனும் ஓர் பொருளின் மீது பற்று மிகுதியாக இருப்பின், அவர்களை, எத்தர்கள் ஏய்க்க எண்ணும் போது, எதன் மீது அவர்களுக்குப் பிரியம் அதிகமோ, அதே போல் கோலம் பூண்டு வந்தே, ஏய்ப்பர்-ஏய்த்திருக்கின்றனர்-ஏமாளிகள் உள்ளவரையில் இத்தகைய எத்தர்கள் இருக்கத்தான் செய்வர். பற்று இருக்கத்தான் வேண்டும் ஏதேனும் ஓர் கொள்கையினிடம்-மரக்கட்டைகளாக இருத்தலல்ல மாந்தர்க்கழகு-ஆயினும் பற்று, நமக்குப் பகுத்தறிவையும் பாழாக்கும் மூடபனியாகும்படியாக மாறிவிட, அனுமதிக்கலாகாது.

இந்த மூடபனியை ஒட்டித்தான் தம்பி! நாம் அறிவொளியைத் தந்திட வேண்டும்.

நெற்றியிலே உள்ள நீறு சரி: கழுத்திலே உருத்திராட்சமாலை, சரி; மகிழ்ச்சி, மதித்திடுவோம்; ஆனால் கட்கத்தில் மூட்டையில் உள்ளது என்ன? என்று மட்டும் மன்னன்

கேட்டிருந்திருப்பின், படுகொலை நேரிட்டிருக்காதே! அதுபோலவேதான் தம்பி! ஜனநாயகமா? மகிழ்ச்சி! வரவேற்கிறோம்! சோஷியலிசமா? மிக்க மகிழ்ச்சி! வரவேற்கிறோம்! ஆனால், இவர் யார்? அதோ அவர் யார்? இவருடைய நிலை என்ன, விலை என்ன, வேலை என்ன? அதோ அவருடைய இயல்பு என்ன, இருப்பு எவ்வளவு? இவர் போன்றார் உள்ள இடத்திலா சோஷியலிசம் வளரும், மலரும்? என்று கேட்டிடத் தெளிவும் துணிவும் வேண்டும்! இல்லையேல், உரிமை படுகொலை செய்யப்பட்டுவிடும்!

விதை தூவினால் மட்டுமே, பயிர்! ஆனால் எங்கே தூவினால்? பாறைமீது தூவிய விதை, பறவைகளுக்கு; பயிர் ஆகிடாது!

நெல்லும் பதரும், ஒரே வடிவம்! நெல்லென்று எண்ணிக்கொண்டு பதரினை விதையாகத் தூவிடின், நிலம் தரமாக இருந்திடினும் முளை கிளம்பிடுமோ!!

பாறை மீது தூவிய விதைபோலவே இன்று காமராஜர் பேசிடும் ஜனநாயக சோஷியலிசம் உளது. இதனை உணருவதற்கு அதிகமான முயற்சியும் தேவையில்லை. அவருடைய உலாவின்போது உடன் இருப்போரைக் கண்டாலே போதும்.

> உடன் இருப்போர் ஊர்க் குடிகெடுப்போர் என்று மக்கள் அறிவர்! உடனிருப்போர், பிறர் உழைப்பின் பலனை உண்டு கொழுப்போர்; இதனை ஊரறியும்.

ஆனால் அந்த உத்தமர்களை வைத்துக்கொண்டு சோஷியலிசம் பேசுகிறார், பெரியவர்! அவர்களும், ஆமாம்! சோஷியலிசத்தைத்தான் நாங்கள் ஆதரிக்கிறோம்!!-என்கிறார்கள்.

> இந்தியாவுடன் நட்பு வேண்டும் என்று தான் சீனா கேட்கிறது!! எல்லையைக் கொத்திக் கொண்டே!!

இங்குள்ள முதலாளிமார்களும், ஏழையின் வாழ்வை வதைத்துக் கொண்டே, சோஷியலிசக் கீதம் பாடுகிறார்கள். மெய்ப் பொருள் நாயனார் கதை போலவே இருக்கிறது அவர்கள் ஏழை எளியோரிடம் காட்டிடும் சோஷியலிசக் கோலம்!!

காமராஜர், வேண்டுமென்றே கபட நாடகமாடி ஏழை எளியோர்களை ஏய்க்கிறார் என்று நான் கூறவில்லை, தம்பி! எத்தனை அரசியல் கருத்து வேற்றுமை இருந்திடினும், அவர்மீது பழி சுமத்திடும் அவைக்குத் தாழ்ந்து போகவும், தரக்குறைவு கொள்ளவும் நான் தயாராக இல்லை.

அவர் நரியைப் பரியாக்கிக் காட்ட முயலுகிறார்; முதலாளிகளை சோஷியலிஸ்டுகள் ஆக்கிக் காட்டுகிறார்.

தென்பாண்டி மண்டலத்துக் காமராஜருக்கு நரி பரியான கதை தெரிந்திருக்க வேண்டும்!

திரிபுரமெரித்த விரிசடைக் கடவுள், குதிரை வாங்கக் கொடுத்த பணத்தைக் கோயிலுக்காகச் செலவிட்டு மன்னனின் சீற்றத்துக்கு ஆளாகி மருண்டு கிடந்த 'பக்தனை'க் காத்திட, நரி பரியாகும் திருவிளையாடலை நடாத்திக் காட்டினார் என்பர் புராணம் படிப்போர்,

குதிரை வாணிபனாக வடிவம் கொண்டு, காட்டினில் கிடந்த நரிகளைப் பரிகளாக்கி, மன்னனிடம் தந்து, அவன் மகிழ்ச்சிகொண்டு, அந்தக் குதிரைகளைக் கொட்டிலில் கட்டி வைத்திட, இரவு பரியாக மாறிக் கிடந்த நரிகள் பழையபடி நரிகளாகி, ஊளையிட்டுப் பாய்ந்து, ஏற்கனவே ஆங்கு இருந்த பரிகளைக் கடித்துக் குதறி விட்டுக் காடுநோக்கி ஓடிவிட்டன என்பர்.

கண்ணுதற் பெருங்கடவுளாலேயே, நரியைப் பரிபோல் வடிவம் கொண்டிட மட்டுமே செய்திட முடிந்தது.

நரிகள் பரிகளாகிவிடவில்லை, நாதன் நடத்திய திருவிளையாடலின் போதேகூட!

ஆனால் காமராஜர், கனதனவான்களை, கள்ளச் சந்தையினரை, கொள்ளை இலாபமடித்திடுவோரை, சோஷியலிஸ்டுகள் ஆக்கிடமுடியும் என்கிறார்; நம்பச் சொல்கிறார்!!

ஆண்டவனே முயன்றாலும் நரி, பரியாகிவிடாது என்பதனைத் திருவிளையாடல் பற்றிய திருக்காதையே காட்டுகிறது-காமராஜரின் திருவிளையாடலிலா நம்பிக்கை கொள்ள முடியும்?

மக்களுக்கு நம்பிக்கை எழாது; நிச்சயமாக! ஆனால் ஒரு மயக்கம் ஏற்படும் அல்லவா? அதுபோதும் ஓட்டுக் களைத் தட்டிப் பறித்திட என்று அவர் திட்டமிடுகிறார்.

அந்த மயக்கத்தைப் போக்கிடும் தொண்டினில் நாம் நம்மை ஈடுபடுத்திக் கொண்டிருக்கிறோம். தன் திட்டத் தைத் தாக்குகிறார்களே என்பதாலே அவருக்கு நம்மீது ஆத்திரம்! விநாடிக்கு விநாடி அந்த ஆத்திரம் வளருகிறது; பொங்குகிறது.

காமராஜர் தயவால் ஒரு புதிய வேட்டை கிடைக்க இருக்கிறதே, அதனை இந்தப் 'பாவிகள்' கெடுத்துத் தொலைக்கிறார்களே என்பதை எண்ணிடும்போது முதலா ளிமார்களுக்கு நம்மீது கோபம்--கொதிப்பு!

இந்த இரண்டு எதிர்ப்புகளையும் தாங்கிக் கொண்டு தான் நாம் பணியாற்ற வேண்டி இருக்கிறது, நமது பணி பெரிது! பொறுப்பு அதனைவிடப் பெரிது! எதிர்ப்பு, பல வகையின, மிகப் பெரிய அளவினதுமாகும்!

''அப்படியா அண்ணா!'' என்று ஆயாசக் குரலிலே கூறிடமாட்டாய், அதனால் என்ன அண்ணா நான் தான் அந்தப் பணிக்கு என்னை ஒப்படைத்துவிட்டேனே! அஞ் சாதே அண்ணா! அறம் வெல்லும்!! என்று உறுதியுடன் பேசிடுவாய் என்பதை உணர்ந்தே தம்பி! உன்னை அழைக் கிறேன். வேறு யாரை நான் அழைப்பேன்!

அண்ணன்,

23—10—'66



காஞ்சிக் கடிதம் : 85

எல்லாம் தருமத்துக்கு!

- ★ 'எல்லாச் சொத்தும் தருமத்துக்கு எழுதி வைத்து விட்டேன்'—சீமான்.
- ★ 'பாங்குகளைச் சமுதாயக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப் போகிறோம்.'— காங்கிரஸ்
- ★ ஏழைகளின் ஓட்டும் வேண்டும்! முதலாளிகளின் நோட்டும் வேண்டும்!
- ★ உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுகிறார்கள்
- ★ பாங்குக் கட்டுப் பாட்டுத் திட்டம் வெடிகுண்டு அல்ல! வெறும் புஷ்வாணம்!

தம்பி!

எங்கோ படித்ததாக நினைவு; நகைச்சுவைக்காக எழுதப்பட்டதுதான்; என்றாலும் நான் கூற நினைக்கும் பிரச்சினைக்குப் பொருத்தமாக அமைந்திருப்பதால் அதனைச் சொல்லுகிறேன்.

ஒரு சீமான்; பிள்ளை குட்டிகள் இல்லை; பெரிய சொத்து! இவ்வளவு சொத்தும் யாருக்குப் போய்ச் சேரப் போகிறதோ, யார் அனுபவிக்கக் கொடுத்து வைத்தவர் களாக இருக்கிறார்களோ என்று ஊரார் பேசிக்கொண் டனர்,

ஒருநாள் அந்தச் சீமான் பத்திரிகை நிருபரிடம் சொன்னார்,

என் சொத்து முழுவதையும் தருமத்துக்கு எழுதி வைத்துவிட்டேன் என்று.

துள்ளிக் குதித்தோடினார் நிருபர், இதழகத்துக்கு; கொட்டை எழுத்தில் செய்தியை வெளியிட்டார், இன்ன சீமான் தன் சொத்து முழுவதையும் தருமத்துக்கு எழுதி வைத்து விட்டார் என்று.

சீமானின் படம், புன்னகை பூத்த முகத்துடன்!

பாராட்டுக் குறிப்பு அவருடைய இயல்பை மெச்சி.

மற்ற இதழ் நிருபர்களுக்குக் கிடைக்காத வாய்ப்பைத் தட்டிப் பறித்துக் கொண்டாரே இந்த நிருபர் என்று அவருக்குப் பாராட்டு!

இவ்வளவு பரபரப்பு மூண்டுவிட்டது. மற்ற நிருபர்கள் சீமானை மொய்க்கத் தொடங்கினார்கள், விவரம் கேட்டறிய. என்னென்ன தரும காரியத்துக்குச் சொத்தினை எழுதி வைத்திருக்கிறார்? சிவன் கோயிலுக்கு எவ்வளவு? மடத்துக்கு எவ்வளவு? பஜனைக் கூடத்துக்கு என்ன சொத்து? பள்ளிக்கூடத்துக்காக ஏதாகிலும் உண்டா? அனாதைப் பிள்ளைகளுக்காக?—என்று இப்படிக் கேள்விகள் அடுக்கடுக்காக!

சீமான், கேள்விக்கணைகளைத் தொடுத்தவர்களைப் பார்த்த பார்வையில், ஒரு திகைப்பே இருந்தது.

''என்ன கேட்கிறீர்கள்? இதெல்லாம் என்ன கேள்வி?'' என்று கேட்டார் சீமான்.

''தொல்லை கொடுப்பதாகக் கருதக்கூடாது. ஊரே எதிர்பார்க்கிறது விவரம் அறிய. அதனால்தான் கேட்கிறோம்'' என்றார் நிருபர்.

''என்ன விவரம்?''—என்று கேட்டார் சீமான்.

''தாங்கள் தங்கள் சொத்து முழுவதையும் தருமத்துக்கு எழுதிவைத்திருக்கிறீர்களே, அதற்கான விவரத்தைத்தான்'' என்றார்கள் நிருபர்கள்.

ஒரு வெடிச் சிரிப்புக் கிளம்பிற்று சீமானிடமிருந்து. ''அட இழவே! நான் சொன்னதைத் தப்பர்த்தம் செய்து

கொண்டீர்கள் என்றல்லவா தோன்றுகிறது. ஐயா! நான் என் சொத்து முழுவதையும் தருமத்துக்கு எழுதிவைத்து விட்டேன் என்றேன். உடனே உங்களுக்குக் கோயில் குளம், சத்திரம் சாவடி இவைகளின் மீது கவனம் போயிற்று; நான் அந்தத் தருமத்தைச் சொல்லவில்லை ஐயா! சொத்து முழுவதையும் என் பங்காளிகள் ஏதாகிலும் பிற்காலத்திலே பற்றிக்கொள்ளக் கிளம்புவார்களோ என்ற பயத்தில், இப்போதே என் மனைவி பேருக்கு எழுதிவைத்து விட்டேன். அதைத்தான் நான் சொன்னேன், சொத்து முழுவதையும் தருமத்துக்கு எழுதி வைத்துவிட்டேன் என்று. என் மனைவி பெயர் தர்மாம்பாள்—செல்லமாக தருமு! தருமு! என்று அழைப்பேன்! அதனால் சொத்து அவ்வளவும் தருமத்துக்கு எழுதி வைத்துவிட்டேன் என்று சொன்னேன் என்றார்; நிருபர்கள் திணறிப் போயினர்! விஷயம் இப்படி இருக்கும் என்று எண்ணிப் பார்க்காமல், சீமானை, வள்ளல் என்றும் தருமவான் என்றும் ஏகப்பட்ட தூக்கு தூக்கிவிட்டோமே! ஆசாமி நம்மைப் பைத்தியக்காரராக்கி விட்டாரே என்று எண்ணி வெட்கப்பட்டனர்.

தருமாம்பாளுக்கு என்று சொல்வதற்குப் பதிலாக தருமத்துக்கு என்று சொன்னதால் இத்தனை விபரீதமான அர்த்தம் எழும்பிவிட்டது.

இந்தக் கதைதான் தம்பி! நினைவிற்கு வருகிறது, காங்கிரஸ் கட்சி இப்போது பேசிக்கொண்டு வரும் பேச்சைக் கேட்கும் போது.

மறை பொருள்

இரு பொருள்

குறை பொருள்

இந்த முறையிலே கொள்கைகளையும் திட்டங்களையும் பற்றி அவர்கள் பேசுவதால், முழுப் பொருளை, உண்மைப் பொருளை அறிந்து கொள்ளாதவர்கள், மயங்குகின்றனர்; வேறு விதமான பொருள் கொள்ளுகின்றனர்.

இதனைத் தனக்குச் சாதகமாக்கிக் கொள்ள முனைகிறது காங்கிரஸ் கட்சி.

இந்த விதமான 'இருபொருள்' தரும் பேச்சை ஒரு பொறுப்புள்ள கட்சி பேசுவதை ஜனநாயகத்தில் நன்கு தேர்ச்சி பெற்ற நாட்டினர் ஏற்கமாட்டார்கள். இங்கு?

தேள் கொட்டிற்று

தேனாக இனித்தது

என்று பேசிடக்கூட அவர்கள் துணிவு பெறுகிறார்கள். என்ன விபரீதமான பேச்சய்யா இது!-என்று கேட்டிடினோ, புருவத்தை நெறித்தபடி கேட்கவும் முனைகின்றனர்,

தேள் கொட்டாதா?

தேன் இனிக்காதா?—என்று.

வேடிக்கைக்காகச் சொல்லுகிறேன் என்றோ, அவர்களிடம் பகை உணர்ச்சி கொண்டதால் அவ்விதம் பேசுகிறேன் என்றோ எண்ணிக் கொள்வர். அவ்விதம் நான் பேசுபவன் அல்ல.

தீவிரத் திட்டம்

அதிதீவிரத் திட்டம்

புரட்சித் திட்டம்

புதுமைத் திட்டம்

பொதுஉடைமைத் திட்டம்

என்றெல்லாம் பாராட்டினர் பலர், சீமான் தன் சொத்து அவ்வளவையும் தருமத்துக்கு எழுதிவைத்து விட்டதாகச் சொன்ன உடன் பாராட்டியதுபோல.

எப்போது கிடைத்தது அந்தப் பாராட்டு?

காங்கிரஸ் எர்ணாகுளத்தில் கூடி, நாட்டிலுள்ள பாங்குகளை இனி சர்க்கார் உடைமையாக்கிக் கொள்ளும் என்ற கருத்துப்பட, ஒரு தீர்மானம் நிறைவேற்றி, அதனைத் தேர்தல் அறிக்கையிலே இணைத்தபோது.

பாங்குகளைத் தேசீய உடைமை ஆக்க வேண்டும்; இன்று அந்த அமைப்புகள் முதலாளிகளின் ஆதிக்கத்தை வளர்க்கும் கருவிகளாக உள்ளன; உண்மையான நாட்டு முன்னேற்றத்துக்கு, மக்களின் நல்வாழ்வுக்குப் பயன்படுவதில்லை; முதலாளிகள் மேலும் மேலும் தங்கள் தொழில்களைப் பெருக்கிக் கொள்வதற்கே பயன்பட்டு விடுகின்றன என்ற கருத்து பல ஆண்டுகளாக வலியுறுத்தப்பட்டு வருகிறது.

துவக்கத்திலே இந்தக் கருத்தைத் துடுக்குத்தனம் என்றும், பொருளாதாரச் சீர்குலைவு உண்டாக்க வல்லது என்றும், தனிநபர் உரிமையைத் தகர்த்துவிடுவது என்றும் கூறித் தாக்கினர் காங்கிரஸ் அரசினர்.

விவரம் அறியாதார் பேச்சு என்றும் வீண் குழப்பம், மனப் பிராந்தி என்றும் கூறினர்; கண்டித்தனர்.

ஆனால் இந்தக் கருத்து மக்களாலே வரவேற்கப்பட்டு, வலிவு பெற்றது.

இந்தக் கருத்தினைக் கூறி, மக்களைத் தம் பக்கம் முற்போக்குக் கட்சிகள் இழுத்துக்கொண்டு விடுமோ என்ற அச்சம் ஆளவந்தார்களுக்கு ஏற்பட்டது.

அதனால்தான் ஆளவந்தார்கள், மக்களை மயக்கிட, பாங்குகளைத் தேசீய உடைமை ஆக்கத் திட்டமிட்டு விட்டிருப்பதாக அறிவித்தனர்.

எர்ணாகுளத்தில் இந்தப் பேச்சு திட்ட வடிவம் கொண்டது; ஆனால் அதற்கு முன்பே தமிழகத்தில் 'நிலை அறிய'ச் சுற்றுப் பயணம் நடத்திய முன்னாள் நிதி அமைச்சர், டி. டி. கிருஷ்ணமாச்சாரியார், அழுத்தந் திருத்தமாகக் கூறினார் பாங்குகள் தேசீய உடைமைகளாக்கப்பட வேண்டும் என்று.

அவர் சொன்னதன் விளைவுதான் எர்ணாகுளத்தில் எடுக்கப்பட்ட முடிவு என்று கருத இடம் இருந்தது. டி டி. கிருஷ்ணமாச்சாரியார், பொருளாதாரத் துறையிலே புலி! நிதி அமைச்சராக ஒரு முறைக்கு இருமுறை வேலை பார்த்தவர்; வித்தகர் என்று பாராட்டப்பட்டவர்; அவர் கூறுகிறார், பாங்குகள் தேசீய உடைமையாக்கப்பட வேண்டும் என்று.

காங்கிரசின் நடுநாயகர் அவர்!

பொருளாதாரத் துறையிலே நிபுணர் அவர்!

அவரே கூறிவிட்ட பிறகு, அது பற்றி ஐயப்பாடு கொள்ளப் போமோ! பாங்குகளைத் தேசீய உடைமை ஆக்கினால், பொருளாதாரச் சீர்குலைவு ஏற்படும் என்ற அச்சத்தைக் கிளப்பிடுவோர் இனி வாய் மூடிக் கொள்வர் என்று காங்கிரஸ் பேச்சாளர்கள் விளக்கமளித்தனர்.

இதனை விடத் தீவிரமான திட்டம் வேறு இருக்க முடியுமா?

இதைப்போன்ற புரட்சிகரமான திட்டத்தைக் காட்டிலும் வேறு என்ன திட்டம் காட்ட முடியும் எதிர்க்கட்சிகளால்!

என்றெல்லாம் எக்காளமிட்டனர்.

தம்பி! நம்மைப்போல விளக்கம்வேண்டும், இரு பொருள் கூடாது என்று கருதுபவர்கள், எர்ணாகுளத்துத் தீர்மானத்தில் பாங்குகளை தேசீய உடைமை ஆக்கிவிடப் போகிறோம் என்று திட்டவட்டமாகக் கூறக்காணோமே என்று கேட்டபோது, சீறி விழுந்தனர், ஆளுங் கட்சிச் சீலர்கள். ஏடா! மூடா! தேசிய உடைமை ஆக்குவோம் என்று இவ்வளவு வெளிப்படையாகச் சொன்னால்தானா—ஏன்!—கோடிட்டுக் காட்டினால் போதாதா?

Social Control—

சமுதாயக் கட்டுப்பாடு

என்று கூறியிருக்கிறோமே. அதன் பொருள் என்ன என்று அறிந்துகொள்ளக்கூடவா முடியவில்லை? அத்தனை மந்த மதியா?—என்றெல்லாம் பேசிக் கேலி செய்தனர்.

Social Control—சமுதாயக் கட்டுப்பாடு என்பதற்கும், Nationalisation—சர்க்கார் உடைமையாக்குவது என்பதற்கும் வித்தியாசம் இல்லையா? நிரம்ப!!

அதனைச் சிலர் எடுத்துக்காட்டியபோதுகூட, மறுத்தனர் இந்த மகானுபாவர்கள்.

பாங்குகளைத் தேசிய உடைமை ஆக்கவேண்டும் என்று வலியுறுத்திக் கொண்டிருக்கும் கிருஷ்ணமேனன், Social Control சமுதாயக் கட்டுப்பாடு என்பதற்கு உண்மையான பொருள், நடைமுறைப் பொருள்—Nationalisation தேசிய உடைமை ஆக்குவது என்பதுதான் என்று விளக்கம் கூறினார்.

அப்போதுகூட ஆளவந்தார்கள், இல்லை! இல்லை! நாங்கள் கூறும் சமுதாயக் கட்டுப்பாடு வேறு, தேசிய உடைமை ஆக்குவது என்பது வேறு என்று அறிவிக்கவில்லை.

சொத்து அவ்வளவும் தருமத்துக்குத் தான் என்று கூறிய சீமான்போல இருந்து விட்டனர்.

ஏழை எளியோர்களின் செவிகளுக்கு பாங்குகள் சர்க்கார் உடைமை ஆக்கப்படும் என்ற பேச்சு இசையாக அல்லவா இருந்திடும். இனிப்பு கொஞ்சமா! மன மயக்கம் ஏற்படுமல்லவா!! அந்த நேரமாகப் பார்த்து ஓட்டுக்களைத் தட்டி பறித்துக் கொள்ளலாமல்லவா? அந்த நினைப்புடன், இந்த பேச்சை உலவவிட்டனர்.

உண்மையிலேயே இவர்களுக்கு, பாங்குகளைத் தேசிய உடைமை ஆக்க வேண்டும் என்ற எண்ணம் இருந்தால், அதனை இருபொருள் கொண்ட பேச்சாக்காமல், திட்டவட்டமாகத் தெரிவித்திருப்பர்.

ஆனால் காங்கிரஸ் கட்சியினரின் நோக்கம் வேறு!

ஏழைக்கு இனிப்பு அளிப்பதாகவும் இருக்க வேண்டும், அதேபோது முதலாளிகளுக்குக் கோபமோ ஐயப்பாடோ ஏற்படாமலும் இருக்க வேண்டும்.

ஏழைகளின் ஓட்டுகளும் வேண்டும், முதலாளிகளின் நோட்டுகளும் வேண்டும்.

சொல்லும் செயலும் இதற்குத் தகுந்ததாக அமைய வேண்டும்.

ஏழை எளியோர்களே! எப்படிப்பட்ட புரட்சித் திட்டம் கொண்டுவரத் தீர்மானித்திருக்கிறோம் பார்த்தீர்களா? பாங்குகளை இனி முதலாளிகளிடம் விட்டு வைக்கப் போவதில்லை, சர்க்காரிடம் அவை வந்து சேரும் என்று கூறவும்,

முதலாளிகளே! பயம் ஏன்? சந்தேகம் ஏன்? பாங்குகளைச் சர்க்கார் எடுத்துக் கொள்ளாது! எடுப்பதாக இருந்தால், Nationalisation-நாட்டுடைமை ஆக்குவது என்றல்லவா கூறியிருப்போம்; இப்போது நாங்கள் சொல்வது என்ன? கவனித்தீர்களல்லவா? கருத்துப் புரியவில்லையா? Social Control சமுதாயக் கட்டுப்பாடு என்றுதான் கூறினோம், வேறில்லை. ஆகவே வீண் குழப்பம் கொள்ளாதீர்கள் என்று கூறிடவும்,

ஏழைகளே! உங்களுக்காகப் பாடுபடும் எமக்கு
உமது ஓட்டுகளைத் தாருங்கள்!! என்று கேட்டிடவும்,

முதலாளிகளே! உங்கள் ஆதிக்கத்தை அனுமதித்து வருகிறோம்; அது நிலைத்திருக்க வேண்டுமாயின் ஆட்சியில் நாங்கள் இருந்திட வேண்டும்; முற்போக்காளர் வந்திடின் Nationalisation-நாட்டுடைமை ஆக்கி விடுவர் உம்மிடமுள்ள பாங்குகளை; நாங்கள் ஆட்சியில் இருந்திட வழி செய்திடின், Nationalisation-நாட்டுடைமை ஆக்குவது அல்ல, Social Control-சமுதாயக் கட்டுப்பாடு மட்டுமே திட்டமாக இருக்கும், ஆகவே எடும் நோட்டுகளை! கொடும் தாராளமாக!! என்று கேட்டிடவும், வழி செய்து கொள்ளவே இந்த முயற்சி.

நாணயக் குறைவான முயற்சி அல்லவா என்று கேட்கத் தோன்றும்; ஆனால் தம்பி! நாணயத்தின் மதிப்பையே குறைத்திடத் துணிந்தவர்கள் இதற்கா கூச்சப்படப் போகிறார்கள்!

அதெல்லாம் இல்லை உங்கள் அண்ணாத்துரை பழி போடுகிறான், எங்கள் நோக்கம் இருபொருள் கொண்ட பேச்சுப்பேசி இருதரப்பினரின் ஆதரவையும் பெறுவது என்பதல்ல; சமுதாயக் கட்டுப்பாடு என்றாலே நாட்டுடைமை ஆக்குவது என்பதுதான் பொருள் என்று தம்பி! யாரேனும் நாவாணிபம் புரிந்திடுவோர் வாதாட முன் வந்திடின்—அதற்காகவே தம்மை ஒப்படைத்துவிட்டோர் உளர்—அவர்களைக் காங்கிரஸ் மூலவர்களிலே ஒருவரும், இரயில்வே அமைச்சருமான எஸ். கே. பட்டீல் பேசியிருப்பதனைப் படித்துப் பார்க்கும்படி வேண்டிக் கேட்டுக்கொள்.

பட்டீல், இவர்களின் குட்டு உடைபட்டுப் போகும் விதமாகப் பேசி இருக்கிறார்.

இவரும் எர்ணாகுளத்தில் இருந்தவர்தான்! பாங்குகள் பற்றிய திட்டத்தை எதிர்த்தவரும் அல்ல!

இவருடைய வார்த்தை கவனிக்கத் தக்கதல்ல என்று கூறிடவும் முடியாது.

இவருடைய 'தயவு' தேவை இல்லை என்று காங்கிரசும் கூறிவிட முடியாது. இவர் மூலமாகவே, பெரிய புள்ளிகளிடம் பணம் பெறப்படுகிறது தேர்தல் நிதிக்கு. பொருளாளர்!

ஆகவே எஸ். கே. பட்டீல், பாங்கு சம்பந்தமாக ஏற்பட்ட தீர்மானத்தை விளக்கிக் காட்டியிருப்பது, உண்மை நிலைமையை எடுத்துக் காட்டுவதாகும்.

பேசவேண்டிய இடத்தில்தான் பட்டீல் பேசி இருக்கிறார்.

மகாராஷ்டிர கவர்னர் செரியன் தலைமை வகித்திட, செல்வ புரியினர் நாலாயிரவருக்கும் அதிகமாகக் கொலுவிருக்க, பம்பாய் நகர மணி மண்டபத்தில் இந்தத் திங்கள் இருபத்தி இரண்டாம் நாள். 'சிறப்பு விருந்தின'ராக அழைக்கப்பட்டிருந்த பட்டீல், திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கிறார்,

> பாங்குகள் தேசீய உடைமை ஆக்கப்பட மாட்டா
> என்று உறுதி அளிக்கிறேன் என்று.

கனரா பாங்கியின் வைர விழா கொண்டாட்டத்திலே அவர் சிந்திய முத்து இது!

எர்ணாகுளம் தீர்மானம் பற்றி, பலர் பலவிதமாகப் பேசிக் கொள்கிறார்களே, தீவிரவாதிகள், பாங்குகளைக் காங்கிரஸ் அரசு நாட்டுடைமை ஆக்கிவிடும் என்று பொருள் கூறுகிறார்களே, பட்டீல் இதுபற்றி என்ன கூறுகிறார் கேட்போம் என்ற நோக்குடனேயே வைர விழாச் சொற்பொழிவாற்ற அழைத்தனர்.

எர்ணாகுளம் தீர்மானம் பற்றிய உண்மையான பொருளைக் கேட்டறிந்து கொள்வோம் என்ற நோக்கத்துடன் செல்வபுரியினர் நாலாயிரவர் கூடினர்.

எதற்கு அழைத்தார்கள் என்பதையும் அவர்கள் மனத்திலே எந்தவிதமான சந்தேகமும் அச்சமும் புகுந்திருக்கும் என்பதையும், அவர்களுடைய அச்சத்தைப் போக்காவிட்டால் தன் ஆட்சிக்கும் கட்சிக்கும் எத்தகைய இன்னலும் இழப்பும் ஏற்படும் என்பதையும் நன்றாகப் புரிந்து கொண்டே பட்டீல் பேசியிருக்கிறார்.

> Mr. Patil asked Bankers not to entertain the fear that because the Congress election manifesto mentioned Social control over banks and life-Iusurance it had armed itself with blanket powers to nationalise banks overnight. There need bc no such fear.

காங்கிரஸ் தேர்தல் அறிக்கையில் பாங்குகள், இன்ஷூரன்ஸ் அமைப்புகள் ஆகியவைமீது சமுதாயக் கட்டுப்பாடு ஏற்படுத்தப்படும் என்று குறிப்பிடப்பட்டிருப்பதனால், திடுமென இவைகளை நாட்டுடைமை ஆக்கிவிடும் அதிகாரத்தைக் காங்கிரஸ் அரசு பெற்றுக்கொண்டுவிட்டிருக்கிறது என்று எண்ணி அச்சம் கொள்ள வேண்டாமென்று பட்டீல் பாங்குக்காரர்களைக் கேட்டுக் கொண்டார்! அவ்விதமான அச்சம் இருக்கத் தேவையில்லை என்று அவர் கூறினார்.

தம்பி! எப்படி இருக்கிறது பார்த்தனையா, இவர்கள் போக்கு! எர்ணாகுளம் தீர்மானத்தைத் தூக்கிக்கொண்டு சந்தைச் சதுக்கம் சென்று சிந்து பாடுகிறார்கள் காங்கிரஸ் பேச்சாளர்கள்,

தீவிரமான திட்டம்

புரட்சித் திட்டம்

புதுமைத் திட்டம்

பொதுஉடைமைத் திட்டம்

என்றெல்லாம்; ஆகவே எமக்கு 'ஓட்டு'—என்று இரைச்ச லிடுகின்றனர்.

பட்டீலோ, செல்வபுரியினரைக் கூட்டிவைத்து தேர்தல் அறிக்கையிலே ஏதோ நாலுவார்த்தை எழுதி விட்டதால் என்ன குடி முழுகிவிடும்! ஏன் இந்தப் பயம்! யார் உங்கள் பாங்குகளை எடுத்துக் கொள்ளப் போகிறார்கள்! ஒரு பேச்சுக்குச் சொன்னோம், Social control சமுதாயக் கட்டுப்பாடு என்று! அதற்காகவா அச்சம்! இப்போது என்ன, பாங்குகளை எடுத்துக்கோள்ளும் அதிகாரத்தையா, அந்தத் தீர்மானம் கொடுத்துவிட்டிருக்கிறது, பயம் வேண்டாம்—என்று கூறுகிறார்.

அதிகாரத்தில் உள்ளவர்களைக் கண்டு மயங்கிடுவோரும் மிரண்டிடுவோரும் அதிக அளவு இல்லாமல், ஆள்பவர்கள் நமது ஊழியர்கள், நம்மை ஆட்டிப் படைக்கும் தேவதைகள் அல்ல என்ற உணர்வு கொண்டோர் பெருமளவும் உள்ள எந்த நாட்டிலும், இப்படி 'இரட்டை நாக்கு'க் கொண்ட ஒரு கட்சியை ஆட்சியிலே வைத்திருக்க மாட்டார்கள். இங்குதான் இடம் இருந்திட முடியும்.

அதுவும் அதிக நாட்களுக்கு அல்ல — இப்படி உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவோர்களுக்கு.

காங்கிரசின் தேர்தல் அறிக்கை நாணயமானதாக இருந்திடின், பட்டீல் இப்படியா பேசியிருப்பார்?

ஆமாம்! நண்பர்களே! பாங்குகளைத் தனியாரிடம் விட்டு வைப்பதாலே, நாட்டின் வளர்ச்சி, மக்களின் வாழ்வு குலைகிறது. பாங்குகள் முதலாளிகளின் ஆதிக்க வளர்ச்சிக்கே இயங்கி வருகின்றன. ஆகவே நாட்டு நலனைக் கருதி பாங்குகளை நாட்டுடைமை ஆக்கிடக் காங்கிரஸ் முடிவெடுத்திருக்கிறது—என்றல்லவா பேசியிருப்பார்?

அந்தவிதமான பேச்சைச் சந்து முனையில் சத்தம் எழுப்புவோருக்கு விட்டு விட்டார்!

முதலாளிகளின் மனம் குளிரும் பேச்சை பட்டீல் பேசுகிறார்.

பட்டீல்தானே? அவர் அப்படித்தான்!—என்று கூறுவரோ! கூறிடின், கேள் தம்பி! பட்டீல் பேசியது தவறு! பாங்குகளை நா டுடமை ஆக்கத்தான் போகிறோம் என்று இந்திரா அம்மையார் அறிக்கை விடத் தயாரா என்று! பாராளுமன்றத்தில், பாங்குகளை நாட்டுடமை ஆக்குவதற்கான சட்டம் கொண்டு வரச் சம்மதமா, கேளேன்!

பட்டீல், மேலும் உடைக்கிறார், குட்டுகளை.

அச்சம் வேண்டாம் என்று சொன்னால் மட்டும் போதாது; பாங்குகளை நாட்டுடைமை ஆக்கிடும் நோக்கம் இல்லை என்றால் எதற்காகத் தேர்தல் அறிக்கையில் பாங்குகள்மீது சமுதாயக் கட்டுப்பாடு விதிக்கப்படும் என்று குறிப்பிடவேண்டும் என்று செல்வபுரியினர் கேட்பார்களே, என்று தோன்றுகிறது பட்டீலுக்கு.

அந்தக் கேள்விக்கும் சமாதானம் சொல்லிவிட வேண்டும்—(இது அக்டோபர் — பிப்ரவரியில் பொதுத் தேர்தல்—) என்ற நினைவு உறுத்துகிறது.

ஆகவே அவர், வெளிப்படையாகவே பேசுகிறார்,

சமுதாயக் கட்டுப்பாடு என்ற சொற்றொடர் காங்கிரசின் பழைய தேர்தல் அறிக்கைகளிலேயே இருக்கிறது. அதுவேதான் இந்த அறிக்கையில் திரும்

பவும் சொல்லப்பட்டிருக்கிறது. அதனாலேயே அதற்கு ஒரு புது அர்த்தம் வந்துவிடுமா? அதனுடைய தாத்பரியம் என்ன என்றால், பாங்குகள், இன்ஷூரன்ஸ் கம்பெனிகள் பிரம்மாண்டமான பொருளாதார அமைப்புகள். ஆகவே அவைகளிலே மிக மோசமான ஊழல் நிர்வாகமோ, பணத்தை மோசடி செய்யும் போக்கோ தலைதூக்குமானால், சர்க்கார் தலையிடும்! —என்பதுதான்.

தம்பி! எவ்வளவு தேன் தடவுகிறார் பார்த்தாயா? எவ்வளவு அக்கறை கவனித்தாயா, செல்வபுரியினரின் நேசத்தை உறுதிப்படுத்திக்கொள்ள.

ஒப்புக்கு ஒரு வார்த்தை என்பதோடு விடவில்லை பட்டீல்! இது எப்போதும் பேசுகிற பேச்சு! இதற்கு இப்போது என்ன புதிதாகப் பொருள் வந்துவிட்டது! உங்களை யார் என்ன செய்யப் போகிறார்கள்! மோசடி நடந்தால்தானே சர்க்கார் குறுக்கிடும் என்கிறார்.

மோசடி எங்கு நடந்தாலும், தம்பி! எப்போது நடந்தாலும் குறுக்கிடும் அதிகாரம் சர்க்காருக்கு உண்டு!

சர்க்கார் என்ற அமைப்பு இருப்பதே எந்தத் துறையிலும் மோசடி நடந்திடாமல் தடுக்கவும், மோசடி நடந்துவிட்டால் தண்டிக்கவும்தான்.

இதைத் தேர்தல் அறிக்கையிலே சேர்த்து, இதனைப் புரட்சித் திட்டம் என்று விளம்பரப்படுத்துவானேன்?

தம்பி! பட்டீலின் பேச்சைத்தான் படித்துப் பாரேன்'

The expression social control was to be found in the previous Congress manifestos, and mereiy because it twas repeated it did not acquire a new meaning. It meant hat banking and insurance were institutions of such financial magnitude that it would be only in the case of gross mismanagement and misusc of funds that the government might step in.

இவ்வளவு பேசியும் விளக்கம் தருகிறார், சரியாகத்தான் இருக்கிறது; ஆனால் பாங்குகளை நாட்டுடைமை ஆக்குவது என்ற திட்டத்தைக் கண்டிக்கக் காணோமே, ஒரு சமயம்

மனத்திற்குள் அந்தத் திட்டத்தை ஆதரிக்கிறாரோ என்று எங்கே முதலாளிகள் எண்ணிக் கொள்ளுவார்களோ என்று கவலைப் பட்டு பட்டீல், பாங்குகளை நாட்டுடைமை ஆக்கும் திட்டமே, ஒரு கேலிக் கூத்தான திட்டம் என்று சாடியிருக்கிறார்.

a ridiculous proposition

என்றே கூறியிருக்கிறார்.

தம்பி! வேறோர் நாடு தாங்கிக்கொள்ளாது இப்படிப் பட்ட போக்கினை

ஏழைகளை மயக்க, தீவிரமான திட்டம்—ஏட்டில்!

முதலாளிகளிடம் சென்றோ, முகத்தைத் துடைத்து விடுவது!

மிகப் பெரியவர்கள் அங்கு உள்ளவர்கள் என்பதால் முகத்தைத் துடைத்துவிடுவது என்று மட்டுமே கூறுகிறேன்.

நமது பேச்சின் தரம் கெட்டுவிடக் கூடாதே என்பதற்காக, இவர்கள் மேற்கொள்ளும் போக்குக்கு ஏற்ற வார்த்தைகளைச் சொல்லாமலிருக்கிறேன்.

திட்டம் என்று ஒன்றைக் காட்டுகிறார்கள், இது முதலாளிக் கோட்டையைத் தகர்த்திடும் வெடிகுண்டு என்று வீரம் பேசுகிறார்கள்; பிறகு அவர்களே, அது வெடிகுண்டு அல்ல, வெறும் புஸ்வாணம் என்றும் எடுத்து காட்டுகிறார்கள். ஏன்?

எதைச் சொன்னாலும் கேட்டுத் தீர வேண்டிய நிலைக்கு மக்கள் தள்ளப்பட்டு விட்டார்கள் என்ற நினைப்பினாலா?

இதுவா மக்களாட்சியின் மாண்பு! இந்த மோசடியா காந்தியாரின் அறநெறி அரசியல்!

தம்பி! பாங்குக்காரர்களையும் செல்வபுரியினரையும் கூட்டி வைத்துப் பேசுகிறாரே பட்டீல், பயம் வேண்டாம், உங்கள் அமைப்புக்கோ ஆதிக்கத்துக்கோ ஆபத்து ஏற்படாது என்று, அவர்கள் எந்த அளவு ஆதிக்கம் இன்று செலுத்துகிறார்கள் தெரியுமா? பொருளாதாரத் துறையில்,

தொழில் துறையில், திடுக்கிட வைக்கத்தக்க அளவு! ஒரு கணக்குத் தருகிறேன், பார் தம்பி! பாடமும் அறிந்துகொள்.

தொழில் வளர முதல் வேண்டும்; 'முதல்' யாருடைய ஆதிக்கத்தில் இருக்கிறதோ அவர்கள் 'தொழில் உலகை'த் தம் கரத்தில் கொண்டு வரமுடியும். இதற்கு விளக்கம் தேவையில்லை. இந்தப் பொருளாதாரப் பிடிக்குப் பயன் படும் கருவிகள், பாங்குகள்! ஆங்கு உள்ள பணம் எவ்வளவு? பாரேன், கணக்கினை.

1962-ம் ஆண்டு	கோடிகள்
பம்பாயில்	442.83
டில்லி	316.11
கல்கத்தா	289.26
சென்னை	63.09

பாங்குகளில் சேர்க்கப்பட்டிருக்கும் 'டிபாசிட்டு' பணத்தின் அளவு,

பம்பாயில் 442-கோடி ரூபாய்; வளம் கொழித்திடும் விதமாகத் தொழில் அமைச்சர் வெங்கடராமனால் ஆக்கப் பட்டிருக்கிறதாமே தமிழகம், அங்கு பாங்குகளில் உள்ள டிபாசிட்டுத் தொகை 63-கோடி.

442

63!

இடத்தின் இயல்பு ஒருபுறம் இருக்கட்டும், பிடி எவரிடம் என்பதைக் கவனிப்போம்.

தம்பி! எல்லா பாங்குகளிலும் சேர்ந்துள்ள 'டிபாசிட்' தொகை, 1960-ம் ஆண்டுக் கணக்குப்படி

1550-கோடி ரூபாய்.

இந்தத் தொகையில் ஐந்தே ஐந்து பாங்குகளில் மட்டும்

625-கோடி ரூபாய்!

மிச்சத் தொகை நாட்டிலே உள்ள எல்லா பாங்குகளிலும்! இந்த ஐந்து பாங்குகள் எவை?

1. சென்ட்ரல் பாங்க்
2. பாங்க் ஆப் இந்தியா
3. யுனைடெட் கமர்ஷியல் பாங்க்
4. பரோடா பாங்க்
5. பஞ்சாப் நாஷனல் பாங்க்

பெயர்கள் இருக்கட்டும், நாட்டிலே திரட்டப்படும் டிபாசிட் தொகையில் கிட்டத்தட்ட பாதி—625-கோடி ரூபாயைக் கைவசம் வைத்துக்கொண்டு, அதன்மூலம் தொழில் உலகில் பிடியை அழுத்திக் கொண்டிருக்கும் இந்த ஐந்து பாங்குகளின் அதிபர்கள் யார்?

சென்டிரல் பாங்க், பாங்க் ஆப் இந்தியா

இவை இரண்டும் டாடாவின் கரத்தில்!

யுனைடெட் கமர்ஷியல் பாங்க்

பரோடா பாங்க்

இவை இரண்டும் பிர்லாவின் ஆட்சியில்!

பஞ்சாப் நாஷனல் பாங்க்

டால்மியா—ஜெயின் குடையின் கீழ்!

இவ்விதமான பொருளாதாரத்துறை ஆதிக்கத்தைத் தகர்த்திடத்தான், பாங்குகளை நாட்டுடைமை ஆக்க வேண்டும் என்று முற்போக்காளர் வலியுறுத்துவது.

1962-ம் ஆண்டு, நமது கழகத் தேர்தல் அறிக்கையிலே நாம் இதனை ஆதரித்திருக்கிறோம்.

காங்கிரஸ் அரசும் கட்சியும் இந்த முதலாளிகளுக்குக் கட்டியம் கூறிக்கொண்டும் மக்களிடம் மயக்கமொழி பேசிக்கொண்டும் வருகிறது.

பாங்குகளை சமுதாயக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப் போகிறோம் என்ற பேச்சு, இப்போது யோசித்துப் பார் தம்பி! கதையிலே சீமான் சொல்கிறானே, எல்லாச் சொத்தும் தருமத்துக்கு எழுதி வைத்து விட்டேன் என்று, அது போன்ற விந்தைப் பேச்சா, வேறா?

உனக்கும் எனக்கும் புரிந்திருக்கிறது. பயன்? நாட்டுக் கல்லவா புரியவேண்டும்!

அண்ணன்,

30—10—'66



காஞ்சிக் கடிதம் : 86

சிங்கத்தை அடக்கினேன்!

★ தடுத்தது யார்? துடிப்பது ஏன்?

★ ஆடுகளுக்கு ஓநாய் இரத்ததானம் தரப் போகிறதாம்!

★ ஏழையின் பெருமூச்சு பேச்சை விட வலிவு மிக்கது!

★ முதலாளிகளிடம் காங்கிரஸ் சிக்கிக் கொண்டது!

★ சோஷியலிசம் பேசலாம்; செயல்படுத்த முடியாது!

தம்பி,

இப்படி ஒரு உரையாடல் உன் செவியில் விழுந்தால் என்ன எண்ணிக் கொள்வாய்?

ஒரு குரல்:- நான் சிங்கத்தின் மீது சவாரி செய்தேன்.

மற்றோர் குரல்:- நான் யானை மீது உட்கார்ந்தேன்.

வேறோர் குரல்:- ஜோரான குதிரைமீது நான் உட்கார்ந்து கொண்டேன்.

இன்னோர் குரல்:- நான் அன்னப்பட்சி மீது உட்கார்ந்திருந் தேன்.

மற்றோர் குரல்:- அழகான மயில்மீது நான் உட்கார்ந்து கொண்டேன்.

இவ்விதமாகக்கூட ஒரு உரையாடல் நடைபெற்றிருக்க முடியுமா? கற்பனை இருக்க வேண்டியதுதான், ஆனால்

இப்படியா சிங்கத்தின் மீது அமர்ந்தேன், யானை மீது அமர்ந்தேன்—என்று ஒருவருக்கொருவர் பேசிக்கொள்ளும் நிலைமை எங்கே இருக்க முடியும்?—என்று கேட்கத் தோன்றும்.

இப்படி ஒரு உரையாடல், நடைபெற்றிருக்கவே முடியாது என்று அடித்துப் பேசிவிடாதே தம்பி! நன்றாக யோசித்துப் பார்த்துச் சொல்லு, இவ்விதமான பேச்சு உன் காதில் விழுந்தால், என்ன எண்ணிக் கொள்வாய்? யார் இப்படிப் பேசியிருக்க முடியும்? எந்த இடத்தில் இவ்விதமான பேச்சு இருந்திருக்க முடியும்? விளங்கவில்லையா? சரி! நானே கவனப்படுத்துகிறேன்.

திருவிழா, பேரூரில். உள்ளூர் வெளியூர் கூட்டம் நிரம்ப. மகிழ்ச்சி. ஆரவாரம்! கடைகள், அலங்காரமாக! களியாட்டம்! கரக ஆட்டம்! மயிலாட்டம் ஒயிலாட்டம்! சிறுவர் சிறுமியர் ஓடி ஆடி விளையாடுகிறார்கள்! இங்கு ஒரு பக்கத்தில் குடைராட்டினம்- (சில இடங்களிலே ரங்க ராட்டினம் என்பார்கள்) அமைத்திருக்கிறான் ஒருவன், சிறார்களுக்காக! குடைராட்டினம் தெரியுமல்லவா! சிங்கம், புலி, யானை, குதிரை, அன்னம், மயில், மாடு, ஆடு, கட்டில், தொட்டில், சோபா, இப்படி மரத்தால் செய்யப்பட்டு வண்ணம் தீட்டப்பட்ட பொம்மைகள் தொங்கவிடப்பட்டிருக்கும்; காசு கொடுத்து விட்டு அவரவர் தத்தமக்கு விருப்பமானதன் மீது உட்கார்ந்து கொள்ளலாம்; கீழே நின்றபடி, குடைராட்டினக்காரன், அவைகள் சுற்றுவதற்காக அமைக்கப்பட்டுள்ள விசையைத் திருப்பிவிடுவான்; உடனே ரங்கராட்டினம் சுழலும், வேகமாக; வேடிக்கையாக; சிங்கத்தின் மீது சவாரி செய்வதுபோல, யானை மீது ஏறி ஓட்டுவதுபோல, சிறார்களுக்கு ஒரு மகிழ்ச்சி; குடைராட்டினம் சுற்றச் சுற்ற, சிறார்களுக்குத் தாங்கள் ஏறி உட்கார்ந்து கொண்டிருக்கும் சிங்கம், புலி, யானை, குதிரை ஆகியவைகளைத் தாமே வேகமாக ஓட்டிக் கொண்டு போவதாக ஒரு நினைப்பு; அதிலே ஒரு மகிழ்ச்சி; ஒரு ஆரவாரம்.

அந்த மகிழ்ச்சி ஆரவாரத்தின் விளைவாக சிறுவர்களுக்கிடையே எழும் உரையாடல்தான், நான் முதலில் குறிப்பிட்டிருந்தது.

இப்போது மறுபடியும் துவக்கத்தை படித்துப் பார், தம்பி! இவ்விதமான உரையாடல் நடைபெற்றிருக்கவேவா முடியாது; சொல்லு. இவ்விதமான உரையாடல் உன் காதிலே விழுந்ததும் என்ன தோன்றும்? சிறுவர்கள் மகிழ்ச்சியால் பேசுகிறார்கள்!—என்று தோன்றுமே தவிர, ஏ! அப்பா! எத்தனைப் பெரியவீரனாக இருக்கவேண்டும் சிங்கத்தின் மீது சவாரி செய்தவன்!! என்று வியந்து, அவன் எதிரே அஞ்சி நின்றிடவேண்டும் என்றா தோன்றும்? குழந்தைகள் பேசுகின்றன! குடைராட்டினத்திலே உட்கார்ந்து மகிழ்ச்சிபெற்றதால், பேசுகிறார்கள்!—என்று தான் எண்ணிடத் தோன்றும்.

சிறார்கள், மகிழ்ச்சி காரணமாக இது போலப் பேசுவதைக் கேட்கும்போது, நமக்கேகூட இனிப்பாக இருக்கும்.

போயும் போயும் உனக்கு ஆடுதானா கிடைத்தது; ஏன் யானை கிடைக்கவில்லையா? என்று கேட்டு மகிழ்வோம்.

ஏ! பயலே! நீ பெரிய போக்கிரியடா! கொஞ்சம் கூடப் பயப்படாமல், அவ்வளவு பெரியயானைமீது உட்கார்ந்துகொண்டாயே!! என்று கேட்டுக்கொண்டே கன்னத்தைக் கிள்ளிவிடுவோம்.

கேட்டாயா சேதி! நம்ம மகனை என்னமோ மட்டமாகக் கணக்குப் போட்டாயே! தெரியுமா விஷயம்! சிங்கத்தையே அடக்கி, அதன் மீது ஏறி உட்கார்ந்து, பிடரியைப் பிடித்து உலுக்கி எடுத்துவிட்டான், நம்ம மகன்! என்று பெருமிதத்துடன் கூறி மகிழ்வோரும் உண்டு!

ஆனால், சிறார்கள் அல்ல, பெரியவர்கள்—மிகப் பெரியவர்கள்—குடை ராட்டினத்துப் பொம்மைகளின் மீது உட்கார்ந்து சுற்றிவிட்டு, உண்மையாகவே சிங்கத்தையும் யானையையும் அடக்கிய மாவீரர் போலப் பேசிடக் கேட்டால், எப்படி இருக்கும்? தாங்கிக்கொள்ள முடியாத எரிச்சலைத்தானே மூட்டிவிடும்.

எவனும் என்னைக் கவிழ்க்க முடியாது!

யாருக்கும் நான் பயப்படமாட்டேன்!

எல்லாப் பணக்காரர்களையும் ஒழித்துக் கட்டிவிடப் போகிறேன்!

இவ்விதம், காமராஜர் பேசுகிறார்! குடைராட்டினத்தில் ஏறி, வேடிக்கை பெற்ற குழந்தைப் பருவத்தினரா, இவர்? இவரா இப்படி, சிங்க பொம்மைமீது உட்கார்ந்து நான் சிங்கத்தின்மீது சவாரி செய்தேன் என்று குதூகலமாகக் கூவிடும் குழந்தைபோல, பணக்காரர்கள் அமைத்துக் கொடுத்திருக்கும் குடைராட்டினம் போன்ற செல்வாக்கின் மீது அமர்ந்து சுற்றிக்கொண்டு, நான் பணக்காரர்களை ஒழித்துக் கட்டுவேன், ஒருவருக்கும் பயப்படமாட்டேன் என்று வீராவேசப் பேச்சுப் பேசுவது! ஆனால் பேசுகிறார்! அந்தப் பேச்சு கேட்டு, நாடே, தமது வீரதீரத்தை வியந்து பாராட்டும் என்று வேறு எதிர்பார்க்கிறார்! நாட்டு மக்களை ஏமாளிகள் என்றே தீர்மானித்துவிட்டார்போல இருக்கிறது.

நான் எப்படியும் சோஷியலிசத்தை நடத்தி வெற்றி காணத்தான் போகிறேன்! யாரும் தடுக்க முடியாது!—என்கிறார்.

யாரய்யா பெரியவரே! சோஷியலிசத்தைத் தாங்கள் கொண்டு வருவதைத் தடுக்கிறார்கள்? என்று கேட்டால், எல்லோருந்தான்! கம்யூனிஸ்டு கட்சிகள், பிரஜா-சோஷியலிஸ்டு கட்சி, தி.மு.க., தமிழரசுக் கழகம், சுதந்திரா கட்சி, எல்லாமேதான்! நான் சோஷியலிசத்தைக் கொண்டு வருவதைத் தடுக்கப் பார்க்கின்றன; கெடுக்கப் பார்க்கின்றன!—என்று இடி முழக்கம் செய்கிறார்.

இந்த நாட்டிலே உள்ள எல்லாக் கட்சிகளுமே, சோஷியலிசத்தை இவர் கொண்டு வருவதைத் தடுக்கின்றனவாம்; எதிர்க்கின்றனவாம். இவருடைய கட்சியில் உள்ள முதலாளிகள் தவிர, மற்ற எல்லோரும் சோஷியலிச விரோதிகளாம்!!

தம்பி! குடைராட்டினம் ஏறி மகிழ்ந்திடும் குழந்தைகள் கூட இப்படி ஒரு வேடிக்கை காட்ட முடியாது! அவ்வளவு வேடிக்கை காட்ட இந்த அகில இந்தியா! தம்மைச் சுற்றிலும், பகைவர்கள் நிற்பது போலவும், தமது வீர தீரத்தால் மட்டுமே அந்தப் பகையை வீழ்த்தி, சோஷியலிசத்தை வெற்றி பெறச் செய்யமுடியும் என்பது போலவும் பேசிக்

கொண்டிருக்கிறார்: அவருடைய பேச்சைக் கேட்டு, அக மகிழ்கிறார்கள். காந்தியார் காட்டிய வழி நடந்த தொண்டர்கள், தியாகிகள் அல்ல, பிரிட்டிஷ் அடக்கு முறைக்கு ஆளான வீரர்கள் அல்ல; சோஷியலிசம் மலர்ந்திடின், புதுவாழ்வு பெறக் கூடிய ஏழை எளியோர் அல்ல; சோஷியலிசம் எனும் திட்டத்தை நிறைவேற்றி வைக்க எதனையும் இழந்திடவும், எவ்வளவு இன்னலையும் தாங்கிக் கொள்ளவும் தயாராக உள்ள இலட்சியவாதிகள் அல்ல! யார் மகிழ்கிறார்கள் தெரியுமா?

வாண்டையார்
வடபாதி மங்கலத்தார்
நெடும்பலத்தார்
குன்னியூரார்
மூப்பனார்
மன்றாடியார்
மகாலிங்க ஏழையார்
பேட்டையார்
பெரும்பண்ணையார்
செய்யூரார்
வலிவலத்தார்
இலஞ்சியார்
ராமநாதபுரத்தார்
செட்டிநாட்டார்
சிவகெங்கைச் சீமையார்
மோட்டார் மன்னர்
சிமிட்டிச் சீமான்
இரும்புக்கோமான்
அலுமினிய அதிபர்
ஆலை ஆள்வோர்

இவர்களெல்லாம், தம்பி! ஆனந்தத் தண்டவமாடுகிறார்கள். ஈடு எதிர்ப்பற்ற எமது மாபெருந் தலைவர், பணக்கார ஆதிக்கத்தை அழித்து ஒழித்து, சோஷியலிசத்தைக் கொண்டுவரப் பொகிறார்! யார் தடுத்தாலும், அஞ்சமாட்டார்! எவர் எதிர்த்திடினும், முறியடித்தே தீருவார்!

சோஷியலிசம் வெற்றிபெற்றே தீரும்! எமது மாபெரும் தலைவர், எமது உள்ளம் குளிர்ந்திட, உவகை பெருகிட, சோஷியலிசம் கொண்டுவரப் போகிறார்! கம்யூனிஸ்டு களே, உமது எதிர்ப்பு எமக்குக் கடுகு! சுதந்திராக்களே, உமது எதிர்ப்பைச் சுட்டுப் பொசுக்கிச் சூரணமாக்கிப் போடுவோம்! ஏ! தீனாமூனாக்களே! தீர்த்துக் கட்டுவிடு கிறோம் உங்களை! சோஷியலிஸ்டுகளே! உங்களை ஒழித்துக்கட்டப் போகிறோம்! என்றெல்லாம் பாடுகிறார் களாம்; ஆனந்த நடனம் ஆடுகிறார்களாம்; எப்போது வரும் இந்த சோஷியலிசம்! கண் குளிரக் காணவேண்டும். —என்று வழிமேலே விழிவைத்துக் காத்துக் கொண்டிருக் கிறார்களாம்; நம்பச் சொல்லுகிறார், காமராஜப் பெரியவர்.

மதப்புரட்டுகளை ஒழிக்கப் போகிறேன் என்று ரஸ்புடீன் சொன்னதில்லை.

கொடுங்கோலாட்சியை வீழ்த்தப் போகிறேன் என்று ஜார் சொன்னதில்லை.

எதேச்சதிகாரத்தை அழித்திடப் போகிறேன் என்று பிரன்ச்சு நாட்டு மன்னன், லூயி சொன்ன தில்லை.

ஆனால், காங்கிரசிலே உள்ள முதலாளிகள், சோஷியலிசத்தைக் கொண்டு வரப் போகிறோம், சோஷியலிசத்தைக் கொண்டு வரச் சொல்லி, எமது தலைவர் காமராஜரை வற்புறுத்திக் கொண்டு வரு கிறோம், அவர் சோஷியலிசம் கொண்டுவர அரும் பாடு படுவதற்கு நாங்கள் துணையாக நிற்கிறோம், அவருடைய துணை கொண்டு சோஷியலிசத்தைக் கொண்டு வந்தே தீருவோம்—என்று சொல்லுகிறார் களாம். நம்பச் சொல்லுகிறார்கள், காங்கிரஸ் கூடாரத்தில் நாவாணிபம் நடாத்திடும் நல்லோர்கள்!!

இரத்த சோகை நோயால் பீடிக்கப்பட்டுள்ள ஆடுகளுக்கு, ஓநாய் 'இரத்த தானம்' தரப் போகிறதாம்! டாக்டர் காமராஜர் இரத்தம் எடுத்து, ஆடுகளுக்குச் செலுத்தப் போகிறாராம்! நம்பச் சொல்லுகிறார்கள், நாட்டுமக்கள் எதைச் சொன்னாலும் கேட்டுக் கொள்ளுவார்கள் என்று ஒரு தவறான கணக்குப் போட்டுக் கொண்டு.

நிலமில்லாத உழவன்

நிம்மதியில்லாத பாட்டாளி

மாடாய் உழைக்கும் தொழிலாளி

வறண்ட தலையினன்

இருண்ட கண்ணினன்

இல்லையே! இல்லையே! என்று ஏங்குபவன்,

கொண்டு போய்விடு கடவுளே, என்று இறைஞ்சு பவன்,

குளம் தேடுபவன்! மரக்கிளை நாடுபவன்!

குமுறிக் கிடப்பவன்! குற்றுயிரான்!

தம்பி! இவர்களெல்லாம் கூடப் பெறமுடியாத ஆனந் தத்தை ஊரை அடித்து உலையிலே போட்டிடும் உத்த மர்கள், ஒன்றை ஒன்பதிற்கு விற்றுக் கொள்ளை இலாபம் அடித்திடும் குணாளர்கள், இருப்பை மறைப்போர், இருப் பதை மறைப்போர், இலாபத்தை மறைப்போர் போன்ற திருவாளர்கள் பெறுகின்றனராம், சோஷியலிசத்தை எப்படியும் கொண்டு வந்தே தீருவேன், எந்த எதிர்ப்புக்கும் அஞ்சமாட்டேன் என்று காமராஜர் கூறுவது கேட்டு; நம்பச் சொல்லுகிறார்கள்!

இவர்களை உடன் வைத்துக்கொண்டுதான் காமராஜர் பேசுகிறார், நான் பணக்காரர்களை ஒழித்துக் கட்டுவேன் என்று!

இவருக்குச் சீடர்களாக நின்றுகொண்டுதான், இந்த முதலாளிமார்கள் கூறுகிறார்கள் எம்மை ஒழித் திட வந்த தலைவனே வாழ்க!! எமக்கு முடிவுகட்ட வந்திருக்கும் முதல்வனே வாழ்க! வாழ்க!—என்று, நம்பச் சொல்லுகிறார்கள், தம்பி! எதனையும் ஆய்ந் தறியும் திறனை இயல்பாகவே பெற்றுள்ள தமிழர் களைக்கூட!!

சோஷியலிசம் வெற்றி பெற்றால்...! என்று கூறி விட்டு, காங்கிரஸ் பேச்சாளர் — காங்கிரஸ்காரர் அல்ல—பேச்

சாளர்!—கண்களை மூடுகிறார்; அவர் மனக்கண் முன் தோன்றிடும் காட்சிகளை எடுத்துக் காட்டுகிறார்.

மாளிகையிலே சிலர்

மண்குடிசையிலே பலர்!

அரண்மனைகளிலே சிலர்

ஆலமரத்தடியில் பலர்!

செல்வத்தில் புரண்டபடி சிலர்

செல்லரித்த வாழ்வினர் பலர்!

இந்த நிலைமை இருந்திடாது! எல்லோரும் இன்புற்று வாழ்ந்திடலாம்! எங்கும் இன்பம், எவருக்கும் புதுவாழ்வு, நல்வாழ்வு, முழு வாழ்வு!!

இன்று பார்க்கிறோமே, அதோ கோடீஸ்வரர், கப்பல் வியாபாரத்தில் சம்பாதித்தவர்! இதோ பல இலட்சங்களுக்கு அதிகாரி, பல ஆலைகள் நடத்திப் பணம் திரட்டியவர்! அதோ சீமான், வாணிபத்தில் கிடைத்த இலாபம் பெற்றவர்!! பொருளாதாரத் துறையில் இதுபோல 'ஏக போக மிராசு' பாத்யதை பெற்றிருப்பவர்களெல்லாம் இருக்க முடியுமா?

இருக்கவிடப் போவதில்லை! இருக்கவிடமாட்டார் எமது தலைவர்!என்று வீரம் சொட்டச்சொட்டப் பேசுவர், ஆனால் இதனை ஒரு குறும்புப் புன்னகையுடன் யாரார் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள்?

பெரிய நிலச்சுவான்தாரர்கள்

மாஜி-மன்னர்கள்

பல கம்பெனிகளின் அதிபர்கள்

என்ன எண்ணிக்கொண்டு, இவர்கள் காமராஜர் பேசுவதையும் அவருக்கு 'லாலி' பாடிடுவோர் பேசுவதையும் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள்?

துவக்கத்திலே நான் காட்டினேனே உரையாடல், நான் சிங்கத்தின்மீது சவாரி செய்தேன், நான் யானை மீது சவாரி செய்தேன், நான் குதிரையை ஓட்டிச்

சென்றேன் என்று குடைராட்டின வேடிக்கை பெற்ற குழந்தைகள் பேசிக்கொள்வதாக, அந்தப் பேச்சு போன்றது, காமராஜரும் அவருடைய புகழ்பாடிகளும் பேசுவது என்றுதான் எண்ணிக் கொள்வார்கள்.

சிறார்களின் பேச்சு எப்படி சிந்துபோல இனிக்கிறதோ, பெற்றோர்களுக்கு, அதுபோல காமராஜர் கூட்டத்தாரின் பேச்சு இனிக்கிறது அவர்களை ஊட்டி வளர்த்திடும் முதலாளிமார்களுக்கு.

ஆகவே அவர்கள் அத்தகைய பேச்சைக் கேட்டு வேடிக்கை பெறுகிறார்கள்; மேலும் பேசச் சொல்லி உற்சாகப்படுத்துகிறார்கள்!

உள்ளபடி சோஷியலிசத்தைக் கண்டிடும் நடவடிக்கையிலே ஈடுபட்டாலோ, பெரிய புள்ளிகளின் இலாபவேட்டைக்குக் குந்தகம் விளைவிக்கும் செயலில் இறங்கினாலோ, இந்த 'இலாபவேட்டைக்காரர்கள்' இப்படியா மகிழ்ச்சி தெரிவித்துக்கொண்டிருப்பார்கள்!

பேதையும் அவ்விதம் கூறிட மாட்டானே!

சிறார்களின் பேச்சுக்கேட்டு மகிழ்ந்திடும் பெற்றோர்போல, சோஷியலிசம் பேசும் காங்கிரஸ் தலைவர்களிடம் முதலாளிகள் நடந்து கொள்கிறார்கள் என்றால், அதற்குக் காரணம்,

காங்கிரஸ் பேசிடும் சோஷியலிசம் வெறும் பேச்சு என்பதை அவர்கள் உணர்ந்திருப்பதனால்தான்.

காங்கிரஸ், சோஷியலிசத்தைப் பேசிக் கொண்டே முதலாளிகள் மேலும் மேலும் பணம் திரட்டிக் கொள்ள வழி செய்து கொடுக்கிறது, துணை நிற்கிறது என்பதனை முதலாளிகள் அறிந்திருப்பதனால் தான்.

அதே முதலாளிகள், காங்கிரஸ் தலைவர்களின் பேச்சு, பேச்சோடு நிற்கப் போவதில்லை, செயலிலே அவர்கள் ஈடுபடப் போகிறார்கள், முதலாளிகளின் ஆதிக்கத்தை முறியடிக்கப் போகிறார்கள் என்று தெரிந்து கொண்டால், இன்று காட்டுகின்ற கனிவா காட்டுவார்கள்? இன்று அவர்கள் காங்கிரசிடம் கனிவு காட்டுவது மட்டுமல்ல, சோஷிய

லிசத்துவத்திடமே கூட அல்லவா கனிவு காட்டுகிறார்கள்!! வேங்கை சைவத்தின் மேன்மை பற்றி உருகிப் பேசுவது போல அல்லவா, இந்த முதலாளிகள், சோஷியலிசம் கொண்டு வரப் போவதாகக் கூறும் காங்கிரஸ் கட்சியின் மேன்மைபற்றி உருக்கத்துடன் பேசுகின்றனர்!

ஏழ்மையும் அதன் விளைவாக அறியாமையும் இந்த நாட்டிலே எவ்வளவு அழுத்தமாகக் கப்பிக் கொண்டிருப்பினும், வெகு எளிதாக மனமயக்கம் கொண்டுவிடக் கூடிய நிலையிலே பெரும்பாலான மக்கள் இருந்திடினும், இவ்வளவு பச்சையான புரட்டுப் பேச்சை, இவ்வளவு வெளிப்படையாகத் தெரிகிற முரண்பாடுள்ள போக்கை மக்கள் நம்பிடப் போவதில்லை. முதலாளிகள் கூடி, சோஷியலிச விழா நடாத்தி, காமராஜர் சோஷியலிசச் சிற்பி என்று பேச்சாளர்களை விட்டு போழியச் செய்து மகிழ்வதைக் காணும் போது, என்ன நேர்த்தியான நாடகம் நடத்துகிறார்கள்! என்று எண்ணாமலிருக்க முடியுமா!

கடன் கொடுத்து, தவறான கணக்குக் காட்டி, நிலபுலத்தைக் கைப்பற்றிக் கொண்டவன்,

விளைந்தது அவ்வளவையும் அறுத்தெடுத்துக் குவித்ததும், களஞ்சியத்திலே கொண்டுபோய்ச் சேர்த்துக் கொண்டு காலம் முன்போல இல்லை! கூலம் நெல் கூலியாகத் தருவதற்கு இல்லை!—என்று பேசி, உழைத்தவன் வயிற்றில் அடித்திடும் உத்தமன்,

கள்ளச் சந்தையில் திரட்டிய பணத்தைத் தங்கக் கட்டிகளாகவும், மின்னும் வைரங்களாகவும் மாற்றிப் பதுக்கி வைத்துக் கொண்ட பரந்தாமன்—

இவர்களெல்லாம் கூடி, காங்கிரசை சோஷியலிசம் பேசச் சொல்லிக் கேட்டு மகிழ்கிறார்கள் என்பதனைப் புரிந்து கொள்ளவா, ஏழை எளியோர்களால் முடியாது! அவர்கள் அச்சம் காரணமாகப் பேசுவதில்லை. பேசினால்? ஏடு கொள்ளாது! நாடாள்வோர் தாங்கிக் கொள்ளமாட்டார்கள்! வேடிக்கையா காட்டுகிறீர்கள் வேடிக்கை! வேதனையிலே எங்களைத் தள்ளிவிட்டவர்கள் நீங்கள்! எமது உழைப்பின் பலன் எமக்கு வந்திருந்தால் நாங்கள் ஏன் இப்படி உழல்கிறோம்? அந்தப் பலனை அபகரித்துக் கொண்டு, சீமானாகி கனவானாகி, இப்போது எங்களையே

பார்த்து ஐயோ! பாவம்! துரும்பாக இளைத்துவிட்டாயே! பால் தருகிறேன் குடி! பழம் தருகிறேன் சாப்பிடு!—என்றா பசப்புப் பேச்சுப் பேசுகிறீர்கள்—என்றெல்லாம் கொதித்துக் கூறுவான். ஆனால் அவனை, அவனுடைய ஏழ்மை மனத்தில் பட்டதைச் சொல்ல முடியாதபடி தடுக்கிறது.

ஏழை ஏதும் பேசாது இருப்பதையே அவன் தன் ஒப்புதலைத் தந்துவிட்டான் என்று, காங்கிரஸ் தலைவர்கள் கருதிக் கொள்கிறார்கள்.

ஏழை பேசவில்லை! பெருமூச்செறிகிறான்! அந்தப் பெருமூச்சு, பேச்சைவிட வலிவு மிக்கது.

பெருமூச்சு வளர்ந்து வளர்ந்தே, புரட்சியாக வடிவம் கொண்டிருக்கிறது; பல்வேறு நாடுகளில்.

ஏழையை ஏய்த்துவிட்டோம், மயக்கிவிட்டோம் என்ற எண்ணத்துடன் முதலாளிகள் முகத்திலே புன்னகையும், அக்ரமம் நடக்கிறது, அதனைத் தடுக்க முடியவில்லை; அக்ரமம் நடக்கிறது என்று வெளியே பேசவும் முடியவில்லையே என்று குமுறி ஏழையிடமிருந்து கிளம்பிடும் பெருமூச்சும்—இன்று காண்கின்றோம். தம்பி! நெருக்கடி மிக்க கட்டம் என்பதனைத்தான் இந்த நிலை எடுத்துக் காட்டுகிறது.

நிலை இது போலிருக்க, 'அகில இந்தியா' மார்தட்டுகிறார். என்னை யாரும் கவிழ்க்க முடியாது. நான் யாருக்கும் அஞ்சப் போவதில்லை, சோஷியலிசம் ஏற்பட்டே தீரும் என்றெல்லாம் பேசுகிறார்.

வேடிக்கையான பேச்சு! குழந்தை வீரத்தைப் பொழிந்து தள்ளுகிறது!! என்று பெற்றோர் குழந்தையைத் தட்டிக் கொடுப்பதைப் போல காமராஜரைத் தட்டிக் கொடுக்கிறார்கள், பேசு! பேசு! நன்றாகப் பேசு! நிறையப் பேசு! சோஷியலிசம் பேசு! கேட்டு, கை தட்டுகிறோம்!—என்று முதலாளிகள் கூறுகிறார்கள்.

அதே முதலாளிகளுக்கு ஏதாகிலும் தமக்குக் கேடு தரும் காரியம் நடந்துவிடக் கூடுமோ என்ற சந்தேகம் துளி தோன்றினாலும், தட்டிக்கொடுப்பதை நிறுத்திவிட்டு

கூப்பிட்டுக் கேட்கிறார்கள், ''என்ன இது, பேச்சு ஒரு தினுசாக இருக்கிறதே?'' என்று.

பார்த்தோமல்லவா, பாங்குகளை நாட்டுடைமை ஆக்க வேண்டுமென்று எர்ணாகுளத்திலே காங்கிரஸ் ஒரு பேச்சுப் பேசியதும், முதலாளிகள் சீறியதை.

பம்பாயில் அமைச்சர் பட்டீலை, அழைத்து வந்து தம் எதிரிலே நிற்கவைத்துக் கொண்டு செல்வபுரியினர், விள்க்கம் தந்திடச் சொன்னார்களே!

அமைச்சர் பட்டீலும், அடக்க ஒடுக்கத்துடன், பற்று பாசத்துடன், முதலாளிகளிடம் விளக்கம் அளித்தாரே! இதழிலே கண்டோமல்லவா?

ஒரு தீர்மானம், ஒப்புக்குப் போட்டோம் பாங்குகளைத் தேசிய மயமாக்குவோம் என்று; அதற்கேவா இப்படி அச்சம் கொள்வது என்றெல்லாம் பட்டீல் சமாதானம் செய்திருக்கிறார்.

உண்மையாகவே சோஷியலிசம் கொண்டு வருபவர் களாக இருந்தால் இப்படியா, முதலாளி ஒரு துளி கவலைப் பட்டாலும், முகத்தைச் சுளித்துக் கொண்டாலும், அவன் முன் முழங்காற் படியிட்டு விடுவார்கள்.

ஏன் அந்தவிதமான அச்சம், முதலாளிகளிடம்? சோஷியலிசம் பேசுபவர்களுக்கு? காரணம், பட்டீல் அறிவார்; காமராஜருக்கும் தெரியும். அவர்கள் ஊட்டி வளர்ப்பவர்கள்! அவர்கள் கொடுத்தபடி இருக்கும் பல இலட்சக்கணக்கான தொகையைக் கொண்டுதான் காங்கிரசின் தேர்தல் வேட்டையே நடந்து வருகிறது. அத்தகைய முதலாளிகள் தயவு கிடைக்காமற் போய் விட்டால், தேர்தல் களத்திலே என்ன கதி நேரிடுமோ என்று எண்ணுகிறபோதே நடுக்கம் எடுக்கிறது. அதனால் முதலாளிகளின் மனம் கோணாதபடி நடந்து கொண்டாக வேண்டும் என்ற அச்சம் பிடித்தாட்டுகிறது!

இந்த இலட்சணத்தில் வீரப் பேச்சு வேறு!!

முதலாளிகள் காங்கிரசை எந்த அளவுக்கு ஆட்டிப் படைக்கிறார்கள் என்பதை எடுத்துக் காட்டும் ஒரு நிகழ்ச்சி, டில்லியில் சில நாட்களுக்கு முன்பு நடந்தது.

காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த பாராளு மன்ற உறுப் பினர்கள் சிலர் கூடிப் பேசியிருக்கிறார்கள். எதைப் பற்றி?

முதலாளிகள் காங்கிரசுக்குள் நுழைந்து கொண்டு ஆதிக்கம் செலுத்துகிறார்கள் என்பதுபற்றி.

முதலாளிகளுக்கும் அவர்களின் தயவு பெற்றவர் களுக்குமே தேர்தலில் வேட்பாளர்களாக நிற்கும் வாய்ப்புத் தரப்படுகிறது என்பதுபற்றி.

காங்கிரஸ் கட்சியை முதலாளிகள் ஆட்டிப்படைக் கிறார்கள் என்று தம்பி! நாம் சொல்லும்போது, சீறிச் சீறிப் பேசுகிறார்களே, அவர்கள் இதற்கு என்ன சொல்லப் போகிறார்கள்? காங்கிரஸ் எம். பி. க்களே அல்லவா கூடி, கை பிசைந்து கொள்கிறார்கள்; கண்களைக் கசக்கிக்கொள் கிறார்கள்!

காங்கிரசிலேயே ஒரு பகுதியினர் கூடிக் கதறிடும் நிலைமையே உருவாகி விட்டிருக்கிறது, முதலாளி களிடம் காங்கிரஸ் சிக்கிக் கொண்டதன் விளைவாக!

காங்கிரஸ் கட்சியையே தமது கருவியாக்கிக்கொண்டிட முதலாளிகளால் முடிந்திருக்கிறது. அந்த முதலாளிகளிடம் சிக்கிக் கொண்டுள்ள காங்கிரசைத்தான், சோஷியலிசத்தை நிறைவேற்றப் போகும் கட்சி என்று காமராஜர் கூறு கிறார்; கூறுகிறாரா? முழக்கமிடுகிறார்!!

காங்கிரஸ் கட்சியே முதலாளிகளிடம் மண்டியிட்டுக் கிடக்கவேண்டி நேரிட்டுவிட்டது என்று, காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர்கள் குமுறிப் பேசியிருப்பதுபற்றி, டில்லி, 'Patriot'—பேட்ரியட்—எனும் ஆங்கில நாளிதழ், அக்டோபர் 20ல், எழுதியிருப்பதனைத் தருகிறேன். தம்பி, காங்கிரஸ் சோஷியலிசத்தைக் கொண்டு வர முடிகிறதா இல்லையா என்பதுகூட ஒருபுறம் இருக்கட்டும், காங்கிரஸ் கட்சி, தன்னைத்தான் காப்பாற்றிக் கொள்ளும் வலிவுட னாவது இருக்க முடிகிறதா என்பதுபற்றி எண்ணிப் பார்க்கும்படி, காங்கிரஸ் நண்பர்களைக் கேட்டுக் கொள்.

At a meeting in the Capital on Tuesday a large number of Congress M. P.'s expressed concern at the infiltration of the Congress by Big Business and feudal relics. The fears expressed by M.P.'s are based on

a major concerted effort being made by reactionary elements and their intelligent stooges to gain entry on a large scale into the legislative organs on the Congress ticket. The warning is timely because in many states Congress Bosses are hob-nobbing with Capitalists and former princelings and in some case have entered into secret alliances with them.

செவ்வாயன்று தலைநகரில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில், காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர் பலர், ஜெமீன் பரம்பரையினரும் பெரிய முதலாளிகளும், காங்கிரசுக்குள் நுழைந்துகொண்டு விட்டிருப்பது பற்றி கவலை தெரிவித்துப் பேசினர். காங்கிரஸ் கட்சியின் 'டிக்கட்' பெற்று ஆட்சி மன்றங்களிலே இடம் பிடித்துக் கொள்ள, முதலாளிகளும் பிற்போக்காளரும் அவர்களின் கைக்கூலி அடிமைகளும் திட்டமிட்டு வருகின்றனர் என்ற ஆதாரமே, காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர்கள் கொண்டுள்ள அச்சத்துக்குக் காரணம் (அவர்களின்) எச்ச ரிக்கை சரியான நேரத்தில் தரப்பட்டிருக்கிறது; ஏனெனில் பல மாநிலங்களில் காங்கிரஸ் பெருந்தலைவர்கள் மாஜி-மன்னர்களுடனும் முதலாளிகளுடனும் கூடிக் குலவிக் கொண்டு வருகின்றனர். சில இடங்களில் இரகசிய ஒப்பந்த உறவுகளையும் ஏற்படுத்திக் கொண்டுள்ளனர்.

தம்பி! பேட்ரியட் தலையங்கத்தின் கருத்தைத் தமிழாக்கித் தந்துள்ளேன்.

நிலைமை இவ்விதம் இருக்கிறது; ஆனால் காமராஜரோ நீண்ட பேச்சுப் பேசுகிறார்; சோஷியலிசம் கொண்டு வரப் போகிறேன் என்று; அதனைச் செய்திட காங்கிரஸ் கட்சியால்தான் முடியும் என்று நம்பச் சொல்கிறார். எப்படி நம்பிக்கைகொள்ள முடியும் — நடுக் கொள்ளைக்காரர்கள் அவ்வளவு பேர்களும் அங்கு நடு நாயகர்களாக இருப்பது கண்கூடாகத் தெரியும்போது.

சோஷியலிசம் பேசுகிறார் காமராஜர் என்றால், பேசுவதற்கு முதலாளிகள் அனுமதித்து இருப்பதால் பேசுகிறார்.

ஏழை எளியோர் காதுகளுக்கு இசையாக இருக்கட்டும் என்பதற்காகப் பேசுகிறார்,

செயலில்? முடியாது! விடமாட்டார்கள்! இன்று காங்கிரஸ் கொண்டுள்ள அமைப்பு முறை அதற்கு இடம் கொடுக்காது; அது முதலாளிகளின் 'பாசறை'யாக ஆகிவிட்டிருக்கிறது.

சோஷியலிசம் பேசலாம்; செயல்படுத்த முடியாது என்று தம்பி! நான் கூறுகிறபோதுதான் கோபம் கோபமாக வருகிறது அவர்களுக்கு; ஆனால் அவர்களின் பெருந் தலைவர் காமராஜரே, ஜெய்பூர் மாநாட்டிலே பேசினார்; தெரிந்துதான் பேசி இருக்க வேண்டும்! என்ன பேசினார் என்பதனை நான் ராஜ்ய சபையிலேயே எடுத்துரைத்தேன்.

பதினோரு ஆண்டுகளாக நாம் சோஷியலிசம் பேசுகிறோம்; ஆனால் செயல்படுத்தவில்லை.

ஏழை-பணக்காரர் பேதத்தைப் போக்க முடியவில்லை என்பது மட்டுமல்ல, அதனைக் குறைக்கக்கூட நம்மால் முடியவில்லை.

இந்தக் கருத்துப்படவே காமராஜர் பேசியிருக்கிறார்.

அதனையே நாம் சுட்டிக் காட்டும்போது 'சுரீல்' என்று கோபம் பிறக்கிறது; விட்டேனா பார்! என்று வீறாப்பு பேசுகிறார்.

காங்கிரசில், மாஜி—மன்னர்களையும் தொழில் அதிபர்களையும் ஆதிக்கம் செலுத்தும் அளவுக்குச் சேர்த்துக் கொண்டு, அவர்களிடம் இலட்ச இலட்சமாகப் பணமும் 'கைநீட்டி' வாங்கிக்கொண்டு, அதைக் கொண்டு ஓட்டு வேட்டை ஆடிக்கொண்டு, நான் சோஷியலிசத்தைக் கொண்டு, வரப் போகிறேன் என்று பேசி வருவது, குடை ராட்டினத்துச் சிங்கப் பொம்மை மீது உட்கார்ந்து கொண்டு என்னைச் சாமான்யமாக எண்ணிக் கொள்ளாதீர்கள்; நான் சிங்கத்தையே அடக்கி, அதன்மீது சவாரி செய்பவன்! என்று சிறுவர்கள் பேசி, கேட்பவர்களுக்குச் சிரிப்பு மூட்டுவதற்கு ஒப்பானதாகும் இல்லையா!

அண்ணன்,

6-11-66



காஞ்சிக் கடிதம் : 87

பறக்கும் குதிரை!

★ ஓநாயும் இருக்கும்; முயல்களும் ஓடி ஆடும்!

★ காமராசர் தேர்தலிலே நிறுத்த இருப்போர் விளைந்த காட்டுக் குருவிகள்!

★ பள்ளம் பள்ளம்தானே!

★ கொல்லாமை பேசும் குரு தின்பது யாது?

★ பேரரசு நடத்தும் காமராசரின் வலக்கரம் சோஷியலிசம் பேசலாமா?

தம்பி,

வெகு வேகமாகக் கிளம்பி, மிக முடுக்குடன் பேசி, வழக்கறிஞர்களையும் மருத்துவர்களையும் பொதுவாகப் படித்தவர்களையும் காங்கிரசுக்குள் கொண்டுவந்து சேர்த்து விடப் போவதாகச் சூள் உரைத்து, பொதுத் தேர்தலிலே காங்கிரஸ் கட்சியின் வெற்றி வாய்ப்பு எப்படி இருக்கிறது என்பதைக் கண்டறிவதாக அறிவித்து, ஆரவாரத்துடன் நமது கழகத்தை ஏசி வந்த முன்னாள் நிதி அமைச்சர் டி.டி கிருஷ்ணமாச்சாரியார், ஏன் திடீரென்று வாய் மூடிக் கொண்டு விட்டார்: கூவி விற்றிட இருந்த சரக்கு தீர்ந்து போய் விட்டதா? அல்லது விற்பனை எதிர்பார்த்த விதமாக நடைபெறாததால், 'கடை'யை மூடிவிட்டாரா?

என்ன காரணம் அந்த 'மேதை'யின் சந்தடி அதிகமாகக் காணோமே? என்று நண்பரொருவர் கேட்டார். உடனிருந்த மற்றோர் நண்பர்—அவர் பெரியார் கட்சி—ஒரு நேர்த்தியான புன்னகையை உதிர்த்து விட்டுச் சொன்னார்:

> காரணம் விளங்கவில்லையா? அய்யா, ஒரு ஜாடை காட்டினார், காமராஜருக்கு; போயும் போயும் இந்த ஆசாமியையா நம்புகிறாய் என்பதாக; உடனே காமராஜர், கிருஷ்ணமாச்சாரியாரைக் கூப்பிட்டு ''போதும் அய்யரே! உம்முடைய வேலை!'' என்று சொல்லி விட்டார்!

என்று விளக்கம் அளித்தார்.

''அப்படி ஒரு மனப்பால் குடிப்பதானால் குடித்தபடி இரும்!'' என்று கூறிவிட்டு, ஒரு கனைப்பு, ஒரு முறைப்புடன், மற்றோர் நண்பர் பேசலானார்: அவர் காங்கிரசை ஆதரிப்பவர்.

> பெரியார் சொல்லுவதைக் கேட்டு அதன்படி நடந்திடவா எங்கள் பெரியவர் இருக்கிறார்! அவர் என்ன பெரியாரைப் போல, பிராமணர்களைப் பார்ப்பான் என்று பேசிடும் போக்கினரா? எத்தனையோ கீர்த்திமிக்க அய்யர்—அய்யங்கார்—சாஸ்திரி—சர்மாக்கள்—காமராஜருக்கு நண்பர்கள்! டி.டி.கே. இப்போது அதிகமாகப் பேசப் போவதில்லை; காரணம் அவர் காங்கிரஸ் சர்க்காரின் நிலைமையிலே ஏற்பட்டுள்ள நெருக்கடிகள், அதிர்ச்சிகள் ஆகியவைபற்றி அதிகக் கவலை கொண்டுள்ளார். இருக்குமல்லவா? பாருங்கள், இப்போது இந்த நந்தா விலகி விட்டார்; இந்திராகாந்தியார் உடனே, அனுபவம் மிக்க டி.டி. கிருஷ்ணமாச்சாரியாரை அழைத்துப் பொறுப்பை ஒப்புவிக்க வேண்டுமல்லவா? செய்தாரா? இல்லையே! அதைப் பார்க்கும் போது அவருடைய மனம் வேதனையாகத்தானே இருக்கும்—என்றார்.

நான், எந்த ஒரு விளக்கமும் கொடுக்காமலிருக்கக் கண்ட அவர்கள், என்னைப் பார்த்தபடி 'உங்கள் கருத்து என்ன?' என்று கேட்டார்கள்.

''திட்டவட்டமாக ஏதும் கூறமுடியாது; ஆனால் ஒரு எண்ணம் தோன்றுகிறது, எனக்கு டி,டி, கிருஷ்ணமாச்சாரி

யார், காங்கிரசுக்காகப் பிரசாரம் செய்வது, அதிலும் சோஷியலிசம் பேசுவது, கேட்பவர்களுக்கே ஏதோ ஒரு கேலிக் கூத்துபோல இருப்பதை அவரே உணர்ந்துகொண்டு தான், தமது பிரசார வேகத்தைக் குறைத்துக்கொண்டிருக் கக்கூடும் என்று எண்ணுகிறேன்'' என்று நான் கூறினேன்.

எதையாவது சொல்லிவைக்கலாம் என்ற போக்கிலே சொல்லவில்லை. உள்ளபடி, டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் போன்றவர்கள், சோஷியலிசம் பேசுவதைக் கேட்கும் போது, மக்கள் ஒரு கேலிச் சிரிப்பொலிதான் எழுப்பு கிறார்கள்.

காங்கிரசிலே 'தூண்களாக'வும், வலது கரங்க ளாகவும் உள்ளவர்கள், எப்படிப்பட்ட முதலாளிகள் என்பதை நமது கழகப் பேச்சாளர்கள் எடுத்து விளக்கி விட்டு, இத்தகையவர்களைக் கொண்டுள்ள காங்கிரஸ் கட்சிதான் 'சோஷியலிசம் பேசுகிறது என்று கூறும் போது எழும் கையொலி வெறும் ஒலி அல்ல; உணர்ந் திருப்பாய் என்று நம்புகிறேன்.

மக்களுக்கு மயக்கமூட்டும், சொக்கவைக்கும் என்ற நினைப் புடன்தான், பாவம், காங்கிரசின் தலைவர்கள், சோஷிய லிசம் பேசுகிறார்கள். ஆனால் அவர்கள் அந்தத் தத்துவத் திற்குத் தந்திடும் விளக்கம் இருக்கிறதே அதனைக் கேட்டதும், மக்கள் அடைகின்ற எரிச்சலும் ஏமாற்றமும் கொஞ்சமல்ல. இதைத்தான் சோஷியலிசம் என்கிறீர்களா? இவர்களை வைத்துக் கொண்டுதான் சோஷியலிசம் கொண்டுவரப் போகிறீர்களா? இவர்களெல்லாம் இப்போது உள்ளதுபோலவே இருப்பார்கள், ஆனால் சோஷியலிசமும் இருக்கும் என்கிறீர்களா? ஓநாயும் இருக்கும், முயல்களும் ஓடி ஆடியபடி இருக்கும்; புலியும் இருக்கும் புள்ளிமான்களும் இருக்கும்; அப்படித்தானே இருக்கும் என்கிறீர்கள்!—என்று கேட்கிறார்கள்: வாய் திறந்து அல்ல; தமது குறும்புப் புன்னகையால்; கேலிப் பார்வையால்!

இதனைக் கண்டறிந்ததால் டி.டி. கிருஷ்ணமாச் சாரியார் வெட்கப்பட்டுக் கொண்டு, சே! நாம் போய் மேடைமீது நின்றுகொண்டு சோஷியலிசம் பேசினால் எப்படி நம்புவார்கள்? வீண் முயற்சி; விளைவு விபரீத மானாலும் ஆகிவிடக்கூடும் என்று எண்ணிக்கொண்டு

தான், தமது இடி முழக்கத்தை நிறுத்திக்கொண்டிருந் திருக்க வேண்டும்.

மக்கள், தெளிவற்றவர்களாகவே இருந்துவிடுவார்கள்; பசப்புமொழி கேட்டு மயங்கிவிடுவார்கள்; இருபொருள் தந்திடும் பேச்சைப் பேசி அவர்களை ஏய்த்து விடலாம் என்று நினைத்திடும் காங்கிரஸ் தலைவர்கள் உளர்.

டி.டி. கிருஷ்ணமாச்சாரியார் போன்றவர்கள் பேசும் போது, மக்கள் மிக எளிதாக அவர்கள் பேசும் சோஷிய லிசம்,

வஞ்சகமானது

பசப்புமிக்கது

இருபொருள் கொண்டது

என்பதனை உணர்ந்துகொண்டுவிடுகின்றனர்.

மக்கள், உண்மையை உணர்ந்துகொண்டுவிட்டனர் என்பதனைக் கண்டறிந்தபிறகு எப்படி அவர்களுக்குப் பேச இயலும்! கடையைக் கட்டிக்கொள்கிறார்கள்!!

டி.டி. கிருஷ்ணமாச்சாரியார் போன்றவர்கள் பேசிடும் சோஷயலிசம், உண்மையான சோஷியலிசமாக இருக்க முடியாது; ஏனெனில் அவர்களே, முதலாளித்துவ அமைப்பின் பாதுகாவலர்கள்; அந்த அமைப்பிலே இருந்து கொண்டே, மக்களுக்கு இனிப்பளிக்கும் என்பதற்காக சோஷியலிசம் பேசுகிறார்கள் என்பதைப் பொதுமக்கள், அறிந்துகொண்டு விட்டனர்.

டி.டி. கிருணமாச்சாரியார் தமது மின்னல் வேகச் சுற்றுப்பயணத்தை நிறுத்தி விட்டதற்கும்,

காமராஜர்கூட, சோஷியலிசம் என்ற பேச்சுப்பேசி மக்களை மயக்க முடியவில்லை என்பதை உணர்ந்து கொண்டு,

நிலவரியை எடுத்துவிடுகிறேன்!
ஆளுக்கு ஒரு வீடு தருகிறேன்!

பார்க்குமிடம் எங்கும் பள்ளிக்கூடங்கள் கட்டித் தருகிறேன் என்றெல்லாம் பேசிச் சுவைப் பண்டங்கள்

வீசி மக்களை மயக்கலாமா என்று இப்போது முயற்சி செய்திட முனைவதற்கும் இஃதே காரணம்.

★

எல்லோரும் பேசும்விதமாகப் பேசக்கூடாது; பேச்சிலே ஒரு புதுமை வேண்டும்; புதுமுறையாகத் தன் பேச்சு அமையவேண்டும் என்று நினைத்துக்கொண்ட ஒரு வாலிபன், திருமணம் செய்துகொள்ளச் சம்மதம் தரும்படி தன் காதலியிடம் கேட்டிடலானான். எப்படி?

> ''கண்ணே நீ என் குழந்தைகளுக்குத் தாயாக வேண்டும்''

காதல் செய்த எந்தப் 'பயலும்' கேட்காத விதமான பேச்சு இது; மற்றவர், வாழ்க்கைத் தோணியிலே போகலாமா என்றோ, என் மன மாளிகையிலே உள்ளவளே! என்வீட்டின் திருவிளக்குமாகவேண்டும், சம்மதந்தானே கண்ணே! என்றோ கேட்டிருப்பார்கள்; நாமோ! கேட்ட உடன், அவள் சொக்கிப்போய்விடுவாள்; அப்படியே தோளின்மீது சாய்வாள்; அடிமூச்சுக் குரலாலே, 'அத்தான்......' என்பாள், அள்ளி அணைத்திடலாம், இன்பம் பருகிடலாம் —என்றெல்லாம் அவன் எண்ணிக்கொண்டான்.

ஆனால், கன்னியோ, கடுங்கோபம் கொண்டவளாகி அவனைப் பார்த்து.

''காதகா! இத்தனை காலமும் என்னைக் காதலிப்பதாக ஏமாற்றிக்கொண்டிருந்தாயா! ஏற்கனவே மணமாகி, குழந்தைகள் உள்ளவனா நீ! என்னை இரண்டாந்தாரமாக்கிக்கொள்ளவா இத்தனை காதல் நாடகமாடினாய்!'' என்றெல்லாம் கடிந்துரைத்துவிட்டு, எழுந்தோடி விட்டாள்!

அவன், புதுமுறையிலே பேசுவதாக எண்ணிக் கொண்டு, கடிமணமாகி, காதற்கனி பிறந்திடும் நிலை பெற்றிடலாம் என்ற கட்டத்தைக்கூறினான். பெண்ணோ, 'என் குழந்தைகள்'—என்று அவன் குறிப்பிட்டது, ஏற்கனவே ஒருத்தியை மணந்து அவன் பெற்ற குழந்தைகள் என்று எண்ணிக்கொண்டு, எரிச்சலும் ஏமாற்றமும் கொண்டாள்.

தம்பி! சொல்ல நினைப்பதை விளங்கும்படியும், வேறு பொருள் கொண்டிட முடியாத விதத்திலும் கூறிட வேண்டும். இல்லையேல் விபரீதமான விளைவுகள் நேரிடக் கூடும் என்பதனை விளக்கிடும் கதை இது.

> இந்தக் காதலன் வஞ்சகன் அல்ல! புத்திசாலித் தனத்தைக் காட்டிவிடவேண்டும் என்று துடித்திட்ட ஏமாளி.

வஞ்சகன், தன் நிலையை மூடிமறைத்திட முயலுவான்;

> என் இதயத்தில் முதன்முதலாக இடம் பெற்றவள் நீயே!
>
> இல்லறம் என்ற நல்லறம் நடாத்திடவே உன்னை நாடுகிறேன்!

என்று எதையாவது இனிப்புள்ளதாகக் கூறிவைப்பான். பெண் மயங்கி மனத்தைப் பறிகொடுத்தான பிறகு, அவன் ஏற்கனவே வேறோர் பெண்ணைத் திருமணம் செய்து கொண்டவன் என்பதனை அறிந்து பதறும்போது கூட, வஞ்சகன் கூசாமல் கூறிடுவான்,

> என் இதயத்தில் அவளுக்கு நான் இடம் அளித்திடவில்லை! வீட்டில் மட்டுந்தான்; அதுவும் பெற்றோர் கொடுத்த தொல்லைக்காக மட்டுமே!
>
> அவள் வீட்டில் இருக்கிறாள், ஆனால், அவளுடன் சேர்ந்து நான் இல்லறம் நடாத்தவில்லை. அதனை நான் முன்பே உனக்குக் கூறினேனே! கவனிக்கவில்லையா?
>
> என் இதயத்தில் முதன் முதலாக இடம் பெற்றவள் நீயே—என்று அன்று சொன்னேன்; இன்றும் அதனையே கூறுகிறேன்; மனைவி என்ற பெயருடன் ஒருத்தி என் வீட்டில் இருப்பதாலேயே என் இதயத்திலும் இருப்பாள் என்று எண்ணிக்கொள்ளலாமா! அங்கு உனக்குத்தான் இடம்! உனக்கு மட்டுந்தான்!

என்று பசப்புவான்; தன் உள்ளத்தைப் பறிகொடுத்துவிட்ட பாவை என் செய்வாள்?

இவ்விதமான பேச்சு, இருபொருள் தருவதாக அமைவது; உண்மையை மறைத்திட, பொய்மைக்கு ஒரு பொலிவளிக்கும் பூச்சுச் சேர்த்துத் தந்திடும் முறை.

அவ்விதமான பேச்சு பலன் தரவில்லை என்பதனை உணர்ந்துகொண்ட பிறகு, காங்கிரஸ் தலைவர்களுக்குத் தொடர்ந்து பேசிக் கொண்டிருப்பதிலே எப்படித் 'தெம்பு' பிறந்திட முடியும்!

காமராஜரோ, 'தெம்பு' இருக்கிறதோ இல்லையோ இந்த சோஷியலிசப் பேச்சு தவிர, மக்களுக்குச் சுவையூட்டும் பேச்சு வேறு இல்லை என்பதை உணருவதாலே, அதனைப் பேசிவருவது என்று தீர்மானித்து விட்டார். வேறு என்ன செய்வார்!

> கட்டிய பள்ளிக்கூடங்களைப் பார்த்தீர்களா? என்று காமராஜர் கேட்டால், கொட்டிக் கொடுத்த வரிப்பணம் கொஞ்சமா? என்று மக்கள் கேட்கிறார்களே! பதில் என்ன சொல்ல முடியும்!!
>
> பார்! பார்! மின்சார விளக்கு பார்!—என்கிறார்; இதைவிட அதிசயத்தைக் காட்டினான் வெள்ளைக்காரன்—ஆகாய விமானமே காட்டினான்! அவன்கூட இப்படி, பார்! பார்! என்று கூவிடவில்லையே என்று மக்கள் எண்ணிக் கொள்கிறார்கள்! காமராஜரின் பேச்சு அவர்கள் மனத்திலே அவர் எதிர்பார்க்கின்ற ஒரு களிப்பினை ஊட்டிட முடியவில்லை.
>
> எப்படிப்பட்டவர் தெரியுமா தலைவர்? உலகப் பெருந்தலைவர்!! என்று உடனிருப்போர் உடுக்கை அடிக்கிறார்கள்! ஆமாமய்யா ஆமாம்! அவர் புகழ் ஏறுகிறது, உச்சிக்கு; எங்கள் வயிறு காய்கிறது பட்டினியால்!—என்று மனம் நொந்து கூறுகிறார்கள் மக்கள்.

ஆகவே காமராஜர், காங்கிரசின் சாதனைகள் பற்றிய பட்டியலை நீட்டி, ஓட்டுக் கேட்டிட முடியவில்லை. தேர்தலிலே நிற்பதற்காக அவர் தேடிப் பிடித்து இழுத்து வந்திடுவோரும், காங்கிரசிலே நீண்ட காலமாக இருந்து பணியாற்றி, இன்னல் இழப்புக்களுக்கு ஆளானவர்கள் அல்ல.

விளைந்த காட்டுக் குருவிகள்!

ஆகவே, இருப்பதற்குள் ஓரளவு சுவையூட்டக் கூடிய பேச்சு, சோஷியலிசம்தான் என்று அவருக்குத் தோன்றுகிறது. ஆகவே ஒரு நாலு கூட்டத்தில் அதுபற்றிப் பேசிப் பார்க்கிறார்.

சோஷியலிசம் பேசுகிறீர்கள்; ஆனால் இத்தனை சீமான்களையும் உடன் வைத்துக் கொண்டிருக்கிறீர்களே—எப்படி இது பொருந்தும்? மக்கள் நம்புவார்களா? என்று அவரிடம் யாராவது கேட்டால், தம்பி! ஒரு பெரிய வெடிச் சிரிப்புச் சிரித்துவிட்டு,

> சோஷியலிசம் பேசிவிட்டால், ஓட்டு வந்து குவிந்துவிடுமா!
>
> நோட்டுகள் வேண்டாமா—தேர்தலை நடத்த!!
>
> நோட்டுகளை யார் தருவார்கள்? ஓட்டர்களா!!
>
> ஓட்டாண்டிகளிடம் ஏது நோட்டு?
>
> நோட்டுப் பெற்றிட சீமான்கள் தேவைப்படுகிறார்கள்; ஓட்டு வைத்திருக்கும் ஏழைகளுக்குத் தித்திப்புத் தந்திட சோஷியலிசம் பேச வேண்டி இருக்கிறது என்று பச்சையாகவே சொல்லிவிடுவார்! பச்சைத் தமிழரல்லவா!!

தம்பி! காங்கிரஸ் கட்சியின் அமைப்பை எடுத்துக் கொண்டு பார்த்தாலும், காங்கிரஸ் ஆட்சியின் செயல் முறைகளை ஆராய்ந்து பார்த்தாலும், சோஷியலிசம் வருவதற்கான சூழ்நிலையே இல்லை என்பது நன்றாகப் புரிகிறது.

என்றாலும், காமராஜர், சோஷியலிசம் பேசுகிறார்; எந்தத் துணிவு காரணமாக?

அதனை விளக்கிட ஒரு சிறு கதை கூறியாக வேண்டும், தம்பி! கூறட்டுமா?

மரண தண்டனை விதிக்கப்பட்ட ஒருவன், மன்னன் முன் மண்டியிட்டு, அரசே! ஒரு வேண்டுகோள்; என்னை இப்போதே தூக்கிலே போட்டுவிடச் சொல்லாதீர்கள், ஒரு வருடம் எனக்கு அவகாசம் தருக! அதற்குள் நான், தங்கள்

பட்டத்துக் குதிரைக்கு 'பறந்திட'க் கற்றுக்கொடுக்கிறேன்; அதனைக் கண்டபிறகு, எனக்கு விதிக்கப்பட்ட தண்டனையைத் தள்ளுபடி செய்துவிடலாம். ஒரு வருடத்திற்குப் பிறகு, குதிரைக்குப் பறக்கும் சக்தி வந்திடச் செய்யத் தவறினால் என்னைத் தூக்கிலே போட்டுவிடுங்கள்' என்று முறையிட்டுக் கொண்டான். மன்னன், குதிரையே பறந்திடுமாமே, பார்ப்போமே என்று எண்ணிக்கொண்டு, மரண தண்டனை விதிக்கப்பட்டிருந்தவனுக்கு ஒரு வருடம் விடுதலை தந்தான்.

மரணத்தின் பிடியிலிருந்து தப்பித்துக் கொண்ட அந்த தந்திரக்காரனை அவனுடைய நண்பன் பார்த்து, "ஒரு வருடத்தில் குதிரைக்குப் பறக்கும் சக்தி பெற்றுத் தருவதாகக் கூறிவிட்டு, ஒரு வருட விடுதலை பெற்றுக் கொண்டாயே! ஒரு வருடம் முடிந்ததும், உன்னைத் தூக்கிலே போடாமல் விடுவார்களா? மன்னனுக்கு இப்போது உள்ள கோபத்தைவிட அதிகமாக அல்லவா கோபம் வரும், நம்மை ஒரு ஏமாளி என்றா இவன் எண்ணிக் கொண்டான்? தூக்கு மரத்திலே தொங்கட்டும். இவன் உடலைக் கழுகும் நரியும் விருந்தாக ஆக்கிக் கொள்ளட்டும் என்றல்லவா கட்டளை பிறப்பிப்பான்! என்ன செய்வாய் அப்போது! என்று கேட்டான்.

தந்திரக்காரன் சொன்னான்,

ஒரு வருடத்திற்குப் பிறகு நடக்கக் கூடியதுபற்றி இப்போது ஏன் எண்ணிக் கொண்டு வேதனைப்பட வேண்டும்?

தூக்கு மேடையில் இருந்து வெளியே வந்திருக்கிறேன்; ஒரு வருடம் அவகாசமும் கிடைத்திருக்கிறது.

இந்த ஒரு வருஷத்திற்குள் அரசனே இறந்துபடக் கூடும்.

அல்லது நானே மடிந்து போகக்கூடும்!

அல்லது குதிரை, பறக்க ஆரம்பித்தாலும் ஆரம்பித்து விடக்கூடும்!!

ஒரு வருடத்தில் என்னென்னவோ நடைபெறலாம்.

நம்பிக்கை கொள்ள வேண்டும்! உடனடியாகக் கிடைத்திடும் பலனைத்தான் கணக்குப் போட்டுப் பார்த்திட வேண்டும். ஒரு வருடத்திலே ஏதேதோ நடக்கலாம்; அதன் காரணமாக, எனக்கு நிபந்தனையற்ற விடுதலை கிடைத்தாலும் கிடைக்கலாம்.

ஒரு வருடத்திற்குப் பிறகு, தூக்கிலே போடுவார்களே என்பதுபற்றி இப்போதே எண்ணி எண்ணி மனம் புண் ஆவானேன்?

ஒரு வருடம் கிடைத்திருக்கிறது! அந்தக் காலத்தில், பெறவேண்டிய வசதியை, வாழ்க்கை இன்பத்தை ஏன் இழந்திட வேண்டும்? என்று கேட்டானாம்.

அதுபோலக் காமராஜர், சோஷியலிசம் கொண்டு வரவில்லையே; முடியாமற் போய்விட்டதே என்று எண்ணி ஏக்கம் கொள்ளாமல், குதிரையைப் பறக்க வைக்கப்போகிறேன் என்று பேசி, மரண தண்டனையைத் தவிர்த்துக் கொண்டவன் போலப் பேசுகிறார், சோஷியலிசம்பற்றி.

சோஷியலிசம் பேசி ஓட்டுகளைப் பறித்துக் கொள்வோம், முதலில்; பிறகு, சோஷியலிசம் ஏன் கொண்டு வரவில்லை என்று மக்கள் கேட்டுவிட்டுப் போகட்டுமே! கொடுத்த ஓட்டுகளைத் திருப்பியா வாங்கிக்கொள்ள முடியும்!!—என்று அவர் எண்ணுகிறார் என்பது விளங்கவில்லையா, தம்பி! ஆம், என்கிறாய். மற்றவர்களும் விளக்கம் பெற்றிட வேண்டாமா?

அதற்காகத் தம்பி! சோஷியலிசம் பேசிடும் காமராஜரின் காங்கிரசிலே, எத்தகைய முதலாளிகள் கொலு இருக்கிறார்கள் என்பதை மக்களுக்கு எடுத்துக் காட்டிட வேண்டும்.

'வலதுகரம்'—என்றும், தேர்தல் பிரசார பீரங்கி என்றும் கொண்டாடுகிறார்களே, டி. டி. கிருஷ்ணமாச்சாரியாரை; அவருந்தானே பேசுகிறார், சோஷியலிசமே எமது இலட்சியம் என்று; அவர்நிலை என்ன என்பதை நாடு அறிந்து கொள்ள வேண்டாமா?

ஒருவரிடம், வருவாய் தரத்தக்க தொழில், வாணிப அமைப்புகள் குவிந்துவிடுமானால், மக்களின் உழைப்பினால்

உற்பத்தியாகும் செல்வத்திலே பெரும் பகுதி, அந்த ஒருவரிடம் போய்ச் சேர்ந்துவிடுகிறது. ஏழை பணக்காரன் பேதம், அகன்ற வாய்கொண்ட பெரிய பள்ளமாகிவிடுகிறது.

இதைப் போக்குவதுதானே சோஷியலிசம்?

இதைத்தானே காங்கிரஸ் தனது திட்டமாகக் கொண்டுள்ளதாக, டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் கூறுகிறார்.

"அப்படியானால், அந்த நேர்த்திமிக்க இலட்சியவாதி எந்த நிலையிலே இருக்கிறார்?

அவருடைய குடும்பத்திடம் உள்ள தொழில் அமைப்புகள்-வருவாய்த் துறைகள்-எப்படி உள்ளன? அளவும் வளமும் எப்படி இருக்கிறது என்பதனை நாடு தெரிந்துகொள்ள வேண்டாமா?

டி. டி. கிருஷ்ணமாச்சாரியார், தமக்கு இந்தியப் பேரரசில் கிடைத்திருந்த அமைச்சர் பதவியைப் பயன்படுத்தி, தொழில் அமைப்புகளைப் பெரிதாக்கிக் கொண்டார் என்ற புகார் கிளம்பிற்று.

நான் அந்தப் புகார்பற்றிய நோக்கத்துடன் இதனைக் குறிப்பிடவில்லை.

மிகமிக நியாயமான, நேர்மையான முறைகளிலேயே இந்தத் தொழில் வாணிப அமைப்புகள் வளர்ந்தன என்றே வைத்துக்கொள்வோம்; ஆனால் இவ்வளவு வருவாய்த் துறைகள், டி. டி. கிருஷ்ணமாச்சாரியாரின் குடும்பம் ஒன்றினிடம் இருந்திடலாமா? இருக்க விடுவது, சோஷியலிசமா? இருக்கும்போது, அவர் சோஷியலிசம் பேசுவதிலே பொருள்தான் உண்டா? என்ற இவைபற்றிச் சிந்தனையைக் கிளறிவிடுவதற்காகவே கூறுகிறேன்.

வெட்டப்பட்டதோ, வெடிப்பு விரிவானதோ, எதுவாக இருந்தால் என்ன, பள்ளம் பள்ளந்தானே!

தம்பி! சோஷியலிசம் பேசிடும், டி.டி. கிருஷ்ணமாச்சாரியாரின் குடும்பத்திடம் உள்ள தொழில்—வாணிப

அமைப்புகளின் பட்டியல்—எனக்குக் கிடைத்துள்ள அளவு—தருகிறேன்—பார்த்திடு!—காங்கிரஸ் பேசிடும் சோஷியலிசம், நம்பத்தகுந்ததுதானா என்பதுபற்றிய தெளிவு, தன்னாலே வந்திடும்.

டில்லி
கல்கத்தா
விஜயவாடா
பம்பாய்
விசாகபட்டினம்
சென்னை
ஐதராபாத்
கொச்சி
பெங்களூர்
ஆமதாபாத்
கோயம்புத்தூர்

இத்தனை நகரங்களிலே, டி.டி. கிருஷ்ணமாச்சாரியாரின் குடும்பத்தாரின் வணிக அமைப்புகள் உள்ளன.

'ஏகபாரதம்'—எத்தனை எழிலுடன் விளங்குகிறது என்பதனை எடுத்துக்காட்ட, இந்தப் 'பேரரசு' அமைக்கப்பட்டிருக்கிறதுபோலும்!

இங்கெல்லாம் உள்ள கம்பெனிகளில், எத்தனை இவர் அமைச்சர் வேலை பெற்ற பிறகு வளர்ந்தன, மூலதனம் எப்படியெப்படி கிடைத்தன என்பன பற்றிய தகவல் அறிந்திட நான் முனையவில்லை.

நான், இந்தப் பிரச்சினையில் ஊழல் இருக்கிறதா, அக்ரமம் நடந்திருக்கிறதா என்ற கேள்வியிலே என்னை ஈடுபடுத்திக் கொள்ளவில்லை.

எனது நோக்கமெல்லாம், சோஷியலிசம் பேசிடும் ஒருவரின் குடும்பம், பொருளாதாரப் பேரரசு அமைத்து ஆண்டு கொண்டிருக்கும் விந்தையை நாடு அறியச் செய்ய வேண்டும் என்பதேயாகும்.

கொல்லாமை பற்றி உருக்கமான 'உபன்யாசம்' செய்திடும் 'குரு' சாப்பிடும் கோழிப் பிரியாணியின் அளவு

பற்றிய தகவலைத்தான் நான் தருகிறேன்; கோழி விலை போட்டு வாங்கியதா, கொல்லைப் புறத்தில் மேயவந்த வேறோர் வீட்டுக் கோழியா என்பது பற்றிய 'மர்மம்' நான் தரவுமில்லை; எனக்குத் தெரியவும் தெரியாது. இனி அந்தப் பேரரசைக் காணலாம்.

1. ஓரியண்டல் காஸ்மாடிக்ஸ்
2. டி,டி. கெமிகல்ஸ்
3. டார்டாய்ஸ் இந்தியா
4. ஓரியண்ட் பர்மா
5. கொப்பா பார்மா
6. ரைட் எய்ட்ஸ் ஓரியண்ட்
7. டி.டி. லிமிடெட்
8. டைம் எய்ட்ஸ், இந்தியா
9. லண்டன் ரப்பர் கம்பெனி
10. பாக்வெல் இண்டஸ்ட்ரீஸ்
11. பிரிசைசன் என்ஜினியர்ஸ்
12. இன்டர்நேஷனல் இன்ஸ்ட்ருமன்ட்ஸ்
13. எல்.டி. ஸேமோர் அண் கோ
14. காட்டரி, ப்ரை இந்தியா
15. செஸ்பிரோ பிராண்டு இந்தியா
16. இந்தூரிஃபாரம்
17. ஏ.கே. பார்மா கெமிக்ஸ்டிக்ஸ்
18. டி.டி சிருஷ்ணமாச்சாரி கம்பெனி.

தம்பி! பெயர்கள் யாவும் ஆங்கிலம்-நான் செய்த தவறு அல்ல; அந்தக் குடும்பம் பெற்ற பேறு!!

இந்த அமைப்புகளுடன், நாடெங்கும் மக்கள் விரும்பி வாங்கிடத்தக்க பல பொருள்களுக்கு, இந்தக் குடும்பம், 'ஏஜென்சி' உரிமை பெற்றிருக்கிறது.

1. உட்வார்ட்ஸ் கிரைப் வாடர்
2. பாண்ட் கிரீம்
3. வாடர்மென் இங்க்; பேனா

4. பிரஸ்டிஜ் குக்கர்
5. வெஸ்ட்கிளாக்ஸ் கடிகாரங்கள்
6. அதுல் உற்பத்திப் பொருள்கள்
7. நவஸரி ஆயில் மில்ஸ்
8. ஸ்வஸ்திக் ஆயில் மில்ஸ்
9. பக்கிம்ஹாம் கர்னாடிக் மில்ஸ்
10. குட்லாஸ் வால் பிக்மண்ட் அண்டு ரிஸின்ஸ்
11. காட்பெரி சாக்லட்
12. போர்ன்விடா
13. மாத்ஸ்ஃபாக்டர் காஸ்மாடிக்ஸ்
14. எஸ்ஸோவின் பிளிட்
15. மெட்டல் ஸ்ப்ரேயர்கள்
16. டாக்டர் வெஸ்ட்டின் பல் பிரஷ்
17. வில்லியம் ஷேவிங் சோப்
18. காரெட் பிளேடுகள்
19. எபிக் டூத் பேஸ்ட்
20. ஸ்கைலைன் கட்லரி
21. சாயம்—ரசாயனப் பொருள்கள்

அளவும், வகையும் விளங்குகிறதல்லவா, தம்பி!

பிளேடுகூட! பிரஷ்கூட! பல்பசைகூட! பூச்சி மருந்தைக் கூட விடவில்லை!!

இத்தகைய ஒரு பேரரசு இந்தக் குடும்பத்துக்கு, இந்தக் குடும்பத்தலைவர் பேசுவதோ சோஷியலிசம்!! தம்பி! மக்களை ஏமாளிகள் என்றே தீர்மானித்து விட்டிருந்தாலொழிய, பேசிடும் துணிவு பிறந்திடுமா?

இந்த டி.டி. கிருஷ்ணமாச்சாரியார், காமராஜருக்கு வலதுகரமாம்!

ராஜதந்திர முறை கூறிடும் மேளையாம்! பேசிக் கொள்கிறார்கள்;

மக்கள் இதனை அறியமாட்டார்களா—இப்படிப்பட்டவர்களைக் கொண்டு இயங்கி வரும் காங்கிரஸ் கட்சி, எப்படி சோஷியலிசத்தைக் கொண்டுவர முடியும் என்று

09220
நகர். விருத்தாசலம்

கேட்கமாட்டார்களா என்ற எண்ணம் ஏற்படவே செய்யா தா காமராஜருக்கு? ஏற்படும்!

ஆனால், கதை தந்துள்ளேனே அதுபோல, குதிரையைப் பறக்கவைக்கிறேன் என்று கூறி, மரண தண்டனையிலிருந்து இப்போதைக்குத் தப்பித்துக் கொள்ளலாம் என்று திட்ட மிடுகிறானே தந்திரக்காரன் அதுபோலக் காமராஜர், பின்னாலே என்னவோ நடந்துவிட்டுப் போகட்டும், இப் போதைக்கு சோஷியலிசம் பேசி மக்களை மயக்கி ஓட்டுக் களைத் தட்டிக்கொண்டு, காங்கிரசு ஆட்சிக்கு ஆபத்து ஏற் படாமல் பார்த்துக்கொள்வோம் என்று திட்டமிடுகிறார். புரிகிறதல்லவா?

அண்ணன்,

13—11—66